
# தமிழரசு

ஜனவரி 1-31, 1998 ரூ.6






சமூகநலன் - ஏழைப்பெண் திருமண உதவி



'நமக்கு நாமே'



'அண்ணா மறுமலர்ச்சி'








பொங்கல் சிறப்பு மலர்

திருவள்ளுவர்சிலை - குமரிமுனை






தூய
பட்டு

தூய
சரிகை





ராஜகம்பீரமான ஊதா...

செந்தூரப்பூபோல் சிகப்பு...

மங்களகரமான மஞ்சள்...

வான்வெளிபோல் நீலம்...

கற்பனைக் கடங்கா

அற்புத வண்ணங்களில்

நேர்த்தியான பட்டு,


நல்குவது கோ–ஆப்டெக்ஸ்.

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ் நாடு கைத்தறி

திருவள்ளுவராண்டு - 2029
மார்கழி - தை
ஜனவரி 1 - 31, 1998
மலர் : 28 இதழ் : 13 & 14
விலை ரூ.6/-


## இந்த இதழில்...



- திருவள்ளுவர் விழாவில் முதலமைச்சர் உரை ..... 2
- குறளோவியம் - கலைஞர் ..... 8
- தம்பி, தமிழர் திருநாள் - அறிஞர் அண்ணா ..... 9
- வேழமே உனக்கொரு வினா! (கவிதை) ..... 14
- பூவைமேல் எத்தனை பூ! ..... 17
- மனிதநேய உதவிகள் ..... 20
- குறள் காட்டும் வாழ்வு - கி.ஆ.பெ. விசுவநாதம் ..... 22
- போகியோ போகி! (கவிதை) ..... 25
- தொழில் ஒத்துழைப்பு மாநாடு ..... 28
- இன்றும் நாளையும் (கதை) ..... 33
- தழைத்தோங்கும் தமிழ் வளர்ச்சி ..... 37
- ஊரக வளர்ச்சிப் பணிகள் ..... 43
- பொன்னான நாளில் நமது சூளுரை - கலைஞர் கவிதை ..... 48
- தமிழ்ப் பொழில் - இதழாய்வு ..... 57
- பரிதிமாற் கலைஞரின் தமிழ்த்தொண்டு ..... 73
- புத்தாண்டே வருக ..... 78
- அவர்தான் பெரியார் ..... 81
- அந்த மரம் இரத்தம் வடிக்கவில்லை (கவிதை) ..... 84
- பொன்விழா ஆண்டில் புகழ்மிகு சாதனைகள் ..... 92


## வாழ்த்தும் - வணக்கமும்

*'தமிழரசு'*
*வாசகர்களுக்கு...*
*முகவர்களுக்கு...*
*சந்தாதாரர்களுக்கு...*
*விளம்பரதாரர்களுக்கு...*
*எழுத்தோவியங்களை*
*வழங்கிடும்*
*அறிஞர் பெருமக்களுக்கு...*
*எங்கள்*
*ஆக்கப் பணிகளில்*
*துவளாது துணையிருந்து*
*ஊக்குவிக்கும்*
*நண்பர்களுக்கு*
*அன்பார்ந்த*
*புத்தாண்டு - பொங்கல்*
*நல்வாழ்த்துகளையும்,*
*வணக்கங்களையும்*
*தெரிவித்துக்கொள்கிறோம்.*

- ஆசிரியர்



(முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 17.1.1998 அன்று, சென்னை - கலைவாணர் அரங்கில் நடைபெற்ற 'திருவள்ளுவர் விழாவில்' ஆற்றிய உரை.)

# 'மூடப் பழமைகளைப் போக்கிட முன் கூட்டியே விழித்தெழுவோம்'

திருவள்ளுவர் விழாவில்

**மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர்**

**தை**ப் பொங்கலைத் தொடர்ந்து இந்தத் தமிழர் திருநாள் தொடரில் திருவள்ளுவர் நாளை நாம் பெருமிதத்தோடு கொண்டாடிக் கொண்டிருக்கிறோம்.

இந்த நாளில் திருவள்ளுவர் விருது வழங்கியும், தமிழக வரலாற்றில் ஒரு பகுதியாக சி.இராமச்சந்திரன் தலைமையிலே இயங்குகின்ற வரலாற்றுக் குழுவின் சார்பில் தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ள 'சோழப் பெருவேந்தர் காலம்' என்ற நூல் வெளியீட்டு விழா நிகழ்ச்சியும் சிறந்த நூல்களுக்குப் பரிசு என்ற வகையில் அந்த நூலாசிரியர்கள் 56 பேரை - பழைய காலத்தில் 56 தேசத்து ராஜகுமாரர்களைப் பாராட்டுவதைப் போலப் பாராட்டி, பரிசு வழங்கியும், முதிர்ந்த வயதுடைய புதிய தமிழ் அறிஞர் பெருமக்கள் நால்வருக்குத் திங்கள்தோறும் வழங்குகின்ற நிதியினை வழங்கியும் சிறப்புப் பெற்றுள்ள இந்த அரிய நிகழ்ச்சியில் உங்கள் அனைவரோடு நானும் கலந்துகொள்கின்ற வாய்ப்புப் பெற்றமைக்காகப் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

## கண்ணாடிக் குடத்திற்குள் இருக்கின்ற விளக்கு

திருவள்ளுவர் விருதுபெற்ற சாரங்கபாணி அவர்களைப் பற்றி நம்முடைய பேராசிரியர் அவர்கள் குறிப்பிடும்போது அவர்கள் "குடத்திலிட்ட விளக்காக இருக்கிறார்" என்று குறிப்பிட்டார். அதுதான் நல்லது என்று கூடச் சொன்னார். ஆனால் சாரங்கபாணி அவர்கள், உரை வேற்றுமை கண்டவர் என்ற காரணத்தினால் பேராசிரியருடைய உரையிலேயிருந்து நான் கொஞ்சம் விலகிச் சென்றல்ல; ஒட்டிச் சென்று அவர் குடத்திற்குள்ளே இருக்கின்ற விளக்குதான்; ஆனால் அந்தக் குடம் கண்ணாடியில் செய்யப்பட்ட குடம்; மண் குடமாக இருந்திருந்தால், பித்தளைக் குடமாக இருந்தால் ஒளி வெளியே தெரியாது. எனவே, இன்று முதல் அவரைக் கண்ணாடிக் குடத்திற்குள்ளே நாம் வைத்திருக்கிறோம் என்று சொல்லலாமே என்று கருதிக்கொண்டேன்.

அப்படி கண்ணாடிக் குடத்திற்குள்ளேயிருந்து ஒளி வழங்கிக் கொண்டிருக்கின்றவராக, திருக்குறளுக்கு உரை இயற்றிய நூல்கள் மாத்திரமல்ல, திருக்குறளைப் பற்றிய ஆய்வு நூல்களை மாத்திரமல்ல, சங்க இலக்கிய நூல்கள் பலவற்றைத் தன்னுடைய அருந்திறனால் ஆய்வு செய்து வெளியிட்டுள்ள பெருமைக்குரியவர் சாரங்கபாணி

என்கிறபோது; அவர் சொன்னார்; **கலைஞர்** கையினால் நான் இன்று இந்த விருது பெறுகின்ற பேற்றினைப் பெற்றேன் என்று. நான் சொல்கிறேன். அவை அடக்கத்திற்காக அல்ல; உண்மையைச் சொல்கிறேன். அவரைப் போன்ற தமிழ் அறிஞர்களுக்கு விருது அளிக்கின்ற பேற்றினை நான் பெற்றேன் என்று பெருமைப்படுகிறேன். அப்படி ஒரு நல்ல விழா இங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

**அண்ணா பொறுப்பேற்ற பின்னரே தமிழ்நாடு எனப் பெயர் சூட்டப்பட்டது**

தமிழக அரசைப் பொறுத்தவரையில் பேரறிஞர் அண்ணா அவர்களுடைய தலைமையிலே 1967-ஆம் ஆண்டு இந்த அரசு அமைந்த காலந்தொட்டு மொழி வளர்ச்சிக்கும், தமிழ்ப் பண்பாட்டு வளர்ச்சிக்கும் எத்துனையோ நற்செயல்களை ஆற்றியிருக்கிறது. அரும்பணிகளைத் தொடர்ந்து நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது.

அண்ணா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்று முதலமைச்சராக ஆன அந்தக் காலக்கட்டத்திலேதான் தமிழர்களுடைய நீண்டகாலக் கனவாக இருந்த, நாம் பிறந்த மண்ணுக்கு 'சென்னை ராஜ்யம்' என்று இருக்கின்ற பெயரை மாற்றி, இந்த மண்ணுக்கு உரிய பெயரை - தமிழ் நிலத்தின் பெயரை 'தமிழ்நாடு' என்று சூட்டவேண்டும் என்ற கோரிக்கை வெற்றி பெற்றது . அந்தக் கோரிக்கையைப் பேரறிஞர் அண்ணா அவர்கள் நிறைவேற்றித் தந்தார்கள்.



யார் யார் 'தமிழ்நாடு' என்ற பெயர் தேவையில்லை என்றெல்லாம் வாதிட்டார்களோ, அவர்களை எல்லாம் பேரவையிலே நிறுத்திவைத்து அண்ணா அவர்கள் எழுந்து நின்று நான் மும்முறை சொல்வேன் 'தமிழ்நாடு' என்று, நீங்களெல்லாம் 'வாழ்க! வாழ்க!' என்று சொல்ல வேண்டும் என்று, தமிழ்நாடு என்ற பெயர் தேவையா? என்று வாதிட்டவர்களையும் 'வாழ்க! வாழ்க!' என்று சொல்ல வைத்த பெருமையும் பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு உண்டு.

அண்ணா காலத்திலே தான் தமிழர்களுக்கு அவர்களுடைய உரிமைகள் சிதைக்கப்படாமலிருக்க - தமிழ்மொழி எதிர்காலத்திலே அறவே வீழ்ந்துவிட்டது என்ற நிலை ஏற்படாமலிருக்க இனிமேல் தமிழ் நாட்டிலே இந்தி ஆதிக்கத்திற்கு இடமில்லை, தமிழ், ஆங்கிலம் என்ற இரு மொழித் திட்டந்தான் என்று அறைகூவலாக விடுத்து அறிவித்த பெருமையும் கழக அரசுக்கு, அண்ணா தலைமையிலே அமைந்த அரசுக்கு உண்டு என்பதை நீங்களெல்லாம் அறிவீர்கள்.

**தமிழ் வளர்ச்சிக்காகப் பணியாற்றி வருகிறோம்**

அண்ணா அவர்களுடைய அடிச்சுவட்டைப் பின்பற்றி நாங்கள் - நானும், பேராசிரியரும் மற்றும் அமைச்சர் பெருமக்களும் ஆற்றிய தொண்டின் அடிப்படையிலே தமிழ் வளர்ச்சிக்காக, தமிழ்ப்பண்பாட்டு வளர்ச்சிக்காக எத்தனையோ நற்காரியங்களை ஆற்றி வந்திருக்கின்றோம். இன்னமும் ஆற்றிக்கொண்டிருக் கின்றோம்.

குறிப்பாக நான் 67-ல் இருந்து அந்த நீண்ட கால சாதனையைச் சொல்ல விரும்பவில்லை, கடந்த 96-ஆம் ஆண்டில் நாங்கள் ஆட்சிப் பொறுப்புக்கு மீண்டும் வந்து, குறிப்பாக நான் நான்காவது முறையாக முதலமைச்சர் பொறுப்பை ஏற்று இந்த இரண்டாண்டு காலத்தில் தமிழ் வளர்ச்சிக்கு இந்த அரசு என்னென்ன செய்திருக்கின்றது என்பதைக் கொஞ்சம் நீங்கள் கருதிப்பார்க்க வேண்டும்.

தமிழ் வளர்ச்சிப் பண்பாட்டுத் துறைக்காக ஒரு புதிய அமைச்சகமே கண்டு அதற்கென்று ஒரு அமைச்சரையே நியமித்தது இந்த அரசுதான். இதுவரையில் இல்லாத ஒன்று தமிழகத்தில்.

**மெட்ராசோ, மதராசோ இல்லாமல் சென்னை**

'மெட்ராஸ் ஸ்டேட்' அதாவது சென்னை ராஜ்யம் என்று இருந்தது தமிழ்நாடு என்று ஆகிவிட்ட பிறகு மெட்ராசோ, மதராசோ இருக்கக் கூடாது என்பதற்காக

“சென்னை'' என்ற தமிழ்ப் பெயர் சூட்டப்பட்டதும் இந்த ஆட்சியிலேதான்.

அன்று 76-க்கு முன்பு ‘பூம்புகார்’ சிலப்பதிகாரத்தினுடைய சாயலாய், தமிழர்களுடைய வரலாற்றுப் பெட்டகமாய், கரிகால் பெருவளத்தான் ஆண்ட மூதூர் என்ற சரித்திரச் சான்றாய் விளங்கிய அந்தப் பூம்புகார் பட்டினத்தை புதுப்பித்து, பழைய பூம்புகாரை நிலைநாட்ட முடியாவிட்டாலும் கூட இயன்ற வரையில் இந்த பூம்புகாரைக் காணீர்! என்று அதைப் புதுப்பித்து ‘இந்திர விழா’ ஆண்டுதோறும் எடுத்த ஆட்சி இந்த ஆட்சி என்பதை நீங்கள் அறிவீர்கள்.

ஆனால் அந்த விழா இடையில் நின்றுபோனது. இப்பொழுது அதை மீண்டும் தொடங்க வேண்டும் என்ற ஆர்வம் இந்த அரசுக்கு இருக்கின்றது. எனவேதான், பாழ்பட்டுப்போன பூம்புகாரில் ஒரு கோடி ரூபாய் செலவிலே அதனைப் புதுப்பிக்கின்ற பணிகள் இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அந்தப் பணிகள் முழுமையாக முடிவுற்றதும் இந்திர விழா அங்கே கோலாகலமாக நடைபெறும் என்ற நல்ல செய்தியை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இத்தகைய உணர்வுகளை ஊட்டிய அறிஞர் அண்ணா அவர்கள் கடற்கரையில் தூங்குகின்றாரே அந்தச் சதுக்கத்திற்கு ஒன்றரைக் கோடி ரூபாய் செலவில் புதுமைகள் செய்யப்படுகின்றன. அருங்காட்சியகம் அமைக்கப்படுகிறது.

காஞ்சியில் அறிஞர் அண்ணா அவர்களுடைய இல்லம் நான்கு இலட்சம் ரூபாய் செலவில் புதுப்பிக்கப்பட்டுள்ளது.

வள்ளுவர் கோட்டம் - அதைப்பற்றி இங்கே பேசினார்கள். விருது பெற்ற சாரங்கபாணி பேசினார் - முனைவர் தமிழ்க்குடிமகனும் அதைப்பற்றி விளக்கினார். விளக்காமலே உங்களுக்கு தெரியக்கூடியதுதான் வள்ளுவர் கோட்டம். ஆனால் அந்த வள்ளுவர் கோட்டம் ஐந்தாண்டுக் காலத்தில் என்ன பாடுபட்டது என்பது உங்களுக்கெல்லாம் தெரியும். நான் சொல்லவில்லை. முரசொலியிலே அல்ல. வேறு ஏடுகளிலே அல்ல - கல்கி, குமுதம், விகடன் போன்ற ஏடுகளில், நடுநிலை ஏடுகளில், ஒரு கட்சியைச்சாராத நடுநிலையிலே உள்ள ஏடுகளில் எல்லாம் வள்ளுவர் கோட்டத்தில் என்னென்ன அநியாயங்கள் நடைபெறுகின்றன என்பனவற்றைப் புகைப்படமெடுத்து வெளியிட்ட காட்சிகளை எல்லாம் நீங்கள் கண்டிருப்பீர்கள். நீங்களோ கண்டீர்கள். நானோ கண்டு கண்ணீர் விட்டேன். அந்த வள்ளுவர் கோட்டத்தை மீண்டும் புதுப்பித்து அது வள்ளுவர் கோட்டமாகவே இருக்கவேண்டும். கோட்டம் “தோட்ட”மாகிவிடக் கூடாது என்ற அந்த உணர்வோடு 84.94 இலட்ச ரூபாய் செலவில் மேம்படுத்தப்பட்டுள்ள காட்சியை இன்றைக்கு நீங்கள் காணுகின்றீர்கள்.

---

*“ஜனநாயகம் என்ற அமைப்பு, தழைத்தோங்கிட, நம் ஒவ்வொருவரிடமும் ஜனநாயக மனநிலை - மனஉரம் - மனப்பாங்கு வளரவேண்டும். எத்தகைய அறைகூவலையும் ஏற்கத்தக்க ஜனநாயக நல்லுணர்வையும் நாம் பெறவேண்டும்”.*

**_ பேரறிஞர் அண்ணா**

---

சென்னையிலே உள்ள தென்மொழிகள் புத்தக நிறுவனத்திற்கு 80ஆயிரம் ரூபாய் இந்த அரசு நிதியுதவி வழங்கி இருக்கிறது.

சென்னை உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு 43.75 இலட்ச ரூபாய் இந்த அரசு வழங்கியிருக்கிறது.

பாஞ்சாலங்குறிச்சி வீரபாண்டி கட்டபொம்மன் கோட்டை கலனாகிக் கிடக்கிறது. அந்தக் கலனாகக் கிடக்கின்ற கட்டபொம்மன் கோட்டையை புதுப்பிக்கும் பணி 25 இலட்சம் ரூபாய் செலவில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

கங்கை கொண்ட சோழபுரம் கோவில் கலைச் செல்வங்கள் பராமரிப்புக்காக 5 இலட்ச ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

திருவண்ணாமலை அருணாச்சலேஸ்வரர் திருக்கோயிலில் அங்குள்ள ஒரு மண்டபம் இடிந்து வீழ்ந்தது. அதற்காக 50 இலட்ச ரூபாய் நிதியுதவி இந்த அரசின் சார்பில் செய்யப்பட்டிருக்கிறது. எங்களுக்குப் பக்தி இருக்கிறதா என்று கேட்காதீர்கள். கலைப்பற்று இருக்கிற காரணத்தால் அந்தப் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

**திராவிட மொழியியல் பள்ளியில்**
**தமிழியல் ஆய்வுக்கான நிதி உதவி அதிகரிப்பு**

திராவிட மொழியியல் பள்ளிக்குக் கழக அரசு உயர்த்தி வழங்கிய மான்ய உதவி என்ற பெயரில் திருவனந்தபுரம் பன்னாட்டுத் திராவிட மொழியியல் பள்ளிக்குத் தமிழியல் தொடர்பான ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொள்வதற்காக ஆண்டு தோறும் ஐந்து இலட்ச ரூபாய் நிதி வழங்கப்பட்டு வந்தது. இந்த நிதி 96-97 ஆம் ஆண்டு முதல் பத்து இலட்ச ரூபாயாக உயர்த்தி வழங்கப்படுகிறது.

ஆசியவியல் ஆய்வு நிறுவனத்திற்குத் தமிழ் தொடர்பான ஆராய்ச்சிப் பணிகளுக்காக 96-97 ஆம் ஆண்டில் 19.57 இலட்ச ரூபாயும், 97-98 ஆம் ஆண்டில் இருபது இலட்ச ரூபாயும் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

புதுடெல்லியிலுள்ள தமிழ்ச்சங்கத்திற்குத் திருவள்ளுவர் கலையரங்கம் கட்டுவதற்காகப் பத்து இலட்ச ரூபாய் மான்யமாக வழங்கப்பட்டு அந்தக் கலையரங்கத்தைச் சில மாதங்களுக்கு முன்பு, நானே திறந்துவைத்த நிகழ்ச்சியும் நடைபெற்றது.

தேவநேயப்பாவணரின் நூல்களை நாட்டுடைமையாக ஆக்கி, அவருடைய வாரிசுகளுக்கு இருபது இலட்ச ரூபாய் பரிசுத் தொகை வழங்கப் பட்டுள்ளது.

இந்த ஆண்டில் மறைமலைபடிகளாரின் நூல்களை நாட்டுடைமையாக்கி அவருடைய வழித்தோன்றல்களுக்கு மொத்தம் ரூபாய் முப்பது இலட்சத்து முப்பதாயிரம் பரிசுத் தொகையாக வழங்கப்பட்டிருக்கிறது.

சென்னை திருவல்லிக்கேணியிலே உள்ள பாரதியார் இல்லம் 8.30 இலட்ச ரூபாய் செலவில் புதுப்பிக்கப்பட்டு அங்கு 80 ஆயிரம் ரூபாய் செலவில் ஒரு நூலகம் இந்த அரசினால் அமைக்கப்பட்டுள்ளது. பாரதியார் வாழ்க்கை வரலாறு பற்றிய திரைப்படம் வாரம் 3 முறை அங்கே காட்டப்படுகிறது.



**மதுரை தமிழ்ச்சங்க மேம்பாட்டிற்கு நிதி உதவி**

மதுரை தமிழ்ச் சங்க மேம்பாட்டிற்காகத் தேவர் பேரவையின் கோரிக்கைகளை ஏற்று, கழக அரசு 45 இலட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கியிருக்கின்றது.

ஆந்திர மாநிலத்திலுள்ள திராவிடப் பல்கலைக் கழகத்திற்கு இந்த அரசு 50 இலட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கியிருக்கிறது.

மறைமலை அடிகள் நூலகத்திற்கு ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வந்த மான்ய உதவி பத்தாயிரம் ரூபாயை ஒரு இலட்ச ரூபாயாக உயர்த்தி இந்த அரசு வழங்கத் தொடங்கியிருக்கிறது.

திருவான்மியூரில் உள்ள உ.வே.சாமிநாத அய்யர் நூலகத்திற்கு வழங்கப்பட்டு வந்த 60 ஆயிரம் ரூபாய் மான்ய உதவியை இந்த ஆண்டு முதல் 1 இலட்ச ரூபாயாக உயர்த்தி வழங்கியதும் இந்த அரசுதான்.

அதுமாத்திரமல்ல; நான் கட்டபொம்மன் கோட்டையைப் பற்றிச்சொல்கிறபோது நண்பர் பரமகுரு அவர்கள் பூலித்தேவன் என்ன ஆனான் என்று கேட்காமலே விழிகளால் கேட்டுக் கொண்டிருக்கின்றார்.

கடந்த மூன்று மாதங்களுக்கு முன்பே நம்முடைய, அமைச்சர்கள் துரைமுருகன், முல்லைவேந்தன், ஆலடி அருணா இவர்கள் எல்லாம் சென்று பார்வையிட்டு, அந்த பூலித்தேவனுடைய பழைய இடிந்துபோன மாளிகையைப் புதுப்பிக்கத் திட்டமிட்டு அதற்கான வரைபடம் என்னால் ஒப்புதல் அளிக்கப்பட்டு 53 இலட்சம் ரூபாய் செலவிலே பூலித்தேவன் மாளிகை அங்கு அமைக்கும் பணி தொடங்கப்பட்டுள்ளது.

வீரன் சுந்தரலிங்கம் நினைவாக அவரது வழித்தோன்றல்கள் வாழ்ந்திட இருநூறு வீடுகள் கொண்ட 'சுந்தரலிங்கம் நகர்' அமைக்கப்பட்டுள்ளது, சுமார் அறுபது இலட்ச ரூபாய் செலவில்!

**விஸ்வநாத தாஸ் நினைவு மண்டபம்**

அதைப்போலவே தியாகி, நாடகப் புலவர் விஸ்வநாததாஸ் "கொக்கு பறக்குதடி பாப்பா" என்று வெள்ளையனுக்கு எதிராக வீரக்குரல் எழுப்பிய நாடக நடிகர். நடித்துக் கொண்டிருக்கும் போதே மேடையிலே உயிர் விட்டவர். அந்த தியாகி விஸ்வநாத தாசுக்காக மதுரை திருமங்கலத்தில் அவர் வாழ்ந்த வீட்டை வாங்கி 50 இலட்ச ரூபாய் செலவிலே விஸ்வநாத தாஸ் நினைவு மண்டபம், அங்கே அமைக்கப்படுகிறது.

நம்முடைய இலக்கியச் செல்வர், குமரி அனந்தன் அடிக்கடி என்னைத் துளைத்தெடுத்து அந்த "தொந்தரவுக்குள்ளே தோழி நான் சுகம் கண்டேன்" என்பதற்கு ஒப்ப அதனை ஏற்று(கிண்டியிலே காமராஜர் நினைவிடம், ராஜாஜி நினைவு மண்டபம், காந்தி மண்டபம், எல்லாம் இருப்பதற்கு அருகில்) தியாகிகள் மணி மண்டபம் 30 இலட்ச ரூபாய் செலவில் கட்டப்படுகிறது என்ற செய்தியையும் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

**உ.வே.சா.நூலகத்தில் அவருடைய சிலை நிறுவ உதவி**

உ.வே.சா. நூலகத்தில் அவருடைய சிலை நிறுவுவதற்கு இந்த அரசு 50 ஆயிரம் ரூபாய் நிதி வழங்கியுள்ளது. இதை யாரும் கேட்கவில்லை. பத்திரிகைகளிலே செய்தியைப் பார்த்தேன். சிலையை வைக்க முடியாமல் இருந்துகொண்டிருக்கிறார்கள்; சிலை வைப்பார்கள் என்ற செய்தி ஏடுகளிலே வந்தது. உடனடியாக அதற்கான ஆணை பிறப்பிக்கப்பட்டு 50 ஆயிரம் ரூபாய் அந்தச் சிலையை நிறுவுவதற்கு அரசு வழங்கியது.

"சென்றிடுவீர் எட்டுத்திக்கும் - கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்ந் திங்குச் சேர்ப்பீர்"

- என்ற பாரதி மொழிக்கேற்ப, பிற மொழிச் செல்வங்களைத் தமிழில் மொழி பெயர்த்திட வேண்டும் என்ற உணர்வோடு சிறந்த மொழி பெயர்ப்பு நூல்களை தமிழில் கொண்டு வருவதற்கு உதவும் வகையில் 96-97ஆம்

ஆண்டு முதல் புதிய திட்டம் ஒன்றைக் கழக அரசு ஏற்படுத்தி பிறமொழி நூல்களைத் தமிழிலும், தமிழிலே உள்ள சிறந்த இலக்கியங்களைப் பிற மொழி நூல்களிலும் மொழி பெயர்த்து வெளியிடும் திட்டத்திற்கு 5 இலட்ச ரூபாய் இந்தஅரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

விடுதலைப் போராட்டத் தியாகிகளுக்கு மாதந்தோறும் 400 ரூபாய் வழங்கப்பட்டது. அதனை 10.9.96 முதல் 500 ரூபாய் என்று அரசு உயர்த்தியது. அதோடு முடியவில்லை. பிறகு 10.10.96 முதல் அந்தத் தொகை பல தியாகிகளுடைய வேண்டுகோளுக்கு இணங்க, மாதந்தோறும் 1500 ரூபாயக உயர்த்தப்பட்டது. அத்துடன் மருத்துவப் படியாக 15 ரூபாயும் இந்த அரசினால் சேர்த்து வழங்கப்படட்டது.

### சுதந்திரப் பொன்விழாவை ஒட்டி தியாகிகள் உதவித் தொகை உயர்த்தப்பட்டது

இந்திய சுதந்திரப் பொன்விழா ஆண்டையொட்டி இந்த உதவித் தொகை மேலும் உயர்த்தப்பட்டு 15.8.97 முதல் தியாகிகளுக்கு மாதந்தோறும் 3 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்று அறிவித்து அதே தியாகிகளுக்குத் தருகிற 3 ஆயிரம் ரூபாய் மொழிக் காவலர்களுக்கும் தரப்படும் என்று சுமார் ஆயிரத்துக்கு மேற்பட்ட தமிழ் மொழிக் காவலர்களுக்கும் திங்கள்தோறும் 3 ஆயிரம் ரூபாய் வழங்கப்படுகிறது.

எந்த ஒரு முனையிலும் தமிழ் வளர்த்தவர்களுக்கு நாம் ஆற்ற வேண்டிய தொண்டு உண்டு என்பதை எடுத்துக் காட்டவும், தொடர்ந்து இந்தத் தமிழ்த் தொண்டினை ஆற்றுவோம் என்பதை உங்களுக்கு எடுத்துக் கூறவும்தான் இவற்றை நான் இங்கே குறிப்பிட்டிருக்கின்றேன்.

இங்கே நம்முடைய இனமானப்பேராசிரியர் அவர்கள் திருவள்ளுவருடைய அருமை பெருமைகளைப் பற்றியெல்லாம் சொன்னார்கள். இங்கே நமமுடைய பெரியவர் சாரங்கபாணி - பெரியவர் என்று சொல்லக் கூடாது - என்னை விட ஒரு வயது இளையவர்தான். தமிழில் பெரியவர் என்ற காரணத்தால் சொன்னேன். அவர் உரை வேற்றுமை எழுதியிருகின்றார்கள். பேராசிரியர் உரையாற்றும் போது பலரும் திருக்குறளுக்கு அவரவர்களுடைய சிந்தனைக்கு ஏற்ப, அவரவர்களுடைய எண்ணத்திற்கேற்ப உரை எழுதினார்கள் என்பதெல்லாம் திருக்குறளுக்கு வலு சேர்ப்பது, திருக்குறளுக்கு வளம் சேர்ப்பது என்ற கருத்துப்பட எடுத்துச் சொன்னார்கள்.

### திருக்குறளுக்குப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் கூறிய விளக்கம்

என்னைப் பொறுத்துக் கூட இந்தத் திருக்குறளுக்கு உரை காண்பதில் - ஒருமுறை நான் புரட்சிக்கவிஞர் பாரதிதாசனோடு பேசிக்கொண்டிருக்கும் போது சொன்னார்கள். "பழைய காலத்து உரைகள் எல்லாம் தவறாக, ஏற்றுக்கொள்ள முடியாத அளவிற்கு எழுதப்பட்டிருக்கின்றன'' என்று குறிப்பிட்டு எடுத்துக்காட்டாக ஒன்றைச் சொன்னார்கள்.

"தெய்வந் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை"

- என்ற குறளுக்குப் பாரதிதாசன் சொன்ன விளக்கத்திற்கு முன் ஏற்கெனவே அதற்காகத் தரப்பட்ட விளக்கம் என்ன என்பதை முதலில் பார்க்கவேண்டும்.

தெய்வத்தைக் கூட தொழாமல் கணவரைத் தொழுது எழுகின்ற பெண், மழை பெய்யாமல் இருக்கின்ற காலத்தில் மழையே பெய் என்று சென்னால் மழை பொழியும். இதுதான் பழைய காலத்திலே எழுதப்பட்ட உரை.

இந்தக் காலத்திலே கூட அந்தப் பழைய எண்ணத்தோடு எழுதப்பபட்டவரை இப்படித்தான் "தெய்வத்தைக்கூடத்தொழாமல்கணவனைத் தொழுது எழுகின்ற பெண் சொன்னால் மழை பொழியும்" என்று. இதனைச் சோதித்துப் பார்க்க முடியாது. ஒரு பெண்ணை



அழைத்து 'மழை பொழியச் சொல்' என்று சொல்லி அந்த அம்மையார் ஆகாயத்தைப் பார்த்து 'மழையே வா' என்று சொல்லி மழை வராவிட்டால் அந்தப்பெண் மீது நாம் வைத்திருக்கின்ற அன்பு எப்படி எல்லாம் மாறும் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். ஐயப்பாடே ஏற்பட்டு விடும். அதனால்தான் பாரதிதாசன் சொன்னார். அப்படி அல்ல அதற்குப்பொருள். தவறாக எழுதிவிட்டார்கள். பெய்யெனப் பெய்யும் மழை என்றால், ஒரு உழவன் தன்னுடைய வயலுக்கு, குளத்திற்கு, ஏரிக்கு இவற்றுக்கெல்லாம் தண்ணீர் வேண்டும் என்று ஏங்குகிற நேரத்தில் மழை பெய்யாதா ? என்று ஏங்குகின்ற நேரத்தில் அவன் பெய்ய வேண்டும் என்று எண்ணுகிற நேரத்திலே, பெய்கிற மழை எப்படிப்பட்டதோ அதைப் போன்றவள் அந்தப் பெண். தெய்வத்தைக் கூட தொழாமல் கணவனைத் தொழுகின்ற அந்தப் பெண் பெய் என்று சொல்கிற நேரத்திலே பெய்கின்ற மழைக்கு ஒப்பானவளே தவிர அவள்

சொன்னால் ஒன்றும் மழை பெய்துவிடாது என்று பாரதிதாசன் சொன்னார். அதைத் தான் நான் குறளோவியம் தீட்டும் போது அந்தப் பொருளைத்தான் குறிப்பிட்டிருந்தேன். அது குறளோவியம் எழுதிய காலக்கட்டம்.

## திருக்குறளுக்கு உரை எழுதிய போது நான் கூறிய கருத்து

பிறகு திருக்குறளுக்கு உரையே எழுதினேன். புரட்சிக் கவிஞர் சொன்ன அந்த உரையைச் சற்று மாற்றத்தோடு நான் என்ன சொன்னேன் என்றால் - அப்போதெல்லாம்; ஏன்! இன்றைக்கு கூட திருக்குறளை பாராட்டுகின்ற, போற்றுகின்ற பெண்கள் பலர். என்ன இருந்தாலும் பெண்களை அடிமையாக அல்லவா திருவள்ளுவர் சித்திரித்திருக்கிறார் என்று பெண்களைப் பற்றி வள்ளுவர் குறிப்பிட்டிருக்கின்ற சில குறட்பாக்களை எடுத்துக் காட்டுவார்கள். வள்ளுவரை அந்தப் பழிக்கு ஆளாக்கி விடக்கூடாது என்பது என்னுடைய எண்ணம். எனவேதான் நான் 'பெய்யெனப் பெய்யும் மழை' என்ற அந்தக் குறளுக்கு உரை கண்டபோது என்ன எழுதினேன் என்றால் தெய்வத்தைக் கூட தொழாமல் கணவனைத் தொழுது எழுகின்ற பெண் - பெய் என்று சொன்னவுடன் பெய்கின்ற மழையைப் போல அடிமையாக இருப்பவள். பெண் உரிமையோடு இருக்கவேண்டும். அடிமை நிலை இல்லாமல் இருக்க வேண்டும் என்பதை எடுத்துக்காட்டுவதற்காக அப்படி ஒரு உரையை நான் எழுதினேன்.

### எல்லா மதத்தினராலும் போற்றப்படுபவர் திருவள்ளுவர்

இப்படி உரைகள் பரிமேலழகர் எழுதின காலத்திலிருந்து புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் காலம்வரை அதற்குப் பிறகும் சில உரை ஆசிரியர்களால் மாற்றம் பெற்றிருக்கின்றன. இருந்தாலும்கூட திருவள்ளுவர் எல்லோருக்கும் பொதுவானவர். எல்லாராலும் புகழப்படுபவராக எல்லோரும் அவர் எனக்கு உரியவர், எனக்கு உரியவர் என்று சொல்லக் கூடியவராக எல்லா மதத்திலே உள்ளவர்களும், என் மதக்கருத்துக்கள் அங்கே இருக்கின்றன. சமண மதக் கருத்து உண்டு என்று சமணர்களும், சைவ மதக் கருத்து உண்டு என்று சைவர்களும், புத்த மதக் கருத்து அங்கே இருக்கிறதென்று



புத்தர்களும்; வைணவ மதக் கருத்து அங்கே இருக்கிறதென்று வைணவர்களும் எடுத்துக் காட்டுகின்ற அளவிற்கு எல்லா மதத்தார்களாலும் போற்றப்படுகின்றவர் திருவுள்ளுவர். அந்தத் திருவள்ளுவருக்குத்தான் இந்த அரசு 76-ஆம் ஆண்டுக்கு முன்பே நாங்கள் ஆலோசித்து உலகத்திலேயே உள்ள சில சிலைகளோடு ஒப்பிடத்தக்க அளவிற்கு, வள்ளுவருக்குச் சிலை அமைக்க வேண்டும் என்று கருதி குமரிக் கடல் ஓரத்தில் வள்ளுவருக்குச் சிலை அமைக்கத் திட்டமிட்டு அன்றைக்கே அது அறிவிக்கப்பட்டு, பணிகள் ஆரம்பமாயின. வள்ளுவர் சிலை வைப்பதற்காக கல்லெல்லாம் தேர்ந்தெடுக்கப்பட்டது. அதற்குப் பிறகு 76-ல் ஆட்சி கலைக்கப்பட்ட காரணத்தால் அப்பணி நிறைவுபெறாமல் நின்றுவிட்டது. பிறகு என்னுடைய அருமை நண்பர் எம்.ஜி.ஆர். பொறுப்பேற்ற பிறகு அந்தப் பணியைத் தொடர எண்ணினார் - தொடரப்பட்டது. ஆனால் தொய்வு விழுந்து விட்டது. மேலும் மேலும் தொய்வு ஏற்பட்டது.

இப்போது நாங்கள் நான்காவது முறையாக ஆட்சிக்கு வந்திருக்கின்ற காலக் கட்டத்தில் வள்ளுவருடைய சிலையின் பணி அநேகமாக பெரும் பகுதி முடிந்து விட்டது. விரைவில் அந்தச் சிலை குமரிக்கடல் ஓரத்திலே நிறுவப்படும். 133 அடி உயரத்திலே திருவள்ளுவருடைய சிலை அங்கே நிறுவப்படும் என்ற இந்த மகிழ்ச்சிகரமான செய்தியை வள்ளுவர் விழாவிலே தெரிவித்துக்கொள்கிறேன்.

*திருவள்ளுவர் பிறந்த நாட்டுக்கு உரியவர்கள் நாம்; அவர் வாழ்ந்த மண்ணில் வாழத் தக்கவர்கள் நாம் என்பதைப் பேச்சினால் அல்ல; செயலினால் மெய்ப்பித்துக் காட்டவேண்டும்.*

**- அறிஞர் அண்ணா**

நம்முடைய தமிழ்க்குடிமகன் இந்தத் துறையினுடைய அமைச்சராகப் பொறுப்பேற்ற காலந்தொட்டு தமிழ் வளர்க்க தமிழுக்குச் செல்வாக்குத் தேடித்தர அதைப்போலவே அறநிலையத்துறையிலே ஆலயங்களில் நடைபெறுகின்ற கொள்ளைகளைத் தடுக்க, ஆலயச் சொத்துக்களை யார் யார் அபகரித்திருக்கிறார்களோ அவர்களிடமிருந்து சொத்துக்களை மீட்க அருமையாகப் பணியாற்றி வருகின்றார்.

# குறளோவியம்

- கலைஞர்

வெள்ளிப் பாற்குடத்தின் வாய்போன்ற வட்ட நிலா. அல்லிக்குளமோ என ஐயுறும் வண்ணம் நட்சத்திர வானம். அவைகளைப் பற்றியெல்லாம் தேனிசை மீட்டிவிட்டு உலகத்தையே மறந்து அசைவற்று இருக்கின்றன அந்த நல்யாழ்கள் இரண்டும். அந்த உயிர் யாழ்களின் கனவுலகத்தைக் கலைத்துவிடக் கூடாதேயென்ற பயத்தோடு, மென்காற்று - அவர்களைக் கீழ் ஸ்தாயியில் தாலாட்டுகிறது.

வானத்திலே உள்ள - விண்மீன்களோ, பெரியதோர் குழப்பமான ஆராய்ச்சியில் இறங்கிக் கலங்கித் திரிகின்றன; என்ன அந்த ஆராய்ச்சி?

தாங்கள் எங்கேயிருக்கிறோம் - நிலவு எங்கேயிருக்கிறது என்பதுதான் அவைகளின் ஆராய்ச்சியாகும்.

வானத்திலே உள்ள கண்ணாடியில்தான் இவள் முகம் தெரிகிறதோ - அல்லது, பூமியில் உள்ள கண்ணாடியில்தான் நிலவு தெரிகிறதோ - என வியக்கும் அளவுக்கு, நிலா முகம் படைத்த பேரழகி அவள்! ஆகவேதான் அவளுக்கும் நிலவுக்கும் வேறுபாடு தெரியாமல் விண்மீன்கள் கலங்கித் திரிகின்றன. அதற்கு -

இதோ குறள் :-

**''மதியும் மடந்தை முகனும் அறியாப்**

**பதியிற் கலங்கிய மீன்''**

இப்படி விண்மீன்களுக்கே கலக்கத்தை உண்டுபண்ணிய அந்தக் கட்டழகியின் தோளிலே ஒருவன் மெய்ம்மறந்து சாய்ந்து கிடக்கிறான் என்பதைக் காணும்போது, இளம் உள்ளங்களில் பொறாமைக் கீறல் விழத்தான் செய்யும் - ஆனால் வள்ளுவர் உள்ளமோ அறிவு மணக்கும் அழகான கேள்வியொன்றை எழுப்புகிறது.




தான் விரும்பும் காதலியின் மெல்லிய தோளில் சாய்ந்திருந்து துயிலும் துயில்போல் இனிமை வாய்ந்ததா, அந்தத் தாமரைக்கண்ணான் உலகம்?

இல்லை, - இல்லை!

இதோ, குறளோவியம் காணுங்கள் :-

**"தாம்வீழ்வார் மென்றோள் துயிலின் இனிதுகொல்**

**தாமரைக் கண்ணான் உலகு ?"**



முதலமைச்சர் என்ற முறையில் பல பிரச்சினைகள் பற்றிய கருத்துக்களை அறிக்கைகள், சொற்பொழிவுகள், சட்டமன்ற உரைகள் மூலம் நாட்டுக்குத் தந்துவிட முடிகிறது - தனிமையாக உன்னிடம் உரையாடி மகிழ்ந்திட என்று நான் வகுத்துக்கொண்ட 'கிழமைக் கடிதம்' எழுதிட இயலவில்லை.

# தம்பி! தமிழர் திருநாள்!

பேரறிஞர் அண்ணா

பிரச்சினைகளை விளக்கிட, ஐயப்பாடுகளைப் போக்கிட, அச்சம் துடைத்திட, மறுப்புக்கு மறுப்புரைக்க, 'வாழ்க வசவாளர்' என்று அவர்களையும் வாழ்த்திட, "தம்பிக்குக் கடிதம்" மிக நேர்த்தியான முறையில் பயன்பட்டு வந்தது. எனக்குத் தோன்றும் எண்ணங்களை உன்னிடம் கூறிவிடுவதிலே, தனியானதோர் மகிழ்ச்சி.

எனக்கு ஏற்படும் மகிழ்ச்சியினை உன்னோடு பங்கிட்டுக் கொள்வதிலே ஓர் இன்பம். கவலை குடையும்போது, மன உளைச்சல் ஏற்படும்போது, உன்னோடு உரையாடி, தம்பி உடையான் படைக்கு அஞ்சான் என்ற எழுச்சி பெற்று வந்தேன்.

அமெரிக்கா சென்று அறுவைச் சிகிச்சை செய்துகொள்ள வேண்டிய அளவுக்கு உடல் நலம் பாழ்பட்டது. ஆனால் அதனால் ஏற்பட்ட கவலையை நான் உதறித் தள்ளும் விதமான அன்பும் கனிவும் நாடு முழுவதிலுமிருந்து கிடைத்தது. அரசியலில் நம்மோடு மாறுபட்டிருப்பவர்களிலே பலரும் கனிவு காட்டிடக் கண்டேன் - மனிதத் தன்மை அடியோடு மடிந்துவிடவில்லை என்பதனை உணர்ந்தேன்.

தம்பி! அந்த மனிதத் தன்மையிலேதான் முழுக்க முழுக்க நம்பிக்கைக் கொண்டிருக்கிறேன். மனிதத் தன்மை திகழ்ந்திடச் செய்வதைக் காட்டிலும் மகத்தான வேறோர் வெற்றி இல்லை என்றே கருதுகிறேன். அரசுகள் அமைவதே, இந்த மனிதத் தன்மையின் மேம்பாட்டினை வளர்த்திடத்தான் என்று கருதுகிறேன். என்னால் எந்தப் பிரச்சினையையும் மனிதத் தன்மை கலந்ததாக மட்டுமே கொள்ளமுடிகிறது. அதனால் கொடுமை நேரிட்டுவிடும் போது குமுறிப் போகிறேன். அக்ரமம் நடைபெற்றிடும்போது நெஞ்சில் வேல் பாய்கிறது. இந்நிலை உடலைப் பாதிக்கிறது; மருத்துவர்கள் பலர் என் உடல்நிலை தேறிடத் துணைநிற்கின்றனர். ஆனால், உன் புன்னகை தவழும் முகத்தை மனக்கண்ணால் காணும்போதுதான் உண்மையான 'மாமருந்து' கிடைக்கிறது. கிடைத்தற்கரிய அந்தச் செல்வத்தைக் கொண்டு மகிழ்ச்சிப் பெருக்கிலே திளைத்திருக்க எண்ணும் என்னை, தம்பி! நான் மேற்கொண்டுவிட்ட 'கடமை' வேலையைக் கவனி! வேலையைக் கவனி! என்று முடுக்குகிறது.



இன்று, எப்படியும் எழுதுவது - ஆண்டுக்கோர் நாள் - **அருமைமிகு திருநாள் - பொங்கற் புதுநாள்** - அதற்காக வெளிவரும் மலரில் எப்படியும் எழுதவேண்டும்.

பொங்கற் புதுநாள் வாழ்த்தினைத் தெரிவித்துப் பெற்றிடும் மகிழ்ச்சியினை மட்டும் நான் இழந்துவிடமாட்டேன். **நமக்கென்று உள்ள ஒப்பற்ற விழா அல்லவா அது!** எத்தனையோ இன்னல்கள் தாக்கிடினும், அவைகளை மறந்து, ஒருநாள் மனைதோறும் மகிழ்ச்சியுடன் கொண்டாடிட என்று அமைந்த நாளல்லவா **பொங்கற் புதுநாள்,** பேச்சிலே ஒரு இசை கலந்திடும் நாள் இத்திருநாள்! இந்நாளில், உனக்கு வாழ்த்துக் கூறுவதிலே பெற்றிடும் 'இன்பம் ஈடற்றதல்லவா. எனவேதான், எப்படியும் எழுதுவது என்று உட்கார்ந்தேன்.

உலக நாடுகள் பலவற்றின் தலைநகரங்களை ஒருமுறைக்கு மும்முறை கண்டு வந்தேன். அங்கு எங்கும் - விழாக்கள் பலப்பல நடாத்தப்படினும் - **தமிழகத்தின் பொங்கற் புதுநாள் போன்றதோர் பொன்விழா இல்லை;** நிச்சயமாக இல்லை. கோலாகல விழாக்கள் உள்ளன; பரபரப்பூட்டும் விழாக்கள் நடத்தப்படுகின்றன; கேளிக்கைகள், மதுபான விருந்துகள் மிகுதியாக; எனினும், ஆர்ப்பரிப்பின்றி - ஆனால் அகமகிழ்ச்சியுடன், போலிப் பூச்சுகளின்றி - ஆனால் புதியதோர் பொலிவுடன், வீட்டில் உள்ள அனைவரும் கலந்துரையாடி மகிழ்ந்திருக்கும் நமது பொங்கற் புதுநாளுக்கு ஒப்பான விழா அங்கு இல்லை. நாட்டியக் கூடங்களிலே அமளி! பாதைகளிலே புதுவேகம், மோதல், உயிர்ச்சேதம்! அங்காடிகளிலே ஆரவாரம்! இவைகள் ஏராளமான அளவு! ஆனால் இங்கு வீடுதோறும் எழுகிறதே, முதியவரும், மூதாட்டியும், இளைஞரும், இளநங்கையும், சிறாரும், சிறுமியரும் கலந்து எழுப்பும் பொங்கலோ! பொங்கல்! என்ற இசை, அது அங்கு எங்கும் இல்லை. இருந்திடத் தக்க விதமான சமூக அமைப்பே இல்லை.



தமிழகத்தில் பன்னெடுங்காலத்துக்கு முன்பிருந்து நாடு பல, தனது எல்லையை வகுத்துக்கொண்டு அரசு அமைத்துக்கொண்டு நிலவத் தொடங்குவதற்கு நெடுங்காலத்திற்கு முன்பே, நாம் பெற்றிருந்த கருத்துச் செல்வத்தை எண்ணிப் பார்த்திடும்போது, நமக்கு இன்றுள்ள எல்லாத் துயரங்களையும் ஒருகணம் மறந்து, வேறு எவரும் பெறமுடியாத ஓர் பெருமித உணர்வினை நாம் பெறமுடிகிறது. அத்தகைய கருவூலத்தை நமக்குத் தந்த தமிழ்நாட்டுக்கு, **இந்தப் பொங்கற் புதுநாளிலிருந்து, நாம் உலகுக்கு அறிவிக்க முடிகிறது. இது தமிழ்நாடு என்பதாக,** பெயரில் என்ன இருக்கிறது என்று பேசிடும் பெரியவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள் - ஆனால் பாடினாரே பாரதியார்,

***'செந்தமிழ் நாடெனும் போதினிலே***
***இன்பத் தேன்வந்து பாயுது, காதினிலே'***

- என்று. அந்த 'கவிதா வாக்கியம்' பெரிய இடத்தில் அமர்ந்துகொண்டு 'சின்னத்தனம்' பேசிடும் பலருடைய ஏளனத்தைப் பொருட்படுத்தவேண்டாம், உயர்ந்த எண்ணம் கொள்! என்றன்றோ கட்டளையிடுகிறது. 'நாம்' தமிழ்நாடு என்ற பெயர் பெற்றிடக் காரணமாக இருந்தோம் என்ற தித்திப்புக் கலந்திடும் பொங்கற் புதுநாள் இந்த ஆண்டு.

**'தமிழ்நாடு'** - என்ற பெயர் கிடைப்பதால் கிடைத்திடும் பெருமிதம் காலமெல்லாம் நிலைத்து நிற்கும்; நமது வழிவழி வருவோருக்கெல்லாம் நம்மைப்பற்றி அறிவிக்கும்; வரலாற்றில் இடம் பெறும்; பருவமழை தவறுவதும் வறட்சி மிகுவதும்; பஞ்சநிலை தலைதூக்குவதும் என்றென்றும் இருப்பதல்ல; திங்கள் சில.

எனவேதான், தம்பி!எப்போதுமே எழுச்சியுடன் நடாத்திடும் பொங்கற் புதுநாளை இவ்வாண்டு புதியதோர் எழுச்சியுடன் கொண்டாடிடக் காரணம் இருக்கிறதுஎன்பதனை நினைவுபடுத்துகின்றேன்.

உடையார்க்கே-விழாவெல்லாம்; ஏழையர்க்கு ஏது? என்ற கேள்வியிலே தொக்கியுள்ள நியாயத்தை நான் மறுப்பவனல்ல. தமிழக முழுவதும் விழாக்கோலம் கொள்ளக்கூடிய விதமான வளம் கொழித்திட வேண்டும் என்று விரும்புகிறேன்.

மாநிலங்கள் அதிக அளவில் அதிகாரங்களைப் பெறத்தக்க விதத்தில் இந்திய அரசியல் சட்டம் திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்பது பற்றி வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் எடுத்துக் கூறி வருகின்றேன்.

தமிழகத்திற்கென்று இருக்கின்றனவே தனிச்சிறப்புகள் - என் செய்வது! எப்படி மறப்பது! எப்படி மறைப்பது!

***'யாதும் ஊரே; யாவரும் கேளிர்'***

***'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்'***

***'மெய்ப்பொருள் காண்பது அறிவு'***

***'யான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்'***

***'கற்றது கைம்மண்ணளவு; கல்லாதது உலகளவு'***

- இவைகளை எங்கனம் மறந்திட இயலும். வேறு எங்கும் இந்த எண்ணம் ஏற்படாத நாட்களில், இவை தமிழகத்திலே மலர்ந்தன என்ற உண்மையை எப்படி மறைக்க முடியும்! ஏன் மறைக்க வேண்டும்?

சிலர் எதிர்க் கூச்சலைக் கிளப்பியபடி இருப்பினும், இன்றையத் தமிழர், தமிழகத்தின் தனிச் சிறப்பினை பெருமளவிற்கு உணர்ந்து எழுச்சிபெற்று வருகின்றனர். தமிழகத்து வரலாற்றுத் துறையிலும், இலக்கியத் துறையிலும், பண்பாட்டுத் துறையிலும் மேலும்மேலும் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப் படின் தமிழரின் தனிச் சிறப்புகள் முழுஅளவு கிடைக்கப்பெறும் என்பது மட்டும், அதனைத் தரணி அறிந்து போற்றிடத்தக்க வாய்ப்பும் மிகுந்திடும்.

இப்போதே, அமெரிக்க ஐரோப்பியப் பல்கலைக்கழகங்கள் பல, தமிழ்த் துறைக்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றன.

தமிழரின் தனிச்சிறப்புகளை ஆய்ந்தறியும் ஏற்பாடு, இங்கு இன்னமும் போதுமான அளவுக்கு மேற்கொள்ளப்படவில்லை. உலகமே ஏற்றுக்கொண்ட உயர்நூலாம் திருக்குறளுக் கான ஆராய்ச்சியேகூட அல்லவா இங்கு மேற்கொள்ளப்படாமலிருந்து வந்தது.

'இதுகள்' என்ற ஏளனத்தைச் சுமந்து கொண்டிருக்கும் 'நாம்' ஆட்சி நடத்தத் தொடங்கியதன் தொடர்பாக நடைபெற்ற உலகத் தமிழர் மாநாட்டிலே திரட்டிய பணத்தில், ஒன்பது இலட்சம் வெண்பொற் காசுகளைக் கொடுத்தல்லவா மூன்று பல்கலைக்கழகங்களையும் திருக்குறள் ஆராய்ச்சியில் ஈடுபடும்படி ஊக்குவித் திருக்கிறோம்.

வேறெல்லா விழாக்களும், ''போகும் இடத்திற்காக" - பொங்கற் புதுநாள் இருக்கும் இடத்திற்காக என்பதனைத் தம்பீ! ஆண்டு பலவாக நீ எடுத்துக் கூறி வந்திருக்கின்றாய்.

துவக்கத்திலே இதுகேட்டு வெகுண் டெழுந்தோரெல்லாம் கூட, இப்போது உண்மைதானே! என்றுகூறிட முன்வந் துள்ளனர். பொங்கற் புதுநாளை ஒட்டி, தம்பி! உன்னால் இயன்ற அளவுக்கு, தமிழரின் தனிச் சிறப்புகளைக் குறித்து எடுத்துரைக்கும் பணியிலே ஈடுபடக் கேட்டுக்கொள்கிறேன். நீ முயன்றால், முடியாததும் இருக்கிறதா! என்னையே முதலமைச்சர் ஆக்கிட முடிந்திருக்கிறதே உன்னால் - வேறு எதுதான் செய்திட உன்னால் முடியாது! முயன்றிடு! முனைந்திடு!

போலிப் பெருமை தேடிக்கொள்ளவோ, நாட்டின் பிறபகுதிகளைத் தரக்குறைவாகக் கருதுவதற்காகவோ அல்ல தம்பி! **தமிழகத்தின் தனிச்சிறப்புகள் பற்றி நாம் அறிந்திடவேண்டும், அகமகிழ்ந்திட வேண்டும், எழுச்சி பெற்றிடவேண்டும் என்று நான் கூறுவது, பிறபகுதிகளும், உலகின் பல்வேறு நாடுகளும் கேட்டு இன்புறத்தக்க, அறிந்து மேற்கொள்ளத்தக்க பண்பாடு நம்முடையது.** அத்தகைய கருவூலத்தை இழந்துவிடுவது நமக்கும் நாட்டுக்கும் மட்டுமல்ல, உலகுக்கே நட்டம் என்பதாலேயே, தமிழகத்துத் தனிச்சிறப்பு இயல்புகளை நாம் நன்கு அறிந்திடவேண்டும் என்று கூறி வருகிறேன். குறுகிய மனப்பான்மை என்கின்றனர் இதனை; அவர்கள் குறைமதியாளர் என்று கூறிடத் தோன்றுகிறது, பண்பாடு அந்த உணர்ச்சியைத் தடுத்து நிறுத்துகிறது. பிளவு மனப்பான்மை என்றும்கூடக் கூறுவார் உளர்! எதனை என்று பார்த்திடும்போது சிரிப்பே வருகிறது.

*'யாதும் ஊரே; யாவரும் கேளிர்'*

- என்ற பண்பாட்டினை எடுத்துக் கூறுவது, பிளவு மனப்பான்மையாமே! யாழ், காது குடைச்சலை உண்டாக்குகிறது; தேன், குமட்டலைத் தருகிறது; தென்றல் வெப்பத்தை மூட்டுகிறது என்று கூறுவதுபோல அல்லவா இருக்கிறது, தமிழ்ப் பண்பாட்டுச் சிறப்பினை எடுத்துக் கூறுவது பிளவு மனப்பான்மையை மூட்டிவிடும் என்று கூறுவது?





வான் கோழி கண்டால் வருத்தப்படுமே என்று எண்ணி தோகையைக் கீழே உதறிப்போட்டுவிடுமா கலாப மயில்? காக்கைக்கு வருத்தமாக இருக்குமே என்பதற்காகப் பச்சைக் கிளி கருப்புப் பூச்சைத் தேடிக்கொண்டிருக்குமா? பிறநாடுகளும், நமது நாட்டின் பிற பகுதிகளும் பெற்றிராத கருத்துக் கருவூலத்தைத் தமிழகம் பெற்றிருக்கிறது என்பதனை எடுத்துக் காட்டுவது எந்த வகையிலும் தவறு அல்ல; எத்தகைய தீமையும் தந்திடாது; எவருக்கும்.

தமிழரின் தனிச்சிறப்பினை அறிந்திடப் பயன்படும் நமது இலக்கியச் செல்வத்தை நினைவிற் கொள்ளவும், மற்றையோர்க்கு எடுத்துக்கூறவும் **பொங்கற் புதுநாள்** ஏற்றது என்பதாலேயே **பெரியோர்கள் இதனைத் 'தமிழர் திருநாள்'** என்றழைக்கின்றனர்.

பழம்பெருமை பேசி பெருமூச்செறிந்து கொண்டே செயலற்று இருப்பதல்ல நமது குறிக்கோள்; செயலினால் பெற்றிடும் செழுமையை எடுத்துக் காட்டிடும் நன்னாளாம் பொங்கற் புதுநாளில், செயலார்வம் மிகுந்திடுவது இயல்பு, செயலும் செம்மையானதாக அமைந்திட வேண்டும், பயனும் சமூகம் முழுவதற்கும் கிடைத்திடத் தக்க முறை கண்டாக வேண்டும். வெள்ளம் அழித்திடும்; - வாய்க்கால் வளமூட்டும். செல்வம் சிலரிடம் சென்று குவித்திடுவது வெள்ளத்துக்கு ஒப்பானது; அது கொண்டவனையும் அழித்திடும், சமூகத்தில் வலிவற்றோரையும் அழித்திடும். எனவேதான் - சிந்தனையாளர், செல்வம் பெருக்கிட வேண்டும்.

அஃது முடக்கப்படாமல் சமூகம் முழுவதிற்கும் பயன் அளிக்கக்கூடிய வழிமுறை கண்டாக வேண்டும் என்று எடுத்துக் கூறினர். ' நமது அரசு கூட அந்தச் சமதர்ம இலட்சியத்தைப் போற்றுகிறது.

ஆண்டவனே! ஏனோ எனக்கு இந்தச் சோதனை; இத்துணை வேதனை என்று ஏழை இறைஞ்சுகிறான். செல்வவன், ஆண்டவன் அருளால் நான் பெருநிதி பெற்றேன். இதனைக் குறை கூறுவது தர்மமா? என்று நியாயம் பேசுகிறான்.

மொரேவியா நாட்டில்- 'பணம் பெட்டியில் தூங்குகிறது; பணக்காரன் பட்டு மெத்தையில் தூங்குகிறான்; ஆண்டவன் சொர்க்கத்தில் தூங்குகிறார்; இல்லாவிடில் தெருவில் ஏன் இத்தனைப் பிச்சைக்காரர்கள்?' என்றோர் பழமொழி உண்டு.

இந்த நிலை கண்டு மனம் வெதும்பிய நிலையில், பொங்கலாம் பொங்கல்! யாருக்கு? ஏழைக்கு ஏது அந்த இன்பம்? - என்று நமது இளங்கவிஞர்கள் கேட்கின்றனர். அந்தக் கேள்வியிலே உருக்கமும் இருக்கிறது உண்மையும் இருக்கிறது.

இந்த நிலையைக்கண்டு மனம் வெதும்பி, கவிஞர் இராஜேந்திரன்,

***'தைத்திங்கள் வருகின்ற பொங்கல் நாளில்***
***தங்கத்தைச் சுமக்கின்ற மகளிர் ஆக்கும்***
***நெய்ப்பொங்கல் சுவைத்துண்டு மகிழ்ச்சி கொள்வர்***
***நிதிபடைத்த சீமான்கள்; என்றும் எங்கள்***
***கைதொட்டு வாய்பட்ட துண்டோ பொங்கல்***
***கண்மட்டும் ஓயாமல் பொங்கும்! பொங்கும்!***
***தெய்வங்கள் திருநாட்கள் எங்கட்கு இல்லை***
***தெருவோரச்***
***சாக்கடையில் வருமா***
***தெப்பம்?'***

- என்று கேட்டிருக்கிறார். மிகைப்படுத்திக் கூறுகிறார் என்று எவரும் கூறிடார்! ஏழ்மை நெளிகிறது! அதிலும் வளம் பெற்றளிக்கும் பாட்டாளிகளிடம்! இது நீதியல்ல; தமிழர் நெறியுமாகாது. இந்நிலை மாறிட, எல்லோர்க்கும் வாழ்வில் இன்பம் கிடைத்திட நாம் ஒவ்வொருவரும் தத்தமக்குக் கிடைத்துள்ள வாய்ப்பிற்கு ஏற்ற முறையில் பணியாற்றிட வேண்டும். தமிழர் திருநாளில் தமிழர் அனைவரும் களிப்புடன் கலந்துகொள்ளத் தக்கதான சமுதாய அமைப்பு முறை காணப் பாடுபட்டாக வேண்டும். உவகை தந்திடும் இந்நாளில் இதற்கான உறுதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

ஆனால் தம்பி! மனம் வெதும்பி இதுபற்றிக் கூறிய கவிஞரே, பிறகோர் இடத்தில்,

**'தைத்திருநாள் வருகைபார் தம்பி! வெல்லத்-**
**தமிழுள்ளம் தனில்இன்ப வெள்ளம் சேர்க்கும்**
**மெய்த்திருநாள் மேன்மைபார்! அறிவை வாட்டி**
**மெலியவைக்கும் தேவையற்ற பண்டிகைகள்**
**பொய்த்தினிமேல் போய்விடும்பார் வானில் பாயும்**
**புலிச்சின்னப் புகழ்மன்னன் கரிகாலன் றன்**
**கைத்திருவாள் வெளிச்சம்போல் மின்னுகின்ற**
**கதிர்மணியின் குவியல்பார்! கரும்பைப் பார்!..'**

- என்று எழுச்சியுடன் பாடுகிறார். தமிழ் கற்றுணர்ந்தவர்கள் அனைவருமே இதுபோலத் தான்; சமூகத்தில் மூட்டிவிடப் பட்டுள்ள கேடுகளைக் கண்டு மனம் வெதும்பினாலும், **பொங்கற் புதுநாளை மட்டும் 'தமிழர் தமது திருநாளாகக் கொள்ள வேண்டும்'** என்பதனை

எடுத்துரைத்து வருகின்றனர்; காரணம் மற்றைய பல விழாக்கள் கொடுத்து வைத்தது அவ்வளவுதான்.

நாம் வந்த வழி அது.

இங்கு துன்பம், அங்கு இன்பம் கிட்டும்.

என்ற எண்ணங்களுக்கு முதலிடம் தருவன. தமிழர் திருநாளாம் பொங்கற்புதுநாள் தனித்தன்மை பெற்றது,

***உழைப்பே செல்வம்***
***உழைப்பே உயர்வு***
***உழைப்பின்றி உலகு இல்லை***

என்பன போன்ற நற்கருத்துக்களைத் தருவதாக அமைந்திருக்கின்றது.

தம்பி! சீமான் மகன் கொண்டாடும் விழா அல்ல பொங்கற் புதுநாள். சமூகத்தின் கோணங்களை நிமிர்த்தியாகவேண்டும் என்ற குறிக்கோள் கொண்ட உன் போன்றாருக்கென்றே அமைந்துள்ள விழாவாகும்.

கிடைக்கும் ஒவ்வொரு வாய்ப்பையும் தக்க முறையிலே பயன்படுத்தினால், சமூகத்தை நிச்சயமாகத் திருத்தி அமைத்திடலாம்.

காலத்தை வீணாக்காமல், சமூகத் தொண்டாற்ற ஓர் துடிப்பு உனக்கு உண்டு என்பதனை உணர்ந்த உன் அண்ணன் இன்று உனக்குக் கனிவு நிரம்பிடும் வாழ்த்தினை அளிப்பதுடன், உன் இல்லதுள்ளார் யாவருக்கும் வாழ்த்துக் கூறுவதுடன், நாடு வளம் பெற, சமூகம் சீர்பெற, சமதர்மம் மலர்ந்திடப் பாடுபடுவதற்கான உறுதியினை இன்று பெற்றிடுக என்றும் கூற விரும்புகிறேன்.

**ஒரு நிமிடம் கூட வீணாக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும்** என்று நான் கூறுவதற்குக் காரணம் தம்பி! எங்கே படித்ததாக நினைவு, ஒரு நிமிடத்தில், விண்ணிலிருந்து 6000 விண்கற்கள் விழுகின்றன; பூமி தன்னைத்தானே 950 மைல் வேகத்தில் சுற்றுகிறது; 100 பேர் இறந்துபடுகின்றனர்; 114 குழந்தைகள் பிறக்கின்றன. 34 திருமணங்கள், 16 விவாக விடுதலை நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. 68 மோட்டார்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன என்பதாக.

காலம் அத்துணை மதிப்புவாய்ந்தது. கடமை உணர்ந்த நீ, காலத்தையே கனியச்செய்திடும் ஆற்றல் பெற்ற நீ, உன் கடமையைச் செய்வதிலே கண்ணுங் கருத்துமாக இருப்பாய் என்பதனை நான் நன்கு அறிவேன். எனினும் அண்ணன் என்ற உரிமையுடன் உனக்கு அந்தக் கடமையை நினைவுபடுத்துவது எனக்கோர் மகிழ்ச்சி தந்திடுவது போல உனக்கும் மகிழ்ச்சி தந்திடும் என்பதிலே ஐயப்பாடு இல்லை.

என்னைப் பொறுத்த மட்டிலே தம்பி! நலிவைத் தாங்கிக்கொண்டபடி என்னால் இயன்றதைச் செய்துகொண்டு வருகின்றேன். உண்மைதான்! வலி இருக்கத்தான் செய்கிறது - ஆனால் தம்பிக்கல்லவா கடிதம் எழுதுகிறேன்; அது தனியானதோர் சுவையைத் தருகிறது. **மகிழ்ந்திரு! விழா நடத்திடு! வேலை மிகுதி இருக்கிறது என்ற நினைவுடன்.**

*(பேரறிஞர் அண்ணா அவர்கள் 1969 'காஞ்சி' பொங்கல் மலரில் எழுதிய கடைசிக் கடிதத்திலிருந்து, சில அரிய பகுதிகள் தொகுத்துத் தரப்பட்டுள்ளன.)*

---

# தைப்பாவை

## கவியரசர் கண்ணதாசன்



எந்தமிழர் கோட்டத் திருப்பார் உயிர்வளர
எந்தமிழர் உள்ளத் தினிமைப் பொருள்மலர

எந்தமிழர் கைவேல் இடுவெங் களஞ்சிவக்க
எந்தமிழர் நாவாழ் இளமைத் தமிழ்செழிக்க

எந்தமிழர் இல்லத் திலங்கும் ஒளிவிளங்க
முந்துதமிழ்ப் பாவாய் முன்னேற்றம் தான்தருவாய்!


தந்தருள்வாய் பாவாய் தைவடிவத் திருப்பாவாய்!
வந்தருள்வாய்! கண்ணால் வாழ்த்துரைப்பாய் தைப்பாவாய்!

எங்கள் சமுதாயம் ஏழா யிரமாண்டு
திங்கள்போல் வாழ்ந்து செங்கதிர்போல் ஒளிவீசும்!

மங்காத போர்க்களத்தும் மாளாத வீரர்படை
கங்குல் அகமென்றும் காலைப் புறமென்றும்

பொங்கி விளையாடிப் புகழேட்டில் குடியேறி
தங்கி நிலைத்துத் தழைத்திருக்கும் காட்சியினைக்

கண்காண வந்த கலைவடிவே நித்திலமே!
பொங்கற்பால் பொங்கிப் பூவுதிர்ப்பாய் தைப்பாவாய்!




# வேழமே, உனக்கொரு வினா?

— கவிஞர் மதிவண்ணன்

(தமிழ்நாடு அரசின் 1997க்கான 'பாரதியார் விருது' பெற்றவர்)

கரியபெரும் பாறையொன்று கால்கள் பெற்றுக்
கண்முன்னே தோன்றுதல்போல் அசைந் தசைந்து
வருகின்ற சதைமலையே! தொங்கும் கையை
வாகாக நீவளைத்து நெற்றி வைத்தால்
ஒருபெரிய வினாக்குறியின் வடிவம் தோன்றும்!
உவகையுடன் 'இனிக்கின்ற மூங்கில்' என்னும்
கரும்பை நீ துதிக்கையால் வாங்கி, சின்னக்
கடலையைப்போல் உண்கையிலோ வியப்புத் தோன்றும்!

சேம்பின்இலை சிறுகாற்றில் ஆடு தல்போல்
செவியிரண்டு! எறும்பளவில் உனக்குக் கண்கள்!
ஆம்! உன்றன் கம்பீர உருவிற் கேற்ப
அமைய வில்லை விழி; எனினும் அழகாய் உள்ளாய்!
காம்புவிட்டுக் காய்பறிக்கும் என்கை! உன்றன்
கைவலிமை மரத்தினையே பறித்து வைக்கும்!
வீம்புக்குச் சொல்லவில்லை! சைவம் உண்ணும்
விலங்கதனால் ஆற்றலிலும் விளங்கு கின்றாய்!



இலங்குகின்ற அஃறிணைக்குள் எழில்ஆண் பால்தான்!
இனிக்கின்ற கனற்கொண்டை பெட்டைக் கில்லை!
விளங்குகின்ற தோகை,பெண் மயிலுக் கில்லை!
வீணைஇசைத் தேன்குரல், பெண் குயிலுக் கில்லை!
அலங்காரப் பிறைவளைவாய் வெண்மைத் தந்தம்
ஆண்யானை உன்றனுக்கே உண்டு! மாறித்
தலைகீழாய் உயர்திணையில் தாழ்ந்தோம் ஆண்கள்!
தனிக்கவர்ச்சிப் பெண்கள்தான் அழகில் தேன்கள்!

கடலழகும், நிலவழகும் பார்க்கப் பார்க்கக்
கண்களுக்குக் களிப்பூட்டும் விதம்போல் உன்றன்
உடலழகும், நடையழகும் உண்டே! ஓசை
உனக்கும்முன் ஊர்க்குவரும்! யானையே என்
அடையாளம் தெரிகிறதா? நினைவாற் றல்தான்
அதிகமுண்டே உன்றனுக்கு! அல்லிக் கேணி
நடைபோட்ட பாரதியின் பேரன் நான்தான்!
நட்புகொள்ள விரும்புகிறேன்! நம்ப லாமா?

# மருத்துவத் துறையின் சாதனைகள்



**பொதுச் சுகாதாரம்:**

★ கடந்த இரண்டு நிதி ஆண்டுகளில் அரசு மருத்துவமனைகளில் படுக்கை வசதிகளை விரிவாக்கும் வகையில் புதியதாகக் கட்டடங்கள் கட்டுவதற்கு ரூ.14.94 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுக் கட்டடப்பணிகள் நடைபெறுகின்றன.

★ மேலும் மருத்துவமனைக் கட்டடங்களைப் பராமரிக்கவும், துப்புரவாக வைத்துக்கொள்ளும் பொருட்டும், கடந்த 2 ஆண்டுகளில் ரூ.14 கோடி அரசு ஒதுக்கீட்டில், மருத்துவமனைகள் பராமரிக்கப்பட்டு அவைகளின் தரம் உயர்த்தப்படுகின்றன.

★ மேலும் மொத்தத் தொகையாக ரூ.250 இலட்சங்கள் மருத்துவமனை மேம்பாட்டிற்காகக் குறிப்பாக வெளிநோயாளிகள் பிரிவு, அறுவைசிகிச்சை அரங்குப் பிரிவுகள் போன்றவற்றிற்காக நடப்பு நிதி ஆண்டில் அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

★ காச நோய் தடுப்புப் பணிகளுக்காகச் சிறப்புத் தொகையாக ரூ.424 இலட்சங்களை அரசு ஒதுக்கீடு செய்து அதில் 11 மாவட்ட காசநோய்த் தடுப்பு மையங்களுக்குக் கட்டடங்கள் கட்டுவதற்காக ரூ.330 இலட்சங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

★ இதய நோய்ச் சிகிச்சை கிராமங்களுக்கும் எட்டிடும் வகையில், 6 தாலுக்கா மருத்துவமனைகளில் இருதய சிகிச்சைப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

★ தமிழகத்தில் உள்ள எல்லா அரசு மருத்துவமனைகளிலும் ஆம்புலன்ஸ் வாகன வசதிகளை உருவாக்கிட முடிவெடுத்து இந்த நிதியாண்டில் ரூ.445.00 இலட்சம் செலவில் 127 புதிய ஆம்புலன்ஸ் வண்டிகள் வாங்கப்பட்டு மருத்துவமனைகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன.

★ நோயாளிகளுக்கு நவீன முறையிலும் விரைவிலும் நோய் ஆய்வுப் பரிசோதனை செய்யும் பொருட்டு 38 மருத்துவமனைகளுக்கு ரூ.92.50 இலட்சம் செலவில் Semi Auto Analyser என்ற நவீன உபகரணங்கள் இந்த நிதியாண்டில் வழங்கப்பட்டுள்ளன.

★ 600 மருத்துவப் பட்டதாரிகள், அரசு மருத்துவமனைகளில் மருத்துவர்களாகப் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

★ திருச்சியில், கி.ஆ.பெ.விசுவநாதம் பெயரில் புதிய மருத்துவக்கல்லூரி தொடங்கப்பட்டுள்ளது; அடுத்த ஆண்டு மேலும் 4 புதிய மருத்துவக் கல்லூரிகள் தொடங்கப்படவுள்ளன.

★ பயிற்சி மருத்துவர்கள், மருத்துவப்பட்ட மற்றும் பட்டய மேற்படிப்பு மாணவர்கள் - மாத உதவித்தொகையை உயர்த்தியும், அரசுப்பணியில் இருந்து கொண்டே மேற்படிப்புப் பயில்பவர்களுக்கு அகவிலைப்படியுடன் முழுமாதச் சம்பளத்தையும் வழங்கிடவும், ஆக ரூ.6.34 கோடி நிதி ஒதுக்கி **முதலமைச்சர் கலைஞர்** ஆணையிட்டுள்ளார்.

★ மருத்துவக்கல்வி இயக்ககத்தின் கட்டுப்பாட்டிலுள்ள மருத்துவமனைகளுக்கு ரூ.20 கோடியில் புதிய கருவிகள் - உபகரணங்கள் வாங்கப்பட்டுள்ளன.

★ ஊரகப்பகுதியிலுள்ள 100 ஆரம்பச் சுகாதார நிலையங்களை பெரிய தொழிற்சாலைகள் தத்தெடுத்துக் கொண்டு இக்கிராமப்புற மருத்துவமனைகளின் தரத்தை உயர்த்திடும் புதிய திட்டம் - இந்தியாவுக்கே வழிகாட்டும் புதுமைத் திட்டத்தை **முதலமைச்சர் கலைஞர்** அறிவித்துள்ளார்.



★ 300 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு ரூ.18 கோடியில் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. மேலும், ரூ.31.68 கோடி செலவில் 352 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குக் கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

★ கடந்த 1½ ஆண்டுகளில், கிராமப்புற மக்களுக்கு அவசர சிகிச்சை கிட்டிடும் வகையில் **கலைஞரின்** ஆணையால் 250 வட்டார ஆரம்ப சுகாதார நிலையங்கள் 24 மணி நேரமும் செயல்படுகின்றன. அடுத்து வரும் ஆண்டுகளில் தமிழகத்திலுள்ள அனைத்து வட்டார ஆரம்ப சுகாதார நிலையங்களும் 24 மணி நேரமும் செயல்படுமெனக் **கலைஞர்** அறிவித்துள்ளார்.

★ வட்டார சுகாதார நிலையங்களுக்கு இவ்விரண்டு நிதி ஆண்டுகளில் ரூ.8.34 கோடி செலவில் 224 அவசர ஊர்திகள் வழங்கப்பட்டுள்ளன.

★ இவை தவிர்த்து, சித்த, ஆயுர்வேத, யுனானி, ஓமியோபதி, இயற்கை வைத்தியம் - போகா போன்ற பிரிவுகளின், கல்வி வசதி, மருத்துவ வசதி உருவாக்கத்திற்கென கடந்த 2 நிதியாண்டுகளில் ரூ.31 கோடி செலவிட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

★ பாரம்பரியச் சித்த மருத்துவர்களது ஓய்வூதியத்தை ரூ.150லிருந்து ரூ.500 ஆக உயர்த்தி வழங்கிடக் கலைஞர் ஆணையிட்டுள்ளார்.

★ பிறப்பு விகிதத்தைக் குறைக்கவும், பிறந்த குழந்தைகளைப் பேணுவதுமாகிய, குடும்பநலத் திட்டத்திற்கு நடப்பு ஆண்டில் ரூ.70.76 கோடி அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.




முனைவர் சிலம்பொலி சு. செல்லப்பன்

மகளிர் அழகை இலக்கியங்கள் அழகுறப் பேசுகின்றன. பெண்ணழகைப் பாடாத கவிஞரே இல்லை எனலாம். பெண்டிரை வெறுத்துப் பாடியவர்கள் கூட, அவர்களுடைய அழகை விரிவாக எடுத்துரைத்து, இப்படிப்பட்ட அழகில் மயங்காதிருக்க வேண்டும் எனச் சொல்லும் வகையில் பெண்ணழகைச் சிறப்பிக்க மறந்ததில்லை. பெண்டிரின் அடி முதல் முடி வரையிலான அழகை விரித்துக் கூறும் பாடல்கள் பல உண்டு. மங்கையின் முகத்தை நிலவாகவும் கையைத் தாமரையாகவும் கற்பனை செய்து பாடுவதுண்டு. மலர் தொடுத்துக் கொண்டிருந்த மணிமேகலை தன் தந்தைக்கு நேர்ந்த துயர் கேட்டுக் கண்ணீர் வடிக்கிறாள். அவள் தாய் மாதவி தன் அழகான கைகளை மணிமேகலையின் முகத்தில் வைத்துக் கண்ணீரைத் துடைத்துவிடுகிறாள். மாதவியின் கை, மணிமேகலையின் முகத்தில் சேர்ந்த தோற்றம், செந்தாமரை மலர் ஒன்று குளிர்ந்த நிலவைச் சேர்ந்தது போல இருந்ததெனப் பாடுகிறார் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார்.

*'மாதவி மணிமே கலைமுகம் நோக்கித்
தாமரை தண்மதி சேர்ந்தது போலக்
காமர் செங்கையிற் கண்ணீர் மாற்றி'*

- என்பன அக்காட்சியைக் கூறும் பாடல் அடிகள். மணிமேகலையின் முகம் மதியாகவும், மாதவியின் கை தாமரையாகவும் சிறப்பிக்கப்பட்டுள்ளன.

அழகிய முகம் வேண்டுமென்று ஆசைப்படாதவர் உண்டா? 'எழிலார்ந்த முகம் ஒரு சிறந்த பரிந்துரைக் கடிதம் (A good face is the best letter of recommendation) என்றார், இங்கிலாந்து நாட்டு அரசி முதலாம் எலிசபெத். ஒளி பொருந்திய முகத்தினை எல்லோரும் விரும்புவர். அதனால்தான் நகைமுகம், வான்முகம், திருமுகம் என்றெல்லாம் அடைமொழி கொடுத்து அழைக்கப்படுகின்றன.

குளிர் பொங்கும் நிலவைக் காணும் ஒருவன் அதனைத் தன் காதலியின் முகத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கிறான். வானத்திலுள்ள மீன்களெல்லாம் அங்குமிங்குமாக அலைகின்றனவாம்! "நிலவொடு இருக்கும் அம் மீன்கள் வானத்திலுள்ளதா அல்லது இந்த முகமா? இவற்றுள் எது நிலவு என்று தெரியாமல் மயங்கி அங்கும் இங்கும் ஓடி அலைந்து பார்த்து மயங்குகின்றன" எனத் தன் காதலியின் முகம் நிலவைப் போல் இருப்பதாகப் புகழ்கிறான் அக் காதலன். இதனை,

*'மதியும் மடந்தை முகனும் அறியா
பதியிற் கலங்கிய மீன்'*

- எனக் குறள் குறிப்பிடுகின்றது. அக் காதலன் மேலும் கூறுகிறான்: "முகமா நிலவா என்றறிய மீன்கள் இவ்வளவு கலங்க வேண்டியதில்லையே! நிலாவுக்குக் களங்கம் (மறு) உண்டு; என் காதலியின் முகத்தில் களங்கம் ஏது? இந்த வேறுபாட்டைக் கொண்டு எது நிலவு எது முகம் என எளிதில் கண்டிருக்கலாமே?" என்கிறான். முதலில் தன் காதலியின் முகம் நிலவைப் போன்றது என்று சொன்னவன், பின்னர் முகம் நிலவைவிடச் சிறந்தது என்றும் பாராட்டுகிறான்.

நிலாவை முகத்துக்கும் கையைத் தாமரைக்கும் ஒப்பிடுகின்ற இந்த இரண்டையும் இணைத்து ஒரு புலவர் அருமையானதொரு கற்பனையை உருவாக்குகிறார். பெண் ஒருத்தி மலர்வனம் சென்றாள். அங்கே வண்டு ஒன்று தரையில் கிடந்தது. அதை எடுத்துக் கையில் வைத்தாள். வண்டு உடனே பறந்துவிட்டது. நிகழ்ச்சி இவ்வளவுதான். அதைப் புலவர் எப்படிப் பாடுகிறார் தெரியுமா? பெண் ஏன் வண்டினைக் கையில் எடுத்தாள் என்ற வினாவை எழுப்பிக் கொள்கிறார். அவ்வண்டு உருண்டையானது; கறுப்பு நிறமுடையது; மினுமினுப்பது. ஆகவே அது நாவற் பழமோ எனும் மயக்கத்தால் மங்கை அதனைக் கையில் எடுத்தாளாம்! கைக்கு வந்த வண்டுக்கு ஒரு மயக்கம்! அது கையைக் கை என்று நினைக்கவில்லை. கையின் சிவந்த நிறத்தையும் மென்மைத் தன்மையும் கண்டு, அதனைத் தாமரைப் பூவோ என்று எண்ணிவிட்டது! பூவைக் கண்டால் வண்டு விடுமா? தேன் இருக்கிறதா எனத் துழாவிப் பார்க்கிறது. பூவாக இருந்தால்தானே தேன் இருப்பதற்கு? கையில் ஏது தேன்? தேனில்லாத தாமரையாக இருக்கிறதே; என்ன புதுமை இது என மேலே அண்ணாந்து பார்த்தது. மங்கையின் முகம் தெரிந்தது.

வண்டுக்கு மீண்டும் மயக்கம். முகத்தை முகம் என நினையாமல் அதனை முழு நிலா எனக் கருதிவிட்டது! உடனே அதற்கு அச்சம். "நாம் இருக்கிறோம் தாமரைப் பூவிலே; அதோ விண்ணிலே நிலவு தோன்றி விட்டது; நிலா தோன்றினால்

தாமரை மூடிக் கொள்ளுமே! தாமரை மூடிக் கொண்டால் விடியும் வரை நாம் இதற்குள் சிறைப்பட்டல்லவா கிடக்க வேண்டும்; வேண்டாம் இந்தத் துன்பம்; உடனே நாம் இதனை விட்டு அகன்றுவிடுவோம்" என வேகமாகப் பறந்து விட்டதாம்! இவ்வருமையான கற்பனையை உள்ளடக்கிய பாடல் இதோ:

*'நாவலங் கனி என்று எண்ணி*
*நங்கைதன் கையிற் கொண்டாள்;*
*மேவிய வண்டோ, கையைக்*
*கமலம் என்றுஉண்ண, மங்கை*
*ஆவலோடு அதனைக் காண,*
*அவள்முகம் மதிஎன்று அஞ்சிப்*
*பூஇனிக் குவியும் என்றே*
*பொள்ளெனப் பறந்தது அம்மா!'*

வண்டு பறந்ததற்கான காரணத்தைக் கற்பனை நயம் மிளிரச் சொல்லுகின்றது இப்பாடல். இது கவிஞனின் அழகியல் பார்வை.

இவ்வாறே பெண்களின் உறுப்புகளையெல்லாம் அழகியல் நோக்கில் பாடுகின்ற பாக்கள் தமிழில் ஆயிரமாயிரம் உண்டு.

'முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்' என்கிறது குறுந்தொகை. காந்தள் மலரின் இதழ்கள் போன்ற அமைப்பும் மென்மையும் கொண்டுள்ளமையால் கைக்குக் காந்தள் மலர் உவமையாகக் கூறப்படுகிறது.

குவளை மலரைப் பெண்ணின் கண்ணுக்கு உவமையாகக் கூறுவர். குவளை மலர் நேரே விண்ணை நோக்கிப் பூக்கும் இயல்புடையது. குவளையைக் காணும் ஒரு காதலன் கூறுகிறான், "இந்த மலர் இன்னும் என் காதலியைப் பார்க்கவில்லை. பார்த்திருந்தால் அவளுடைய கண்களைப்போல நாம் அழகாக இல்லையே என்பதைத் தெரிந்து வெட்கத்தால் தலை குனிந்து கீழ் நோக்கியல்லவா பார்த்துக் கொண்டிருக்கும்" என்கிறான்.

*'காணிற் குவளை கவிழ்ந்து நிலன்நோக்கும்*
*மான்இழை கண்ஒவ்வேம் என்று'*

குவளை மலர் கண்ணுக்கு ஈடாகாது என்பதைத் திருக்குறள் இவ்வாறு குறிப்பிடுகிறது.

பெண்களின் மூக்கு எள் பூவைப் போன்றது என்று சிறப்பிப்பர்.

*'எள்ளிளஞ் சிறிய பூவை*
*எடுத்துவைத் திட்ட மூக்கு'*

- என்று பாடுகிறார் பாவேந்தர் பாரதிதாசன்.

வள்ளைப் பூங்கொடி வளைந்து நீண்டு வளருமாதலின் இதனை மகளிரின் காதுக்கு உவமையாகக் கூறுவதுண்டு.

மகளிரின் வெள்ளிய கூர்மையான பற்களுக்கு முல்லை மலர் உவமையாகிறது. 'துளசிக்கு மணமும் முல்லைக்குக் கூர்மையும் முளைக்கும் போதே தெரியும்' என்பது நாட்டுப்புற மொழி. 'முல்லைச் சிரிப்பாலே என் மூர்க்கம் தவிர்த்திடுவாய்' என்பார் பாரதியார்.

மென்மையாலும் சிவப்புத் தன்மையாலும் மகளிரின் உதட்டிற்கு இலவ மலரின் இதழ் உவமையாக்கப்படுகிறது. 'இலவு இதழ் புரையும் இன்மொழித் துவர்வாய்' என்பது சங்கப்பாடல்.

வடிவாலும் வண்ணத்தாலும் ஒத்திருப்பதால் மகளிரின் மூக்கைக் குமிழ மலர் என்பர். இரண்டு கண்களுக்கும் இடையே மூக்கு இருக்கும் தன்மையை,

*'இருகருங் கயலோடு இடைக்குமிழ் எழுதி'*


- என்பார் இளங்கோவடிகள்.

கோங்கு, மலைப்பாங்கில் வளரும் ஒரு மரம். இதன் பொன்னிற அழகிய மொக்கினை மகளிரின் கொங்கைக்கு ஒப்பாகக் கூறுவர்.

*'விரிந்த கோங்கின் முகைவனப்பு ஏந்திய*
*முற்றா இளமுலை'*

- எனப் புறநானூறு குறிப்பிடுகிறது.

முருக்க மலர் பிறைவடிவில் சிவந்திருப்பதைக் காணுகின்ற புலவர் அதனைச் சிவப்பு நிறம் ஊட்டிய மகளிரின் கைந்நகம் போன்றிருப்பதாகக் கூறுகிறார்.



இளம் மங்கையர்க்கு இன்பப் பூரிப்பால் மார்பிடங்களில் படரும் தேமலுக்கு வேங்கைப்பூ உவமையாகக் கூறப்படுகிறது. காதலன் பிரிவால் காதலிக்குத் தோன்றும் நிறவேறுபாடு பசலை எனப்படும்; அது பீர்க்கம் பூப்போலத் தோன்றும் என்பர்.

முகமும் சிவந்த அடிகளும் தாமரை மலரை ஒத்தன என்பதைக் கூறாத புலவரே இல்லை.

மென்மையான அனிச்ச மலரை விடப் பெண் மென்மையுடையவள் எனப் பெண்ணின் மென்மையைத் திருக்குறள் குறிப்பிடுகிறது.

இவ்வாறாக, காந்தள், குவளை, தாமரை, எள், முல்லை, இலவம், குமிழம்,

கோங்கம், வள்ளை, முருக்கு, வேங்கை, பீர்க்கு, அனிச்சம் ஆகிய இத்தனைப் பூக்களையும் பெண்களுடைய உறுப்புகளோடு ஒப்பிட்டுக் கூறமுடிகிறது. பூவைப்போல் இருத்தலால்தான் மகளிர் பூவையர் என்று அழைக்கப்படுகின்றனர்.

ஒரு பூவைமேல்தான் எத்தனை பூ?

பெண் ஒருத்தி மலர்கொய்ய வனம் செல்கிறாள். அதைப் பார்க்கும் ஒரு புலவர் "எல்லாப் பூக்களும்தான் உன்னிடமே பூத்துள்ளனவே; அப்படியிருக்க நீ ஏன் கால் நோவ நடந்து சென்று வனத்தில் பறிக்கவேண்டும்?" என்று கேட்கிறார்.

இத்துணை அழகாகப் பாடியிருப்பினும் இன்றைய சமூக நிலையில் பாடலில் கூறப்பட்டுள்ள அளவுக்கு வளப்பமும் வனப்பும் பெற்றுமா பெண்கள் திகழ்கிறார்கள்? வாழ்க்கை வளமாக இருந்தால்தானே இந்த வனப்பு?

கவியரசு கண்ணதாசன் தன் 'தென்றல்' இதழில் வெண்பாப் போட்டி ஒன்றை நடத்திவந்தார். ஒரு முறை 'பூவை மேல் எத்தனை பூ' (பெண்ணின் மேல் எத்தனை பூ) எனும் ஈற்றடியைத் தந்து கவிதை எழுதுமாறு கேட்டிருந்தார். பலரும், 'பெண்ணே! உன் மேலேயே அத்துணை பூக்களும் இருக்கின்றனவே' என்ற வகையில்தான் எழுதியிருந்தனர். ஒருவர் எழுதினார்: 'சமூகத்தில் எல்லாப் பெண்களும் பூச்சூடிப் பூரிப்புடன் வாழும் வாழ்க்கையா இருக்கிறது?'

'அவள் கூந்தலிலே தேய்த்துக்கொள்ள அவளிடம் எண்ணெய் சிறிதுமில்லை; எண்ணெய் கிடைத்துத் தேய்த்துக் கொண்டாலும் கூந்தலை வாரிவிட்டுக் கொள்ளச் சீப்பு இல்லை; வாரி முடித்துக் கொண்டாலும் வைத்துக்கொள்ள ஒரு சாண் பூ வாங்க வழி இல்லை; வறுமை வாட்டியெடுக்கத் தேய்ந்து துரும்பாகிச் சாகிறாள்! செத்த அவளைப் பாடையிலே சுமந்து போகும் போது அவள் உடலின் மேல் பூக்களைப் போடுகிறார்களே! உயிரோடு வாழும்போது ஒரு சாண் பூவுக்கு வழியற்று வாழ்வை முடித்துக் கொண்டபின் சுடுகாட்டுக்குச் செல்லும் போது பூவா? இது என்ன சமூகக்கொடுமை!' – எனக் குமுறி எழுதுகிறார்:

*'எண்ணெய்இலை ஏற்றபூச் சூடவகை ஏதுமிலை*
*பெண்கூந்தல் இந்நிலையில் பேன்பிடிக்க - மண்மீதில்*
*சாவை அவள்அண்டிச் சாய்ந்துவிட்டாள் பின்அந்தப்*
*பூவைமேல் எத்தனை பூ!'*

இலக்கியம் காட்டும் இன்ப வளப்பம், வாழ்க்கை நடைமுறையில் இல்லை. இலக்கியம் வேறு வாழ்க்கை வேறாக உள்ளது. இலக்கியங்களில் காணுமாறு வாழ்க்கையை இன்பமுள்ளதாக ஆக்க வேண்டுமென்னும் எண்ணத்தைத் தூண்டும் வகையில் இலக்கியங்கள் படைக்கப்பட வேண்டும். இலக்கியத்திற்கும் வாழ்க்கைக்கும் இடைவெளியில்லாமல் செய்வதே நம் கடமையாக வேண்டும்.

✿ ✿ ✿

# உழுவோர் உயர்க!

கவிஞர் முடியரசன்



மலர்தனில் பனிநீர் குந்தும் - அது
மனமகிழ் அழகினைச் சிந்தும்!
உயரிய விழிநீர் சிந்தின் - என்
உளமோ கடல்எனப் பொங்கும்!

விரித்திடும் தோகைக் கண்கள் - காணின்
விளைத்திடும் என்மனம் பண்கள்!
தரித்திடும் ஆடையில் கண்கள் - காணின்
தலைக்கொளும் ஆயிரம் புண்கள்!

முழுமதி வடிவம் குறையும் - அது
மூன்றாம் பிறையாய் மறையும்!
உழுபவன் வடிவம் குறையின் - என்
உள்ளம் கனலாய்ப் புகையும்!

பசியும் நலிவும் மிகுத்தால் - மனம்
பாயும் புலியாய்ச் செருக்கும்!
இசையா உலகம் படைப்பின் - இதை
எப்படி என்மனம் பொறுக்கும்?

முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து முதலமைச்சர் கலைஞரின்

# மனிதநேய உதவிகள்

ஆட்சிப் பொறுப்பேற்ற
இந்த
ஒன்றரையாண்டு
காலத்தில்
ஏழை எளியோர்க்கு...
இயற்கைச் சீற்றத்தால்
பாதிக்கப்பட்டோருக்கு...
நோய்க்கொடுமை
போன்றவற்றால்
நலிவுற்றோருக்கு
ஆற்றிய உதவிகள்
அளவற்றவை; அவற்றுள் சில



★ மூவலூர் மூதாட்டியார் இராமிர்தத்தம்மையார் நினைவு ஏழைப்பெண்கள் திருமண நிதி உதவித் திட்டத்தின் கீழ் ரூ.10,000 வழங்கும் திட்டத்திற்கென முதலமைச்சர் கலைஞரின் வேண்டுகோளிற்கிணங்க இதுவரை வந்து குவிந்துள்ள நிதி உதவி ரூ.5 கோடியே, 19 இலட்சத்து 12 ஆயிரத்து 9 ஆகும்.

★ கடந்த 1½ ஆண்டுகளில் ஏழை, எளியவரின் உயிர்காக்கும் அறுவைச் சிகிச்சைக்கென முதலமைச்சர் கலைஞரால் அருட்கொடையாக வழங்கப்பட்ட தொகை 3 கோடியே 8 இலட்சத்து 22 ஆயிரத்து 160 ரூபாய்; பயனடைந்தோரின் எண்ணிக்கை 1935 ஆகும். விபத்தில் இறந்தோர் மற்றும் காயமுற்றோர் நிவாரணமாக 349 பேருக்கு ரூ.54 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

★ இயற்கைச் சீற்றங்களின் போது சிறப்பின நிவாரணமாகவும், மனிதாபிமான அடிப்படையில் கடந்த ஆண்டில் ஆந்திரா, பாண்டிச்சேரி மாநிலங்களில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு நிவாரண உதவிகளாகவும், பாரதப் பிரதமரின் தேசிய நிவாரண நிதியின் கீழும் வழங்கப்பட்ட தொகை ரூ.2.47 கோடியாகும்.

★ சாதிக்கலவரத்தால் ஏற்பட்ட பாதிப்புகளுக்கும், காவல் நிலையப் பாதுகாப்பில் இறந்தோர் குடும்பங்களுக்கும் நிவாரண உதவிகளாக 3,286 பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட தொகை ரூ.90.6 இலட்சம், மீனவர்களுக்கு ஆபத்து நிவாரணமாக 2.91 இலட்சம்,பயனாளிகளுக்கு ரூ.43.53 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

★ மூடப்பட்ட தொழிற்சாலைகளால்,வேலையின்றி அல்லலுறும் ஆலைத் தொழிலாளிகள் 36,500 பேருக்கு ரூ.2.14 கோடி கருணைத் தொகையாக வழங்கப்பட்டது.

★ அடையாறு புற்று நோய் நிலையத்தில், ஏழைகளின் இலவச சிகிச்சைக்கு ரூ.7½ இலட்சமும், மானியமாகவும், இளங்குழந்தைகள் இதய அறுவை சிகிச்சைக்கு, மதுரை இராஜாஜி மருத்துவமனைக்கு ரூ.37 இலட்சமும் வழங்கப்பட்டுள்ளன.



★ முன்னாள் முதலமைச்சர் பக்தவச்சலத்தின் உதவியாளராக அவருடனேயே கடைசிவரை பணியாற்றி வந்த திரு. பாலு அவர்களுக்கு, மனிதாபிமான அடிப்படையில், அவருக்கு 3½ இலட்சத்தில் இலவசமாக இல்லம் அளிக்கப்பட்டுள்ளது.

★ பெங்களூரில் இந்திரா காந்தி இண்டர் நேஷ்னல் பள்ளியில் இலங்கைத் தமிழ்ச் சிறார் பராமரிப்பிற்கு ரூ.2 இலட்சம் வழங்கப்பட்டுள்ளன.

★ தீ விபத்தால் பாதிக்கப்பட்ட 3,000 குடும்பங்களுக்குத் தீப்பிடிக்காத கூரைகள் அமைக்க ரூ.1.65 கோடி வழங்கப்பட்டுள்ளது.

★ காட்டங்குளத்தூர் சிவானந்த குருகுலத்தில் உள்ள அனாதைச் சிறுவர்கள் பராமரிப்பிற்கு ரூ.298 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

★ தஞ்சாவூர் அருள்மிகு பிரகதீஸ்வரர் ஆலய மகா கும்பாபிஷேகத்தின் போது ஏற்பட்ட தீ விபத்தில் இறந்தோர் குடும்பம் மற்றும் காயமுற்றோர்களுக்கு நிவாரணமாகவும், கோவில் சிதிலத்தைச் செப்பனிடவும் ரூ.71.43 இலட்சம் வழங்கப்பட்டது.

★ இவை தவிர்த்து பிற நிதியுதவிகளாக ரூ.12.65 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

## 9-வது ஐந்தாண்டுத் திட்டம்:

★ தமிழ்நாட்டிற்கான ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்ட ஒதுக்கீடு குறித்து **முதலமைச்சர் கலைஞர்** அவர்கள் டெல்லி சென்று திட்டக்குழுத் துணைத்தலைவரிடம் நேரடியாக விவாதித்ததின் விளைவாக 1996-97ஆம் ஆண்டின் 'விலைவாசிப்படி அடிப்படையில்' ரூ.25,000 கோடி என உறுதி செய்யப்பட்டுள்ளது. இது 8-வது ஐந்தாண்டுத்திட்டத்திற்கு ஏற்பளிக்கப்பட்ட தொகையை விட **37.42%** அதிகம் என்பது குறிப்பிடத்தகுந்ததே.

★ 9-வது ஐந்தாண்டுத் திட்டத்தில், நீர்வள ஆதாரம் மேம்படுத்தப்படும்; ஏழை - எளிய மக்களின் வருமானத்தை உயர்த்திட வகை செய்யப்படும்; அனைவருக்கும் கல்வி வாய்ப்பளித்தல், ஒருங்கிணைந்த சுகாதார மேம்பாடு, சாலை வசதிகளில் மேம்பாடு, சிறிய துறைமுகங்களின் நிலை உயர்த்தல் ஆகியவை மேற்கொள்ளப்படும். பெண்கள் மேம்பாட்டுத் திட்டங்கள் நிதி நிறுவனங்களின் மூலம் செயற்படுத்துதல், **அண்ணா மறுமலர்ச்சி, நமக்கு நாமே** திட்டங்களை விரைந்து செயற்படுத்துதலின் வாயிலாகக் கிராமங்களின் அடிப்படை வசதிகள் நகரங்களுக்கொப்ப மேம்படுத்தப்படும். **முதலமைச்சர் கலைஞர்** அவர்களின் அரிய வழிகாட்டுதலில் மேற்கூறிய திட்டச் செயலாக்கங்கள் மற்றும் தமிழகத்தைத் தொழில் மயமாக்கும் கொள்கை ஆகியவற்றின் வாயிலாக, இந்தியாவின் **"தலைசிறந்த மாநிலமாகத் தமிழகம்"** திகழும் என்பது உறுதியே.

# குறள் காட்டும் வாழ்வு

- முத்தமிழ்க் காவலர் **கி.ஆ.பெ. விசுவநாதம்**

வாழ்வு பல வகை. குறள் காட்டும் வாழ்வு ஒரு தனி வகை. அதை உலக மக்களுக்குக் காட்டியவர் திருவள்ளுவர்.

திருவள்ளுவர் தமிழகத்துச் சான்றோர்களுள் ஒருவர். அவர் பிறந்து இன்றைக்கு 2011 ஆண்டுகளாயின். அவர் பிறந்து வளர்ந்தது வாழ்ந்தது அனைத்தும் பாண்டி நாடு; மதுரை.

மக்களாகப் பிறந்த ஒவ்வொருவரும் மக்களாகவே வாழ வேண்டும் என்பது அவரது பேராசை அல்ல, மிகப் பெரிய ஆசை. அதன் விளைவே திருக்குறள். அது காட்டும் வாழ்வே குறள் காட்டும் வாழ்வு. வாழ்வாங்கு வாழ்தல் என்று அது கூறுகிறது. இது வாழவேண்டிய முறைப்படி வாழ்தல் எனப் பொருள்படும்.

வாழ வேண்டிய முறை என்பது தனக்காக, தன் குடும்பத்துக்காக என்று வாழாமல் பிறருக்காகவும் வாழ வேண்டும் என்பதாகும். இவ்வாழ்வு முறையைத் திருக்குறள் கீழ்க்கண்டவாறு பல வகையாக நமக்குக் காட்டுகிறது.

## எது மக்கள் வாழ்வு?

ஒருவரை ஒருவர் அடித்துத் துன்புறுத்தி வாழ்வது விலங்கு வாழ்வு. தன்னலங்கொண்டு உயரப் பறப்பது பறவை வாழ்வு. தீமை செய்தவருக்குத் தீமை செய்து வாழ்வது தேள், பாம்புகளின் வாழ்வு. தீமை செய்யாதவர்க்கும் தீமை செய்வது பேய்களின் வாழ்வு. தீமை செய்தவர்களை மன்னித்து விடுவது மட்டுமன்று, அவர்களுக்கு நன்மையைச் செய்தும் வாழ்வதே மக்கள் வாழ்வு எனக் குறள் கூறுகிறது.

## வாழ்வுக்குப் பத்து உடைமைகள்

உடலுக்குச் சில உடைமைகளை அணிவது போல உள்ளத்திற்கும் சில உடைமைகளை அணிந்து வாழ்வதே குறள் காட்டும் வாழ்வு ஆகும். அவை அன்புடைமை, அறிவுடைமை, அருளுடைமை, அடக்கமுடைமை, ஆள்வினையுடைமை, ஒழுக்கமுடைமை, ஊக்கமுடைமை, நாணமுடைமை, பொறையுடைமை, பண்புடைமை என்பன. இப் பத்து உடைமைகளையும் பத்துத் தலைப்புகளில் நூறு குறள்களாக்கி மக்களாகப் பிறந்த ஒவ்வொருவரும் இவற்றைத் தம் உள்ளத்தில் அணிந்து வாழ்ந்தாக வேண்டும் எனக் குறள் நல்வாழ்வுக்கு வழி காட்டுகிறது.

## ஒன்பது கட்டளைகள்

பொய்யைச் சொல்லாதே! புலாலை உண்ணாதே! கள்ளைக் குடியாதே! களவை நினையாதே! காமங்கொள்ளாதே! கொலையைச் செய்யாதே! சூதை விரும்பாதே! புறங்கூறாதே! பொறாமையடையாதே! பேராசை கொள்ளாதே! என்ற பத்துக் கட்டளைகளும் நல்வாழ்வு வாழக் குறள் இடும் கட்டளைகளாகும்.

## பழிக்கு அஞ்சி வாழ்தல்

நம் முன்னோர்களாகிய நூலோர்கள் தொகுத்துக் கூறியவற்றுள் எல்லாம் தலையாய அறங்கள் இரண்டு. அவை பகுத்து உண்ணல் ஒன்று. பல்லுயிர் ஒம்புதல் மற்றொன்று. ஆனால், வாழ்வாங்கு வாழ அவை இரண்டு மட்டும் போதாது. ஒழுக்கமாகவும் நடந்தாக வேண்டும் எனக் குறள் ஒரு புதுவழியைக் காட்டுகிறது. இதைப் "பழியஞ்சு! பகுத்து உண்!" என்ற குறள் நமக்கு விளக்கிக் காட்டுகிறது.

## விரும்பி வாழ நான்கு

நகை, ஈகை, இன்சொல், இகழாமை ஆகிய நான்கையும் விரும்பிக் கைக்கொள். அது உன் வாழ்வை வளமாக்கும் என்பதே குறள் காட்டும் வாழ்வு. இந்த நான்கை வரிசைப்படுத்தியிருப்பதிலும் ஒரு அழகு தோன்றுகிறது. அவை நல்வாழ்வுக்கு எப்போதும் இனிய முகத்தோடு இருத்தல் வேண்டும். அது முடியாவிடில் இயன்றவரை ஏதாவது கொடுத்து அனுப்பிவிட வேண்டும். அதுவும் முடியாவிடில் இனிய சொற்களையாவது சொல்லி அனுப்பி விட வேண்டும். அதுவும் முடியாவிடில் அவர்களை இகழ்ந்து கூறாமலாவது இருக்க வேண்டும் என்பன. எப்படி குறள் காட்டும் வாழ்வு?

## வெறுத்து வாழ நான்கு

அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் என்பன அவை. பிறரைக் கண்டு பொறாமைப்படாதே! பிறர் பொருளின் மீது ஆசை வைக்காதே! எவர் மீதும் சினம் கொள்ளாதே! எப்போதும் கடும் சொற்களைச் சொல்லாதே! இந்நான்கும் நம் வாழ்வுக்கு ஒளிவீசும் எனக் குறள் கூறுகிறது.

## வழங்கி வாழ நான்கு

அன்பு உள்ளம் கொண்ட சான்றோர்கள் தம் குருதியை, நரம்பை, தோலை மட்டுமல்ல; தன் எலும்பையும் பிறருக்கு வழங்கி வாழ்வர் என்ற கருத்தை 'எலும்பும் உரியர் பிறர்க்கு' என்ற குறட் சொற்றொடர் கூறிக் கொண்டிருக்கிறது.

## வாழ்வுக்கு வேண்டிய நட்பு

நட்பு நல்வாழ்வுக்குத் தேவை. ஆகவே, நட்பை கைக்கொள்! அதையும் ஆராய்ந்து கொள்! தீ நட்பு கொள்ளாதே! பழமையைத் தள்ளாதே! சிற்றினம் சேராதே! பெரியோரை வெறுக்காதே! என்ற ஏழு தலைப்புகளில் எழுபது குறள்களைக் கூறி வாழ்வுக்கு வழி காட்டுகிறது குறள்.

## கற்றபடி நிற்றல்

படி! எல்லாவற்றையும் படிக்காதே! படிக்க வேண்டியவற்றைப் படி! அதையும் பிழையறப் படி! மனதில் உள்ள கசடு அறும்படி படி! கற்றிலன் ஆயினும் கேள்!



கற்றவற்றையும் கேட்டவற்றையும் சிந்தித்து உணர்! அந்த அளவோடு விட்டுவிடாதே. அதன்படி நட! எனக் குறள் நல்வாழ்வுக்கு வழி காட்டுகிறது.

## உள்ளத்தை உயர்த்தி வாழ்

நல்வாழ்வு வாழ வேண்டுமானால் உள்ளத்தை உயர்த்தி வாழ். சிறியன சிந்தியாதே. எப்போதும் பெரியதையே எண்ணு. அப்படியே ஆவாய்! வெள்ளம் உயர உயர மலர் உயர்வதைப் போல உன் உள்ளம் உயர்வதைப் போல் நீ உயர்வாய்! நல் வாழ்வு வாழ உள்ளத்தை உயர்த்து! எனக் கூறுகிறது குறள்.

## யார் பெரியார் ?

நாம் ஒரு காலத்தில் பணக்காரர், நிலக்காரர், முதல்காரர் ஆகியவர்களைப் பெரியார் என நினைத்திருந்தோம். அடுத்து, படித்தவர், பட்டம் பெற்றவர், பதவியிலிருப்பவர் என எண்ணினோம். பின்,வயதில் முதிர்ந்தோர் பெரியோர் எனக் கருதினோம். இப்பொழுது எழுத்தர்களையும் பேச்சர்களையும் பெரியோர் என எண்ணுகிறோம். குறள் இவற்றை ஒப்பவில்லை. யார், பெரியார் ? என்ற கேள்விக்கு குறள் கூறும் விடை எழுத்தரல்ல, பேச்சரல்ல 'செய்வர் பெரியர்' என்பதே. இதிலிருந்து மலையளவு பேசுவதை விடக் கடுகளவு செய்து வாழ்வதே நல்லது எனத் தெரிகிறது.

## நா நலம் என்னும் நலமுடைமை

"நா நலம் என்னும் நலமுடைமை" என்பது அரைக்குறள். அடுத்த அரைக் குறளும் கூட 'அந்த நலம் வேறு எந்த நலத்திலும் இல்லை' என்பதே. அது மட்டுமன்று, 'நாநலம்' என்பதே நலமுடைமை' என்பதுதான், இதுதான் அதன் உண்மையான பெயர் என்றும் குறள் கூறிக் கொண்டிருக்கிறது.

அளவோடு பேசுதல், ஆராய்ந்து கூறுதல், சொன்னபடி நடத்தல், சொல்லியபடி இருத்தல், இனியவை கூறுதல், எவரையும் வையாதிருத்தல் ஆகியவை அனைத்தும் நாநலத்தின்பாற் பட்டவை என்று குறள் கூறுகிறது. இதையே, கண்டு ஒன்று சொல்லேல்! சுளிக்கச் சொல்லேல்! சொற்சோர்வு படேல், பழிப்பன பகரேல், மிகைப்படச் சொல்லேல், வெட்டெனப் பேசேல், வாது முற்கூறேல், ஓரஞ் சொல்லேல்! என ஔவையும் கூறுகிறார். இவற்றால் நல்வாழ்வுக்கு ஏற்றது நாநலமே என்று குறள் கூறுகிறது.

## தோற்றத்தைக் கண்டு மயங்காதே

கருப்பாக இருக்கிறது. கோணலாக இருக்கிறது. நாரும் நரம்புமாக இருக்கிறது என்று வெறுத்து விடாதே 'வீணையை'. நீ இன்பத்தை இழந்து விடுவாய்! சிவப்பாக இருக்கிறது, அழகாக இருக்கிறது, நேராக இருக்கிறது என்று நெஞ்சில் வைத்துவிடாதே 'அம்பை'. அது உன்னைக் கொன்றுவிடும். இவை இரண்டு மட்டுமல்ல, வேறு எதனையும் தோற்றத்தைக் கண்டே மயங்கி விடாதே, வாழ்வு பாழாகிவிடும் என எச்சரிக்கை செய்கிறது குறள்.

## பொருள் தேடும் வழி

பெற்ற தாயின் வயிறு பசிக்கக் காண்பது பிறந்த மகனுக்கு இழிவு. எப்பாடுபட்டேனும் அத்தாயின் வயிற்றுப் பசியைப் போக்க வேண்டியது பிறந்த மகனின் கடமை. ஏனெனில், அது அவன் குடியிருந்த கோயில். என்றாலும், அந்த நிலையிலும் ஒருவன் தவறான வழியில் பொருளைத்தேடிவந்து தாயின் பசியைப் போக்க எண்ணுவது தவறு. எண்ணினால் அத்தகையவரைச் சான்றோர் பழித்து ஒதுக்கி விடுவர் எனப் பிறந்த மகனின் வாழ்வுக்கும் வழி கூறுகிறது குறள்.

## வினைத்திட்பம்

ஒரு நல்ல செயலைச் செய்வதற்கு வேண்டியது பொருளுதவி அல்ல, நண்பர்களின் துணை அல்ல, மனைவி மக்களின் ஒத்துழைப்பல்ல, அரசாங்கத்தின் ஆதரவு அல்ல, வேறு எதுவுமே அல்ல. அவனுக்கு வேண்டியது மன உறுதி ஒன்றே. இதை 'வினைத் திட்பம்' என்பது 'மனத்திட்பம்' என்ற குறள் காட்டுகிறது.

## மேன்மையடைய வழி

'ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை' என்பது அரைக்குறள். இதற்கு மூன்று பொருள்கள் உள்ளன. ஆடை, அணி, பொன், மணி, பட்டம், பதவி முதலியவற்றால் எவரும் மேன்மையடைய முடியாது; ஒழுக்கம் ஒன்றினாலேயே உயர்ந்து விட்ட ஒருவன் பின் தெரிந்தோ தெரியாமலோ தவறு செய்ய நேர்ந்தாலும் உலகம்அதை நம்பாது. அப்போதும் அவன் மேன்மையையே அடைவான் என்பது மற்றொன்று. ஒழுக்கத்தினால் உயர்ந்த ஒருவர் பின் வறுமையால் தாழ்ந்து போனாலும் கண்டோர் அவரை 'நன்றாக வாழ்ந்தவர்' என்றே உயர்வாகக் கூறி மகிழ்வர் என்பது மூன்று.

'இழுக்கத்தின் எய்துவர் எய்தாப் பழி' என்பது மறு பாதிக் குறள். இதற்கும் மூன்று பொருள்கள் உள்ளன. ஒன்று, ஒழுக்கம் தவறியவன் எல்லோராலும் பழிக்கப்படுவான் என்பது. மற்றொன்று, ஒழுக்கம் தவறியவன் பின்பு திருந்தி நல்ல காரியங்களைச் செய்தாலும் உலகம் நம்பாது. அவன் முன் செய்த பாவங்களைப் போக்கவே இவற்றைச் செய்கிறான், எனக் கூறிப் பலரும் பழி தூற்றுவர் என்பது. இன்னொன்று, அவன் செய்யாத - பிறர் செய்த தவறுக்கும் பழி ஏற்க நேரிட்டு விடும் என்பது. இந்த மூன்றாவது கருத்தை இக்குறளிலுள்ள 'எய்தாப் பழியையும் எய்துவர்' என்ற சொற்றொடர் நமக்கு விளக்குகிறது. எப்படி, குறள் காட்டும் வாழ்வு ?

## செயல் திட்டம்

நல்வாழ்வுக்கு வழி 'நற்செயல்களைச் செய்வது' என்பது திருக்குறளின் கருத்து. இதற்கு 120 குறள்களைப் பன்னிரண்டு தலைப்புகளின் கீழ் கூறுகிறார் வள்ளுவர். அவை :

ஆள்வினையுடைமை, இடுக்கண் அழியாமை, ஊக்கமுடைமை என அடிப்படை மூன்று, அடுத்து இடமறிந்து செய்தல், காலமறிந்து செய்தல், வலியறிந்து செய்தல் என அரைப் பகுதியில் மூன்று: தெரிந்து வினை செயல்வகை; வினைத் திட்பம், வினைத் தூய்மை என் இறுதியில் மூன்று; ஆகப் பன்னிரண்டு. இவை அனைத்தும் நல்லவற்றைச் 'செய்த நல்வாழ்வு வாழக் காட்டும் வழிகள். இதை அந்த அளவோடு அவர் விட்டுவிடவில்லை. 'செய்ய வேண்டியவற்றைச் செய்யாவிடினும் வாழ்வு கெடும். செய்யத் தகாதவற்றைச் செய்தாலும் வாழ்வு கெடும்' என எச்சரிக்கையும் செய்கிறது குறள்.

## மேலல்லார் மேலல்லர்

ஒருவன் மேலேயிருக்கிறான் - நாம் பார்க்கிறோம். மற்றொருவன் கீழேயிருக்கிறான் - நாம் பார்க்கிறோம். குறள் இதை ஒப்புக் கொள்ளவில்லை. மறுக்கின்றது. உள்ளபடி மேலேயும் கீழேயும் பார்க்கின்ற நாம் இதை எப்படி நம்புவது? நம்பாத நம்மையும் நம்ப வைக்கிறது குறள். ஒரு தராசை எடுத்து இடது தட்டில் ஒரு படிக்கல்லைப் போட்டுத் தராசைத் தூக்கிக் காட்டுகிறார் வள்ளுவர். ஒரு தட்டு தாழ்ந்து ஒரு தட்டு உயர்ந்தும் காணப்படுகிறது. வள்ளுவர் நம்மை நோக்கிக் கேட்கிறார். ஏன் இந்தத் தட்டு உயரத்தில் இருக்கிறது? அதில் ஒன்றுமே இல்லை; அதனால் உயரத்தில் இருக்கிறது. இன்னொரு தட்டில் சரக்கிருக்கிறது. அதனால் தாழ்ந்து இருக்கிறது. இப்போது குறள் கேட்கிறது நம்மை - உயரத்தில் இருப்பதெல்லாம் உயர்ந்ததா? என்று. இக்கருத்தை "மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர், கீழல்லர் கீழிருந்தும் கீழல் லவர்" என்ற குறள் விளக்குகிறது. இதனால் உலகிலுள்ள மக்களுள் அறிவில்லாத சிலரும் மேலே இருப்பர்; அறிவுடைய சிலரும் கீழே இருப்பர் என அறிந்து வாழ்வதே வாழ்வு என அறிவுறுத்துகிறது இக்குறள்.

## குன்றின் அனையாரும் குன்றுவர்

திருக்குறளில் ஒரு சொற் குறள்கள் எனப் பல உள. அவற்றில் ஒன்று இது. இக்குறளில் நான்கு குன்றுகளைக் காணலாம். முதல் குன்று மலை. இரண்டாவது குன்று குறுகுதல். மூன்றாவது குன்று இழிசெயல். நான்காவது குன்று குண்டுமணி. குறள் இதுதான். "குன்றின் அனையாரும் குன்றுவர் குன்றுவ குன்றி அனைய செயின்". மலைபோன்று உயர்ந்திருக்கும் மக்களும் கூடப் பழிக்கத் தகுந்த இழிசெயல்களை குண்டுமணி அளவு செய்தாலும் கூடக் குறுகிக் குன்றிப்போய் விடுவர் என்பது இதன் பொருள். நல்வாழ்வு வாழ விரும்புகிறவர்களுக்கு இக்குறள் காட்டும் எச்சரிக்கை மிகப் பெரியதாகும்.

## சிதைவிடத்து ஒல்கார் உரவோர்

நற்செயல்களைச் செய்து நல்வாழ்வு வாழ முன்வருபவருக்கு மிகுந்த ஆற்றல் வேண்டும். அதற்குச் சில இடையூறுகளும் வரும். சிலர் தூற்றுவர். சிலர் துன்புறுத்துவர். இவற்றைக் கண்டு கலங்கிவிடக் கூடாது. காட்டில் வாழும் யானையானது தன் உடல் முழுவதும் வேடர்களின் அம்புகளால் தாக்கப் பெற்றுக் குருதி ஒழுகிக் கொண்டிருந்தபோதும் அஞ்சி நடுங்காமல், பீடு நடை நடந்து தன் பெருமையை நிலை நிறுத்தும். அதைப்போலவே 'மன உரம் படைத்த மக்களும் துன்பம் வந்த காலத்துச் சோர்வு அடையமாட்டார்கள்' என்ற கருத்தை, "புதையம் பிற் பட்டுப் பாடுன்றும் களிறு" எனக் காட்டானையைக் காட்டி நம்மை நிமிர்ந்து வாழச் செய்கிறது இக்குறள்.

## மனிதனா? தெய்வமா?

வாழ வேண்டிய முறைப்படி வாழ்பவனே மனிதன் எனவும், அவன் மனிதனாயினும் மற்றவர்களால் தெய்வமாகக் கருதப்படுவான் எனவும், அவன் இம் மண்ணுலகில் வாழ்ந்தாலும் அது விண்ணுலகாகக் கருதப்படும் எனவும் ஒரு குறள் கூறுகிறது. அது

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்"

என்பது.

இவ்வாறு வாழ முடியாதவர்கள் வாழ்வதைவிடச் சாவது நல்லது என வாழ்வுக்கு வழி காட்டிய குறள் சாவுக்கும் வழி காட்டுகிறது. அவை : விருந்தினர் வீட்டில் வந்திருக்க அவருக்கு வழங்காமல் நீ மட்டும் உண்ணாதே. அது சாவா மருந்தாக இருப்பினும் நீ அதை உண்டு வாழ்வதை விட உண்ணாமல் சாவது நல்லது.

உன்மீது அன்புள்ளவர்கள் உன் நிலையைப் பார்த்து நஞ்சைக் கொடுத்து உண்ணச் சொன்னாலும் அதை மறுக்காது உண்டு சாவதே நல்லது.

'மானத்தை இழப்பதா உயிரை இழப்பதா' என்ற நிலை உனக்கு வந்து விட்டால் மானத்தை இழவாமல் உயிரை இழந்து மடிவது நல்லது.

உன்னைப் புரந்தவர்களும், உன்னால் புரக்கப் பெற்றவர்களும் கலங்கிக் கண்ணீர் வடித்துக் கதறி அழும்படியான ஒரு சாவு உனக்கு வருமானால் அதை அன்போடு ஏற்று மடி. அத்தகைய சாவு ஒன்று தானே வராவிடில் அதைப் பிச்சை எடுத்தாகிலும் ஏற்று மடிவது நல்லது.

பொய் பேசியும் புறங்கூறியும் வாழாதே. இவ்விரண்டையும் எப்போதும் செய்ய எண்ணாதே. 'பொய் பேசித்தான் வாழ வேண்டும், புறங்கூறித் தான் வாழ வேண்டும்' என்ற ஓர் நிலை வந்து விட்டால் நீ உயிர் வாழாமல் இறந்து விடுவதே நல்லது. அது அறங்கூறும் ஆக்கம் தரும்.

சாவைப் போலத் துன்பம் தருவது எதுவும் இல்லை என்றாலும் இரப்போர்க்கு எதுவும் ஈயமுடியாத போது வாழ்ந்து துன்பப்படுவதை விட இறந்து போவதே இனிதாக இருக்கும்.

வாழ முடியாதவர்கள் சாவதற்குப் பயப்பட வேண்டிய தில்லை. இறப்பதும் பிறப்பதும் உறங்குவதையும் விழிப்பதையும் போன்றது.

இதில் அஞ்சுவதற்கு ஒன்றுமில்லை எனக் கூறுகிறது ஒரு குறள். வாழ முடியாதவர்களுக்கு இந்த ஏழு குறள்களும் சாவுக்கும் வழி காட்டுகின்றன. இவை தமிழ் வாழ்வும் தமிழரின் வாழ்வும் தமிழகத்தின் வாழ்வுமாகும்.

இவையும் இவை போன்ற பிறவும் மக்களாய்ப் பிறந்தவர்கள் மக்களாக வாழ, குறள்காட்டும் நெறிகளாகும். இவற்றைப் படித்து மகிழ்வதை விடப் பயன்படுத்தி வாழ்வது நல்லது.

வாழட்டும் தமிழகம்!

வளரட்டும் குறள்நெறி!





# போகியோ போகி

-கவிஞர் ஈரோடு தமிழன்பன்

- ஒடுக்கும் பனி
  ஓடி மறைந்ததென்று
  அறிக்கை வெளியிட்டது - கிழக்கு
  அச்சகம்

- கையில்
  அதைத் தாங்கிவந்து
  தமிழர் வீட்டுக் கதவுகளைத்
  தட்டுகிறாள் தை

- இதுவரை
  நடுங்கிய பொழுதுகள் இனி,
  பருகப்
  பகல் கிண்ணத்தில்
  சுடச்சுட வெப்பம்.

- முடங்கிக் கிடந்த காற்று
  சூரியத் தணலில்
  குளிர் காய்ந்து புறப்பட்டு வருகிறது.

- மாதங்களில் சிறந்தது
  மார்கழி என்றார்கள்...புரிகிறது
  அதுதானே
  தவமிருந்து பெற்றெடுத்தது 'தை'யை.

- களத்து மேட்டுப்
  பதர்க் குப்பை அவள்
  ஆடையெல்லாம்...
  உதறிவிட நேரமின்றி அப்படியே
  ஓடிவந்துள்ளாள்
  உடனே அணைத்துக் கொள்வோம்!

- அகிலும் சந்தனமும் -
  நிகரமாகுமா இந்தக் குப்பைக்கு ?

- அழகாய்ச்
  சிரிக்கத் தெரிந்தவர்கள்
  ஆளுக்கொரு
  புன்முறுவல் தந்தால்
  அவளுக்கு மாலை கட்டலாம்.

- ஆளுக்கொரு
  அலை கொடுத்தால்
  அவளுக்கு நதிசெய்து வைக்கலாம்.
  'தை' மகளின்
  அந்தரத் தோணி - நல்லொரு
  துறைக்கும் போகும்.

- கூட இருந்தே குழிவெட்டும்
  நிபுணர்களின்
  கூடாரத்தைச் சேராதவர்கள்
  ஆளுக்கொரு புள்ளி
  அள்ளிக் கொடுத்தால் - வாசலில்
  போட்டு வைக்கலாம்
  பூக்கோலம்


- இது
  உழைப்புக்கு உற்சவ நாள்!
  கைதட்டிக் கைதட்டியே
  காலை வாரிவிடும் கலையில்
  வல்லவர் நாம்! - எனவே
  உழைப்பைப் பாராட்ட
  உதடுகளால் உத்தியோகம்
  பார்க்கவேண்டாம்.
  வேர்வைகளை அதற்கு
  அனுப்பி வைப்போம்.


- உழைப்பதே
  உண்மையில், உழைப்பைப்
  போற்றுவதாகும்.

- பாட்டாளி கரங்கள் - இந்தப்
  பார்பெற்ற வரங்கள்
  வேர்வையைப் பாராட்டிப்
  பட்டங்கள்
  தரவேண்டாம். அந்தக்
  காகிதச் சொப்பனங்கள்
  கஞ்சிக்கு வழிசெய்யுமா ?

- பாட்டாளிக்கே
  உலகம் சொந்தமென்று
  பட்டா போட்டுக் கொடுப்போம்.

- நகம்
  வளரும் விரல் - அல்ல
  அவன் விரல் - உலகின்
  சுகம் வளரும் விரல்!





❑ அவன்
கை மடங்கினால் - உலகின்
மெய் முடங்கிப்போகும்!

❑ விளக்குகள்
உற்பத்தி செய்தவன்-தொடர்ந்து
இருட்டிலேயே கிடந்தால்
அந்த
விளக்குகளே வெடித்துச் சிதறும்.

❑ பயிர் செய்தவனுக்குப்
பட்டினி என்றால்...தமது
கருப்பையை - வயல்கள்
கழற்றி எறிந்துவிடும்.

❑ போகி நெருப்பு...
வத்திப் பெட்டியின் வயிற்றில்
பிறந்த தல்ல....
ஒவ்வாமைகள்மேல்
உறுமும் சினத்தில்
உரசிப் பற்றியது!
தண்டிக்கப்பட்ட தீ - புகை
சுருட்டு நுனியில்!
சபிக்கப்பட்ட தீ...
மதவெறியர் கண்களில்!

❑ வெறுக்கப்பட்ட தீ....
சுயநல வேள்விகளில்!
போற்றப்பட்ட தீ
போகிப் பண்டிகையில்!

❑ கொண்டை அடுப்புக்குக்
கோபம் புரியும் முன்-
அடுப்பாசனத்தில்-புதுப்பானை
பதவி ஏற்கும் முன்-
வெள்ளையடித்து-வீட்டிற்குள்
வெளிச்சத்திற்குப்
பாய்விரிக்கும் முன்-
வேண்டாப் பழைமைகளுக்கு
விடை கொடுக்க வேண்டாமா?

❑ வாசல்
பெருக்காவிட்டால்
குப்பையிலே போட்ட கோலம்
கோவென்று அழாதா?

❑ புதிய தளிர்களை
ஏற்கச்
சருகுகளை உதிர்க்கத்
தயங்குவதில்லை வனங்கள்!
சபை வைத்துச்
சருகுகள் பாடும் சங்கீதத்தால்
ஓய்வதில்லை - மனித மனங்கள்
கிழடு தட்டிய சரீரங்களில்
கீர்த்தனை வீக்கங்கள்!

❑ ஆகாத பழைமைக்கு
இன்னும் என்ன அழுகல்?

❑ புதியன
புகவிடுவோம் - ஆனால்
பழையன கைவிடோம்!

❑ அஞ்ஞானத்தை - இடுப்பில்
முடிந்து வைத்துக்கொண்டு
அறிவின்
பிரசாதத்துக்குக்
கையை நீட்டுகிறோம்!

❑ ஆகா! என்ன சமரசம்!
தூக்கத்திற்கும் விழிப்புக்கும்
அதே நேரத்தில்
தொட்டில் கட்டுகிறோம் க்ண்களில்!


❑ குதிரைகள்,
நத்தைகள் மனத்தைக்
குத்தகை ஏற்றுக்கொண்டால்
ஓடும் கால்களால்
உபயோகம் உண்டா?

❑ முதுமக்கள் தாழியை உடைத்து
உள்ளத்தை
விடுவிக்கா விட்டால்
விஞ்ஞான தரிசனத்தால் என்ன பயன்?

❑ கைகளில் கணினி
காட்டுக் குகைகளில்







மனம்!
புதுமை என்பது
குகைக்கு வர்ணம் பூசுவதல்ல...
புரட்சி என்பது
இருக்கும் குகையை இடித்துவிட்டுப்
புதிய குகையைக் கட்டுவதல்ல...

- மாற மறுக்கும்
மனிதனுக்குள்
பூர்வீக விலங்குகளைத் தேடிப்போன
டார்வின்கள்
தோல்வியோடு திரும்பினர்.
விலங்குகள் கூட
மாறிவருவதை விளங்கிக் கொண்டனர்.

- தின்றதையே
தின்பவன் வீட்டில் - ஒருநாள்
சமையல் அறையே
தீக்குளித்துக்கொள்ளும்.

- கந்தலாய் நாறிய
பழைய காலுறைக்குப் பதிலாகப்
புதிய காலுறை போட்டுக்கொண்டது
போற்றத்தக்கது - ஆனால்
காலில் நாறிய
பழையதை
பழச்சாறு வடிக்கப் பயன்படுத்தலாமா?

- கடவுளர் முகங்களே
கறுத்துப் போயின அயோத்திச்
சம்பவத்தால்

- தேசத்தைக்
காட்டு மிராண்டிக் காலத்திற்குத்
திருப்பும் கைகளில் -
தேம்பும் சரித்திரம்.

- மதங்கள் வேறு வேறு
கடவுள் ஒருவனே!
மதங்கள் வேறு வேறு
மானுடம் ஒன்றே!
மதமிலா மனிதனும்
மனிதனே!

- நரித்துவம்
நடத்திய சதியே - சாதிகள்!

- நரகம் தூவிய விதைகள்
சமூகம் தோன்றிய பள்ளங்கள்!
விழுந்தவர் எழுந்தால்
விரட்டுவதற்காகவே மேடுகள்!

- போகி நெருப்பு - இவற்றை
எரிக்கப் புறப்படுமுன்
கந்தக சபையைக்
கலந்தாலோசிக்க வேண்டும்!
ஏனெனில்
எரிக்கப் புறப்பட்ட
எத்தனையோ நெருப்புகள்
ஏமாந்து விட்டன!


- கவிழ்த்தாலும்
நிமிர்ந்தே எரியும் நெருப்பின் குணத்தைக்
கவலைப் படுவோர்க்கெல்லாம்
எடுத்துச் சொல்வோம்!

- அழுக்கைக் கழுவும்
தண்ணீர் - அழுக்காகிப் போகும்!
மாசை எரிக்கும் நெருப்பு
மாசாவதே இல்லை!

- நமது
எழுத்துக்களின் உச்சியில் -
இதயத்தையே திரியாய் இட்டு - இந்தக்
கம்பீர நெருப்பில்
கவிதைகள் ஏற்றுவோம்!

- போகி நாள் - எனது
கவிதை
புறப்பட்டு வருகிறது உங்கள்
வாசலுக்கு!

- பொன்னும் மணியும்
பொருளும் வேண்டாம்!
உங்களிடத்தில்
குப்பைகள் இருந்தால்
கொடுத்தனுப்புங்கள்!
குப்பையைக் கொடுக்கக்கூட
நம்ப மாட்டீர்களா - என்ன?







# எதிர்காலத்தை நம்பிக்கையோடு நோக்கும் தமிழகத்தில் உலகளாவிய தொழில் ஒத்துழைப்புகள் தொடரும்!

★ தொழில் ஒத்துழைப்பு மாநாட்டில் முதலமைச்சர் கலைஞர் வரவேற்புரை ★

சென்னை நேரு ஸ்டேடியத்தில் 8.1.98 அன்று தொடங்கிய தொழில் ஒத்துழைப்பு உச்சி மாநாட்டில் (பார்ட்னர்ஷிப் சம்மிட்) முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆங்கிலத்தில் ஆற்றிய வரவேற்புரையின் தமிழாக்கம் வருமாறு :-

"உங்கள் அனைவருக்கும் உளம் நிறைந்த வரவேற்பை வழங்குவதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

இந்தியத் தொழில்கள் கட்டமைப்பு 1955 - ஆம் ஆண்டிலிருந்து இந்தத் தொழில் ஒத்துழைப்பு உச்சி மாநாட்டை (பார்ட்னர்ஷிப் சம்மிட்) நடத்திவருகிறது. நாடு சுதந்திரப் பொன்விழாவைக் கொண்டாடிக் கொண்டிருக்கும் வேளையில் இந்த ஆண்டு இந்த மாநாட்டிற்கான இடமாகச் சென்னை தேர்ந்தெடுக்கப் பட்டிருப்பதற்காக நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். எனவே, இந்த மாநாடு சிறப்பு முக்கியத்துவம் பெற்றுள்ளது. இந்த மாநாட்டிற்கு வருபவர்களை வரவேற்கும் நிலையில் இருப்பதற்குச் சென்னையில் உள்ள நாங்கள் சிறப்புரிமை பெற்றதாக உணர்கிறோம்.

தமிழக மக்களின் சார்பாக, பிரதமர் ஐ.கே.குஜ்ரால் அவர்களுக்கும், உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வருகை தந்து இங்கே குழுமியிருக்கும் மற்ற முக்கியப் பிரமுகர்களுக்கும் என்னுடைய இனிய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இத்தாலி நாட்டின் பிரதமர், போலந்து நாட்டின் அதிபர் மற்றும் உலகம் முழுவதிலுமிருந்து வந்துள்ள பல்வேறு அமைச்சர்கள் ஆகியோரை வரவேற்கும் நிலையில் சென்னை இருப்பது எங்களுக்குப் பெரும் மனநிறைவை அளிப்பதாகும்.

வர்த்தகத்திற்கும், சர்வதேச ஒத்துழைப்பிற்கும் சென்னை ஒரு முக்கிய மையமாகும். இந்த நகரம், உண்மையில் இந்த மாநிலம் முழுவதுமே உலக வர்த்தகத்தில் உயர்வான வரலாற்றைக் கொண்டதாகும். உலகின் பல்வேறு பகுதிகளுடனும் இம்மாநிலத்திற்கு வலுவான தொடர்புகள் இருந்தன. இந்தத் தொழில் ஒத்துழைப்பு உச்சி

மாநாடு உலக மயமாக்குதலில் சென்னை மற்றும் தமிழ்நாட்டின் ஆற்றல் மிக்க பங்கை மீண்டும் ஒருமுறை வலியுறுத்துகிறது.

தொழில் மயமாக்கலில் இப்போது தமிழ்நாடு முன்னணியில் இருந்து வருகிறது. சில மிகவும் பெருமைக்குரிய தொழிற்சாலைகள் இந்த மாநிலத்தில் அமைந்துள்ளன. பல தொழிற்சாலைகள் உலகத் தரத்தில் சிறப்பாகச் சாதனைகளைப் படைத்துள்ளன. இந்தத் தொழிற் சாலைகள் இந்தியாவிலும், வெளி நாடுகளிலும் விரிந்த அளவிலான உற்பத்திப் பொருட்களையும், சேவைகளையும் ஏற்றுமதி செய்வதன் மூலம் சிறந்த பெயரைப் பெற்றுள்ளன. தமிழ்நாட்டின் தொழில்துறை நல்ல நிர்வாகக் கலாச்சாரம், சுமுகமான தொழில் உறவுகள், மனித வள மேம்பாட்டில் தீவிர கவனம், வலுவான வாடிக்கையாளர் உருவாக்கம் போன்ற சில முக்கியத் தரங்களையும் வெளிப் படுத்தியுள்ளது.

இன்று, நாடு தானாகவே மாறிக்கொண்டிருக்கும் நிலையில் தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியில் ஒரு புதிய உந்துதல் ஏற்பட்டுள்ளது. தனது முதலீட்டாளருக்கு நட்புறவான தொழில் கொள்கையின் மூலம் மாநில அரசால் வெளிநாட்டு முதலீட்டாளர் களுக்கு ஆரோக்கியமான மற்றும் ஆக்கபூர்வமான சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுக்க முடிந்துள்ளது. உலகளாவிய அமைப்புகளான அமெரிக்காவின் ஃபோர்டு மோட்டார்ஸ், கொரியாவின் ஹூண்டாய் ஆகிய நிறுவனங்கள் தமிழ்நாட்டில் பெரும் தொழிற் சாலைகளை அமைத்துள்ள நிறுவனங்களில் இடம் பெற்றிருப்பது வியப்புக்குரியதல்ல. நவீன காலத்திற்கு ஏற்ற வகையில் செய்தி தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு இம்மாநிலம் மிகவும் கவர்ந்திழுக்கும் ஒன்றாக மாறிவருகிறது.

புவியியல் நோக்கில் தமிழ்நாடு மிகச் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளது. உலக வர்த்தகத்தை எளிதாக்கும் அற்புதமான கடலோரத்தை அது பெற்றுள்ளது. தென்கிழக்கு ஆசியா மற்றும் தூரக் கிழக்கு ஆசிய நாடுகளுடன் இந்தியா தொடர்பு கொள்வதற்கு இம்மாநிலம் ஒரு வாயிலாக அமைந்துள்ளது. ஆஸ்திரேலியாவும், நியூசிலாந்தும் வட சென்னையிலிருந்து எட்டக் கூடிய தொலைவிலேயே உள்ளன.

**தொழில் நுட்பக் கல்வித் திட்டத்திற்குக் கணிசமான முக்கியத்துவம்**

தமிழ்நாட்டில் எங்களுடைய நிகழ்ச்சி நிரலில் உள்கட்டமைப்பு மேம்பாடு உயர்ந்த இடத்தைப் பெற்றுள்ளது. நல்ல நிலையிலான உயர் தொழில் நுட்பக் கல்விக்கான கல்லூரிகள் மற்றும் பயிற்சி நிலையங்களுடன் வலுவான கல்வி உள் கட்டமைப்பு ஒன்றை மேம் படுத்தும் திட்டத்திற்குக் கணிசமான முக்கியத்துவத்தையும் நாங்கள் வழங்கி வருகிறோம்.

இம் மாநிலத்தில் உள்ள பொறியியல் கல்லூரிகள், பாலி டெக்னிக்குகள், தொழிற்பயிற்சி நிலையங்கள், ஆகியவை ஒவ்வொரு ஆண்டும் அற்புதமான பயிற்சி பெற்ற மனித சக்தியை வழங்கிவருகின்றன.

அதேபோன்று, மாநிலத்தில் உள்ள தொடக்கக் கல்வி முறை பொதுமக்களுக்குச் சிறப்பான சேவையாற்றி வருகிறது. வளரும் குழந்தைக்குத் தேவையான அத்தியாவசிய அடிப்படை அறிவை அது வழங்குகிறது.

மற்றொரு முனையில் இம் மாநிலத்தில் சில சிறந்த சுகாதாரப் பராமரிப்பு நிலையங்களையும் நாங்கள் பெற்றுள்ளோம். மக்களுக்குச் சுகாதாரப் பராமரிப்பு ஒரு அடிப்படைத் தேவை என்று நாங்கள் நம்புகிறோம்.

**எதிர்காலத்தை மிகுந்த நம்பிக்கையோடு நோக்குகிறோம்**

நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப் போல சர்வதேச வர்த்தகத்திற்கும் தமிழ்நாடு புதியதொரு மாநிலம் அல்ல. இது ஏற்கெனவே தொழில் மற்றும் உள் கட்டமைப்புத் துறைகளில் ஏராளமான வெளிநாட்டுக் கூட்டுறவு கள் இருப்பதில் சிறப்பாகப்பிரதி பலிக்கிறது. தானியங்கி வாகனத் தொழில் ரசாயனம் மற்றும் ஜவுளித்துறைகள், எலக்ட்ரானிக் தொழில் ஆகியவை, வெளிநாட்டுக் கூட்டுறவுகள் வரவேற்கப்பட்டு, தொழில் ஒத்துழைப்புகள் முற்றிலும் வெற்றிகரமாக இயங்கி வருவதற்குச் சில உதாரணங்களாகும்.

இந்தத் தொழிற்சாலைகளில் உற்பத்தியாகும் தயாரிப்புகள் எங்கள் நாட்டில் உள்ள ஒவ்வொரு மூலை முடுக்குக்கும் சென்றடைவதோடு, உலகம் முழுவதும் அவை பெருமளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன.

தமிழ்நாடு எதிர்காலத்தை மிகுந்த நம்பிக்கையோடு நோக்குகிறது. பல துறைகளில் புதிய உலக அளவிலான தொழில் ஒத்துழைப்புகள் உருவாகி வரும் நிலைமை எங்கள் மாநிலத்தில் தொடர்ந்து நடைபெறும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

இந்தத் தொழில் ஒத்துழைப்பு மாநாட்டில் பங்கேற்பதற்காக, நாட்டின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த தொழிலதிபர்கள், தொழில் முனைவோர் மற்றும் வர்த்தகர்கள் இங்கே சென்னைக்கு வருகை தந்திருப்பது எனக்கு மகிழ்ச்சி யளிக்கிறது. அவர்கள் பல்வேறு நாடுகளிலிருந்து வந்துள்ள தொழில் அதிபர்கள் மற்றும் வர்த்தகர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வர். இந்த மாநாட்டை நடத்தும் மாபெரும் வாய்ப்பை, சென்னை மாநகரம் பெற்றிருப்பதற்காக நான் மிகவும் மகிழ்கிறேன்.

புராதனப் புகழ்பெற்றிருந்த போதிலும் நவீன மாநிலமாகவும் திகழும் தமிழ்நாட்டுக்கு வருகை தந்துள்ள உங்கள் அனைவரையும் நான் மீண்டும் ஒருமுறை வரவேற் கிறேன். இங்கே தங்கியிருக்கும் காலம் உங்கள் அனைவருக்கும் மகிழ்ச்சிகரமானதாகவும், பயனுள்ள தாகவும் அமைய வாழ்த்துகிறேன்".




# தமிழ்நாட்டுக்கு வந்து முதலீடு செய்ய வெளிநாட்டு மற்றும் உள்நாட்டுத் தொழிலதிபர்களை அழைக்கிறேன். தொழில் ஒத்துழைப்பு மாநாட்டில் முதலமைச்சர் வேண்டுகோள்.

சென்னை நேரு விளையாட்டரங்கில் நடைபெற்ற தொழில் ஒத்துழைப்பு மாநாட்டில் தமிழ்நாடு பற்றிய கூட்டத்தில் **முதலமைச்சர் கலைஞர்** அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

**முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:**

இந்தியத்தொழில் கூட்டமைப்பின் தொழில் ஒத்துழைப்பு மாநாட்டில் மீண்டும் ஒருமுறை உங்களோடு கலந்து கொள்வதில் நான் பெருமளவு மகிழ்ச்சியடைகிறேன். இந்த மாநாட்டின் மூலம் இந்த மாநாடு நடைபெறும் மாநிலம் ஒரு குறிப்பிடத்தக்க வாய்ப்பைப் பெற்றுள்ளது. அம் மாநிலம் தன்னுடைய பொருளாதார மேம்பாடு மற்றும் வளர்ச்சித் திட்டங்கள் பற்றியும் முன்னிலைப்படுத்த ஒரு வாய்ப்பைப் பெறுகிறது.

நாட்டின் பொருளாதார மேம்பாட்டில் மாநிலங்களின் பங்கு குறித்து ஏராளமாகக் கூறப்பட்டுள்ளது. அவற்றுடன் கூடுதலாக நான் கூற விரும்புவது, பொருளாதார முன்னேற்றத்தில் தங்கள் நிலைக்காக மாநிலங்கள் பெருமை கொள்ளக் கூடிய ஒரு மாறுபட்ட காட்சியை இந்தியா சந்திக்கும் என்பதுதான். உண்மையில் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கிய தலைவர்கள் கூட, தொழில் வளர்ச்சியில் மாநிலங்களுக்கு, பிரதம பங்கு அளிப்பதை எதிர்த்து நின்றனர். கடந்த 50 ஆண்டுகளில் சூழ்நிலை வேறு விதமாக மாறியிருக்கிறது என்பது வேறு விஷயம். ஆனால், எதிர்காலத்தில் பொருளாதார வளர்ச்சியையும், நாட்டின் முன்னேற்றத்தையும் மாநிலங்கள் தலைமையேற்று நடத்தும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

தமிழக அரசைப் பொறுத்தவரையில் இம் மாநிலத்தை முன்னணிக்குக் கொண்டு வர மிகவும் தீவிரமாகச் செயல்பட, நாங்கள் உறுதிபூண்டுள்ளோம் என்பதை நான் உறுதியாகக் கூற முடியும். மாநில மக்களுக்கும், நாட்டு மக்கள் அனைவருக்கும் விரைவாகப் பலன்கள் கிடைக்கும் வகையில் பெருமளவிலான முதலீடுகளுக்கும் வலுவான வளர்ச்சிக்கும் உரிய சூழ்நிலையை உருவாக்க நாங்கள் முயற்சிகளை மேற்கொள்வோம்.

**பாரம்பரியமாகப் பின்பற்றிவரும் முற்போக்குக் கொள்கை**

பாரம்பரியமாகவே தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக்கான முற்போக்குக் கொள்கையைப் பின்பற்றி வருகிறது. இந்த மாநாட்டில் நிலவிவரும் தொழில்

அடித்தளத்தின் தரத்திலும் முதிர்ச்சி யிலும் அது பிரதிபலிக்கிறது. உதாரணமாக, வாகன உற்பத்தி யாளர்கள், டிராக்டர் உற்பத்தியாளர்கள், வாகன உதிரி பாகங்கள் உற்பத்தியாளர்கள் ஆகிய ஆட்டோமோடிவ் தொழிலில் நாங்கள் வல்லுநர்களைப் பெற்றிருக்கிறோம். அவர்கள் குறிப்பிடத்தக்க பங்கை ஆற்றி வருகின்றனர். அதேபோல, பெட்ரோ கெமிக்கல் துறையிலும் நாங்கள் பேசுவதற்கு நிறைய விஷயங்களைப் பெற்றிருக்கிறோம்.

ஜவுளி எந்திரத் தொழில், ஜவுளித் தொழில், உலோக வார்ப்படத் தொழில், உலைக்களத் தொழில் ஆகியவற்றிலும் முக்கியமானவர்களைப் பெற்றிருக் கிறோம். சமீப காலத்தில் சேவைத் தொழிலில் - குறிப்பாக செய்தித் தொழில் நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட தொழிலில் மனதைத் தொடக்கூடிய வளர்ச்சியும், முன்னேற்றமும் ஏற்பட்டுள்ளன.

### மூலதனத்தைக் கவர்ந்திழுப்பதில் மாநிலங்களுக்கிடையே போட்டி நிலவுகிறது

முதலீடுகளைக் கவர்ந்திழுப்பது இன்று மாநிலங்களிடையே மிகவும் போட்டி நிரம்பிய பணியாக மாறிவிட்டது. வெளிநாட்டு மூலதனம் மற்றும் தொழில் நுட்பம், உற்பத்தி முறைகளைக் கவர்ந்திழுப்பதில் ஒவ்வொரு மாநிலமும் மற்ற மாநிலத்துடன் போட்டி போட்டுக் கொண்டிருக்கிறது. போட்டி என்பது தவறானதல்ல. நான் மற்ற முதலமைச்சர்களின் வெற்றிகளைக் கண்டு மகிழ்ச்சியடைகிறேன். அவர்கள் சிறப்பாகச் செயல்பட வாழ்த்துகிறேன். உண்மையில் தமிழ்நாடு பல வாய்ப்புகளைப் பெற்றுள்ளது என்று நான் நம்புகிறேன். ஒரு முதலீட்டாளர் இந்த வாய்ப்பு களைப் பயன்படுத்திக் கொள்ள முடியும்.

எங்களுடைய பலங்களில் சில, பொறுப்புள்ள மாநில அரசின் ஆதரவோடு செயல்பட்டு வரும் வர்த்த கத்திற்கு நட்புறவான கொள்கைகள், ரயில்வே இணைப்புகள், துறை முகங்கள், சாலைகள் மற்றும் தொலைத்தொடர்புச் சாதனங்களின் அற்புதமான இணைப்புகள், தொழிலாளர் கிடைக்கும் நிலை, அமைதியான தொழில் உறவுகள் ஆகியவை ஆகும். எங்கள் மாநிலத்தில் செய்யப்படும் மூலதனங்கள் விரைவாக உற்பத்தியைத் துவக்கக் கூடியவை யாகவும், இலாபம் அளிக்கக் கூடியதாகவும் இருக்கும் என்பதை நாங்கள் உறுதி செய்வோம்.

### தேசிய நெடுஞ்சாலைகளை விரிவுபடுத்த நடவடிக்கை

தொழில் வளர்ச்சிக்கு நெடுஞ் சாலை என்பது ஒரு முக்கியமான உள்கட்டமைப்பு. எனவே சென்னை-பெங்களூர் மற்றும் சென்னை -கன்னியாகுமரி ஆகிய இரு தேசிய நெடுஞ்சாலைகளை விரிவுபடுத்துவ தற்கான பயனளிக்கும் நடவடிக்கை களை நாங்கள் ஏற்கெனவே எடுத்துள்ளோம். அவற்றைத் தொழில் துறைத் தாழ்வாரங்களாக மாற்றுவது குறித்து நாங்கள் பரிசீலித்து வருகிறோம்.

பௌதிக உள்கட்டமைப்பு என்பது எந்த ஒரு முதலீட்டாளருக்கும் பிரதான கவலையாக எப்போதும் உள்ளது. இதை நாங்கள் முழுமையாகப் புரிந்துகொண்டு பாராட்டுகிறோம். உயர்ந்த தரத்துடன் கூடிய கூடுதலான உள்கட்டமைப்பு வசதிகளை உறுதி செய்வதில் கணிசமான நேரத்தையும், சக்தியையும் அர்ப்பணித்து நாங்கள் செயல்பட்டு வருகிறோம். அதன் அடையாளங்கள் ஊக்கமளிக்கும் வகையில் உள்ளன. உதாரணமாக, மின்சாரத் துறையில், உற்பத்தித் திறன் 8.35 சதவிகிதமாக உயர்ந்துள்ளது. பரிமாற்றம் மற்றும் வழங்கலில் ஏற்படும் இழப்பு தேசிய சராசரியை விட மிகவும் குறைவாக உள்ளது. தொழிற்சாலை சுமையின் அளவு 76.1 சதவிகிதமாக உள்ளது.

### பிறநாடுகளின் வர்த்தகத்திற்குப் பொருத்தமான இடம்

எங்கள் மாநிலத்தில் நாங்கள் 12 துறைமுகங்களைப் பெற்றுள்ளோம். சரக்குகள் கையாளப்படுவதிலும், சரக்குகள் போக்குவரத்திலும் அவற்றின் பங்கு உயர்வாக உள்ளது. சமூக உள்கட்டமைப்பும் சிறப்பாக உள்ளது. தொடக்கப்பள்ளிகள், மேனிலைப் பள்ளிகள், உயர்தரத் தொழில் நுட்பக் கல்வி நிலையங்கள் என்று அவை அற்புதமாக இணைந்துள்ளன. இந்நாட்டின் மிகச் சிறந்த சுகாதார நல அமைப்புகளில் சில எங்கள் மாநிலத்தில் உள்ளன. பௌதீக நிலையில் தமிழகம் அமைந்துள்ள இடம், தென்கிழக்கு ஆசிய நாடுகள் முழுவதிலும், ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து நாடுகளிலும் கூட வர்த்தகத்தை மேம்படுத்திக் கொள்ள மிகப் பொருத்தமான இடமாக உள்ளது.

> “நல்ல எண்ணங்களைத் தூவினால்தான் அவை நல்ல பலனைத்தரும். பகுத்தறிவால் பண்படாத எந்த உள்ளத்தில் நல்ல எண்ணத்தை விதைத்தாலும் அது நல்ல விளைவைத் தராது.”
>
> **- பேரறிஞர் அண்ணா.**

இப்போது எனது நிர்வாகத்தின் தத்துவத்தை நான் வலியுறுத்துகிறேன். நாங்கள் விரைவான, வெளிப்படையான முடிவுகளை எடுத்து அறிவிக்க விரும்புகிறோம். ஊக்கமளிக்கும் ஒரு சூழ்நிலையை அளிக்கவும் ஒரு பண்பாட்டை உறுதி செய்யவும் நாங்கள் விரும்புகிறோம். இவை உற்பத்தித் திறனையும், இலாபம் அளிக்கும் நிலையையும் உத்திரவாதப்படுத்தும். நாங்கள் உங்களுக்குப் பாரம்பரியமும், நவீனமும் அற்புதமாக இணைந்த நிலையை வழங்குகிறோம். கொள்கை களில் ஸ்திரத்தன்மைக்கு நாங்கள் வாக்குறுதி அளிக்கிறோம்.

### முதலீட்டுக்குச் சிறந்த மாநிலங்களில் தமிழகத்திற்கு மூன்றாவது இடம்

''பிசினஸ் டுடே'' பத்திரிகை நடத்திய ஒரு கணக்கெடுப்பின்படி, முதலீடு செய்வதற்குச் சிறந்த மாநிலங்களில், தமிழ்நாடு மூன்றாவது இடத்தைப் பெற்றுள்ளது என்பதை நினைவூட்டுவதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

இங்கே நடைபெற்றுவரும் தொழில் ஒத்துழைப்பு மாநாடு தனது கூட்டங் களை மிகத் தீவிரமாக நடத்திக் கொண்டிருந்த போதும், தமிழ்நாடு தொழில்வளர்ச்சிக் கழகம், பல

தொழிலதிபர்களுடன் கூட்டுறவுத் துறை தொழில் ஒப்பந்தங்களைக் கொண்டுள்ளது.

**கடந்த 7ஆம் தேதி உருவான ஒப்பந்தங்கள்**

7.1.98 அன்று என் முன்னிலையில் 250கோடிக்கு மேற்பட்ட முதலீட்டுடன் கூடிய 5 திட்டங்களுக்கான ஒப்பந்தங்கள் கையெழுத்தாயின.

பயனீர் பரீடிங்பார்ம்ஸ் லிமிடெட் மூலம் 100 சதவிகித ஏற்றுமதி நோக்கம் கொண்ட கோழிக்கறி பதப்படுத்தும் தொழிற்சாலை ஒன்று.

ஸ்ரீராம் குரூப் நிறுவனங்களுடன் ஒரு புதிய வாகன உதிரிபாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை.

குவைத்தைச் சேர்ந்த ஆர்.சி.சுரேஷ் அண்ட் அசோசியேட்ஸ் நிறுவனத்துடன் பிரஞ்சு புரோசன் பிரைஸ் திட்டம் ஒன்று.

மார்குப் இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துடன் காகிதம் மற்றும் காகித அட்டை எந்திரம் தயாரிக்கும் திட்டம் ஒன்று.

வாகன உதிரிபாகங்கள், அலுமினியம் டைஸ் காஸ்டிங்க்ஸ், கிரீன் ஹவுஸ் துணைப் பொருட்கள் ஆகியவற்றை பெங்களூர் - டைமேடிக் குரூப் நிறுவனங்கள் மூலம் உற்பத்தி செய்வதற்கான திட்டம் ஒன்று.

**9-ஆம் தேதி கையெழுத்தான ஒப்பந்தங்கள்**

9.1.98 அன்று மூன்று ஒப்பந்தங்கள் கையெழுத்தாயின.

2,650 கோடி செலவில் நாகார்ஜுனா குரூப் நிறுவனங்கள் மூலம் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைத்திட்டம் ஒன்று.

பி.ஒ.எஸ்.ஹுண்டாய் ஸ்டீல் மேனுபேக்சரிஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துடன் 44 கோடி செலவில் காயில் சென்டர் திட்டம் ஒன்று.

தொடக்க நிலை முதலீடான ரூ.30 கோடியில் மும்பை-ஆனந்த் நிறுவனத்துடன் மேண்டோ பிரேக் சிஸ்டம்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் தொழிற்சாலை ஒன்று.

இந்தச்செய்திகள் தமிழ் நாளேடுகள் அனைத்திலும் வெளியிடப்பட்டுள்ளன. ஆங்கில ஏடுகளில் அது வெளியிடப்பட்ட இடங்களைத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டியுள்ளது.

இவ்வாறு தமிழ்நாடு, தொழில் வளர்ச்சியில் வீறு நடைபோட்டு வருகிறது.

இந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்காகப் பல்வேறு நாடுகளிலிருந்தும் வர்த்தகர்களும் தொழிலதிபர்களும் இங்கே வந்துள்ளனர். நாட்டின் பிற பகுதிகளைச் சேர்ந்த தொழிலதிபர்களும் இங்கு வந்துள்ளனர். உங்கள் அனைவரையும் தமிழ்நாட்டுக்கு வந்து முதலீடு செய்யுங்கள் என்று நான் வரவேற்கிறேன். நாங்கள் மேற்கொண்டிருக்கும் மகிழ்ச்சி யளிக்கும் பயணத்தில் நீங்களும் ஒரு பகுதியாக மாறுங்கள் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

◆ ◆ ◆




# பொங்கல் விழா

**புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்**

உழவே தலைஎன் றுணர்ந்த தமிழர்
விழாவேஇப் பொங்கல் விழாவாகும் காணீர்!
முடிவு முழங்கிற்றுப் புதுநெல் அறுத்து
வழங்கும் உழவோர்தான் வாழ்த்துகின்றாரே!

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்என்ற சொல்லிற்
பழுதுண்டோ? காணீர் பழந்தமிழர் "நாங்கள்
உழவரே" என்றுவிழா ஒப்பி மகிழ்ந்தாரே!



பொங்கல் உழவர்விழா! தமிழர் திருநாள்!
நம்பவொண்ணாப் புராணக் கருத்தினை
நாட்டினர் மனதிலே மூட்டிடும் மற்றைய
விழாக்கள் போலன்றி, உழைப்பின்
பெருமையை உலகுக்கு உணர்த்தும்
உன்னதமான விழா!

- அறிஞர் அண்ணா



# இன்றும் நாளையும்

**– பிரபஞ்சன்**

அப்பாவிடம் ஒரு பட்டு வேஷ்டி இருந்தது. அப்பாவிடம் வெண் பட்டும், பொன்னிறப்பட்டு வேஷ்டிகளும் நிறைய இருந்தாலும் கூட, குழந்தைகளாகிய எங்களுக்கு அவருடைய சிவப்புப் பட்டு வேஷ்டியே அற்புதமானதாகத் தோன்றியது.

சிவப்பென்றால் சுத்த சிவப்பும் இல்லை. குங்கும வண்ணமும் இல்லை. செப்புப் பாத்திரத்தைப் புளிப்போட்டு விளக்கி படிக்கல்லில் வைத்துவிட்டுக் குளிப்பார்களே, அப்போது பார்த்திருக்கிறீர்களா, நீங்கள்! உதயகாலத்துச் சூரிய ரேகைகள் பட்டு தகதகக்குமே. அந்தச் செப்புப் பாத்திரம் - அது மாதிரியான வேஷ்டி அது.


முழுவதும் செப்புக் கலரும் இல்லை. கரை பச்சை நிறம். நாலுவிரல் அகலம். கரையில் சரிகை வேலைப்பாடுகள், சரிகை வேலைப்பாடு என்ன என்கிறீர்கள்? வாத்துகள் ஒன்றன் பின் ஒன்றாய் அணிவகுத்துச் செல்கிற சித்திரம். அவை வாத்துகள் அல்ல, அன்னப்பறவைகள் என்றாள், அம்மா... நாங்கள் அன்னப் பறைவைகளை நிஜத்தில் பார்த்ததில்லை. அந்த வேஷ்டியின் கரையில்தான் பார்த்திருக்கிறோம். எதுவானால்தான் என்ன? உயிருள்ள ஜீவராசிகள்.

அந்த வேஷ்டி சாதாரணமாகக் கண்களில் காணக் கிடைப்பதில்லை. அப்பா, அதை அவருடைய ஆளுயர, மிக அகலமான அலமாரியில் வைத்திருப்பார். அந்த மாதிரி அலமாரிகள் எல்லாம் இப்போது கிடைப்பதில்லை. ஒற்றை ஆள் அகலம்தானே இப்போதைய அலமாரிகள். அதுவோ மூன்று அலமாரிகளைப் பக்கம் பக்கமாக நிறுத்தி வைத்தது போல் இருக்கும்.

அப்பா அலமாரியில் இருந்து, அதை எடுக்கப்போகும் நேரம் எங்களுக்குத் தெரியும். எனக்கும் என் தங்கை ராஜேஸ்வரிக்கும், பண்டிகை மற்றும் தாத்தாவுக்கு தெவஷம் முதலான நாள்களில்தான் அது வெளிவரும். அந்த நாள்கள்தான் எங்களுக்கு முந்தியே சொல்லப்பட்டிருக்குமே! அப்பா குளித்துவிட்டு வந்து அந்த வேஷ்டியைத்தான் எடுத்து உடுத்துவார். அப்பா எப்போது குளித்துவிட்டு வருவார் என்று தவம் கிடப்போம், அலமாரிக்கு முன்னால்.

அப்பாவுக்குக் குளிக்க ஒரு மணி நேரம் அவசியப்படும். அநியாயத்துக்கு ஏன் அவர் தாமதம் பண்ணுகிறார் என்று இருக்கும். அது குழந்தைப் பருவம். கேள்விகளால் மட்டுமே ஆன பருவம். இப்போது தெரிகிறது. குளிப்பது அழுக்குப் போகவா? அழுக்குப்போக குளித்தது யார்? குளிப்பது ஒரு சுகம். உச்சந்தலையில் விழுந்த குளிர்ச்சி வழிந்து வழிந்து பாதத்துக்கு வருகிற இன்பதுக்குத்தானே குளிப்பது... குளித்த பின் ஏற்படுகிற புத்துணர்ச்சிக்குத்தானே குளிப்பது? அப்பா ஒரு மணி நேரம் எடுத்துக்கொண்டது நியாயம் என்றே தோன்றுகிறது.

சரி! குளித்ததும் சட்டுப்புட்டென்று வந்து வேஷ்டியை எடுப்பார் என்றா நினைக்கிறீர்கள்? அதுதான் இல்லை. குளித்ததும், கோமணத்தோடுவாசலுக்கு வந்து நின்றுவிடுவார். ஈரத்தைப் பாதி தானும், மீதி சூரியனும் துடைக்க வேணும். நாங்களும் அப்பாவையே பார்த்துக்கொண்டு இருப்போம். நீர் முத்துக்கள் அவர் முதுகில் கோடு கிழித்துக் கொண்டு இறங்குவதைப் பார்க்க வியப்பாய் இருக்கும். அவர் முதுகே ஒரு பெரிய தாமரை இலையாகவும், நீர்கள் முத்துக்களாகவும் தோணும். நிதானமாகவும், அங்குலம் அங்குலமாகவும் ஈரம் போக்குவார்.



அப்பாவின் உடம்பு சிவந்து போய்விடும். ஏற்கெனவே அவர் சிவப்பு. குளித்த பின், உடம்பு பழுத்துவிட்டது மாதிரி இருக்கும்.

'மணியாகுது.. சீக்கிரம் வந்து படைச்சா என்ன?' என்பாள் அம்மா. இதைக் கோபமாகவும், குற்றச்சாட்டாகவும் சொல்வாள் என்கிறீர்களா! இல்லை! இன்னும் கொஞ்ச நேரம்தான் ஆகட்டுமே என்று அப்பாவை தட்டிக் கொடுப்பது போல் இருக்கும். கூரை எரவானத்தில் ஒரு கையை வைத்து குனிந்து, வாசலில் நிற்கும் அப்பாவைப் பார்த்து சிரித்துக் கொண்டு அம்மா இதைச் சொல்கையில் எங்களுக்குக் கோபம் கோபமாய் வரும்.

அப்பாடா! ஆச்சு... ஒருவழியாகக் குளித்து முடித்து துவட்டிய துண்டை இடையில் கட்டிக்கொண்டு கோமணத்தை உருவி, பிழிந்து, பத்து தடவை ஈரத் தூசி பறக்க உதறி உதறி வாசலில் கட்டியிருக்கும் கொடியில் காயப் போடுவார். அது காற்றில் பறந்து விடாமல் இருக்க, முனைகள் இரண்டையும் பிடித்து முடிச்சுப்போடுவார். அப்புறம் தலை முடியை, தலையைக் கவிழ்த்து தட்டித் தட்டி ஈரம் போக்குவார். தெரிக்கும் நீர் தூசுகள். சின்னஞ்சிறுக் கொசுக்கூட்டம் மாதிரி இருக்கும்.

அப்புறம் கூடத்திற்கு வருவார். அப்பா. சடாரென்று வந்தால் தேவலையே! அதுதான் இல்லை. கூடத்து மிதியடியில் காலை இப்படி அப்படி போட்டு புறட்டிப் புறட்டி நன்கு மணல், மண் துடைப்பார். காலில் ஒரு துளி அழுக்கு இருக்காது. அழுக்கு அவரது ஜென்ம பகை ஆச்சே!

எங்களுக்குத் தெரியுமே! அப்புறம்தான் அலமாரியைத் திறப்பார் அப்பா.

அந்தக் கணம் ஒரு அபூர்வமான கணம். கதவைத் திறந்ததும், குபீரென்று பச்சைக் கற்பூர வாசனை வந்து தாக்குமே, சிலிர்க்க அடிக்குமே உடம்பை, அந்த கணம். அதற்காகத்தானே காத்திருக்கிறோம். இத்தனை நாழி காத்திருக்கிறோம். நாங்கள் மூக்கு, வாய் இரண்டையும். கரை மீன் திறப்பது போல திறந்து திறந்து மூடி அந்த வாசனையை அனுபவிப்போம். அலமாரிக்குள் ஒரு சின்ன ஜாதிக்காய் பெட்டி வைத்திருப்பார். அந்தப் பெட்டிக்குள்ள என்ன இருக்கும்?

ஒரு நாள், 'அப்பா... அப்பா... அந்தப் பெட்டியை எனக்கு காட்டுப்பா!' என்றேன். அப்பா சிரித்துக்கொண்டே என்னைத் தூக்கிப் பெட்டியண்டைக் காட்டினார். ஒரு வெள்ளைத் துண்டில் சுற்றி வைக்கப்பட்ட காகிதம். (பத்திரங்கள் என்று பின்னாளில் தெரிந்து கொண்டேன்) ராணி, ராஜா படம் போட்ட நோட்டுகள், தங்க காசுகள் அப்பாவுடைய சிவப்புக்கல், வெள்ளைக் கல் மோதிரங்கள் எல்லாம் இருந்தன. ராஜி பொறுத்துக் கொள்வாளா என்ன? நானும் பார்க்கணும்பா... என்றாள். அப்பா அவளையும் பெட்டி தரிசனம் பண்ணி வைத்தார்.

அப்பா இப்போது அந்தப் பெட்டியைத் திறந்தார். ஜாக்கிரதையாக அந்த சிவப்பு வேஷ்டியை எடுத்துக் கொண்டு, அறைக்குள் போனார். துவைத்துக் காயப்போட்ட அன்டிராயர்கள் அப்பா அறையில், கொடியில் தொங்கும். அவைதான் எவ்வளவு பெரியவை! ஒன்றை வெட்டி ராஜிக்கு பாவாடையும், சட்டையும் தைக்கலாம் என்று இருக்கும். அப்பா முட்டிவரை நீளும் அந்த அன்டிராயரைப் போட்டுக் கொண்டு, அதன் மேல் வேஷ்டியைக் கட்டிக் கொண்டால்தான் அப்பாவுக்கு நிறக்கும்!

அப்பா வேஷ்டியைக் கட்டிக் கொண்டு வெளியே வருவார். அடடா... நெருப்பைச் சுற்றிக் கொண்டு வருவது போல் அல்லவா இருக்கும்... அந்த





வேஷ்டியில்தான் அப்பா எவ்வளவு அழகாகத் தெரிந்தார். அவரால் அந்த வேஷ்டிக்கு மகிமையா, அல்லது அந்த வேஷ்டியாலா? அப்பாவை அப்போது கட்டிக்கொள்ள வேண்டும் போல் இருக்கும். கட்டிக்கொள்வேன். பச்சைக் கற்பூரத்தின் வாசனையோடு, அந்தப் பட்டு சில்லென்று குளிர்ச்சியாய், பாப்பாவின் கன்னம்போல மிருதுவாய் இருக்கும். அதைத் தடவித் தடவிச் சந்தோஷம் கொள்வேன்.

அந்த வேஷ்டியோடுதான் பண்டிகை மற்றும் விசேஷ நாட்களில் தெவஷத்தின் போது அப்பா பூஜை எல்லாம் செய்வார். பூஜை என்றாலே எனக்கு நினைவில் நிற்பவை இரண்டு விஷயங்கள்தான். ஒன்று சாப்பாடு. அன்றைக்கு சீக்கிரம் ஆகாது. தாமதம் ஆகும். வடை, பாயசம் என்று பட்டியல் நீள்வதால் அப்படி, ரெண்டாவது, அந்த நாட்களில் இனிப்பு பட்சணங்கள் கட்டாயம் இருக்கும். தவிர சொந்தக்காரர்கள் நிறையப் பேர் வருவார்கள். மரம் ஏறிய கையோடு குடுக்கையும், வடமுமாகச் சிலர் வருவார்கள். தென்னை மரத்தைத் தேய்த்து ஏறிய காரணமாகவும், கள்ளுக்குப் பாளை சீவியதின் காரணமாகவும், அவர்கள் மேல் கள் நெடி அடிக்கும். கள் வாசனை, பூவைப் போலவே நல்ல வாசனைதான். சாப்பிட உட்காருவதற்காகக் குடுக்கையை சுவர் ஓரம் சாய்த்து வைப்பார்கள். அதில் உள்ள அரிவாளின் பளபளப்பு என்னைக் கவர்ந்த ஒன்று. அதைக் கையில் எடுத்துப் பார்க்கும் தைரியம்தான் இன்றுவரை ஏற்படவில்லை. அந்த அரிவாளின் கூர்மையும் பட்டின் பளபளப்பும் சமம்.

இளமைக்காலத்தில் எனக்குள் ஒரு லட்சியம்தான். பெரியவர்கள், 'நீ பெரியவன் ஆனதும் என்ன செய்யப் போகிறாய்?' என்று கேட்பார்கள். அப்பாவும் அம்மாவும் எனக்கு உருவேற்றி இருந்தார்கள். டக்கென்று பதில் சொல்வேன். 'நான் டாக்டராவேன்' - இல்லையெனில், 'நான் இன்ஜினீயர் ஆவேன்' என்று சமயத்தில் ஞாபகத்துக்கு வந்ததைச் சொல்வேன். கேட்டவர்கள் திகைத்துப் புருவத்தை மேலே உயர்த்தி என்னைப் பார்ப்பார்கள். அப்பாவுக்கும் அம்மாவுக்கும் பெருமை நிலை கொள்ளாது.

ஆனால், இந்த டாக்டர் பெருமையும், இன்ஜினீயர் பெருமையும் என் மனசுக்குள் இல்லை. பெரியவர்களுக்கு முன் நான் பொய்தான் சொன்னேன். இந்தப் பொய் ரசிக்கத்தக்க பொய். பெரியவர்கள் துண்டமாக்கிக் கொடுத்திருந்த இதை அவர்களிடமே திரும்பவும் நான் வீசினேன். சந்தோஷமாக வாலை ஆட்டிக்கொண்டு அவர்கள் அதை விழுங்கிக் கொண்டார்கள்.

இதைச் சொல்ல வெட்கம் என்ன? எனக்குப் பெரியவன் ஆனதும் அப்பாவின் வேஷ்டியைக் கட்டிக்கொள்ள வேண்டும்! இதுவே என் லட்சியமாக இருந்தது. நான் பெரியவன் ஆக ஆசைப்பட்டதும் இதற்காகத்தான். பெரியவன் ஆனால் அப்பாவைப்போல மீசை முளைக்குமே! மார்பில் சுருள் சுருளாக முடி முளைக்குமே... முக்கியமான விசேஷ நாட்களில், அந்தச் சிவப்பு பட்டு வேஷ்டியைக் கட்டிக் கொண்டு நான் சாமி கும்பிடுவேனே... நான் பெரியவன் ஆக வேண்டுமே!

மடித்தே வைக்கப்பட்டுக் கிடந்ததால், அந்த வேஷ்டி எப்போதும் மடிப்புக் குலையாமல் இருக்கும். மடிப்புகள் பிரிக்க முடியாதவனவாக இருக்கும். கடைசி வரை அன்னங்கள் முழுமையாகவே இருந்தன. சரிகைக்கரை இற்று விழவில்லை. நெசவு நேர்த்தி அப்படி. அது அந்த காலத்துக் கை வேலைத்திறன். அவசர வாகன யுகம் தோன்றுமுன்பே தோன்றிய ஒரு நெசவுக் கலைஞனின் கைநேர்த்தி அப்படி உருவாகி இருந்தது. 'இதை எங்கு வாங்கியது?' என்று அப்பாவிடம் கேட்டு வைத்துக் கொள்ளவில்லை நான். காவிரிக் கரையில், சோற்றுக்குப் பஞ்சமில்லாத - வெற்றிலைப் பாக்கைப் போட்டுச் சிவந்த, உடம்பில் இளஞ்சூடு பரவிய திருப்தியில் ஒரு மனிதன் தன் மனைவியோடு சேர்ந்து நெய்த வேஷ்டியாக இது இருக்க வேண்டும். மாபவரம், கூறை நாடு, திருபுவனம் என்று ஏதாவது ஒன்றாய் இருக்கக் கூடும். பிறப்பிடம், மூலம் எதானால் என்ன? பிறந்த பயனை, கர்மாவைக் குறைவர பரிபூரணமாக செய்தது, அது என்பது சத்தியம்.


எனக்குக் கல்யாணங்களுக்குப் போவதில் அந்தக் காலத்தில் பெருத்த ஆர்வம் இருந்தது. காரணம் இதுதான். மாப்பிள்ளை பட்டுடுத்திக் கொண்டிருப்பார். பட்டு வேஷ்டியைப் பார்ப்பது இன்பமயமான அனுபவமாக இருக்கும். எத்தனை, எத்தனை வகையான பட்டுடுத்திப் பெண்கள் கல்யாணங்களுக்கு வருகிறார்கள். பட்டுப் புடவைகளை வைத்துக் கொண்டு கல்யாணங்களுக்கு ஏங்குகிறார்கள் பெண்கள். கல்யாணங்களே உலகில் இல்லாது போனால், இந்தப் பெண்கள் கண்ணீர் வடிப்பார்கள். பட்டுடுத்தி யாரிடம் காட்டிப் பரவசப் பட்டுக் கொள்வது?

என் கனவுகள் கூட அந்தக் காலத்தில் பட்டாயிருந்தன. கனவுகளில் அன்னப் பறவைகள் அணிவகுத்து வரும். ஆகாயம் செம்புக் கலரில், கத்தியாய் மின்னும். அந்த செம்புக் கலரில் ஊடே, பச்சை நிறத்தில் ஒரு நீளமான ஆறு. அந்த ஆற்றில் அந்த அன்னங்கள் நீந்தின. அந்த வேஷ்டியை அப்பா துவைத்து நான் இரண்டு முறை பார்த்திருக்கிறேன். குழந்தை பாப்பாவை குளிப்பாட்டுவது மாதிரியே இருக்குமே! அதற்கு சுடு தண்ணீர் ஆகாது. பச்சை தண்ணீரில்தான் குளிர்விப்பார். சவுக்காரம் அதற்கு ஆகாதாம். ஆகவே சந்தனச் சோப்பைத்தான் அப்பா உபயோகிப்பார். அப்பா குளித்தது மைசூர் சந்தனச் சோப்பில். அதற்கு முன்பு கதம்ப சோப்பில். பிரான்சில் இருந்து வந்த 'கதம்' சோப். நாங்கள் கதம்ப சோப் என்போம். இறக்குமதி நின்றுபோன உடன் மைசூர் சந்தன சோப். அதைத்தான் அதற்கு போடுவார். சோப் போடுவது தடவிக் கொடுப்பது மாதிரி இருக்கும். அம்மா எங்களுக்கு எண்ணைத் தேய்த்துவிடுகிற முரட்டுத்தனம் இருக்காது. அவ்வளவு மெது. கசக்கிப் பிழியமாட்டார். மெதுவாக நீரில் அகல வாக்கில் வேஷ்டியினை முனைகளைப் பிடித்துக்கொண்டு அலசுவார். பிறகு, தண்ணீர்த் துளி எங்கள் மேல் தெறிக்க, உதறுவார். ரொம்பவும் உதறக்கூடாது. நாள் பட்டத்துணி கிழிந்துவிடக் கூடும். உதறும்போது, மழைச்சாரலில் நிற்பதுபோல் இருக்கும் எங்களுக்கு. அப்புறம் நிழலில் காயப்போடுவார். வெயில் பட்டால் நிறம் வெளுக்கக் கூடும். காய்ந்ததும் அப்பாவுக்கு சொல்ல வேண்டியது எங்கள் பொறுப்பு. நாங்கள் மாற்றி மாற்றி 5 நிமிஷத்துக்கு ஒரு முறை துணியை தொட்டுப் பார்த்துக்கொண்டே இருப்போம். காய்ந்துவிட்டதா என்று பார்ப்பதற்காகத்தான். எங்களுக்கு இந்த ஒரு சாக்கு. அந்த சாக்கில் வேஷ்டியை தொட்டுப் பார்த்துக்கொண்டே இருக்கலாமே!

சாயங்காலம் வாக்கில் வேஷ்டி காய்ந்துவிட்டிருக்கும். அப்பாவிடம் சொல்ல ஓடுவோம். அப்பாவே வந்து, நிதானமாக அதைக் கொடியிலிருந்து எடுத்து, மூன்ள பிசிரில்லாமல் இழுத்து மடித்து மீண்டும் அந்த பெட்டிக்குள் வைத்துவிடுவார். இனி அதன் உபயோகம் அடுத்த நல்ல நாளில்தான்.

நாளடைவில் எனக்கும் மீசை முளைத்து. ஒரு சினேகிதன் சகோதரிக்கு லவ் லட்டரும் கொடுத்தேன். உதை வாங்கினேன். நியாயம்தானே! அப்புறம் கல்லூரிக்குச் சென்றேன் என்னமோ படித்தேன். என் மூளையை ஆக்கிரமித்துக்கொள்ள எவ்வளவோ விஷயங்கள் இருந்தன. என் கவனத்தைக் கவர எவ்வளவே நிகழ்ச்சிகள், நடப்புகள், உல்கம் ஜீவத்துடிப்போடு ஒவ்வொரு கணமும் அல்லவா பிறந்து இறந்து, பிறந்து இறந்து தன்னை புதுப்பித்துக் கொள்கிறது. என் மனசில்தான் எத்தனை ஆவா கனங்கள்... கம்பன் கதை சொல்லிகள்! கொடி மரத்து மூலை வக்கீல் ஜெகந்நாதையர் மகள் உமா மகேஸ்வரி எல்லோரும் சேர்ந்து என்னை உருமாற்றி அடித்து விட்டார்களே. கம்பியை நகையாக்குவது போல...! இடையிடையே அந்த செப்புப் பட்டு வேஷ்டியும் என் நினைவில் ஆடும். நீ எங்கு எவ்வாறு இருக்கிறாய்?





அதைப் போற்றிக் கொண்டாடி பயன் துய்க்க அப்பா இல்லை. பெட்டியுள் இருக்கும் பாம்பென உயிர்த்துக் கொண்டிருக்கும் அது என்பது எனக்குத் தெரியும். ஆண்டுகள் பல கழித்து ஒருமுறை சொந்த ஊருக்கு வந்தபோது, ஒரு சம்பவம் நிகழ்ந்தது. அப்போது விநாயக சதுர்த்தி வந்தது. நன்றாக நினைவு இருக்கிறது, ராஜி கல்யாணம் செய்து கொண்டு போய்விட்டிருந்தாள். நான்தான் பிள்ளையார் வாங்கி வந்தேன். அச்சுப் பிள்ளையார்தான். மூக்கும், முழியும் கன கச்சிதம். இந்த சாமிதான் என்ன அழகான கற்பனை! என்னையே படைக்கச் சொன்னாள் அம்மா.

மனசுக்குள் ஒரு படபடப்பே எனக்கு ஏற்பட்டுவிட்டது. அந்தப் பெட்டிக்குள் இருக்கும் வேஷ்டியை நினைத்துத்தான். சுயநினைவின்றித் தான் குளித்தேன். ஈரம் போகாமல் துவட்டிக்கொண்டு, அப்பாவின் அலமாரியைத் திறந்தேன். அந்தப் பச்சைக் கற்பூர வாசனை இன்னும் இருந்தது. வாசனை போகாது போலும்! அனுபவித் தேன். உடன் ராஜீ இல்லையே என்று வருத்தமாய் இருந்தது. ஜாக்கிரதையாகப் பெட்டியையும் திறந்தேன். அப்பாவின் மோதிரங்களைத் தவிர மற்றவை அனைத்தும் அங்கு இருந்தன. மோதிரங்கள். என் கல்லூரிக் கட்டணமாகவும், சாப்பாட்டுச் செலவாகவும் ஏற்கெனவே மாற்றம் அடைந்திருந்தன.

வேஷ்டியை வெளியே எடுத்தேன். அதன்மேல் சுற்றிய துண்டை நீக்கினேன். அதே குழந்தையின் மென்மை. அதே கத்திரியின் பளபளப்பு. அதே வாசனை. கொஞ்சம் கூட நிறம் மங்கல் இல்லை.

இடுப்பில் சுற்றிக்கொண்டேன். மனசு அப்பாவை நினைத்துக் கொண்டது. மயிர்க்கால்கள் குத்திட்டு நின்றன. வாழை இலையைச் சுற்றிக் கொண்டது போல் இருந்தது. அவ்வளவு மழமழப்பு.

மணைப்பலகையை எடுத்துப் போட்டுக் கொண்டு பிள்ளையாருக்கு முன் அமர்ந்தேன். ஒரு ஓசை. முனகலோடு வேஷ்டி உயிரை விட்டது. என் பின் பக்கத்து மடிப்புகள் தோறும் நீளம் நீளமாகக் கிழிந்திருந்தது. எழுந்து நின்று கொண்டேன். இருட்டில் குழந்தையின் கையை மிதித்துவிட்டாற் போல் இருந்தது.

அடுப்பங்கரையிலிருந்து அம்மா கொழுக்கட்டைப் பாத்திரத்தோடு வந்தாள்!

''என்னடா, கிழிஞ்சுப்போச்சா... போவட்டும்... அப்பா காலத்து வேஷ்டி! உனக்கு எப்படி உழைக்கும்... போயி, உன் வேஷ்டியைக் கட்டிக்கொண்டு வந்து காரியத்தைப் பாரு!'' என்றாள் அம்மா.

நான் என் டெரிகாட்டன் வேஷ்டியை எடுதது க் கட்டிக் கொண்டு, பிள்ளையாருக்கு முன் உட்கார்ந்தேன். டெரிகாட்டன் வேஷ்டிதான் எனக்குச் சரி என்று பட்டது. ஆனாலும் மனசுக்குள் எங்கோ வருத்தமாகத்தான் இருந்தது!

★ ★ ★

# தழைத்தோங்கும் தமிழ் வளர்ச்சி - பண்பாட்டுத் துறை

ஆந்திர மாநிலம், ஆர்மா. குப்பம் என்ற இடத்தில் திராவிடப் பல்கலைக் கழகம் அமைக்க முதற்கட்டமாக ரூ.50.00 இலட்சம் முதலமைச்சர் **கலைஞரின்** ஆணையில் வழங்கப்பட்டுள்ளது.

பிற மொழிகளில் உள்ள சிறந்த இலக்கியங்களைத் தமிழிலும், தமிழிலுள்ள சிறந்த இலக்கியங்களைப் பிற மொழிகளிலும் மொழிபெயர்த்து வெளியிடப்படும் நூல்களுக்கு ரூ.25,000 அல்லது அச்சிடும் செலவில் 60% இவற்றில் எது குறைவோ அத்தொகை நிதியுதவியாக வழங்கப்படும். 1996 - 97 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூ5.00 இலட்சம் நிதியொதுக்கீடு செய்யப்பட்டு நூல்கள், வல்லுநர் குழுவால் தெரிவு செய்யப்பட்டு ரூ.1,13,141 வழங்கப்பட்டுள்ளது.

அகவை முதிர்ந்த தமிழறிஞர்கள் 441 பேருக்கும் நலிந்த கலைஞர்கள் 4267 பேருக்கும் திங்கள்தோறும் வழங்கப்பட்டு வந்த நிதியுதவி ரூ.1500ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

தமிழ்மொழிக் காவலர் நிதியுதவிக் திட்டத்தின் கீழ் திங்கள்தோறும் வழங்கப்படும் நிதியுதவி . ரூ.400லிருந்து ரூ.500 ஆகவும், பின்னர் ரூ.500 லிருந்து ரூ.1500 ஆகவும் உயர்த்தப்பட்டுத் தற்போது . ரூ.3000 ஆக உயர்த்தி 1935 பேருக்கு வழங்கப்படுகிறது.

மொழி ஞாயிறு தேவநேயப் பாவணர் நூல்கள் நாட்டுடைமை யாக்கப்பட்டு அவரது குடும்பத்திற்கு ரூ.20 இலட்சம் பரிவுத் தொகையாக வழங்கப் பட்டது. மறைமலை யடிகளாரின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு அவரது குடும்பத்திற்கு, காப்பு நிதியாக ரூ.20 இலட்சம் வழங்கப் பட்டது.



தமிழ் ஆட்சி மொழித் திட்டத்தை முழுமையாகச் செயல் படுத்தும் நோக்காக 500 தமிழ்த் தட்டச்சு பொறிகள் தலைமைச் செயலகத்தில் வாங்க ரூ.50 இலட்சம் வழங்கப்பட்டது.

சென்னை உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு 43.75 இலட்ச ரூபாய் இந்த அரசு வழங்கியிருக்கிறது.

ஆசியவியல் ஆய்வு நிறுவனத்திற்குத் தமிழ் தொடர்பான ஆராய்ச்சிப் பணிகளுக்காக 96-97 ஆம் ஆண்டில் 19.57 இலட்ச ரூபாயும், 97-98 ஆம் ஆண்டில் இருபது இலட்ச ரூபாயும் மான்யமாக வழங்கப்பட்டுள்ளது.

**மதுரை தமிழ்ச்சங்க மேம்பாட்டிற்கு நிதி உதவி**

மதுரை தமிழ்ச் சங்க மேம்பாட்டிற்காகத் தேவர் பேரவையின் கோரிக்கைகளை ஏற்று, கழக அரசு 45 இலட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கியிருக்கின்றது.

ஆந்திர மாநிலத்திலுள்ள திராவிடப் பல்கலைக் கழகத்திற்கு இந்த அரசு 50 இலட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கியிருக்கிறது.

மறைமலை அடிகள் நூலகத்திற்கு ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வந்த மான்ய உதவி பத்தாயிரம் ரூபாயை ஒரு இலட்ச ரூபாயாக உயர்த்தி இந்த அரசு வழங்கத் தொடங்கியிருக்கிறது.

திருவான்மியூரில் உள்ள உ.வே.சாமிநாத அய்யர் நூலகத்திற்கு வழங்கப்பட்டு வந்த 60 ஆயிரம் ரூபாய் மான்ய உதவியை இந்த ஆண்டு முதல் 1 இலட்ச ரூபாயாக உயர்த்தி வழங்கியதும் இந்த அரசுதான்.

புதுதில்லி தமிழ்ச் சங்கத்தின் சார்பில் கட்டப்பட்டு வரும் திருவள்ளுவர் கலையரங்கத்திற்கு கூடுதல் வசதிகள் செய்வதற்கு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் ரூ.10 இலட்சம் நன்கொடை வழங்கப்பட்டது.

சென்னையில் இயங்கும் உலகத் தமிழராய்ச்சி நிறுவனம் 25 ஆண்டுகளைக் கடந்து 'வெள்ளி விழா'க் கொண்டாடும் இத்தருணத்தில், இந்நிறுவனத்தின் வளர்ச்சிப் பணிகளுக்குக் கூடுதலாக ரூ.14.42 இலட்சம் சிறப்புத் தொகையாக அரசு வழங்கியுள்ளது.

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலித் திட்டத்தின் கீழ் உயிரெழுத்துக்கள் வரிசையில் 'அ' கரம் முதல் 'ஔ' காரம் வரையிலான . மூன்றாவது பகுதி விரைவில் வெளியிடப் படவுள்ளது.

திருவனந்தபுரம் பன்னாட்டுத் திராவிட மொழியியற் பள்ளிக்கு இதுவரையில் நன்கொடையாக ரூ.5.00 இலட்சம் வழங்கப்பட்டு வந்தது. கடந்த ஆண்டு இத்தொகையை ரூ.10 இலட்சமாக முதலமைச்சர் **கலைஞரின்** ஆணையில் உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

இந்துமாக் கடல் நாடுகளின் கடலாய்வு குறித்து பன்னாட்டுக் கருத்தரங்கு ஒன்று, 1997 பிப்ரவரியில் சென்னையில் தொல்பொருள் ஆய்வுத் துறையும், இணைந்து முதல்முறையாக நடத்தப்பட்டது. பூம்புகார் கடல் அகழாய்வில் வெளிப்படுத்தியிருக்கிற பொருட்கள் பற்றியும், அவற்றை வெளிக்கொண்டு வருவது குறித்தும், பாதுகாப்பு முறை குறித்து கலந்துரையாடவும் உள்நாட்டிலிருந்து வருகை புரிந்த அறிஞர் பெருமக்கள் உணர்ந்து கொள்ளவும் இது ஏதுவாக அமைந்தது.

அரசினர் கீழ்த்திசை ஓலைச்சுவடி நூலகத்தில் ரூ.25.66 இலட்சத்தில் நுண்படப் பிரிவு அமைக்கப்படுகிறது.

திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, திருவாரூர், சேலம், திருநெல்வேலி ஆகிய ஐந்து மாவட்டங்களில் ரூ.25 இலட்சம் செலவில் இசைப் பள்ளிகள் தொடங்கப்பட்டுள்ளன. மேலும் 98-99ம் ஆண்டில் ஐந்து மாவட்டங்களில் புதிதாக இசைப் பள்ளிகள் தொடங்கப்படவுள்ளன.

திருநெல்வேலி, உதகமண்டலம், கோயம்புத்தூர், கடலூரர், தஞ்சாவூர், சேலம், திருச்சிராப்பள்ளி, சிவகங்கை மற்றும் காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்களில் ஜவகர் சிறுவர் இல்லம் தொடங்கப்பட்டுள்ளது. கன்னியாகுமரியில் விரைவில் தொடங்கப்பட உள்ளது. 1998. 99ம் ஆண்டில் மேலும் ஐந்து மாவட்டங்களில் ஜவகர் சிறுவர் இல்லங்கள் தொடங்கப்படவுள்ளன.

மக்களிடையே கலை பண்பாட்டு வளர்ச்சி தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்தவும், நலிந்து வரும் கிராமியக் கலைகளையும், கலைஞர்களையும் பேணிப் பாதுகாக்கவும் ஊக்கமளித்திடவும் காஞ்சிபுரம், சேலம், தஞ்சாவூர் மற்றும் விருதுநகர் ஆகிய 4 மாவட்டங்களில் கலை பண்பாட்டு மையங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. ★

# நீரின்றி அமையாது உலகு

சென்னை மாநகர் - புறநகர்ப்பகுதிகளின் குடிநீர்ப்பிரச்சினைகளை அறவே தீர்த்திடும் வகையில் 'கிருஷ்ணா நதிநீர்த்திட்டம்' இவ்வரசு பதவியேற்றதும் முழுவீச்சில் முடுக்கிவிடப்பட்டு, சென்னைக்கு - கிருஷ்ணா நதிநீர் கொண்டு வரப்பட்டுள்ளது.

★ பல ஆண்டுகளாக அதிக முதலீட்டில் செயலாக்கப்பட்ட குடிநீர்த் திட்டங்கள் சரிவரப் பராமரிக்கப்படாமல் இருந்த நிலையில் தமிழ்நாடு அரசு 1996 மே திங்களில் பதவியேற்றவுடன் - ரூ.39 கோடி செலவில் 96-97ஆம் ஆண்டில் 3,200 கிராமக் குடிநீர்த் திட்டங்களையும் 225 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களையும் போர்க்கால அடிப்படையில் செம்மையுறச் சீரமைத்துள்ளது; **'நீரின்றி அமையாது உலகு'** என்பதுணர்ந்து பயன்பெற வழிவகை செய்துள்ளது. நகர்ப்புறக் குடிநீர்த் திட்டங்களுக்கும் இதே கொள்கை அடிப்படையில் 97-98ஆம் ஆண்டில் புனரமைப்புப் பணிகள் 258 திட்டங்களுக்கு ரூ.13 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு, நவம்பர் 97 வரை 221 நகரங்களில் நிறைவேற்றப்பட்டுள்ளது.



★ தமிழக முதலமைச்சராகக் **கலைஞர்** அவர்கள் பதவியேற்றவுடன், குடிநீர்த் திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீட்டை இரண்டு மடங்காக உயர்த்தி வழங்கிட ஆணையிட்டார்கள். 9வது ஐந்தாண்டு திட்ட காலத்தில் சுமார் 2200 கோடி ரூபாய் இதற்கெனச் செலவு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

★ கிராமப்புறக் குடிநீர்த் திட்டங்களில் 10 லிட்டர் வரையில் குடிநீர் வசதி பெறும் சுமார் 10,000 குடியிருப்புகளுக்கு 97-98, 98-99 ஆகிய இரண்டு ஆண்டுகளில் 40 லிட்டர் குடிநீர் வசதி செய்து தரத்தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள சுமார் 20,000 குடியிருப்புகளில் (11-39 லிட்டர்) அடுத்த மூன்று ஆண்டுகளில் 40 லிட்டர் குடிநீர் வழங்கிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

★ நகர்ப்புறத் திட்டங்களில் பல ஆண்டுகளாக நிலுவையில் உள்ள தொடர் திட்டங்களை (Spill over schemes) முடிக்க முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு ஐந்து நகராட்சி குடிநீர்த் திட்டங்களும் பதினெட்டு (18) நகரப் பேரூராட்சிக் குடிநீர்த் திட்டங்களும் குறிப்பிட்ட காலத்தில் முடிக்கப்படும்.

★ கடற்கரையைச் சார்ந்த இராமநாதபுரம் மாவட்டத்தில் பாரத கன மின் நிறுவனம் மூலமாக 11 இடங்களில் மிகத் தாமதமாக நடந்துகொண்டிருந்த 'உவர்நீரை - நன்னீராக்கும் திட்டப்பணி' முடுக்கிவிடப்பட்டுள்ளன; அவற்றில் 6 திட்டங்கள் (பெருங்குளம், கீழாம்பல், கிடாதிருக்கை, உரத்தூர், உத்திரகோசமங்கை, கிழப்புருத்தியூர் ஆகிய ஊர்களில்) நிறைவேற்றப்பட்டுள்ளன. மீதமுள்ள 5 இடங்களில் வேலைகள் விரைவுபடுத்தப்பட்டு, வருகின்ற மார்ச் 98க்குள் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

★ பழுதடைந்த மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளைச் சீர்செய்யவும், கூடுதல் தேவைகளுக்குப் புதிதாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டவும், 97-98ஆம் ஆண்டில் ரூ.10 கோடி மதிப்பீட்டில் திட்டம் மேற்கொள்ளப்பட்டு 970க்கான பணிகள் தொடங்கி அவற்றில் 253 முடிக்கப்பட்டுள்ளன.


★ தேசிய நதி நீர் மாசுக்கட்டுப்பாடு திட்டத்தின் மூலமாக ரூ.3 கோடி மதிப்பீட்டில் திட்ட வேலைகள் ஈரோடு, பள்ளிபாளையம், கொமாரபாளையம், திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

★ தருமபுரி மாவட்டத்திலுள்ள குடியிருப்புகளுக்குச் சுமார் ரூ.630 கோடி செலவில் ஜப்பான் நாட்டு நிதி உதவியுடன் திட்டம் மேற்கொள்ள ஆய்வுப்பணிகள் நடைபெற்று வருகின்றன.

★ இந்த அரசின் சிறப்புத் திட்டங்களில் ஒன்றான அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தில், கிராமங்களுக்கு எல்லா அடிப்படை வசதிகளும் செயல்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில், 97-98ஆம் ஆண்டில் 1828 குடியிருப்புகளில் ரூ.60.90 கோடி மதிப்பீட்டில் குடிநீர்த் திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

★ பாதுகாக்கப்பட்ட குடிநீர் மற்றும் ஊரகத்துப்புரவு முகாம்கள் நடத்த நடப்பாண்டில் (1997-98) ஈரோடு, தருமபுரி, இராமநாதபுரம், திண்டுக்கல் ஆகிய நான்கு மாவட்டங்களில் ரூ.1.36 கோடியில் கல்வி-தகவல் தொடர்புத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

★ நாகப்பட்டினம் மாவட்டத்தில் 8 கடலோர ஒன்றியங்களில் உள்ள 279 குடியிருப்புகளில், உவர்ப்புத்தன்மையின் காரணமாகக் குடிநீர் மிகவும் பாதிப்புக்குள்ளாகியுள்ளது. இப்பகுதிகளில் வாழும் 5,47,000 மக்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீரைத் தாராளமாக வழங்க, வழிவகுக்கும் வகையில், கொள்ளிடம் ஆற்றுப்படுகையிலிருந்து நீர்எடுத்து மிகப்பெரிய அளவிலான, கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு, ரூ.98.75 கோடி ஒதுக்கி, **முதலமைச்சர் கலைஞர்** ஆணையிட்டுள்ளார். ★



# வீட்டு வசதி வாரியம்

## வீட்டு வசதி வாரியம்

★ தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் - 20,500 வீடுகளை ஒரே ஆண்டில் கட்டிமுடித்து ஒப்பற்ற சாதனை புரிந்துள்ளது; 'குடும்பத்திற்கு ஒரு வீடு' என்னும் உயரிய குறிக்கோளில் ரூ.700 கோடியில் வீடுகட்டும் பணிகள் விரைந்து செயல்படுத்தப்படும் என **முதலமைச்சர் கலைஞர்** அறிவித்துள்ளார். பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினருக்கென 5162 வீடுகளும், குறைந்து வருவாய்ப் பிரிவினருக்கென 4216 வீடுகளும், நடுத்தர வருவாய்ப் பிரிவினருக்கென 5976 வீடுகளும், உயர் வருவாய்ப் பிரிவினருக்கென 4647 வீடுகளும் - ஆகமொத்தம், ஒரே ஆண்டில் 20,500 வீடுகள் கட்டி வெற்றிச் சரிதம் படைக்கப்பட்டுள்ளது. மேலும் 31 நகர மையங்களை வளர்ச்சி மையங்களாக தெரிவு செய்து 10,234 குடியிருப்புகளை உருவாக்க திட்டமிடப்பட்டு இதுவரை 7,561 குடியிருப்புகள் முடிக்கப்பட்டுள்ளன.

★ சென்னை, மதுரை, கோவை, திருச்சி, சேலம், வேலூர், ஈரோடு, தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் திருப்பூர் ஆகிய 10 நகரங்களில் உலக வங்கியின் நிதிஉதவியுடன் ரூ.246.41 கோடி செலவில் 70,000 மேம்படுத்தப்பட்ட மனைகள் உருவாக்கத் திட்டமிடப்பட்டது.

★ நிர்ணயிக்கப்பட்ட இலக்கான 70,000 மனைகளை முன்னதாகவே முடிக்கப்பட்டதால் மேலும் கூடுதலாக 18728 மனைகளை உருவாக்கி அதன் மொத்த இலக்காக 88728 மனைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

★ 31 நகரமையங்களை வளர்ச்சி மையங்களாகத் தெரிவு செய்து, 10,234 குடியிருப்புகளை உருவாக்கத் திட்டமிடப்பட்டு, இதுவரை 7561 குடியிருப்புகள் முடிக்கப்பட்டுள்ளன.

★ மாநிலத்தில் உள்ள 12 சிறிய மற்றும் வாரிய நகரங்களில் 4503 குடியிருப்புகளை ரூ.40.83 கோடி செலவில் உருவாக்கப்படும்.

★ தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், திருமழிசையில் 2000 ஏக்கர் நிலத்திலும், ஜமீன் பல்லாவரத்தில் 600 ஏக்கர் நிலத்திலும், சார்புநகரம் உருவாக்கப்படுகிறது.

★ சோளிங்கநல்லூரில் 500 ஏக்கர் நிலத்தில் 10,000 குடியிருப்புகளும் மகாபலிபுரத்தில் 250 ஏக்கர் நிலப்பரப்பில் 2500 குடியிருப்புகளும் கட்டப்படும்.

★ திரு.வி.க.நகர் மற்றும் சர்மா நகரில் வீடு ஒன்றுக்கு ரூ.9600 என்று சலுகை விலையில் தொழிலாளர்களுக்கான வீட்டுத் திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு, 210 ஒதுக்கீடுதாரர்களுக்கு விற்பனை ஏற்பாவணங்களும் வழங்கப்பட்டது. ஒதுக்கீடுதாரர்களின் விருப்பத்திற்கிணங்க, தமிழ்நாட்டில் இதைப்போல மற்ற நகரங்களில் உள்ள வீடுகளின் விற்பனை ஏற்பாவணம் வழங்கப்படும்.

## சென்னை மாநகரைச் சுற்றிச் சார்பு நகரம் அமைத்தல்

★ சென்னை மாநகரத்தில் உள்ள இட நெருக்கடியைக் குறைப்பதற்காகத் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் சென்னையை சுற்றி உள்ள முக்கிய பெருவழிச் சாலைகளை யொட்டி சார்பு நகரங்களை உருவாக்கத் திட்ட மிட்டுள்ளது.

★ சென்னைக்குத் தெற்கே சோழிங்கநல்லூர் (525 ஏக்கர் பரப்பு), மாமல்லபுரம் ((220 ஏக்கர் பரப்பு) மற்றும் ஜமீன் பல்லாவரம் (416 ஏக்கர் பரப்பு) ஆகிய இடங்களில் மூன்று சார்பு நகரங்கள் உருவாக்கப் படவுள்ளன. மேற்கு திசையில் திருமழிசை வட்டத்தில் அடங்கியுள்ள செம்பரம்பாக்கம் (525 ஏக்கர் பரப்பு), குத்தம்பாக்கம் (873 ஏக்கர் பரப்பு), பார்வதி இராஜபுரம் (165 ஏக்கர் பரப்பு), வெள்ளவேடு (64 ஏக்கர் பரப்பு) மற்றும் நரசிங்கபுரம் (85 ஏக்கர் பரப்பு) ஆகிய இடங்களில் சார்பு நகரங்கள் அமைக்கப்படவுள்ளன. வடமேற்குத் திசையில் பருத்திப்பட்டில் (683 ஏக்கர் பரப்பு) சார்பு நகரம் உருவாக்கப்படவுள்ளது. மேற்கூறிய சார்பு நகரங்களை உருவாக்குவதற்கான நிலம் கையகப் படுத்தும் சட்டத்தின்படி நிலத்தை கையகப்படுத்துவற்கான வழிமுறைகள் கையாளப்பட்டு வருகின்றன.

★ சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சி, சேலம், ஈரோடு, வேலூர், திருநெல்வேலி, திருப்பூர், தூத்துக்குடி ஆகிய நகரங்களில் மலிவு விலையில் பொருளாதாரத்தில் நலிவுற்றோர் மற்றும் குறைந்த வருவாய்ப் பிரிவினருக்கு வீட்டுமனைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

★ 70,000 குடும்பங்கள் பயனடையும் வகையில் 36 சிறிய மற்றும் நடுத்தர நகரங்களில் ஆசிய வளர்ச்சி வங்கியின் நிதியுதவியுடன் குடியிருப்புகள் உருவாக்கப்படவுள்ளன.

★ சென்னை-அரசினர் தோட்டத்தில், சட்டமன்ற உறுப்பினர்களுக்கான 240 அடுக்குமாடிக் குடியிருப்புகள் 10 மாடிகள் கொண்ட 4 கோபுர வளாகங்களாக ரூ.45 கோடி மதிப்பீட்டில் கட்டும் பணிகள் நடைபெறுகின்றன.


★ 1997-98ஆம் ஆண்டில் கோவைக்கருகில் பெரியநாயக்கன் பாளையத்தில் ரூ.26.91 கோடி மதிப்பீட்டில் மனைகள் உருவாக்கப்படுகின்றன.

★ கரூர், நாகப்பட்டினம், திருவாரூர், நாமக்கல், பெரம்பலூர், விழுப்புரம் மற்றும் திருவண்ணாமலை ஆகிய புதிய மாவட்டத் தலைநகரங்களில் ரூ.23.68 கோடி மதிப்பீட்டில் 738 அடுக்கு மாடிக் குடியிருப்புகள் அரசு ஊழியர்களுக்கான வாடகை வீட்டு வசதித் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

★ அரசு ஊழியர் வாடகை வீட்டு வசதித் திட்டத்தின் கீழ், சென்னை அரசினர் தோட்டத்தில், 250 குடியிருப்புகள் கொண்ட பல அடுக்கு மாடி கட்டடங்கள் ரூ.16 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ளன.

---

# ஆலய மேம்பாடு



**திருக்கோயில்களின் நிர்வாகம் - வருவாய் பெருக்கம்**

★ திருக்கோயில்களின் நிர்வாகத்தைச் செம்மைப்படுத்த மாண்புமிகு முதலமைச்சர் தலைமையில் சமயச் சான்றோர்கள் தமிழறிஞர்கள் ஆகியோர் அடங்கிய ஆலோசனைக்குழு ஏற்படுத்தப்பட்டு அக்குழுவின் ஆலோசனையின் அடிப்படையில் திருக்கோயில்களுக்குச் சொந்தமான அசையாச் சொத்துக்களைச் சீராகப் பேணி பாதுகாத்து அவற்றிலிருந்து பெறப்படுகின்ற வருவாயைக் கணிசமாக உயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. பசலி 1405-ல் ரூ.2231.67 இலட்சங்களாக இருந்த கேட்பு, பசலி 1407-ல் ரூ.3501.92 இலட்சங்களாக உயர்ந்துள்ளது. திருக்கோயில்களுக்குச் சொந்தமான அசையாச் சொத்துக்களைத் திருக்கோயில் மேம்பாட்டிற்குப் பயன்படுத்த முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**தமிழ் அர்ச்சனை**

★ திருக்கோயில்களில் தமிழ் அர்ச்சனையை ஒரு இயக்கமாகவே செயல்படுத்த வேண்டும் என்று கருதி சமய அறநெறிகளில் ஈடுபாடு கொண்ட தமிழ் அறிஞர்களைக்கொண்ட ஓர் குழு நியமிக்கப்பட்டு, அக்குழுவின் இரு கூட்டங்களில் முதற்கட்டமாக, பல கடவுள்களுக்கும் 108 போற்றிகள் தயாரிக்கப்பட்டு, குழுவின் பரிசீலனையில் உள்ளது.

★ ஆதிதிராவிடர் மிகப்பிற்படுத்தப்பட்டோர் வாழ்கின்ற கிராமப் பகுதிகளில் உள்ள நலிந்த கோயில்களுக்கு 1997-98ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையில் அறிவித்தவாறு, ரூ.25,000 வீதம் ஆண்டு ஒன்றுக்கு 50 திருக்கோயில்களுக்குத் திருப்பணிக்காக, திருக்கோயில் திருப்பணி மற்றும் அறப்பணிகள் நிதியிலிருந்து வழங்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

★ 60 வயதடைந்த ஓய்வு பெற்ற கிராமத் திருக்கோயில்களின் பூசாரிகளுக்கு மாதம் ரூ.500 உதவித்தொகையாக வழங்கப்பட்டு வருகிறது.

**இலட்சக் கணக்கானோர் வியர்வை வடிக்க வேண்டும்; ஒரு சிலர் அந்த வியர்வைத் துளிகளைப் பன்னீராக மாற்றி அதிலே குளிக்க வேண்டும் என்ற நிலை மாற்றப்பட்டாலன்றி ஒரு நாடல்ல; உலகமே கூட ஒழுங்காக வாழ முடியாது.**

**- கலைஞர்**

# நெஞ்சை அள்ளும் தஞ்சை ஓவியம்!

**- எம்.நல்லசிவம்**

தஞ்சை ஓவியம் என்று கூறப்படும் வண்ண ஓவியம் 18 ஆம் நூற்றாண்டின் மத்தியில் தமிழகத்தில் தஞ்சை நகரத்தில் ஒரு புது வகையான ஓவியக்கலையாக, தஞ்சையை ஆண்ட சரபோஜி மன்னர் ஆதரவால் வளரத் தொடங்கியது. தஞ்சையில் வளர்ந்த காரணத்தால் இக்கலை உலக முழுவதும் அது பிறந்த இடத்தை வைத்து தஞ்சை ஓவியம் என்று அழைக்கப்படுகிறது. கடந்த இரண்டு நூற்றாண்டுகாளாக இந்தத் தஞ்சை ஓவியத்தை மன்னர்கள், பெரும் செல்வந்தர்கள் பெரிய பணியில் இருப்பவர்கள் தங்களது மாளிகைகளில் தங்களது சமூகப் பெருமைக்கு ஒரு சாட்சியாக வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இன்றைய ஓவியத் துறையின் பலவேறு கூறுகள். தற்காலத் தாகத்திற்குத் தக்க பலவேறு கோணங்களில் மாறி வளர்ந்து வருகின்றன. ஆனால் தஞ்சை ஓவியங்கள் பிறந்த காலத்திலிருந்து ஓவிய இலக்கணப்படியே பழமையின் தொன்மையை இன்றும் கடுகளவு கூட மாறாமல் காத்து வருகிறது. தஞ்சை நாடு ஆடல் கலைக்கும், இசைக் கலைக்கும் பிறந்த இடம் ஆகும். மேலும் காலம் வளர வளர அதன் தொன்மையைப் பாதுகாக்கும் வண்ணம் அதன் இலக்கண முறையும் கலையும் வளர்ந்து உலகப் புகழ் பெற்று வருவதைப் போல அங்கு பிறந்த தஞ்சை ஓவியம் தஞ்சை நாட்டுக் கலைஞர்களால் பாதுகாக்கப்பட்டும், வளர்க்கப்பட்டும் வருவதால் தஞ்சை நாடு தமிழ்க்கலைகளின் தாய்நாடு என்றே கூறவேண்டும். இன்றைய தஞ்சை ஓவியங்கள் பல புகழ்பெற்ற ஓவியர்களால் வளர்க்கப் பட்ட கலை ஆகும். இதற்குச் செல்வந்தர்களின் ஆதரவு பெருமளவு இருந்ததால் அதன் புகழ் இன்று உலகளவில் பரவியுள்ளது. பழைய ஓவியங்கள் இன்று பெரும் செல்வப் பொருளாகக் கருதப்பட்டு, அருங்காட்சியகங்களாலும் தனிநபர்களாலும் காக்கப்படுகின்றன.

பதினெட்டாம் நூற்றாண்டிலிருந்து ஆலிலை கிருஷ்ணா, தர்பார் கிருஷ்ணா, வெண்ணெய் தாழி கிருஷ்ணா, யசோதா கிருஷ்ணா, புல்லாங்குழல் கிருஷ்ணா, ராமர் பட்டாபிஷேகம் போன்ற ஓவியங்கள் ஓவியர்களால் படைக்கப்பட்டு வருகின்றன.

19ஆம் நூற்றாண்டின் மத்தியில் புத்தர், ஏசுநாதர், பிள்ளையார் பட்டி விநாயகர் போன்ற புதுத் தெய்வங்களின் திருஉருவங்களை, ஓவியர்கள், தங்களின் திறமையை வெளிப் படுத்தும் வண்ணம் தஞ்சை ஓவியங்களில் படைத்து வருகி றார்கள்.

முன்னோர்கள் பின்பற்றி வந்த முறையைத் தொடர்ந்து இன்று வண்ணக் கலவையில் நீர் வண்ணங்களைக் கொண்டு, ஒரங்களில் சிறு டிசைன்களை மாற்றம் செய்து தனித்தன்மை யோடு படைக்கிறார்கள். மனதைக் கவரும் தஞ்சை ஓவியத்தைப் படைக்கும் பல நிலைகளையும் செய் முறைகளையும் இங்கே பார்ப்போம்.

முந்தைய காலத்தில் பலா மரப்பலகையின் மேல் புளியங் கொட்டைப் பசையைத்





ஒட்ட வேண்டும். பிறகு சாக்பவுடரில் பெவிக்கால் கலக்கி தூரிகை உதவியுடன் பூசச் (Coating) செய்ய வேண்டும். காய்ந்த பின் உப்புக் காகிதத்தால் தேய்க்க வேண்டும். பின் படத்தின் அவுட் லைன் போட வேண்டும். பிறகு மண்டபம், நகை போன்ற இடங்களில் ஜெய்பூர் கற்களைப் பதிக்க வேண்டும் சாக்பவுடர் வேலான் பிசின் கலந்து ஆபரணங்கள், உடைகள், மண்ட பங்கள் போன்ற இடங்களில் டிசைன்போட வேண்டும். காய்ந்த பின் (22 காரட் தங்க ரேக்குகளை 22 Cr Gold Rags ஒட்ட வேண்டும்.) தங்க ரேக்குகள் ஒட்டிய இடம் தவிர மற்ற இடங்களில் போஸ்டர் கலர் தீட்ட வேண்டும். முந்தைய காலத்தில் இயற்கை வண்ணங்களைக் கொண்டு செய்தனர். தங்க ரேக்குகளின் மீது, (Water Proof Ink) நீர் புகா மை தீட்ட வேண்டும். மடிப்புகளில் டிசைன் வரைய வேண்டும். தஞ்சை ஓவியப் பாரம்பரியம் தொடர ஓவியத்தைப் பாதுகாப்பாகத் தேக்கு பிரேம் மூலம் பொருத்த வேண்டும்:

உன்னதக் கலையைக் காக்க, பரம்பரையாக மிகப்பெரிய வீடுகளில் இன்றும் தஞ்சை ஓவியம் காணப்படுவது வழக்க மாக உள்ளது. அதனுடைய மதிப்பு அறிந்தும் அறியாதும் பராமரித்து வருகின்றனர். இருப்பினும் இந்த ஓவியங்கள் தீட்டப்படுகின்ற முறை, ஓவியத்தில் பொதிந்துள்ள பொருட்கள் இவற்றைப் பற்றி ஓவிய உரிமையாளர்களுக்கு, செய் நுட்பத் திறனை அறியப் படுத்தினால், ஓவியங்களைப் சிறப்புடன் பராமரித்து மேலும் பல்லாண்டுகள் வைத்திருக்க ஏதுவாக இருக்கும்.

தடவிஅதன் மேல் பழுப்புத்தாள், Brown Paper ஒட்டப்பட்டது. தற்காலத்தில் Fevicol தடவி Brown Paper ஒட்டப்படுகிறது. அதன் பின் வெள்ளைக் காடாத் துணியை

இந்த உன்னதக் கலையை வளர்க்க அரசு ஆண்டுதோறும் பூம்புகார் கைவினைக் கழகத்தின் மூலம் (State Award) தலை சிறந்த கலைஞர்களுக்குப்பாராட்டுப் பத்திரமும், ரொக்கப் பணமும் வழங்கி கலைஞர்களை ஊக்கப்படுத்துகின்றது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

## சாதனைத் துளிகள்

- அனைத்து நிர்வாக நடைமுறைகளிலும் தமிழ் மொழியை முழு அளவில் பயன்படுத்து வதற்கும், 'எங்கும் தமிழ் எதிலும் தமிழ்' என்ற நிலை உருவாகவும், தமிழ் ஆட்சி மொழித்துறை அமைச்சகம் கலைஞரால் உருவாக்கப்பட்டுள்ளது.
- சென்னை மருத்துவக்கல்லூரி, நிகர்நிலைப் பல்கலைக்கழகமாகக் கலைஞர் அவர்களால் நிலை உயர்த்தப்பட்டுள்ளது.
- கிராமப்புறங்களில் அத்தியாவசியப் பண்டங்க ளைத் தேவையின் அடிப்படையில் வினியோகிப்ப தற்கு ஏற்றவகையில் 2000 புதிய நியாய விலைக் கடைகள் - பகுதிநேர நியாய விலைக்கடைகள் கலைஞர் ஆட்சியில் புதிதாகத் திறக்கப் பட்டுள்ளன.



- அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் ஏற்கெனவே, கலைஞர் அவர்களால் ஒதுக்கப் பட்ட ரூ.50 கோடியையும் சேர்த்து ரூ.156 கோடியில் பணிகள் நடைபெறு கின்றன.
- மீனவர்களுக்கு தமிழக அரசு வழங்கும் டீசல் மானியம், லிட்டருக்கு 7 காசிலிருந்து 17 காசாக உயர்த்தி வழங்கக் கலைஞர் ஆணையிட்டுள்ளார்.
- 1996லிருந்து 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ-மாணவியருக்கு இலவச பஸ்பாஸ் வழங்கும் திட்டம் விரிவுப்படுத்தப்பட்டுள்ளது.

# ஊரக வளர்ச்சிப் பணிகள்

**10, 15** ஆண்டுகளாகத் தேர்தல்களே நடத்தப்படாமலிருந்த நிலையில் **கலைஞரின்** அரசு ஆட்சிப் பொறுப்பேற்றதும், மக்களாட்சி முறையை ஊராட்சி வரை நடைமுறைப்படுத்திடும் வகையில், தமிழகத்திலுள்ள 6 மாநகராட்சிகள், அவ்வற்றின் 474 வார்டுகள்; 102 நகராட்சிகள் அவற்றின் 33,9992 வார்டுகள்; 634 பேரூராட்சிகள் - அவற்றின் 10,170 வார்டுகள்; 28 மாவட்ட ஊராட்சிகள் - அவற்றின் 649 வார்டுகள்; 384 ஊராட்சி ஒன்றியங்கள் - அவற்றின் 6504 வார்டுகளுக்கும், 12,584 கிராமப்பஞ்சாயத் துகளுக்கும் அவற்றின் 40,714 வார்டுகளிலுள்ள 97,026 உறுப்பினர்களுக்கும், ஆகமொத்தம் 1,62,681 பதவிகளுக்கும் இந்தியாவிற்கே வழிகாட்டும் வகையில் ஒரே கால கட்டத்தில் உள்ளாட்சித் தேர்தல்கள் நடத்தி முடிக்கப்பட்டன என்பது குறிப்பிடத் தக்கதாகும். பெண்களுக்குச் சமவாய்ப்பு எனும் அடிப்படையில், அண்ணல் காந்தியடிகள், தந்தை பெரியார், பேறிஞர் அண்ணா ஆகிய பெருந்தகையாளர்களின் இலட்சிய நோக்கில், அதாவது 'பொதுப் பணியாற்றுவதில் பெண்களுக்கு உரிய வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும்' என்ற கனவு நனவாகும் வகையில், உள்ளாட்சி அமைப்புக்ளில் ஒட்டு மொத்தமாகச் சற்றேறக் குறைய 44,143 பெண்கள் பதவி வகிக்கின்றனர் என்பது - ஒரு வரலாற்றுச் சாதனையாகும்.



★ கடந்த 18 மாதங்களில், முடிக்கப்பட்ட வளர்ச்சிப் பணிகள் : 2,62,255, இதில் 1,50,000 தொகுப்பு வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இது ஓர் அகில இந்தியச் சாதனையாகும்.

★ 3164 கி.மீ. தூரமுள்ள ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச்சாலைகள் தார்ச்சாலைகளாக உருவாக்கப் பட்டுள்ளன.

★ ஏழை, எளிய ஆதிதிராவிடர், பிற்படுத்தப்பட்ட பிற இனத்தவர்க்கு 12,018 பாசனக் கிணறுகளுக்கு நிதிமானிய உதவிகள் அளிக்கப்பட்டுள்ளது.

★ ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் மக்களின் பொருளாதார நிலையை உயர்த்திடும் வகையில், 2,60,868 பயனாளிகளுக்கு ரூ.125.13 கோடி மானியமாக வழங்கப் பட்டுள்ளது. ஊராட்சிகளுக்கு முக்கியத் துவம் அளித்திடும் வகையில், இத்திட்டம் ஊராட்சிகளுக்கு 65%, ஒன்றியங்களுக்கு 15%, ஊரக வளர்ச்சி முகமைகளுக்கு 20% என மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

★ கடந்த 1½ ஆண்டுகளில், 16,758 ஊரக இளைஞர்களுக்கு ரூ.10.12 கோடி செலவில் சுயவேலை வாய்ப்புப் பயிற்சியளிக்கப்பட்டுள்ளது. தற்போது 14,056 இளைஞர்கள் பயிற்சி பெறுகின்றனர்.

★ கிராமப்புற மகளிர் மற்றும் சிறார் மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ், நடப்பு ஆண்டில் 6,182 ஆதிதிராவிடர் உட்பட 14,277 கிராம மகளிர்கள் சுயவேலை வாய்ப்புப் பெற்றிடும் வண்ணம் ரூ.4.91 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

★ முதலமைச்சர் கலைஞரால் தொடங்கப் பட்ட 'அண்ணா மறுமலர்ச்சித் திட்ட'த்தின் மூலம், 234 சட்டமன்றத் தொகுதிகளிலுள்ள 212 ஊரக, 22 நகர்ப்புறங்களில் ரூ.51.86 கோடி மதிப்பீட்டில் 32045 பணிகள் நடைபெறுகின்றன.

★ முதலமைச்சர் கலைஞரின் சிந்தையில் உதித்த 'நமக்கு நாமே' திட்டத்தின்கீழ், 1958

கிராமங்களில், 3263 திட்டங்கள், பொது மக்கள் பயனடையும் வகையில், முழு ஈடுபாட்டுடன் மக்களாட்சியின் மாண்புறு செயலாக்கங்களாகச் செயல்படுத்தப் படுகின்றன.

★ கடந்த ஆட்சியில், வேலையிலிருந்து நீக்கப்பட்ட 12,044 மக்கள் நலப்பணி யாளர்களை மீண்டும் பதவியிலமர்த்தி முதலமைச்சர் கலைஞர் ஆணை; இதில் 4814 பெண்கள் பணியமர்த்தப் பட்டுள்ளனர்.

★ சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், தொகுதிக்கு ரூ.25 இலட்சம் வீதம் ரூ.58.75 கோடி மதிப்பீட்டில் மேம்பாட்டுப் பணிகள் நடைபெறுகின்றன.

★ மக்களாட்சியின் மகத்தான சாதனையாக, ஊராட்சிகளின் ஒருமித்த வளர்ச்சிக் கென, வறுமை ஒழிப்பு, குடிநீர், பொதுப்பகிர்வு, சாலை-பாலங்கள் அமைத்தல், கதர் கிராம வளர்ச்சி, நூலகம், ஊரக மின் மயமாக்கல், ஒன்றியப்பள்ளிகள் உள்ளிட்ட 17 அதிகாரங்களை ஊராட்சிகளுக்கு வழங்கி முதலமைச்சர் கலைஞர் ஆணை யிட்டுள்ளார்; மேலும், உள்ளாட்சி அமைப்புகளின் அதிகாரங்களைப் பரவலாக்கிட, அனைத்துக் கட்சி உறுப்பினர்களடங்கிய குழுவொன்று உருவாக்கப்பட்டுள்ளது.

★ ஊரகப்பகுதிகளின் வளர்ச்சிப் பணி களை முடுக்கிவிட, 384 ஊராட்சி ஒன்றியங்களுக்கும் ரூ.12.97 கோடி செலவில், 384 புதிய வாகனங்கள் முதலமைச்சர் கலைஞரால் வழங்கப்பட்டுள்ளன.

★ பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள இருளில் மூழ்கிக் கிடந்த ஊராட்சிப் பகுதிகளில் ரூ.7.28 கோடி செலவில், 20,000 தெரு மின்விளக்குகள் மூலம் ஒளியூட்டப்பட்டுள்ளன.

★ உள்ளாட்சி நிர்வாகங்களின் வளர்ச்சித் திட்டங்களை ஒருங்கிணைத்துத் திட்டமிட வழிவகுத்திடும் வகையில் 28 மாவட்டங் களிலும், புதிதாக 'மாவட்டத் திட்டக் குழுக்கள்' உருவாக்கப்பட்டுள்ளன.

★ உள்ளாட்சி அமைப்புகளுக்குக் கூடுதல் நிதிவசதியளித்து 10 வகை அடிப்படைப் பணிகளை மேற்கொள்ள மத்திய மற்றும்



உண்மையான ஒழுக்கம், நாணயம் வேண்டுமானால் தேவை குறைய வேண்டும்; அவசியம் குறைய வேண்டும். தேவையும், அவசியமும் அதிகமாக அதிகமாக நாணயக் கேடும் ஒழுக்கக் கேடும் வளர்ந்துகொண்டுதான் போகும்.

- தந்தை பெரியார்

மாநில அரசு நிதி உதவியாக ரூ.790 கோடி வழங்கப்பட்டுள்ளது. மாநில அரசின் வருவாயில் 8 விழுக்காடு ஒதுக்கீடாக ரூ.364.44 கோடி மானியம் வழங்கப்பட்டுள்ளது.

★ இது தவிர, மாநில அரசின் வரி வருவாயிலிருந்து ரூ.360 கோடி மானியமும் வழங்கப்பட்டுள்ளது.

★ இவைகளோடு, வீட்டு வரி சமன்பாட்டு நிதி, மின்கட்டண மானியம், கூட்டுக் குடிநீர்ப் பராமரிப்புச் செலவினம், நலிவுற்ற ஊராட்சிகளுக்கென மானியம் என மேலே கூறப்பட்ட அனைத்து ஊராட்சிகளின் அடிப்படை வளர்ச்சிப் பணிகளுக்கும் ஆண்டுதோறும் ரூ.1408 கோடி நிதிஉதவியாக வழங்கப்பட்டு வருகிறது.

## பேரூராட்சிகள்

★ அடிப்படை வசதித்திட்டம், பொதுக் கழிப்பிடங்களுக்குத் தண்ணீர் வசதி, சோடியம் ஆவி விளக்கமைத்தல், தேசிய குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் ஆகியவை போன்ற அடிப்படை வசதிகளை உருவாக்கிடும் வகையில், 24,968 பணிகளுக்கென ரூ.64 கோடியும் செலவிடப்பட்டு வருகின்றன. மேலும் சாலை, வடிகால், குடிநீர் வினியோகம், தெருவிளக்கு போன்ற 5036 பணிகள் ரூ.20.76 கோடி செலவிலும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

★ மேலும், பேரூராட்சிகளின் நிதி ஆதாரத்தைப் பெருக்கிடும் வகையில், கேளிக்கை வரி பங்குத் தொகை 65லிருந்து 90% உயர்த்தி வழங்க அரசு முடிவெடுத்துள்ளது. 1996-97 நிதியாண்டில், விற்பனை வரி மீதான மிகு வரியாக ரூ.16 கோடி வழங்கப்பட்டது. சுதந்திரப் பொன்விழா ஆண்டையொட்டி தேசிய குடிசை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், ஒவ்வொரு பேரூராட்சிக்கும் ரூ.4.25 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. மாநில நிதிக் குழுவின் பரிந்துரையின் பேரில், ரூ.96.23 கோடியும், 15% சமன்பாடு ஊக்க நிதியாக ரூ.15.11 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டு, பேரூராட்சிகளின் வளர்ச்சிப் பணிகள் விரைந்து செயலாக்கம் பெறுகின்றன.

# நாளொரு திட்டம் பொழுதொரு சாதனை

**சமூக நலம் காக்கும் அரசு:**

1995-96ஆம் ஆண்டுவரை 4000 ஏழை விதவைகளின் குழந்தைகளுக்கு இலவசமாக புத்தகங்களும் வழங்கப் பட்டுள்ளன. 96-97-லிருந்து எல்லா ஏழை விதவைகளின் குழந்தைகளுக்கும் இலவசமாகப் புத்தகங்கள் வழங்கப்படும்.


பெண் கல்வி கற்றால், அது சமுதாயத்தை அறிவார்ந்த நிலைக்கு உயர்த்திடுமென்ற உயரிய இலட்சியத்தின் அடிப்படையில், பெண்கள் குறைந்தபட்சம் 8ஆம் வகுப்பு வரையிலாவது படிக்க வேண்டுமென்பதை வலியுறுத்திடும் வகையில், முதலமைச்சர் கலைஞரால் உருவாக்கப்பட்ட மூவலூர் இராமமிர்தத் தம்மையார் நினைவுத்திருமண நிதி உதவித் திட்டத்தின் கீழ், இதுவரையில் தலா ரூ.10,000 வீதம் 48,000 ஏழைப் பெண்களின் திருமணத்திற்கு நிதி உதவியாக ரூ.48 கோடி வழங்கப் பட்டுள்ளது.

**ஊனமுற்றோர் நலன் காப்பதில் உற்றுழி உதவிகள்:**

முதலமைச்சர் கலைஞரின் ஆணையின்படி, மிகவும் ஊனமுற்றுள்ள நபர்களுக்கு அளிக்கப்பட்டு வந்த மாதாந்திர பராமரிப்புத்தொகை ரூ.100லிருந்து ரூ.150 ஆக உயர்த்தி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம், 2,900 ஊனமுற்றோர் பயனடைகின்றனர். ஒரு கையோ, ஒரு காலோ இல்லாதவரை மணம் செய்து கொள்ளும் ஊனமில்லாத நபருக்கு ரூ.5000 ஊக்கத் தொகையாக வழங்கும் திட்டம் புதிதாகத் துவக்கப்பட்டுள்ளது. தற்பொழுது, 28 மாவட்டங்களிலும் ரூ.1.38 கோடி செலவில் ஊனமுற்றோர் மறுவாழ்வு மையங்கள் புதிதாக உருவாக்கப்படுகின்றன.

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மேம்பாடு:**

இவ்வாண்டில் 70,000 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு 'இலவச வீட்டு மனைப்பட்டா'க்களை வழங்கிட ஏதுவாக ரூ.17 கோடி ஒதுக்கீட்டில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. அகில இந்தியச் சாதனையாக கடந்த 18 மாதங்களில், 1,33,087 இலவசத் தொகுப்பு வீடுகள் கட்டி முடிக்கப் பட்டுள்ளன.



**சமத்துவபுரம்**

ஆதிதிராவிடர்களும் ஏனைய சமுதாயத்தினரும் ஒன்றாக இணைந்து நல்லிணக்கத்தோடு ஒற்றுமையாக வாழ்வதற்கு வழிவகுக்கும் வகையில் இந்திய விடுதலைப் பொன்விழா ஆண்டையொட்டி முதலமைச்சர் அவர்கள் அறிவித்த சமத்துவபுரத் திட்டத்தின்படி, 100 வீடுகள் கொண்ட சமத்துவபுரங்கள் 50 இடங்களில் உருவாக்கப்படும். இதில் 40% ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின பிரிவுகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்படும். வீடு ஒன்றிற்கு அரசின் மானியமாக ரூ.35,000 வழங்கப்படும். அடிப்படை வசதிகளான - குடிநீர், சாலை, தெருவிளக்கு, சமுதாயக்கூடம், நியாயவிலைக்கடை, கல்வி வசதி, மருத்துவ வசதி போன்றவைகளும், பொதுச்சுடுகாடு - இடுகாடும் அரசின் செலவில் உருவாக்கப்படும். ரூ.5 கோடி இதற்கென முதல்கட்டமாக ஒதுக்கப் பட்டுள்ளது.

**இன்ன பிற சாதனைகள்:**

விடுதலைப் பொன்விழா ஆண்டையொட்டி அனைத்துப் பழங்குடியினர் குடியிருப்புகளுக்கும் அடிப்படை வசதிகள் அளிக்கப்படும் என்று முதலமைச்சர் அறிவித்துள்ளார். 1785

மலைப்பகுதி குடியிருப்புகளுக்கும், குடிநீர் வசதி, தெரு விளக்கு வசதி, இணைப்புச்சாலை வசதி, ஆரம்பக் கல்வி வசதி, மருத்துவ வசதி, சத்துணவுக் கூட வசதி, குடிமைப் பொருள் அங்காடி வசதிகள் உருவாக்கப் படவுள்ளன.

ஆதிதிராவிடர் நலனுக்கென நடப்பு ஆண்டில், ரூ.334 கோடி ஒதுக்கீட்டில் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

தாட்கோ மூலம் சுத்திகரிப்புப் பணியாளர்கள் பொருளாதார மேம்பாட்டு - மறுவாழ்வுத் திட்டத்தின் கீழ், 14,489 பயனாளிகளுக்கு ரூ.962.09 இலட்சம் மான்யமாகவும், ரூ.336.53 இலட்சம் தொழில் விளிம்புத் தொகையாகவும் வழங்கப்பட்டுள்ளது. மேலும் சுயவேலை வாய்ப்புப் பயிற்சித் திட்டத்தின் கீழ் 5367 இத்தகு இளைஞர்களுக்கு ரூ.113.27 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

ஆதிதிராவிடர்கள் 5,000 பேருக்கு, நபருக்கு ஒரு ஏக்கர் என விவசாய நிலம் இவ்வாண்டில் இலவசமாக வழங்கப் படுகிறது.

தேசிய ஆதிதிராவிடர்-பழங்குடியின நிதி மற்றும் மேம்பாட்டுக் கழகத் திட்டத்தின்படி தொழில் முனைவோர் களை உருவாக்கிட நடப்பு ஆண்டில் ஒதுக்கப்பட்ட தொகை ரூ.456.65 இலட்சங்களில், இதுவரை மினிபஸ், லாரி, டாக்ஸி, டிராக்டர் போன்ற போக்குவரத்து வாகனங்கள் வாங்க 124 பயனாளிகளுக்கு ரூ.409.90 இலட்சம் வழங்கப்பட்டுள்ளன.

சர்க்கரை ஆலையையொட்டியுள்ள பகுதிகளில் வாழும் 1,000 இளைஞர் களுக்கு 1,000 லாரிகள் வாங்கிட மானியம் வழங்கப்படும்.

ஆதிதிராவிட மாணவ- மாணவி களின் கல்விக்கென மட்டும் இவ்வாண்டில் ரூ.152.48 கோடி செலவிடப்படும். இதில், கல்வி உதவித்தொகை, ஊக்கத்தொகை, பரிசுத்தொகை ஆகியவற்றிற்கென மட்டும் ரூ.36 கோடியும், இலவச விடுதிகளுக்கென ரூ.8.50 கோடியும், இலவசச் சீருடைகள் வழங்க ரூ.8.14 கோடியும், இலவசப் பாடப்புத்தகங்களை வழங்கிட ரூ.8 கோடியும் செலவிடப் பட்டுள்ளன.

கிராமப்புறங்களில் உள்ள ஆதிதிராவிட பெண் குழந்தைகள் வறுமையின் பொருட்டு பள்ளியை விட்டு நின்றுவிடும் சூழ்நிலையைத் தவிர்க்கும் பொருட்டு மூன்றாம் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்பு வரை தொடர்க் கல்வியினைப் பெற்றிட வருடத்திற்கு ரூ.500 வீதம் வழங்க படுகிறது. ஐந்தாம் வகுப்பில் தேர்ச்சி பெற்ற ஆறாம் வகுப்பு செல்லும் பெண் குழந்தைகளுக்கு ரூ.1000 வழங்கப்படுகிறது. இந்தத் திட்டத்தின் கீழ் இதுவரை ரூ.447.40 இலட்சம் செலவில் 69520 பெண் குழந்தைகள் பயன் அடைந்துள்ளனர்.

சாதி-பேதமற்ற சமுதாயம் அமைக்கும் நோக்கில், அஞ்சுகம் அம்மையார் நினைவுக் கலப்புத் திருமண நிதி உதவித்திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட நிதி உதவி ரூ.10,000லிருந்து ரூ.20,000 ஆக உயர்த்தி வழங்கிட **முதலமைச்சர் கலைஞர்** ஆணையிட்டுள்ளார்.

## மீனவர் நலன்

### இலவச வீடுகள்

சிங்காரவேலர் நினைவு மீனவர் இலவச வீடு கட்டும் திட்டத்தின் கீழ், 5 ஆண்டுகளில் ஆண்டுக்கு ஒரு மின்விளக்குடன் கூடிய 4,000 வீடுகள் கட்டப்படுமென, **முதலமைச்சர் கலைஞர்** அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ளது. மீனவர் நலம்பேணும், இம்மகத்தான திட்டத்தின் கீழ், கடந்த ஆண்டில் 4,000 வீடுகள் கட்ட ரூ.12.80 கோடியும், நடப்பு நிதியாண்டில் அதே போன்று 4,000 வீடுகள் கட்ட ரூ.12.80 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டு, 8,000 மீனவக் குடும்பங்களுக்கு இலவச வீடு கட்டித்தரப்படும். 20 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டித் தரப்பட்ட வீடுகளைப் பழுது நிவர்த்தி செய்ய வழி செய்யும் முன்னோடித் திட்டம் ஒன்று முதலமைச்சர் கலைஞர் அவர்களால் அறிவிக்கப்பட்டு ரூ.1 கோடி இதற்கென



> **தனிமனிதனின் பண்பாட்டைவிடப் பொது மக்களின் நலன்தான் முக்கியம். தனிமனிதனுக்குப் பண்பாடு தேவைதான்; தனி மனிதனின் பண்பாட்டைக் கருதிப் பொதுமக்களின் நலனைக் கவனிக்காமல் இருப்பது கூடாது!**
>
> **- தந்தை பெரியார்**

ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள், 'பயனீட்டாளர் மீனவர் கூட்டுறவு சங்கங்களின்' மூலம் நடைபெறுகின்றன. இதே போன்று சென்ற ஆண்டும், இவ்வாண்டும் 323 மீனவக் குடியிருப்புகளின், இருளகற்றி ஒளியூட்டும் வகையில், ரூ.1 கோடி ஒதுக்கீட்டில், மின்சார வாரியத்தின் மூலம், 2248 தெரு விளக்குகள் அமைக்கப்படுகின்றன. 34 மீனவக் கிராமங்களுக்கு இணைப்புச் சாலைகள் அமைக்க ரூ.1 கோடி ஒதுக்கப்பட்டு, பணிகள் விரைவாக நடைபெற்று வருகின்றன.

**பிற சலுகைகள்**

மீனவர் குழுக் காப்புறுதித் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட ரூ.35,000 முதலமைச்சர் கலைஞரால் ரூ.15,000 உயர்த்தப்பட்டு விபத்து நிவாரணமாக ரூ.50,000 வழங்கப்படுகிறது. மீன் பிடிப்பில்லாத 4 மாதங்களுக்கு 1,19,087 மீனவர்களுக்கு ரூ.8.57 கோடி உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. இவை தவிர, மீனவர்களால் பயன்படுத்தப்படும் கட்டுமரம், வள்ளம் ஆகியவற்றில் இயந்திரங்கள் பொருத்தும் திட்டத்தின் கீழ், கடந்த ஆண்டில் 8151 இயந்திரங்கள் ரூ.11 கோடி மானியத்தில் வழங்கப்பட்டுள்ளன. மேலும், நடப்பாண்டில், சென்னை, கடலூர், சின்ன முட்டம் ஆகிய பகுதிகளைச் சார்ந்த மீனவர்களுக்கு, நவீனத் தகவல் தொடர்பு சாதனங்களை 1500 வி.எச்.எப் கருவிகளை மானியத்தில் வழங்க ரூ.75 இலட்சம் **முதலமைச்சர் கலைஞர்** அவர்களால் ஆணையிடப் பட்டுள்ளது.

மேலும், ஒருங்கிணைந்த கடல் மீன்வள மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், கட்டுமர-வள்ளங்களில் இயந்திரம் பொருத்த, மீன் பிடி வலைகள், பல்வகை வள்ளங்கள், விரைவுப் படகுகள் போன்றவற்றை வழங்க 5,000 இத்தகு மீன்பிடி அலகுகளுக்கென, 13 கடலோர மாவட்டங்களிலுள்ள மீனவர்களுக்கு ரூ.48.23 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இராமேஸ்வரத்தில், ரூ.38.30 கோடி செலவில், ஒரு மீன் பிடி துறைமுகம் அமைக்க ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**அரசு அலுவலர்களின் நலன் பேணப்படுகிறது:**


தமிழக அரசு ஊழியர்களின் குடும்பநல நிதி உதவி ரூ.60 ஆயிரத்திலிருந்து ரூ.1 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

தமிழக அரசு ஊழியர்களுக்கு, ஊதியக்குழுவின் நிலுவைத் தொகையில் இடைக்கால நிவாரணமாக ரூ.4000 வழங்கப்பட்டது.

சி,டி-பிரிவு ஊழியர்களுக்கு கடந்த ஆண்டில் போனஸாக வழங்கப்பட்ட 25 நாள் சம்பளத்தை இந்த ஆண்டு 27 நாள் சம்பளத்திற்கு இணையாகயாகவும், ஏ,பி-பிரிவு அலுவலர்களுக்கு ரூ.625 லிருந்து, ரூ.725 ஆகவும் சிறப்பு போனஸ் உயர்த்தப்பட்டுள்ளது. ஓய்வூதியம் பெறுவோர்க்கு ரூ.100லிருந்து ரூ.150 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. உள்ளாட்சி அமைப்புகள், அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்களில் பணிபுரிவோர், தொகுப்பூதிய - மதிப்பூதியம் பெறுவோர்க்கும் தினக்கூலி அடிப் படையில் 240 நாட்களுக்கு மேல் பணிபுரிவோர் உட்பட, சிறப்பு போனஸ் வழங்கப்படும்.

அரசு ஊழியர்களுக்கு, இடைக்கால நிவாரணம் அறிவித்ததைப் போன்று, தமிழ்நாட்டிலுள்ள U.G.C., A.I.C.I.T., ஊதிய விகிதம் பெறும் கல்லூரி ஆசிரியர்களுக்கும் ரூ.4,000 ஊதியக் குழுவின் நிலுவைத் தொகையில் முன்கூட்டியே வழங்கப் படும்.

ஓய்வூதியதாரர்களுக்கும், குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களுக்கும், ஊதியக்குழுவின் நிலுவைத் தொகையில் ரூ.1000 முன்கூட்டியே வழங்கப்படும்.



தொகுப்பூதியம், மதிப்பூதியம் நிர்ணயிக்கப்பட்ட ஊதியம் பெறும், சத்துணவுப் பணியாளர்கள், கிராம உதவியாளர்கள் போன்ற இதரப் பணியாளர்களுக்கும், ஊதியக்குழுவின் நிலுவைத் தொகையில் ரூ.500 முன்கூட்டியே வழங்கப்படும்.

○ ○ ○

# பொன்னான நாளில் நமது சூளுரை

- கலைஞர்



கதிர்முகம் காட்டிக் கனகமணிச் சுடர்காட்டிப்
புதுவிழி காட்டிப் புறப்படும் செங்கதிரோன்
கீழ்வானில் எழுவான் - அவன்
கேடெல்லாம் களைவான்!

திங்கள் முகமும் செவ்வாய் இதழும்
பொங்கும் சிரிப்பும் பொறுப்பின் உணர்வும்
மங்கல அணியும் படைத்த மகளிர்
செங்கதிர்ச் சுடரோன் எழுந்திடும் முன்னே
கன்னல் மஞ்சள் இஞ்சியி னுடனே
செந்நெல் குவித்த குவியலி னுடனே
மின்னல் ஒளியை மேனியில் நிறுத்தி
எண்ணில் இன்பம் இதயத் திருத்தி
அறுவடைப் பொருள்கள்
செறிந்தினி திலங்க
நிறைவுடன் நினைத்துப்
பொறையுடன் போற்றும்
ஒப்பற்ற திருநாள் - தமிழ்



உலகு கண்ட பெருநாள்
பொங்கல் எனும் நன்னாள் - அதன்
பெருமை மிகும், சொன்னால்!

விழா நாட்களில் விழாத சூளுரைகள்
எழாதிருப்பது எவ்வாறு இயலும்?

அன்னையர் தந்தையர் அன்புடைக்
குழவியர்
என்னரும் நாட்டினில் வதிவோர் யாவரும்
இன்றைய நாளில் சூளுரை எடுப்போம்
சென்றிட்ட நாட்களின் சாதனை முடித்தும்
- இன்னும்
குன்றுபோல் உள்ள பணிகளை முடிக்க
ஒன்றாய்ச் சேர்வோம் - இங்கு
ஒப்புறவு கொள்வோம்.
ஏழ்மை வறுமை என்னும் கொடுமை
தோழமை கொள்ளச் சிறிதும்
இடங்கொடோம்!

அன்புநெறி பண்புமனம்
நன்றுநிறை பெரும்பணிகள்
கல்லார்க்குக் கல்விநலம்
எல்லார்க்கும் நல்வாழ்வு
சொல்லாலே செய்திடுவோம் - என
நன்னாளில் சூளுரைப்போம் - இது
பொன்னாளென நாமுரைப்போம்!

**(- கலைக்கதிர் - 1973)**



# பொதுப்பணித் துறையின் சாதனைகள்

★ சென்னை, மதுரை, பொள்ளாச்சி மற்றும் திருச்சி ஆகிய நான்கு மண்டலங்களிலுள்ள 200 ஏரிகளில் தூர் வார ரூ.19.91 கோடி ஒதுக்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன.

★ இராமநாதபுரம் மாவட்டம் - கமுதி, முதுகுளத்தூர் ஆகிய பகுதிகளில் ஆண்டாண்டுகளாக வறண்டு கிடந்த 22,000 ஏக்கர் நிலம் பாசன வசதி பெற ரூ.7½ கோடி நிதி ஒதுக்கி, **முதலமைச்சர் கலைஞர்** ஆணையிட்டுள்ளார்.

★ தமிழ்நாட்டிலுள்ள நீர்வள ஆதார அமைப்புகளை மேம்படுத்தவும், புனரமைக்கவும், உலக வங்கி நிதி உதவியில், ரூ.807.49 கோடி செலவில் பொதுப்பணித்துறையின் மூலம் திட்டங்கள் தொடங்கப்பட்டு பணிகள் செயல்படுத்தப்படுகின்றன.

## கட்டட அமைப்புப் பணிகள்

★ கடந்த நிதியாண்டில் 296 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு ரூ.18 கோடி செலவில் கட்டடங்கள் கட்டப்படுகின்றன.

★ உலக வங்கி நிதி உதவியில் 7 இடங்களில் ரூ.10.60 கோடியில், மாவட்ட மருத்துவமனைகளில் கண்புரை நோய் வார்டுகள் கட்டப்படுகின்றன.

★ நீதித்துறையைச் சார்ந்த 7 நீதிமன்றக் கட்டடப்பணிகள் ரூ.23.32 கோடியில் நடைபெறுகின்றன.

★ பள்ளி, கல்லூரிகளுக்கு ரூ.12.34 கோடியில் வகுப்பறைகள், ஆய்வுக்கூடாரங்கள் போன்ற கட்டடங்கள் கட்டப்படுகின்றன.

★ கரூர், பெரம்பலூர், நாகப்பட்டினம் ஆகிய 3 மாவட்டத் தலைநகர்களில் தலா ரூ.2½ கோடி வீதம், ரூ. 7½ கோடியில் பெருந்திட்ட வளாகங்கள் அமைக்கப்படுகின்றன. விழுப்புரத்தில் ரூ.3 கோடியில் பெருந்திட்ட வளாகப் பணிகள் நடைபெறுகின்றன.


★ நினைவுச் சின்னங்கள், நினைவக மேம்பாட்டுப் பணிகள் ரூ.1.71 கோடியில் முடிக்கப்பட்டுள்ளன.

★ நடப்பு நிதியாண்டில், தமிழ்நாடு வேளாண்மை விரிவாக்கத்திட்டத்தின் கீழ் 241 கட்டடப் பணிகள் ரூ.37.10 கோடி மதிப்பீட்டில் நடைபெறுகின்றன.

★ நீர்வள ஆதாரத்திட்டத்தின்கீழ் ரூ.49.34 கோடி மதிப்பீட்டில் பணிகள் பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகின்றன.

## நீர்வள ஆதார அமைப்புப் பணி

★ பக்கிங்காம் கால்வாயில் வெள்ளப்பெருக்கினால் ஏற்படும் சுகாதாரச் சீர்கேடுகளைச் சரிசெய்திடும் வகையில் ரூ.190 இலட்சம் செலவில் இக்கால்வாயின் 0 முதல் 4 கி.மீ. தூரத்திற்கு அதாவது இக்கால்வாயுடன் கூவம் ஆறு



கலக்கும் இடத்திலிருந்து லஸ் இராமகிருஷ்ண மடம் சாலையிலுள்ள பாலம் வரை உள்ள பகுதியில் இக்கால்வாயில் படிந்துள்ள சேறு சகதிகளை அகற்றி, பழைய படுகை மட்டத்தைக் கொண்டு வரும் பணிகள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

★ நீர்வள ஆதார அமைப்பின் கீழ் ழும்மாநிலத்தின் நீர் பங்கீட்டு நிர்வாகம் வடிநில வாரியாகப் பிரித்து பரவலாக்கப்பட்டு முறையே சென்னை, திருச்சி, பொள்ளாச்சி, மதுரை என நான்கு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு மண்டலமும் ஒரு வடிநில மேலாளர் என்பவரைத் தலைவராகக் கொண்டுள்ளது. இவர் தலைமைப் பொறியாளர் பதவி நிலையில் பணியாற்றுகிறார்.

★ தமிழ்நாடு நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டமானது உலக வங்கியின் நிதி உதவியுடன் ரூ.1140 கோடி செலவில் அக்டோபர் 1995ல் எடுத்துக் கொள்ளப்பட்டு 7 வருடங்களில் முடிக்கப்படவுள்ளது.

★ முதலமைச்சர் கலைஞர் ஆட்சியில், நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டத்திற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு இடர்ப்பாடுகளைக் களைய முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. 1996 ஜூன் முதல் 1997 ஜனவரிக்குள் இத்திட்டத்தின் பல்வேறு பணிகளுக்கான 13 மதிப்பீடுகள் ரூ.137.91 கோடியில் அங்கீகரிக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கதாகும். 1997-98ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கான ஒதுக்கீடு ரூ.173 கோடியாகும்.

★ தமிழ்நாட்டிலுள்ள 40 முதல் 400 ஹெக்டேருக்குட்பட்ட பாசனப் பரப்பைக் கொண்ட மழை நீரால் பயன்பெறும் 2500 சிறு பாசன ஏரிகளைப் புனரமைக்கும் திட்டம் ரூ.270 கோடி மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டு, இத்திட்டங்களை ஜப்பான் நாட்டுப் பொருளாதாரக் கூட்டு நிதியிலிருந்து நிதிஉதவிபெற ஒரு பெருந்திட்ட ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது.

**புதிய வீராணம் திட்டம்:**

★ வீராணம் ஏரியின் மேடுகளகற்றி அதன் கொள்ளளவை அதிகப்படுத்திடவும், வீராணம் ஏரியின் கரைகளை வலுப்படுத்திடவும், கொள்ளிடத்திலிருந்து நீர்கொணரும் வடவாறுக் கால்வாயை சீர்செய்திடவும், முதலில் ரூ.60 கோடி ஒப்பளிக்கப்பட்டிருந்தது. வடவாறு, வீராணம் ஏரியின் ஆயக்கட்டுப் பகுதிகளான 56,034 ஏக்கர் விவசாய நிலங்களுக்குத் தங்குதடையின்றி பாசனநீர் கிடைத்திட ரூ.110.95 கோடி கலைஞர் அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கும் திட்டத்தின்கீழ், நாளொன்றுக்கு 190 மில்லியன் லிட்டர் தண்ணீர் வழங்கிட ஏதுவாகத் திட்டப் பணிகளை நிறைவேற்றிடும் வகையில், ரூ.464 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 1996-97ஆம் ஆண்டின் அரசு சாதனைகள்:

★ 1996-97ஆம் ஆண்டில் வாணியம்பாடியில் செண்பகத் தோப்பு நீர்த்தேக்கத் திட்டம்.

★ உசிலம்பட்டியில் கிராமங்களுக்குப் பாசன வசதி அளித்தல்.

★ வாணியம்பாடியில், ஆண்டியப்பனூரில் ஓடைத் திட்டம்.

★ தென்காசியில், வரட்டாறு - குப்பத்து ஓடைத் திட்டம்.

மேற்கூறிய இந்நான்கு திட்டங்களுக்கும் ரூ.8220 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள்நடைபெற்று வருகின்றன. இதன் மூலம் 4495 எக்டேர் நிலப்பரப்பு புதிதாகப் பாசன வசதி பெறும்.

மேலும், 13 சிறப்பு சிறு பாசனத் திட்டங்களுக்கு 292.67 இலட்சம் மதிப்பீட்டிற்கு 412 எக்டேர் பயன் அடையும் பொருட்டு ஒப்புதல் அளித்துள்ளது.

## 1997-98ஆம் ஆண்டின் அரசு சாதனைகள்

1997-98ஆம் ஆண்டின் அரசு கீழ்க்கண்ட திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கியது.

★ தர்மபுரி மாவட்டத்தில், அரூர் வட்டம்-வரட்டாறு-வள்ளிமதுரை நீர்த்தேக்கத் திட்டம்.

★ குடியாத்தம் வட்டம் - பந்தலபள்ளி - மலட்டார் நீர்த்தேக்கத் திட்டம்.

★ செங்கம் வட்டம் - குப்பாநத்தம் நீர்த்தேக்கத் திட்டம்.

★ சாத்தான்குளம் வட்டம் - சடயநேரி வாய்க்கால் - அகலப்படுத்துதல் மற்றும் நீட்டித்தல்.

★ பெரம்பலூரில், கல்லாறு ஆற்றின் குறுக்கே மலையாளப்பட்டி கிராமம் அருகே - புதிய குளம் அமைத்தல்.

மேற்காணும் 5 திட்டங்கள் ரூ.106 கோடியில் செயற்படுத்தப்படுவதன் வாயிலாக 5,213 ஹேக்டேர் நிலங்களுக்குப் புதிய பாசன வசதி உருவாக்கப்படுகிறது.

## கடலரிப்பு தடுப்புத் திட்டங்கள்

★ நாகப்பட்டினம் - தரங்கம்பாடியில் - கருங்கற்களைக் கொண்டு ரூ.56 இலட்சத்தில் கடலரிப்பு தடுப்புச் சுவர் கட்டுதல்.

★ பூம்புகாரில் - கருங்கற்களைக் கொண்டு ரூ.86.54 இலட்சம் செலவில் கடலரிப்பு தடுப்புச் சுவர் கட்டுதல்.

★ 1997-98ஆம் ஆண்டு பகுதி-2 திட்டங்களின் கீழ் அரசு 12 சிறப்பு சிறு பாசனத் திட்டங்களுக்கு ரூ.35 .30 இலட்சம் மதிப்பீட்டில் 1641 எக்டேர் நிலங்கள் பயனடையும்.

இவைகளோடு, காவிரி டெல்டாப் பகுதியில், கனரக இயந்திங்களைக் கொண்டு தூர் வாரவும், நீர்வரத்தைத் தடுக்கும் காட்டா மணக்குச் செடிகளை அப்புறப்படுத்திடவும், ரூ.10 கோடி செலவிடப்பட்டுப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.



உழைத்து வாழ்பவனே வணங்கத்தக்கவன்; வாழ்த்துக் குரியவன். அந்த உழைப்பாளிக்கு ஊறு ஏற்படுவது சமுதாயத்தின் நல்வாழ்வையே புரையோடச் செய்வதாகும்.

- அறிஞர் அண்ணா

# முதலமைச்சர் கலைஞரின் முனைப்புமிகு வழிகாட்டுதலில் - தமிழகம், தொழில் வளர்ச்சியில் முன்னணி வகிக்கிறது

காலதாமதத்தைத் தவிர்த்து, அடிப்படை வசதிகள் ஏற்படுத்திக் கொடுத்திட விரைவான முடிவுகளெடுத்திடும் வகையில், நடைமுறை விதிகளைக் குறைத்து மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் ஆணையின்படி 'ஒரு முனை ஒப்புதல்' என்ற அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது; வெளி முதலீட்டாளர்களை ஈர்க்கும் வண்ணம் தொழில்நேயம் கொண்ட வெளிப்படையான கொள்கைகளை அறிமுகப்படுத்தியதன் மூலம், தமிழகம் தொழில் வளர்ச்சியில் ஒரு புதிய பரிமாணத்தை அடைந்துள்ளது.

முதலமைச்சர் கலைஞரின் வெளிப்படையான நிர்வாகக் கலாச்சாரம் - சுமுகமான தொழில் உறவுகள் - உயர் தொழில்நுட்ப மனித வளமேம்பாடு - வலுவான வாடிக்கையாளர்கள் உருவாக்கம்

முதலீட்டாளர்களுக்கு நட்புறவான அணுகுமுறை ஆகிய இத்தகு தொழிற்கொள்கையின் விளைவாகத் தமிழகம் தொழில் மயமாகிறது.



**பதினெட்டே மாதங்களில் ரூ.35,000 கோடி முதலீடு**

| | | | ரூ. (கோடியில்) |
|---|---|---|---|
| 1. | மின் உற்பத்தி | - | 20,700 |
| 2. | அடிப்படை வசதி | - | 7,285 |
| 3. | வாகன உற்பத்தி | - | 5,100 |
| 4. | தகவல் தொழில்நுட்பம் | - | 820 |
| 5. | உணவு பதனீட்டுத் தொழிற்சாலைகள் | - | 200 |

தமிழகத்தைத் 'தொழில்மயமாக்கல்' என்ற உயரிய குறிக்கோளின் அடிப்படையில், முதலமைச்சர் கலைஞர் அவர்களின் ஒப்பற்ற முயற்சியால் உலகளாவிய அமைப்புகளின் உதவியுடன் புதிதாகச் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள்:

★ ரூ.2,950 கோடி மதிப்பீட்டில் இருங்காட்டுக்கோட்டையில் கொரிய நாட்டின் ஹுண்டாய் மோட்டார் தொழிற்சாலை.

★ ரூ.450 கோடி மதிப்பீட்டில் திருப் பெரும்புதூரில் பிரான்சு நாட்டின் செயிண்ட் கோபைன் மிதவைக் கண்ணாடி உற்பத்தித் தொழிற்சாலை.

★ ரூ.600 கோடி மதிப்பீட்டில் தென் கொரியாவைச் சேர்ந்த கும்ஹோ நிறுவனத்தின் மோட்டார் வாகன டயர்த் தொழிற்சாலை.

★ ரூ.320 கோடி மதிப்பீட்டில் திருவள்ளூரில் ஜப்பான் நாட்டின் மிட்சுபிஷி நிறுவனத்தின் கார் உற்பத்தித் தொழிற்சாலை.

★ ரூ.2,650 கோடி மதிப்பீட்டில் கடலூரில் பென்னார் எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலை உருவாக்கம்.


★ ரூ.6,000 கோடி மதிப்பீட்டில் நெல்லை மாவட்டம் நாங்குனேரியில் அமெரிக்க நிறுவனங்களுடன் இணைந்து உயர் தொழில்நுட்பப் பூங்கா.

★ ரூ.320 கோடி மதிப்பீட்டில், சென்னை தரமணி மற்றும் நந்தனத்தில் கம்ப்யூட்டர் தொழில்நுட்பப் பூங்கா.

★ ரூ.720 கோடி மதிப்பீட்டில் எண்ணூரில் பெட்ரோ கெமிக்கல் பூங்கா.

★ ரூ.8,000 கோடி மதிப்பீட்டில் மின் உற்பத்தித் திட்டங்கள்.

★ ரூ.6,000 கோடி மதிப்பீட்டில் ஜெயங்கொண்டத்தில் பழுப்பு நிலக்கரி மின்உற்பத்தித் திட்டம்.



★ ரூ.7,500 கோடி மதிப்பீட்டில் LNG மின் உற்பத்தித் திட்டம்.

★ ரூ.115 கோடி மதிப்பீட்டில் இங்கிலாந்து நாட்டின் பில்கிங்டன் நிறுவனத்தின் மிதவைக் கண்ணாடித் தொழிற்சாலை.

★ ரூ.59 கோடி மதிப்பீட்டில் ஜப்பான் நாட்டின் மட்சுஸிடா நிறுவனத்தின் குளிர்சாதனப் பெட்டி உற்பத்தி.

★ ரூ.2,000 கோடி மதிப்பீட்டில் பிரெஞ்சு நாட்டின் ட்ரான்ஸ்ரூட் நிறுவனத்தின் நெடுஞ்சாலைகள் அமைக்கும் பணி.

★ ரூ.31 கோடி மதிப்பீட்டில் கோவை மாவட்டம் பொங்கலூரில் பயனீர் நிறுவனத்தின் கோழி இறைச்சி பதப்படுத்தும் தொழிற்சாலை.

★ ரூ.32 கோடி மதிப்பீட்டில், மேட்டுப்பாளையத்தில் குவைத் நாட்டின் உருளைக் கிழங்கு பதப்படுத்தும் தொழிற்சாலை.

★ இப்புதிய தொழிற்சாலைகள் மூலம் சுமார் 3½ இலட்சம் நபர்களுக்கு வேலை வாய்ப்புக் கிட்டிடவுள்ளன.

**சிறுதொழில் வளர்ச்சியிலும் சிறப்புமிகு சாதனைகள்:**

★ டிக் நிறுவனம் மூலம் கடந்த 1½ ஆண்டுகளில் 7,755 புதிய சிறுதொழில் நிறுவனங்களுக்கு ரூ.588 கோடி கடனுதவியளித்துள்ளது. இதன்மூலம், 75,000 பேர்களுக்கு வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

★ சிட்கோ நிறுவனம் கடந்த 1½ ஆண்டுகாலத்தில் ரூ.7.41 கோடியில் 195 தொழிற்கூடங்களையும், ரூ.2.02 கோடியில் 263 மேம்படுத்தப்பட்ட தொழில் மனைமிடங்களையும் உருவாக்கியுள்ளது. மேலும் ரூ.100 கோடி மதிப்பில் 45,000 மெட்ரிக் டன் மூலப்பொருட்களை விநியோகித்துள்ளது.

★ 18 மாதங்களில் 5,248 சிறுதொழில் முனைவோருக்கு ரூ.31.24 கோடி சிறு தொழில் மானியமாக வழங்கிச் சாதனை நிகழ்த்தப்பட்டது; இது கடந்த 5 ஆண்டுக்கால (60 மாதங்கள்) ஆட்சியில் வழங்கப்பட்ட சிறுதொழில் மானியத்தை விட அதிகமாகும்.

★ கடந்த 1½ ஆண்டுகளில், 45,866 சிறுதொழில் நிறுவனங்கள் ஆரம்பிக்க அனுமதி அளிக்கப் பட்டுள்ளதன் மூலம், 2.75 இலட்சம் நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

★ மாவட்ட அளவில், ஏற்கெனவே இயங்கிவரும் ஒற்றைச் சாளரக்குழு மற்றும் ஆலோசனைக் குழுவின் பணிகளை மேலும் வலுப்படுத்தி - ஒருமுகப்படுத்திடும் வகையில் 'ஒற்றைச் சாளர-சிறுதொழில் குறை தீர்க்கும் குழு'வாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது. இதனால் சிறுதொழில் முனைவோர்க்கு பல்துறை அனுமதிகள் விரைவாகவும், எளிதாகவும் வழங்கிட வழி செய்யப்பட்டுள்ளது.

★ படித்து வேலையில்லா இளைஞர்கள் - பெண்களுக்கு ஆலோசனைகள் வழங்கி வழிகாட்டிடும் வகையில், கிண்டியில் 'தொழில் முனைவோர் வளர்ச்சி மையம்' ஒன்று கலைஞரின் ஆணையின்படி அரசால் உருவாக்கப்பட்டுள்ளது.

★ முதல் தலைமுறைப் பெண்தொழில் முனைவோரை ஊக்குவிக்கும் வகையில், திட்டத்துவக்க முதலீட்டில் 10% அதாவது அதிகபட்சம் ரூ.50,000 வரை மானியம் வழங்கப்படும்.

★ 375 தொழிற் கூட்டுறவு சங்கங்கள் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் ரூ.32 கோடிக்கு

விற்பனையாகியுள்ளவை; இதன்மூலம் 1 இலட்சம் பேர் வேலை வாய்ப்புப் பெற்றுள்ளனர்.

★ கோவை மாவட்டம், கிட்டாம்பாளையம் கிராமத்தில், 289 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.5.52 கோடியில், 'அறிஞர் அண்ணா கூட்டுறவுத் தொழிற்பேட்டை' ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

★ தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் 81148 புதிய தொழிற்கூடங்களுக்கு ரூ.3430 கோடி கடனுதவி வழங்கிச் சாதனை படைத்துள்ளது. 71617 பேருக்கு இதனால் வேலைவாய்ப்புக் கிடைத்துள்ளது.

★ 15 கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகள் ரூ.44.14 கோடிக்குத் தேயிலை விற்பனை செய்துள்ளன. இவற்றில் 14,011 பேர் பணியாற்று கின்றனர். ஈப்பநாடு, பித்தர்காட்டில் முறையே ரூ.2.30 கோடியிலும், ரூ.2.40 கோடியிலும் புதிய தேயிலைத் தொழிற்சாலைகள் கட்டப்பட்டுள்ளன. தும்மனட்டியில் ரூ.1.80 கோடியில் புதிய தேயிலைத் தொழிற்சாலை விரைவில் கட்டப்படும்.

★ தமிழ்நாடு தோல் வளர்ச்சி நிறுவனம் கடந்த ஆண்டில் ரூ.5.11 கோடிக்கு தோல் பொருள் உற்பத்தி செய்துள்ளது. நடப்பு ஆண்டில், ரூ.5.76 கோடி உற்பத்தி இலக்கில் உற்பத்திகள் நடைபெற்று வருகின்றன.

சிப்காட் :

★ நடுத்தர மற்றும் பெருந்தொழில்களுக்குத் தேவையான மேம்படுத்தப்பட்ட மனை களை உருவாக்கிடும் வகையில், தற்பொழுது சிப்காட் நிறுவனம், இருங்காட்டுக்கோட்டை, திருப்பெரும் புதூர், நெமிலி, வடமங்கலம், இராணிப் பேட்டை, ஒசூர், கோயம்புத்தூர், தூத்துக்குடி ஆகிய ஊர்களில் 5870 எக்டேர் நிலத்தைக் கையகப்படுத்தி தொழில் வளாகங்களை உருவாக்கி வருகிறது.

★ மேலும், ஒரகடம், மாமண்டூர் - பழமத்தூர், வரதராஜபுரம், எருமையூர் - பழந்தண்டலம், சிலம்பி மங்களம், ஊத்துக்கோட்டை ஆகிய இடங்களில் 6756 எக்டேர் நிலம் சிப்காட் மூலம் கையகப்படுத்தப்படுகிறது.

★ இவைகளுடன், கடலூர், குளச்சல் ஆகிய இடங்களில் சிறு துறைமுகங்களை நிர்மாணித்திட சிப்காட் முயன்று வருகிறது.

எல்காட்:

★ 'தமிழ்நாடு தகவல் தொழில் நுட்பத் தொழிற் கொள்கை' ஒன்று முதலமைச்சர் கலைஞர் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ளது.

★ எல்காட்டின் சார்பில், சோளம்பாக்கத்தில் 200 ஏக்கர் நிலப்பரப்பில் சுமார் ரூ1,000 கோடி மதிப்பீட்டில் 'தகவல் தொழில் நுட்பப் பூங்கா' அமைக்கப் படுகிறது.

★ கார் - ரேடியோ மற்றும் ஸ்டீரியோ உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ரூ.3 கோடி மதிப்பீட்டில் ஹுண்டாய் நிறுவனத்துடன் இணைந்து செயற் படுத்தப்படும்.

புதிய சர்க்கரை ஆலைகள்:

★ தமிழ்நாட்டில் 15 கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளும், 3 பொதுத்துறையிலும், 16 தனியார் துறையிலும் ஆக 34 சர்க்கரை ஆலைகள் செயல்பட்டு வருகின்றன. கள்ளக்குறிச்சி, கும்மிடிப்பூண்டி ஆகிய இடங்களில் ரூ.100 கோடி மதிப்பீட்டில் 2 கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் நிர்மாணிக்கப்படுகின்றன. மேலும், திருக்கோயிலூர், கீழ்பெண்ணாத்தூர், ஆத்தூர், திருவிடைமருதூர், சங்கராபுரம், அறந்தாங்கி, வலங்கை மான், அம்பாசமுத்திரம் ஆகிய இடங்களில் புதிய சர்க்கரை ஆலைகளுக்கு இசைவுக் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன.


☆ ☆ ☆ ☆ ☆ ☆ ☆ ☆ ☆ ☆ ☆ ☆ ☆

மனித உரிமை:

# மக்கள் சாசனம்

★ தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், முதலமைச்சர் கலைஞர் அவர்கள் இந்தியாவிற்கே வழிகாட்டும் வகையில், நலிவுற்ற பிரிவினரின்பால் நாட்டம் கொண்டு அடக்கப்பட்டு கிடக்கின்ற மக்களுக்குச் சமத்துவத்தை, சமூக அமைப்பிலும், பொருளாதார அடிப்படையிலும் உருவாக்கிட, நாளுக்கொரு புதிய திட்டமாக அறிமுகப்படுத்தியும், நடைமுறைப்படுத்தியும் வருகிறார். அவைகளை, மக்கள் எளிதாக அறிந்து, தெளிந்து, பயனடைய அவர்களுக்கு உரிமை உண்டு என்ற புரட்சிகர இலட்சிய நோக்கில், மக்களாட்சியின் மாண்பிற்கு 'மீண்டும் மெருகூட்டு'கின்ற வகையில் 'மக்கள் சாசனம்' ஏற்படுத்த முதலமைச்சர் கலைஞர் ஆணை பிறப்பித்துள்ளார்.

★ மனித உரிமைகள் மீறல் பற்றிய புகார்களை விசாரணை செய்ய 'மாநில மனித உரிமைகள் ஆணையம்' 17-4-97 முதல் தமிழ்நாட்டில் முதலமைச்சர் கலைஞர் அவர்களால் புதிதாகத் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.



# காவல்துறை நவீன மயம்!

★ காவல்துறையை நவீனமயமாக்கிடும் வகையிலும், சட்டம். ஒழுங்கைப் பராமரித்தலில் விரைந்து செயலாற்றிடவும், இவ்விரண்டு ஆண்டுகளில் ரூ.18.33 கோடி **முதலமைச்சர் கலைஞர்** அவர்களால் ஒதுக்கீடு செய்யப்பட்டு நவீன மயமாக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

★ காவலர்களின் காவலராகத் திகழும் முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள், காவல்துறைப் பணியாளர்கள் பலனடையும் வகையில் தமிழ்நாடு காவல்துறை சேமநல நிதிக்கு அரசு வழங்கி வந்த மானியத்தொகை ரூ.10 இலட்சத்தை ரூ.25 இலட்சமாக உயர்த்தி வழங்கிட ஆணையிட்டுள்ளார். அதேபோன்று பயணப்படி, சீருடைப் படி, உணவுப்பொருள் மானியத் தொகை, உணவுப்படி, காவல் பதக்கம் பெறுவோர்க்கான பரிசுத் தொகை. மாதாந்திரப்படி ஆகியவைகள் உயர்த்தப்பட்டுள்ளன.

★ வீரமரணம் அடையும் காவல்துறையிருக்கு ரூ.2 இலட்சமும், ஊனமுற்றவர்களுக்கு ரூ.50,000மும், பலமான காய மடைந்தவர்களுக்கு ரூ.10,000மும் மற்றும் சிறு காய மடைவோருக்கு ரூ.5,000மும் கருணைத்தொகை வழங்க **முதலமைச்சர் கலைஞர்** ஆணையிட்டுள்ளார். இத்திட்டத்தின் . மூலம் இத்தகு சிறைத்துறை . தீயணைப்புத் துறை பணியாளர்களும் பயனடைவார்கள்.

★ காவல்துறைப் பணியாளர்களுக்கு வீட்டு வசதி அளிக்கும் வகையில் ரூ.13 கோடி செலவில், 2500 குடியிருப்புகள் கட்டவும், ஏற்கெனவே உள்ள காவலர் குடியிருப்புகளில் ரூ.5 கோடி செலவில் 2751 நவீன கழிப்பறை வசதிகள் செய்து தரவும், காவலர் குடியிருப்புகளுக்கு எனத் தனியாக 13,932 மின் மீட்டர்க் கருவிகள் வழங்கவும் அரசு அனுமதியளித்துள்ளது.


★ காவலர்களாகப் பணிபுரிய கடந்த ஆட்சியில் தேர்ந்தெடுக்கப்பட்டு பணியமர்த்தப்படாது விடப்பட்ட 10,000 பேர்களில் முதல்கட்டமாக 6553 பேர் இரண்டாம் நிலைக் காவலர்களாகப் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர்; இரண்டாம் கட்டமாக 5,700 பேர் பயிற்சி பெறுகின்றனர்; 1989. 90ல் தேர்வு செய்யப்பட்ட 1023 பேர் காவல் பயிற்சி பெறுகின்றனர்.

★ சீருடைப்பணியாளர் தேர்வாணையம் மூலம் 10,000 காவலர்கள் தேர்வு செய்யப்படவுள்ளனர்.

★ கடந்த ஆட்சியில் தேர்வு செய்யப்பட்டு பணியமர்த்தப்படாத 500 சார். ஆய்வாளர்கள் பயிற்சி முடிந்து பணிநியமிக்கப்பட்டுள்ளனர்; மேலும் 1418 பேர் சார். ஆய்வாளர் பயிற்சி பெறுகின்றனர்.

★ சட்டம். ஒழுங்கைக் காப்பதிலும், கொலை. கொள்ளை முயற்சிகளையும், சாதி. மதக்கலவரங்களையும் விரைந்து சென்று ஒடுக்கிடும் வகையிலும், காவல்துறைக்கென கடந்த 1½ ஆண்டுகளில் ரூ.8.80 கோடியில் 500 புதிய வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

★ திருச்சி, சேலம், திருநெல்வேலி ஆகிய 3 மாநகர்களில் ரூ.8.04 கோடி ஒதுக்கீட்டில் புதிதாகக் காவல் ஆணையகங்கள்



உருவாக்கப்பட்டுள்ளன. மேலும், திண்டுக்கல்லைத் தலைமையிடமாகக் கொண்டு "காவல் சரக துணைத் தலைவர் அலுவலகம்" ஏற்படுத்தப்பட்டுள்ளது.

★ இந்த ஆண்டிற்கான தமிழக முதலமைச்சர் விருது காவலர், தலைமைக் காவலர் பணியில் சிறந்த சேவை புரிந்தோருக்கு வழங்கப்படுகிறது. இதேபோல், 'தீயணைப்புத் துறை விருது' அத்துறையில் சிறந்த சேவை புரிந்த தீயணைப்பு வீரர், தலைமை வீரர் 74 பேருக்கும், அதேபோலும், சிறைத்துறையைச் சேர்ந்த 20 பேருக்கும் முதலமைச்சர் விருதுகள் வழங்கப்பட்டன.

★ இந்த விருதுகளைப் பெறுவோர், வரும் பிப்ரவரி மாதத்திலிருந்து சிறப்பு ஊதியமாக அவரவர் தகுதிக்கேற்ப மாதந்தோறும் ரூ.40. லிருந்து ரூ.50 வரை பெறுவர்.


**புதிய கட்டடங்கள்:**

★ சென்னை . காமராசர் சாலையிலுள்ள, காவல்துறை இயக்குநர் அலுவலகம் புதுப்பிக்கும் பணிகளும், வேலூரில் சரகத் துணைத் தலைவர். மாவட்டக் காவல் அலுவலகம், கோவையில் காவல் ஆணையக அலுவலகம், நாகர்கோவிலில் மாவட்ட காவல் அலுவலகம், பல்வேறு ஊர்களில் 81 காவல் நிலையங்கள் ஆகியவற்றின் புதிய கட்டடப்பணிகளும் ரூ.21.34 கோடி மதிப்பீட்டில் நடைபெறுகின்றன.

**புதிய காவல் நிலையங்கள்:**

★ கடந்த இரண்டு ஆண்டுகளில், 26 புதிய காவல் நிலையங்கள் உருவாக்கப்பட்டுள்ளன; அதோடு, 36 புறக்காவல் நிலையங்கள், காவல் நிலையங்களாகவும் நிலை உயர்த்தப்பட்டுள்ளன.

# போக்குவரத்தில் மேம்பாடு



☆ 21 அரசுப் போக்குவரத்துக்கழகங்களைச் சீரமைக்கும் வகையில், 7 போக்குவரத்துக் கழகங்களாக ஒருங்கிணைக்கப் பட்டுள்ளன.

☆ சென்னை மாநகரில் 100 நெரிசல் நேரப் பேருந்துகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. 50 தொலைதூர அதிசொகுசு விரைவுப் பேருந்துகள் ஒலி/ஒளி வசதியுடன் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளன. சட்டமன்ற உறுப்பினர் களின் பரிந்துரையின் பேரில் ஒவ்வொரு தொகுதிக்கும் 2 வழித்தடங்களை இயக்கும் திட்டத்தின்கீழ் இதுவரை 340 வழித்தடங்கள் இயக்கப் பட்டுள்ளன. 30-11-97 வரை 2215 புதிய பேருந்துகள் புதிய வழித்தடங்களுக் காகவும் பழைய பேருந்துகளை மாற்றிடும் வகையிலும் இயக்கப்பட்டுள்ளன.

☆ பொன்விழாக் காணும் நெடுஞ்சாலைத்துறையின் புதிய திட்டங்களாக, தமிழகத்தில் ரூ.150 கோடி செலவில் 50 புதிய பாலங்கள் கட்டப்படும்; சென்னையை நோக்கி வரும் பல்வேறு சாலைகள் 50 கி.மீ. தூரத்திற்கு ரூ.150 கோடி செலவில் அகலப்படுத்தி சீரமைக்கப்படும்; தாம்பரத்திலிருந்து மதுரவாயில் வரை ரூ.75 கோடி செலவில் புறவழிச் சாலை அமைக்கப்படும்; திண்டிவனம் முதல் மதுரை வரை 4 வழிச் சாலை அமைக்க நடவடிக்கை விரைந்து எடுக்கப்படுகிறது.

☆ ஏற்கெனவே தொடர்ந்து நடைபெற்று வருகின்ற சாலைச் சீரமைப்புப் பணிகளுக்கு 'நபார்டு' மூலம் ரூ.250 கோடியும், பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ள ரூ.150 கோடியும், ஆகமொத்தம் ரூ.400 கோடியில் தமிழகத்தில் சாலை சீரமைப்புப் பணிகள் நடைபெறுகின்றன என்று முதலமைச்சர் கலைஞர் அறிவித்துள்ளார்.

☆ 2001-ஆம் ஆண்டிற்குள், தமிழ்நாட்டிலுள்ள அனைத்து முக்கியச் சாலைகளும் நவீன இயந்திரங்களின் மூலம், தரமான சாலைகளாக உருவாக்கம் பெறும் என முதல்மைச்சர் கலைஞர் அறிவித்துள்ளார்.

☆ சென்னையிலிருந்து திருவான்மியூர், கோவளம், மாமல்லபுரம், மரக்காணம், புதுவை வழியாகக் கடலூர் வரை செல்லும் சாலையைப் பன்னாட்டுத் தரம் வாய்ந்த இருவழிச் சாலையாக மாற்றிட ரூ.102 கோடி செலவில் - ஆசிய வளர்ச்சி வங்கி நிதி உதவியுடன் பணிகள் முடிந்து பொங்கல் திருநாளன்று (14.1.98) போக்குவரத்திற்குத் திறந்துவிடப்பட்டது.

☆ மழைவெள்ளத்தால் பெரும் பாதிப்புக் குள்ளாகிப் பழுதடைந்துள்ள சாலைகளைத் துரிதமாகச் சீரமைத்திட ரூபாய் 55 கோடி நிதிஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் முடிக்கப்பட்டு வருகின்றன. ★

# தமிழ்ப் பொழில்



முனைவர் க. பூரணச்சந்திரன்

'இதழ்கள்' என்பது தமிழில் ஒரு பொதுச் சொல்லாக இருக்கிறது. தினசரிப் பத்திரிக்கைகள், வாரப் பத்திரிக்கைகள், மாதமிருமுறை, மாதம் ஒருமுறை என்று பல்வேறு வித கால அவகாசங்களில் வெளிவரக்கூடிய வெளியீடுகள் 'ஜர்னல்' (JOURNAL) என்று ஆங்கிலத்தில் சொல்லப்படும் அறிவார்த்தமான ஏடுகள் - இவை அனைத்தையும் 'இதழ்கள்'(அல்லது 'பத்திரிகைகள்') என்ற ஒரே சொல்லால் குறிப்பது நியாயமாகாது என்றே கருதலாம். மேற்கூறிய வகைகளுள் தமிழ்ப் பொழில் என்பது 'ஜர்னல்' எனப்படும் வகையைச் சேர்ந்தது.

இதனை, இங்கே குறிப்பிட முக்கியக் காரணம், இம்மாதிரி வகைகளுக் குள்ளாக பெரும் வேறுபாடுகள் உண்டு. இவற்றை ஆராயும் முறைகளும் வேறுவேறு. ஒரு 'செய்தித்தாளை' ஆராய்வது போன்ற முறையில் ஆய்வுக்கட்டுரைகளைத் தாங்கிவரும் ஒரு அறிவியல் இதழை மதிப்பிட, ஆராய முடியாது. ஒன்றில் இதழியல் கூறுகளான செய்தியமைப்பு முறை, தலையங்கம் வரைதல், பக்க அமைப்பும், பொதுப் புனைவும் போன்றவை முக்கியத்துவம் பெறலாம்; மற்றதிலோ இவை கவனிக்கப்படவே தேவையற்ற அம்சங் களாக இருக்கலாம். ஒன்றில் வெளி வரும் கட்டுரைகள் போற்றிப் பாதுகாத்து சேமித்து வைக்க வேண்டியவையாகப் படலாம்; மற்றொன்றில் படித்துவிட்டு எறிந்துவிடும் முறையிலிருக்கலாம். ஆகவே பொதுவாக 'இதழ்கள்' என்று கூறாமல் வேறுபடுத்திக் காண்பது இம்மாதிரி ஆய்வரங்குகளில் அடிப் படைத் தேவையாகும்.

> உலகத் தமிழாராய்ச்சி நிறுவனமும்,
> சென்னைப் பல்கலைக் கழகத்
> தமிழ் இலக்கியத் துறையும்,
> டாக்டர். மா. இராசமாணிக்கனார்
> இதழியல் ஆய்வு மையமும்
> இணைந்து நடத்திய
> 'இந்திய விடுதலைக்கு முன்
> வெளிவந்த இதழ்கள்' கருத்தரங்கில்
> படிக்கப்பட்ட கட்டுரை.

'தமிழ்ப்பொழில்' என்னும் இதழ், கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் ஒரு வாய்க்கருவியாக (mouthpiece) அமைந்த இதழ். ஆகவே தமிழ்ப் பொழிலைப் பற்றிக் காணும் முன்னர், கரந்தைத் தமிழ்ச்சங்கம் பற்றிய ஒரு சிறு பார்வை பயனுடையதாகும்.

ஆங்கில ஆட்சியும் கல்வியும் பொதுவாக இந்திய மொழிகளிலும் மறுமலர்ச்சியை உண்டாக்கியது என்பது வரலாற்றாசிரியர் கருத்து. தமிழைப் பொறுத்தவரை, நிறுவன அமைப்பு என நோக்கும் போது, மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் தோற்றமே ஒரு புதிய திருப்புமுனையாகுமென நம்பி ஆரூரன் குறித்துள்ளார். இச்சங்கம், 'நான்காம் தமிழ்ச் சங்கம்' என்னும் உணர்வோடு பாண்டித்துரைத் தேவரால் 1901ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் பதினான்காம் நாளன்று தொடங்கப்பட்டது. மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் உடன் விளைவே கரந்தை தமிழ்ச்சங்கம் ஆகும். இதன் தொடக்கவிழா 14-5-1911 அன்று ந.மு. வேங்கடசாமி நாட்டார் தலைமையில் நிகழ்ந்தது. இச்சங்கத்தின் குறிக்கோள் தொடர் 'தொண்டு-தமிழ்-முன்னேற்றம்' என்பது.

> *"இந்த நூற்றாண்டின் தொடக் கத்தில், ஆரிய மொழியின் ஆதிக்கத் தாலும், ஆங்கிலேயர் ஆட்சியாலும், தமிழ் பெருமை குன்றி நின்றது. உயர்ந்த பதவிகளில் இருந்தவர்கள், தமக்குத் தமிழ் தெரியாது என்று பெருமையோடு சொல்லிக் கொண்ட காலம் அது. தூய தமிழைப் பேசவோ, எழுதவோ தெரியாத நிலையில், பெரும் பான்மைத் தமிழர் இருந்தனர்".*

இந்நிலையில்தான், கரந்தைத் தமிழ்ச் சங்கம் தமிழ் வளர்க்கவெனத் தோன்றியது என்று விளக்கும் த.வே.உமாமகேசுவரன், இச்சங்கத்தின் குறிக்கோள், 'உலக மக்களிடையே தமிழரின் பெருமையைப் பரப்புவது' என்றும் சொல்கிறார்.

கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் குறிக்கோள்களைச் சங்கத் தலைவராக இருந்த செ.தனகோடி என்பார் பின்வருமாறு தொகுத்துரைக்கிறார்:

1. வேற்றுமொழி விரவாத தூய தமிழில் மக்கள் பிழையின்றிப் பேசுமாறும், எழுதுமாறும் செய்தல்;
2. தமிழ்ப் பெரும்புலவர்களை ஒன்று கூடச் செய்தலும், வெளியுலகிற்கு அறிமுகப் படுத்தலும்;
3. தமிழ் இலக்கியங்களைப் பரப்புதல்;
4. தமிழின் இசைநாடகப் பகுதிகளைத் தக்காங்கு வளர்த்தல்;
5. தமிழ்மொழி பயில்வோர்க்கு ஊக்க மளித்து, மக்களிடையே தமிழ்ப் பற்றை வளர்த்தல்.

'கரந்தைத் தமிழ்ச் சங்கம்' என்னும் தொடரிலுள்ள 'கரந்தை' என்பதை தஞ்சாவூரைச் சேர்ந்த கருத்தட்டாங்குடி அல்லது கருந்திட்டைக்குடி என்பதன் மரூஉவாக நிற்கிறது. ஆனாலும் அதன் இலக்கணச் சார்புப் பொருள் தெளிவு. புறத்திணைகளில் 'வெட்சி' என்னும் ஆநிரை கவரும் போருக்குப் பதிலடி தரும் தற்காப்புப் போர்த் திணைதான் 'கரந்தை' என்பது யாவரும் அறிந்ததே. இதிலுள்ள 'தற்காப்பு' (DEFENCE) என்னும் உட்குறிப்பு நோக்கத்தக்கது.

**தமிழ்ச்சங்கத்தின் பணிகளாகச் சிலவற்றை இங்கே குறிக்கலாம்:**

1. சங்க ஆண்டுவிழா, சங்கம் தொடங்கி ஏறத்தாழ இருபத்தைந்து ஆண்டுகள் சிறப்புறக் கொண்டாடப் பட்டு வந்தது. இவ்விழா, பெரும் புலவர்களின் சந்திப்புக் கூடமாய் அமைந்தது. பேரறிஞர்கள், இவ்விழாக்களுக்குத் தலைமை

தாங்குமாறு அழைக்கப் பட்டனர். கா.நமசிவாயர், தி.செல்வக் கேசவராயர், ச.சோமசுந்தர பாரதியார், பா.வே.மாணிக்க நாயக்கர், கா.சுப்பிரமணிய பிள்ளை, இரா.இராகவையங்கார், மு.இராக வையங்கார், உ.வே.சா மிநாதையர், பண்டிதமணி மு.கதிரேசஞ் செட்டியார், மறைமலையடிகள், விபுலாநந்தர், ந.மு.வேங்கடசாமி நாட்டார் ஆகியோர் ஆண்டு விழாக்களில் தலைவர்களாக அமர்ந்து சிறப்பித்த ஒருசில தமிழ்ச்சான்றோராவர். இவர்களது ஆண்டுவிழாத் தலைமையுரைகள், பல புத்தம்புதுக் கருத்துகளை மக்களுக்குத் தெரிவிப்பனவாகவும் தமிழுணர்ச்சியைத் தூண்டு வனவாகவும் அமைந்தன.

2. தமிழ்ப்பல்கலைக் கழகம் ஒன்று நிறுவ வேண்டும் என்பதற்காகக் கரந்தைத் தமிழ்ச் சங்கம் பெருமுயற்சி செய்தது. (ஆண்டு 1925)

3. பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் இழிவுற்றிருந்த தமிழாசிரியர்களின் நிலையை உயர்த்தப் போராடியது. பிறதுறை ஆசிரியர்களுக்குச் சமமாக, தமிழாசிரியர்கள் மதிப்புப் பெறுவ தற்குப் பெருமுயற்சி செய்தது.

4. இந்தி ஆதிக்க எதிர்ப்பு இயக்கத் திற்குத் துணை நின்றது. 1938ஆம் ஆண்டு தஞ்சையிலிருந்து சென்னை சென்ற எதிர்ப்புப் பேரணிக்குக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் தலைவரான ஐ.குமாரசாமிப் பிள்ளை தலைமை தாங்கிச் சென்றார்.

5. தமிழிசை இயக்கத்திற்குத் துணை செய்தது; தமிழிசை ஆராய்ச்சிக்கு ஆதரவு தந்தது; சுவாமி விபுலா நந்தரின் 'யாழ்நூல்' கரந்தைத் தமிழ்ச் சங்கத்தினரின் தூண்டுதலினா லேயே இயற்றப்பட்டு, சங்கத்தினா லேயே வெளியீடு செய்யப்பட்டது.

6. கலைச் சொல்லாக்கத்திற்குத் தூண்டுகோல் அளித்தது. 'தமிழ்ப் பொழில்' இதழ் வாயிலாக நல்ல கலைச் சொல்லாக்கங்களை வெளியிட்டது; கலைச்சொல்லாக்கம் செய்ய ஆலோசனைகள் வழங்கியது. கலைச் சொல்லாக்கக் குழுக்கள் சரிவர இயங்காத போதும், வடமொழிச் சொற்கள் வரம்பின்றிக் கலைச்சொற்களாகப் புகுத்தப்பட்ட போதும் எதிர்த்தது.

7. தமிழகம், தமிழினம், தமிழ்மொழி சார்பான எந்தச் சிக்கல் நேரிடும்போதும் அவற்றை வாசகர்களுக்கு எடுத்துவிளக்க முயற்சி செய்தது.


8. இவற்றிற்கெல்லாம் ஒரு கருவியாகத் தான் 'தமிழ்ப்பொழில்' என்னும் திங்களிதழ் 1925ஆம் ஆண்டு ஏப்ரல் (குரோதன ஆண்டு-சித்திரைத் தொடக்கம்) முதல் வெளியிடப்பட்டு வருகிறது.

இப்பணிகள், தமிழில் படைப் பாற்றலை - புதிய முயற்சிகளைத் தூண்டுவனவாக இருந்தன என்பதைவிடத் 'தற்காப்பு' முயற்சிகளே என்பதும் தெளிவு. ஆகவே 'கரந்தை' என்னும் அடைமொழிக்குப் பொருத்த மாகவே இதன் பணிகள் அமைந்ததும் தெளிவு.

*"நமது தமிழ்ப்பொழிலின் நறுமண நுகர்வினை நமது சங்க அன்பர்கள் பலர் பன்னெடு நாட்களாக அவாவி வந்தனர். எனினும் 'அடுத்து முயன்றாலும் ஆகு நாளன்றி ஆகா'வாகலின் திருவருட்பேற்றிற்கு இலக்காகிய இந்நாளே, இப்பொழிற் றிறப்பு விழாவினைக் கூட்டி அன்பர்கட்குப் பொழிலின் நுகர்ச் சியை இயலுவேமாயினம்"*

- என்று தமிழ்ப்பொழில் என்னும் இதழைத் தொடங்கப் பல நாட்களாகச் சங்கத்தினர் முயன்று வந்ததைக் கரந்தைக் கவியரசு ஆர்.வேங்கடாசலம் பிள்ளை கூறுகின்றார். மேலும், 'தமிழ்ப்பொழில்' எனப் பெயரிட்டமைக் கான காரணத்தையும் குறிப்பிடுகிறார்:

"தனது பசுநிறத்தால், வண்டொலி யால், தீங்கனியால், மலர் மணத்தால், பைம்புற்றரையால், கண்டு கேட்டு



மறைமலையடிகள்

உண்டு உயிர்த்து உற்று அறியும் பேரன்பினைத் தன்பால் எய்தும் எத்திறத்தோர்க்கும் எஞ்ஞான்றும் தரவல்லது பொழில் ஒன்றேயன்றோ! எனவே இங்ஙனம் ஒப்பும் உயர்வுமில்லாத சிறப்பினதாகிய தொழிலின் பொற்பினையுணர்ந்தே இந்தத் திங்களிதழிற்குத் 'தமிழ்ப் பொழில்' எனப் பெயரிட்டனம்".

'பொழில்' என்னும் உருவகமும், பசுமை பற்றிய படிமமும் இங்கே கவனிக்கத் தக்கவை. மேலும், முதற்பகுதியில் காணப்படும் சைவமணம் கமழும் நடையும் கவனிக்க வேண்டுவது. மதுரைத் தமிழ்ச்சங்கம் போன்ற அமைப்பாக கரந்தைத் தமிழ்ச்சங்கம் உருவானது போலவே, 'செந்தமிழ் போன்றே தமிழ்ப்பொழில் அமைய வேண்டும்' என்றும் எண்ணி உருவாக்கப்பட்டது. 1923ஆம் ஆண்டு திருநெல்வேலிச் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் வெளியீடாக செந்தமிழ்ச்செல்வி புறப்பட்டது. பலநாளாய் இதழ் ஒன்றைத் தொடங்க எண்ணியிருந்த கரந்தைத் தமிழ்ச் சங்கத்தினர்க்கு இது ஓர் உந்து சக்தியாயிற்று.

மேலும் கூறுகின்றார் ஆர்.வேங்கடாசலம் பிள்ளை:

"இவ்விதழ் ஓர் தமிழ்ச் சங்கத்தின் வெளியீடு என்னும் தகுதிக்கேற்ப, தமிழ் வளர்ச்சியும், தமிழர் மேம்பாடும் பற்றிய அருமைக் கட்டுரைகளையே தன்ன கத்துக் கொண்டுவரும். தமிழ்மொழி வரலாறு, தமிழர் வரலாறு, தமிழ்ச் சொல்லாக்கம், தமிழ்நூல் ஆராய்ச்சி, பழந்தமிழ் நூல் வெளியீடு, தமிழ்நூல் மதிப்புரை, தமிழ்ச்சங்கச் செய்திகள், முதலிய எண்ணில் பல்வகையானவையும் சிறந்த கட்டுரைகள், ஆங்கிலம் ஆரியம் தமிழ் மொழிகளில் வள்ளலார் பலரால் கற்றாரேயன்றிக் கற்போர்க்கும் பயனுறத்தக்க நெறியில் தெள்ளிய (இனிய) தீந்தமிழ் நடையில் எழுதப் பெறும்"

என்று இதில் இடம் பெற வேண்டிய பொருட்களை வரையறுக்கிறார். மேலும்,

1. கட்டுரைகள் தெள்ளத் தெளிந்த தீந்தமிழ் நடையில் விழுமிய பொருளை விளக்கமுற எழுதப் பெற்றனவாதல் வேண்டும்.

2. தமிழ்ப்பொழில் பக்கம் நான்கிற்கு மேல் தொடராது கட்டுரை



ந.மு.வேங்கடசாமி நாட்டார்

முடிவுபெற்றிருக்க வேண்டும். நீண்ட பொருளாயிருக்கு மானால் இக்கூறிய அளவில் முடியும் வண்ணம் சிறு பிரிவுகளாக எடுத்து எழுதப்பெறுதல் வேண்டும்"

- என வரையறை விதிக்கப்பட்டது. ஆனால் இந்த வரையறை பின்னாட்களில் தளர்வுக்குள்ளானதாகவே தெரிகிறது.

'பொழில்' என்று பெயரிட்டதற்கேற்ப, தமிழ்ப்பொழில் ஆசிரியர், 'பொழிற்றொண்டர்' எனப்பட்டார். முதலில் பணியாற்றிய பொழிற்றொண்டர்கள், ஆர்.வேங்கடாசலம் பிள்ளை, நீ.கந்தசாமிப் பிள்ளை, எல்.உலகநாத பிள்ளை, த.வே.உமாமகேசுவரன் போன்றோர் தமிழ்மீது பற்றுக் கொண்டிருந்தோர் என்பதேயன்றி, ஓரளவேனும் படைப்புத் திறனும் கைவரப் பெற்றவர்கள். பின்னர் வந்த பொழிற்றொண்டர்கள் - கோ.சி.பெரியசாமிப்புலவர், அ.கணபதிப் பிள்ளை, ச.சுயம்பிரகாசம், செ.தனக்கோடி போன்றவர்கள் சங்கத் தலைமை என்பதால் மட்டுமே வந்தவர்களே. எனவே, இவர்களுக்குப் பின்னணியில் புலவர் க.வெள்ளைவாரணன் இருந்து பொழிற்றொண்டராகப் பணியாற்ற வேண்டி வந்தது. 1947 முதல் இம்மாதிரி மாற்றம் ஏற்பட்டது. வெள்ளைவாரணனுக்குப் பின் ச.பாலசுந்தரம் இப்பணியைத் தொடர்ந்தார்.

"பொழிற்றொண்டர் என்ற பெயரில் சிறந்த ஆராய்ச்சியாளரும், ஞானியார் அடிகளின் மாணவருமான க.வெள்ளைவாரணர் எழுதும் இலக்கியக் கட்டுரைகளையும் வேறு பலர் எழுதும் சொல்லாராய்ச்சிக் கட்டுரைகளையும் நல்ல தமிழில் வெளியிட்டு வருகிறது"

- என்று 'தமிழ் இதழ்கள்' என்னும் நூலில் ' சோமலெ ' குறிப்பிடுகிறார். மேற்கூற்றை அவர் எழுதிய சமயத்தில் 'பொழிற்றொண்டர்' என இதழ் அட்டையில் இடம் பெற்றிருந்தவர் அரங்க.வே.சுப்பிரமணியன்.

சுருங்கச் சொன்னால் த.வே.உமாமகேசுவரன் காலம் வரை தமிழ்ப்பொழில் பின்னாளிலிருந்ததைவிட மேலதிகமான தகுதி பெற்றிருந்தது என்பதுதான் விஷயம். பின்னாளில், ஐம்பதாம் துணர் முதற்கொண்டு ஓர் ஆசிரியர் குழு அமைக்கப்பெற்றுவிட்டது.

தமிழ்ப்பொழில் பல சமயங்களில் பொருளாதார இடர்ப்பாட்டினூடும் இயங்கி வந்துள்ளது. அதன் அமைப்பு, பக்கப்புனைவு போன்றவை பற்றி அதிகமாக அதன் 'தொண்டர்கள்' அவ்வளவாகக் கவனம் செலுத்தவில்லை என்றே தெரிகிறது. இதுவரை ஐந்தாறு வகையாக அட்டை அமைப்பு மாறியிருப்பினும் அளவும் அச்சமைப்பும் ஏறத்தாழ ஒரே தன்மைத்தாகத்தான் அமைந்துள்ளன. கட்டுரைகளையும் செய்திகளையும் தொகுத்துப் பிழையின்றி வெளியிடுதல் என்பவையே பொழிற் றொண்டர்களின் ஆர்வமாக இருந்திருக் கிறதேயன்றி இதழமைப்பில் ஆர்வம் என்பது குறைவாகவே தெரிகிறது.

தமிழ்ப்பொழிலில் இடம் பெற்ற மொத்தப் படைப்புகளையும் பின்வருமாறு பகுத்துக் காணலாம்: 1.தமிழ்ச்செய்திகள்; 2.புதுப்படைப்புகள்; 3.தமிழியற் கட்டுரைகளும் பதிப்புகளும் என்பவை இவை. இவற்றைப் பற்றி சற்றே விரிவாகக் காணலாம். இவற்றைக் காண்பது தமிழ்ப் பொழிலின் கட்டமைப்பை விளங்கிக் கொள்ள உதவும்.

### 1. தமிழ்ச்செய்திகள்:

இவை நான்கு வகை. அ. கரந்தைத் தமிழ்ச் சங்கத்துடன் தொடர்புள்ளவை; ஆ. பிற செய்திகள்; இ. பொழிற்றொண்டர் கருத்துரைகள்; ஈ. பொழிற்றொண்டர் நூன்மதிப்புரைகள்.

#### அ கரந்தைத் தமிழ்ச் சங்கத்துடன் தொடர்புள்ள செய்திகள்

கரந்தைத் தமிழ்ச் சங்கத்தினரால் நடத்தப்பெறும் இராதாகிருட்டினத் தொடக்கப் பள்ளி, உமாமகேசுவரர் மேல்நிலைப்பள்ளி, கரந்தைப் புலவர் கல்லூரி, திக்கற்ற மாணவர் இல்லம் போன்ற நிறுவனங்கள் பற்றிய செய்திகள், விளம்பரங்கள் ஆகியன தமிழ்ப்பொழிலில் இடம் பெற்றுள்ளன. மேலும் கரந்தைத் தமிழ்ச்சங்க ஆண்டுவிழாக்கள், கலைமகள் விழாக்கள், இளங்கோவடிகள் தமிழ்க்கழக விழாக்கள் பற்றிய செய்திகளும் அடங்கியுள்ளன.

கரந்தைத் தமிழ்ச் சங்க ஆண்டு விழாக்களில் அறிஞர்கள் சொற்பொழிவாற்ற வரும்போது அவர்களுக்களித்த வரவேற்புரைகள், வாழ்த்துரைகள், வாழ்த்துப்பாக்கள் ஆகியனவும் வெளியிடப்பெற்றுள்ளன. கரந்தைத் தமிழ்ச்சங்கம் தொடர்புடையோர் உயர் பதவிகள், பட்டங்கள், சிறப்புகள் முதலியன பெறும்போது 'மகிழ்ச்சி' என்னும் தலைப்பில் செய்திகள் இடம்பெறுவது வழக்கம். சங்கத் தொடர்புடையோர் எவரேனும் மறைந்தால் 'துயரம்' அல்லது 'கையறவு' என்னும் தலைப்பில் செய்திகள் இடம்பெறும். கையறுநிலைப்பாக்களும் இடம்பெறுவது வழக்கம்.

சிறப்புப்பெற்ற சமயங்களில் தமிழறிஞர்கள், புரவலர்கள் ஆகியோர்தம் நிழற்படங்களும் இடம்பெறுவதுண்டு. கரந்தைத் தமிழ்ச்சங்க விழாக்களில் பங்கேற்ற அறிஞர்கள்தம் சொற்பொழிவுச் சுருக்கங்களையும், பொழிற்றொண்டர், குறிப்புகளாக வெளியிடுவதுண்டு.

#### ஆ. பிற செய்திகள்:

ஏனைத் தமிழ்ச் சங்கங்கள், தமிழ் வளர்ச்சி அமைப்புகள், தமிழாசிரியர் கழகங்கள் போன்ற அமைப்புகள் தரும் செய்திகள் இதில் அடங்கும். இவை ஆற்றும் தமிழ்ப்பணிகள், இவற்றின் அறிவிப்புகள், விளம்பரங்கள் போன்றவையும் இதன்கண் அடங்கும்.

#### இ. பொழிற்றொண்டர் கருத்துரைகள்:

தமிழ் ஆக்கம் தொடர்பான செய்திகள், தமிழகம் பற்றிய செய்திகள், இந்தியா உலக நடப்புப் பற்றிய குறிப்புகள் என எவை பற்றியும் பொழிற்றொண்டர் வரையும் கருத்துரைகள் (பிற இதழ்களின் 'தலையங்கம்' போல) இதன்கண் அடங்கும்.

### ஈ. பொழிற்றொண்டர் நூன்மதிப்புரைகள்:

தமிழ்ப்பொழிலில் வெளிவந்த நூல் மதிப்புரைகள் இருவகைப்படும். பொழிலாசிரியர், தாமே நூல் மதிப்புரை வரைவதுண்டு. பிறர் எவராயினும் அப்போது வெளிவந்த சிறந்த நூலுக்கு மதிப்புரைகள் வரைந்து, கட்டுரைகள் அல்லது குறிப்புரைகள் அனுப்புவதும் உண்டு. பொழிற்றொண்டர் தரும் நூன்மதிப்புரைகள், இரண்டு மூன்று வரிகள் முதலாகப் பெரும்பாலும் ஒரிரு பத்திகள் வரை செல்லும். இவற்றில் நூல் மதிப்பீடு இடம் பெறுவதில்லை. நூலினை வெளியிட்டோர் பற்றிய குறிப்பு, ஆசிரியர், விலை, நூல் நுவலும்பொருள் ஆகியவை மட்டுமே இடம்பெறும் ('வரப்பெற்றோம்' என்னும் பகுதிபோல).

### 2. புதுப்படைப்புகள்

தமிழ்ப்பொழிலில் இடம் பெற்ற கவிதைகள், நாடகங்கள், படைப்புக் கட்டுரைகள், அறவுரைக் கட்டுரைகள், வாழ்வியற் கட்டுரைகள், தமிழ்நேயக் கட்டுரைகள், அறிவியற் கட்டுரைகள் ஆகியன அனைத்தும் 'புதுப்படைப்புகள்' எனலாம்.

தமிழ்ப்பொழிலில் கவிதைகள் (சராசரியாக ஒரிதழுக்கு நான்கு எனக்கொள்ளலாம்) இடம்பெற்றன. குறிப்பாக,பாவலர் ச. பாலசுந்தரத்தின் 'கரந்தைக்கோவை' என்னும் கவிதைப் படைப்பையும், 'புலவர் உள்ளம்', 'புரவலர் உள்ளம்', 'பாரி', 'வஞ்சப்போர்' முதலிய செய்புள் நாடகங்களையும் சொல்லலாம். ஈரோடு தமிழன்பனின் (ந. செகதீசன் என்னும் பெயரில் எழுதிய) தொடக்க காலக் கவிதைகள் சிலவற்றையும் காணலாம். தொடக்க காலத்தில் க. வெள்ளைவாரணன் எழுதிய 'காக்கைவிடு தூது' என்னும் அங்கதச் செய்புளும், சுவாமி விபுலாநந்தரின் எளிய இனிய (ஈசனுவக்கும் இன்மலர்கள் போன்ற) பாடல்களும் சிறப்பானவை.

பெரும்பாலான கவிதைகள் தமிழ் தமிழ் என்று, திரும்பத்திரும்பக் கூறியது கூறலாகப், போற்றுதற் பாணியிலுள்ளன. இவற்றைக் கவிதைகள் என்று சொல்வது, ஆழ்ந்த இலக்கிய மதிப்பீட்டு நோக்கில் கண்டால், உபசார வழக்கே எனத் தோன்றும்.

உரைநடையிலும் கதை, கட்டுரை, நாடகம் எனப் பல்வேறு வகைகள் இடம் பெற்றுள்ளன. இலக்கியத்தன்மை இவற்றில் குறைவு. அறுவடை மிகுதி; நமது கவனத்தில் முக்கிய இடம்பெற வேண்டுவன தமிழியற் கட்டுரைகளும் பதிப்புகளுமே. இவை மூன்றாவது வகை.

### 3. தமிழியற் கட்டுரைகளும் பதிப்புகளும்

தமிழ்ப்பொழிலில் வெளிவந்த தமிழியற் கட்டுரைகளை ஐந்து வகைகளாகப் பகுக்கலாம். 1) இலக்கியக் கட்டுரைகள்; 2) இலக்கணக் கட்டுரைகள்; 3) தமிழக வரலாற்றுக் கட்டுரைகள்; 4) தமிழ்ப் பண்பாட்டுக் கட்டுரைகள்; 5) கலைச் சொல்லாக்கக் கட்டுரைகள். பதிப்புகளை அ) பழைய நூல்/பாடற் பதிப்புகள்; ஆ) கல்வெட்டு வெளியீடுகள் என இரண்டாகப் பகுக்கலாம்.

பொதுவாக, தமிழ்ப்பொழிலில் வெளிவந்துள்ள கட்டுரைகள், ஆழ்ந்ததேடலின்றி, மேம்போக்காக, ஆசிரியர் கருதிய கருதுகோளையே ஒரு



திரு.வி.க.

சிறு கட்டுரையாகத் தருவனவாக உள்ளன; இன்னும்சில சமயங்களில், கருதுகோளை நிறுவுகின்ற சான்றுகளும் போதிய அளவின்றி, ஒரிரு சான்று களோடு கருத்தை முன்வைத்துச் சென்றுவிடுவதுண்டு. பெரும்பாலும் தமிழ்பொழில் ஆய்வுக் கட்டுரைகள் நான்கு பக்க அளவின. இன்னும் குறைந்த பக்க அளவிலும் அமைவ துண்டு.

கரந்தைத் தமிழ்ச் சங்கத்தை நிறுவியோரும், இதிலிருந்த தமிழறிஞர் களும், இதன் புரவலர்களும் அக்காலத்தே நீதிக்கட்சியில் பெரும் செல்வாக்குப் பெற்றவர்களாகவே இருந்தனர். சங்கத் தலைவர் த.வே. உமாமகேசுவரன், தஞ்சைப்பகுதி நீதிக்கட்சியின் தூணாக விளங்கியவர்; புரவலர் ஏ.டி. பன்னீர் செல்வம், மாநில நீதிக்கட்சியின் தலைவர்களுள் ஒருவர். பல அரசு உயர் பதவிகளை வகித்தவர். இவர்களுடைய பாதுகாப்பில் இருந்த கரந்தைத் தமிழ்ச்சங்கம், பார்ப்பன ரல்லாதார் இயக்கம், தனித்தமிழ் இயக்கம் ஆகியவற்றுடன் சார்பு கொண்டே விளங்கியது. தமிழ்பொழில் இதழும் நீதிக்கட்சி, திராவிடர் இயக்கம், தனித்தமிழ் இயக்கம், இந்தி ஆதிக்க எதிர்ப்பு, கலைச்சொல்லாக்கம், தமிழிசை இயக்கம் போன்ற பல இயக்கத் தொடர்புகள் கொண்டது. இச்சார்பு களின்றி தமிழ்ப்பொழிலின் ஆய்வுக் கட்டுரைகளைப் பிரிக்க முடியாது. இச்சமூக நிகழ்வுகள், தமிழ்ப்பொழிலின் 'ஆய்வுக்' கட்டுரைகள் வாயிலாகவும் வெளிப்பாடு பெற்றுள்ளன. ஆகவே இம்மாதிரி இதழ்களை ஆராய்வதன் ஒரு முக்கியப் பயன், இச்சமூக நிகழ்வுகள், இவ்விதழின் வழிஇலக்கிய, இலக்கண, வரலாற்று, பண்பாட்டுக் கட்டுரைகள் வழிஆய்வுப்போக்கினை எவ்விதம் ஆட்சிசெய்கின்றன என்று காண்பது தான். தமிழ்ப்பொழில் வெறும் இதழன்று; இது ஓர் சமூக நிகழ்வு. இதன்வழி தமிழ்ச் சமூகம். எழுபதாண்டுகளில் இலக்கிய சமூக நிலைகளில், கருத்தியலில் அடைந்த மாற்றங்களைக் காண்பது தமிழ்ச் சமூகத்தைப் பற்றிய நமது அறிவை மேம்படுத்த உதவும். செந்தமிழ் இதழின் தொடக்ககாலத் தொகுப்புகளை அடைவுபடுத்தி பா.ரா. சுப்பிரமணியன் கூறுகின்றார்.

"செந்தமிழ் இதழின் தொடக்ககாலத் தொகுப்புகளை அடைவுபடுத்துவது என்பது ஒருவகையில் ஒரு மாயப் பெட்டியைத் திறப்பது போன்றது! இந்தத் தொகுப்புகளில் அடங்கியுள்ள பொருட்கள் படிப்போரை மெய்சிலிர்க்கச் செய்யும்; எழுச்சியூட்டும்; இவற்றை அடைவு படுத்துவதே பெரிது. மதிப்பீடு என்பது பின்னால் வருவது"

தமிழ்ப்பொழிலின் துணர்களை (ஆண்டுத்தொகுப்புகளை)ப் பார்க்கும் ஒருவருக்கும் இதேமாதிரியான உணர்ச்சிகள்தாம் ஏற்படும் என்பதில் ஐயமில்லை.

தமிழ்ப்பொழிலின் ஆய்வுப் பணி பற்றிச் சற்றே விரிவாகப் பார்ப்போம்;

### இலக்கிய வரலாற்றாய்வு

தமிழ்ப்பொழில் தொடங்கிய 1925ஆம் ஆண்டளவிலேயே சங்க இலக்கியங்களின் காலம், சிலப்பதிகார காலம், திருக்குறளின் காலம்,

மணிமேகலையின் காலம், பக்தி இலக்கியங்களின் காலம், கம்பர்காலம்; சேக்கிழார் காலம் போன்ற முதன்மையான காலப்பகுதிகள் அனைத்தும் ஆராயப்பட்டிருந்தன. பேராசிரியர் சுந்தரம்பிள்ளையின் காலமுதலாகவே இவ்வகைக் கால ஆராய்ச்சியே தமிழில் முதன்மை பெற்றது. செந்தமிழ் தொடக்க கால இதழ்களிலும் இவ்வகை ஆய்வே முதன்மை பெற்றிருந்தது. இது தமிழ்ப்பொழிலிலும் தொடர்ந்தது.

வரலாற்றுச் சான்றுகள் அருகேயுள்ள பழமையான ஒரு மொழியில், ஒரு நூலின் மேல் எல்லை கீழ் எல்லை நிறுவுதலே போதுமானது என்பார் கமில் சுவலபில். மிகச் சரியான இன்ன நூல் இத்தனையாம் ஆண்டில் எழுந்தது என நிறுவ மிகநுட்பமான சான்றுகள் தேவை.

''பல தமிழ் நூல்கள் வரலாற்று நோக்கில் எழுதப்பட்டவை அல்ல என்பதனால், மேலைநாட்டு நூல்களின் தோற்றக் காலத்தை ஆராய்தல் போன்ற நுட்பமான ஆராய்ச்சி இங்குத் தேவையில்லை"

எனக் கருதுகின்றார் கமில் சுவலபில். தமிழிலக்கியங்களின் காலம் ஓரளவு ஆராயப்பட்டு பல்வேறு கருத்துகளும் முன்வைக்கப்பட்டுவிட்ட நிலையில்தான் தமிழ்ப்பொழில் எழுந்தது. எனவே, பழந்தமிழ் இலக்கியங்களின் கால ஆய்வில், இது விவாதங்களில் பங்கு என்ற அளவில் இருந்தது. வடமொழி எதிர்ப்பு, தமிழ்ப் பொழிலின் அடிப்படைக் கொள்கையாக இருந்துள்ளது. கல்வெட்டுகளின் வாயிலாகப் பல புலவர்களை அறிய தமிழ்ப்பொழில் உதவியது.

தமிழ்ப்பொழிலின் உண்மையான இலக்கிய வரலாற்றுப்பணி, பிற்பட்ட சான்றோர்களைப் பற்றி அறிய மிகவும் உதவியதே எனலாம். குமரகுருபரர், படிக்காசுப் புலவர், சர்க்கரைப் புலவர் வழியினர், திருத்தணிகை விசாகப் பெருமாளையர், சரவணப்பெருமாளையர், கால்டுவெல், பண்டிதர் சவரிராயர், பேராசிரியர் சுந்தரம்பிள்ளை, திரு.வி.க., விபுலாநந்தர், மாகறல் கார்த்திகேய முதலியார், பேராசிரியர் நமச்சிவாயர், வ.உ.சி., நாடகக் கலை முன்னோடி இராமசாமி ராஜு போன்ற பலர் வரலாற்றுக் குறிப்புகளை அறிய தமிழ்ப்பொழில் துணைசெய்துள்ளது. சாலை. இளந்திரையனின் 'புதுத்தமிழ் முன்னோடிகள்' 'புதுத்தமிழ் முதல்வர்கள்' நூற்கட்டுரைகள் தமிழ்ப்பொழிலில் வெளியானவையே.

> ''தமிழன் வாழவேண்டிய நல்வாழ்வு தன்னை மட்டும் வாழ்வித்துக் கொள்ளக் கூடியதல்ல; தமிழன் நல்வாழ்வு வாழ வேண்டும் என்பது, மற்றவர்களை வாழ வைக்க வேண்டும் என்பதுதான்.''
>
> **அறிஞர் அண்ணா**

## இலக்கியக் கொள்கை ஆய்வுகள்

தமிழ்ப்பொழிலின் கொள்கையைப் பின்வருமாறு சுருங்கச் சொல்லலாம்: ''முதலில் தமிழில் அடிப்படை இலக்கியங்கள் அமைந்தன; பின்னர் ஆரியர் கொள்கைகள் கலப்புற்றபின் மாறுதல்கள் உண்டாயின. ஆரியர் கலப்பு ஒரு திருப்புமுனை. தமிழிலக் கியங்களும் தமிழ்மொழியும் வட மொழியால் (சமஸ்கிருதத்தால்) சீரழிந்தே வந்துள்ளன. எனவே மொழிக்கலப்பை விலக்க வேண்டும்". இக்கருத்துகளை ஏற்போர் தமிழ்ப்பொழிலைச் சிறந்த ஆய்விதழ் என்று பாராட்டியுள்ளனர். இக்கோட்பாடுகளை ஏற்காதோர், தமிழ்ப்பொழிலை இனவாத இதழ் என்றும் மதிப்பிட்டுள்ளனர்.

தமிழ்ப்பொழில் இதழில் இலக்கியக் கொள்கைகள் என்பது சிலப்பதிகாரத்தின் இலக்கியக் கொள்கை, பாரதிதாசனின் இலக்கியக்கொள்கை ஆகிய இரண்டு மட்டுமே ஆராயப் பெற்றன.

## இலக்கியத் திறனாய்வு

தமிழ்ப்பொழில் தோன்றிய முதல் பத்துப் பதினைந்து ஆண்டுகளில், தனித்தனிப் பாடல்களின் பொருள் மாறுபாடுகள், பொருள் விளக்கங்கள் ஆகியவற்றைக் காண்பதே இலக்கிய ஆய்வாக இருந்துள்ளது. பிறகு இந்த மரபு மாறி, நலம்பாராட்டலுக்கு இடமளித்தது. பாடற்பொருள் காணல், பாடவேறுபாடு காணல், நலம் பாராட்டல் ஆகியவற்றைச் செய்வதில் தவறில்லை. இவையாவும் திறனாய்வுக்கான அடிப்படைகளே அன்றி, இவை மட்டுமே திறனாய்வு ஆகா; மேலும், இவற்றுடன் அழகியல் - சமூகவியல் நோக்குகள் இணையும்போதே அவை உண்மையான ஆய்வாகின்றன. தனிப் பாடல் பொருள்நோக்கு நிலையைத் தாண்டி சங்க இலக்கிய ஆய்வு செல்லவில்லை. திருக்குறள் கட்டுரைகளோ, சொல்லாய்வுகள் அல்லது சொற்பொருள் ஆய்வுகளே.

சிலப்பதிகாரத்தைப் பொறுத்தவரை, வையாபுரிப்பிள்ளையின் சிலப்பதிகாரக் கால ஆய்வுக் கருத்துகளுக்கு மறுப்புவரைதல் முதன்மையான முயற்சியாயிற்று. எனினும் அண்மைக் காலங்களில் சிலப்பதிகாரக் கட்டமைப்பு பற்றிய கேள்விகள் எழுப்பப் பெற்றுள்ளன; அது வரலாற்றுக் காப்பியமே என நம்பி, அதில் கண்ணகி பயணம் செய்த வழி கூறப்பெற்றுள்ளது என நினைத்து, கண்ணகி கோட்டம் எது எனக் காணச் செய்த முயற்சி. கம்பம் பகுதியைச் சேர்ந்த மங்கலா தேவிக் கோட்டமே முதன்முதலாக எழுப்பப்பெற்ற கண்ணகிக் கோட்டம் என்பது இந்த முயற்சியில் கண்டறிந்த முடிபு. ''இக்கருத்து, இன்னும் ஆணித்தரமாக நிறுவப்பெற வேண்டும், சான்றுகள் போதா'' என்பர் மயிலை. சீனி. வேங்கடசாமி.

காப்பியங்களில், சில பாத்திரப் படைப்புகள் பற்றிய குறிப்புகளோடு ஆய்வு முடிந்துவிட்டது. பக்திப் பனுவல்கள் ஆய்வும், பாடற்பொருள் காணல், பாடவேறுபாடு காணல், நலம் பாராட்டல் என்னும் இவற்றோடு நின்றுவிட்டது. பிற்காலப் புராணங்களோ, தனிப்பாடல்களோ, சிற்றிலக்கிய வகைகளோ தொடப்படவே இல்லை. தற்கால இலக்கியங்களில் பார்வைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டவை, மனோன்மணீயம், பாரதியார் கவிதைகள், பாரதிதாசன் கவிதைகள் ஆகியவை மட்டுமே. ஓரளவு இலக்கியப்பொருண்மை பற்றிய ஆய்வு நிகழ்ந்துள்ளது. 'தமிழ்ப் புலவருக்கு நிலவியல் அறிவுண்டா?' என்பது முதல் 'இலக்கியத்தில் மகளிர் விளையாட்டுக்கள்' என்பதுவரை இவ்வகையின. இவை ஒரு வகையில், வரலாற்றாய்வின் வேறு தோற்றங்களே.

ஒரு நூலை இலக்கியம் என்றோ இலக்கியம் அன்று என்றோ கொள்ளவோ, தள்ளவோ தேவையான அடிப்படைகள் எதுவுமே தமிழ்ப்பொழிலில் பேசப்பட்டது கிடையாது. பல்கலைக் கழகங்களிலும், இலக்கியம் சார்ந்த சிற்றிதழ்களிலும் விவாதிக்கப்பட்டு, ஒருவரை நல்ல

படைப்பாளி என்று பிறர் ஏற்றபிறகு, பத்திருபது ஆண்டுகள் கழித்து அவரைப் பற்றிய கட்டுரை ஏதேனும் தமிழ்ப்பொழிலில் இடம்பெறல் இயலும். அவ்வளவு பாதுகாப்பு உணர்ச்சி (அல்லது மரபுணர்ச்சி!)

### தொடக்க கால இலக்கண ஆய்வுகள்

மிகவும் குறிப்பிடத்தக்க ஒரு தொடர் கட்டுரை, இத்துறையில் ம.நா.சோம சுந்தரம் பிள்ளை என்பாரால் எழுதப்பட்டது. 1930ஆம் ஆண்டு, 'தொல்காப்பியச் சொல்லதிகாரக் குறிப்பு' என்னும் நூல் பி.எஸ். சுப்பிரமணிய சாஸ்திரியாரால் எழுதி வெளியிடப்பட்டது.

இந்நூலுக்கு ம.நா. சோமசுந்தரம் பிள்ளை, ஏழாம் துணரில் (ஆண்டுப் பகுதியில்) தொடங்கி, பதின்மூன்றாம் துணர்வரை (ஆறு ஆண்டுகள்!) ஒரு மறுப்புரை எழுதினார். (மொத்தம் 285 பக்கங்கள்). இக்கட்டுரையின் முதற் பகுதி ஏழாம் துணரில் வெளியான போதே, இதற்கு மறுப்பாக பி.எஸ். வேதாசலய்யர் என்பவர் 'சொல்லதிகார ஆராய்ச்சி மறுப்பின் மறுப்பு' என்னும் ஓர் கட்டுரையினைத் தொடராக எழுத முற்பட்டார். உடனே ஔவை துரைசாமிப் பிள்ளை 'தொல்காப்பியச் சொல்லதிகாரக் குறிப்பாராய்ச்சி என்னும் தலைப்பில் இரு கட்டுரைகள் வரைந்ததோடு, மா.நா. சோமசுந்தரம் பிள்ளையின் மறுப்புக்கு பிறர் வரையும் மறுப்புகளை வெளியிட லாகாது என்று பொழிற்றொண்டருக்கு ஒரு கடிதமும் வரைந்தார். வேதா சலய்யரின் கட்டுரைக்கு மறுப்பு ஒன்றினை ம.நா.சோமசுந்தரம் பிள்ளை 'வித்துவான் வேதாசலய்யர் என்பாரின் போலி மறுப்பு' என்னும் தலைப்பில் இருபது பக்க அளவினதாக வரைந்தார்.

ஏறத்தாழ 1935 முதல் 1955 வரை சொல்லாய்வுகள் (வேர்ச்சொல் ஆய்வுகள்) சொற்பொருள் ஆய்வுகள் தரப் பட்டுள்ளன. 1955க்குப் பின்னர் சிறிது சிறிதாக மொழியியல் நோக்குகள் இடம் பெறலாயின. அப்போதும் தமிழ்ப்பொழில் இலக்கிய மொழியின் அமைப்பை ஆராய்வதில்தான் கவனம் செலுத்தியுள்ளதே தவிர, பேச்சுமொழி அவ்வளவாக ஆராயப்படவில்லை என்றே கருதலாம். இம்மாதிரி ஆய்வுகளின் பலனும் தமிழ்ப் பொழிலின் நோக்கிற்கு உகந்ததாகவே அமைந்தது. தொல்காப்பியத்தின் அறிவியல் அடிப்படை நிறுவப்பெற்றது. தொல்காப்பியர் உலகின் சிறந்த மொழியியல் அறிஞர்களுள் ஒருவர் என்பது கொஞ்சம் கொஞ்சமாக நிலைபெறலாயிற்று. இதனை வேர்ச் சொல்லாய்வினா வினாலோ சொற் பொருளாய்வினாலோ செய்திருக்கவே இயலாது. மொழியியல் ஆய்வில், இலக்கண வடிவங்களின் உருபனியற் கூறுகள் ஆராயப்படும் போதே, அவற்றின் சொல்லியல் தொடரியல் அமைப்புகளும் பண்புகளும் ஆராயப் பட்டதனால் இது சாத்திய மாயிற்று.

இப்படி ஆரம்ப காலத்தில் ஓரளவு தருக்கநெறி ஒன்றையே நம்பி வந்த இலக்கண ஆராய்ச்சி, பிற்காலத்தில் மொழியியல் சார்ந்த ஆய்வாக மலர்ந்தது.

### வரலாற்றாய்வு

தமிழ்நாடு என்பது இந்தியாவின் ஒரு பகுதியேயாயினும், தன்னளவில் ஒரு தனி நாட்டுக்குரிய இயல்புகளைக் கொண்டது. மேலும், இந்தியாவிலேயே வடமொழி (சமஸ்கிருத)ச் செல்வாக் கினின்றும் தன்னைப் பாதுகாத்துக் கொண்ட ஒரே மொழி தமிழே. இந்தியாவில் ஆரியர் வருவதற்கு முன்னர் இருந்துவந்த திராவிடர் என்னும் இனத்தாரின் எச்சங்களாக இன்று இருப்பவரும் தமிழரே என்பர். எனவே, தமிழ்மொழி, தமிழினம், தமிழ்நாடு, தமிழ்ப் பண்பாடு என்பன தனித்தன்மைகள் கொண்டனவாகவே இருந்து வந்துள்ளன. ஆயினும் இன்றுவரை, தமிழகத்தின் வரலாற் றுக்கும் பண்பாட்டிற்கும் இந்திய வரலாற்றில் போதிய இடமளிக்கப் படவில்லை. இதற்காகத் தமிழறிஞர் வருந்தினர். ஆகவே இந்த நூற்றாண்டு முதலாகத் தமிழ்நாட்டின் வரலாற்றை ஆராய்ந்து வரைவதில் ஆர்வம் தோன்றியது. செந்தமிழ், தமிழ்ப்பொழில் போன்ற இதழ்கள் இவ்வார்வத்தினை வெளிக்காட்டுகின்றன.

தமிழ்ப்பொழில் வாயிலாக வெளிப்பட்ட வரலாற்றாய்வாளர் என்று தி.வை. சதாசிவப்பண்டாரத்தாரை மட்டுமே கூற இயலும். சதாசிவப் பண்டாரத்தாரின் பாண்டியர் வரலாறு, முதற்குலோத்துங்க சோழன் போன்ற நூல்கள் தமிழ்ப் பொழிலில் தொடர்கட்டுரைகளாக எழுதப்பெற்றவை. வை.சுந்தரேச வாண்டையாரும் கல்வெட்டுகள் பற்றியும், ஊர்களின், தலங்களின் வரலாற்றுக் குறிப்புகள் பற்றியம் மிகுதியாக எழுதியிருக்கிறார்.

### பண்பாட்டாய்வு

தமிழ்ப்பொழில் தந்த பண்பாட்டுக் கட்டுரைகளில், சிறப்பு வாய்ந்தவை தமிழிசை பற்றிய ஆய்வுகளே எனலாம். சுவாமி விபுலாநந்தரின் ஈடுபாட்டினால் இசைத்தமிழ் ஆய்வு தமிழ்ப் பொழிலில் இடம்பெற்றுவந்தது. இக்கட்டுரைகளே பின்னர் தொகுக்கப்பெற்று யாழ்நூலாக உருப்பெற்றன. அந்த நூலும் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் வாயிலாகவே வெளியிடப்பெற்றது. தமிழிசை இயக்கம் தொடங்கப்பெற்ற அக்காலத்தில், அந்த இயக்கத்திற்கு அறிவுக்களம் அமைத்துத் தந்தவை விபுலானந்தரின் கட்டுரை களேயாம். பழந்தமிழிசையின் சிறப்பு, யாழ் என்னும் இசைக்கருவியின் மீட்டுருவாக்கம், பழந்தமிழிசைக்கும் இன்றைய கருநாடக இசைக்குமான ஒப்பீடு ஆகிய மூன்று கூறுகளைக் கொண்டது அவரது ஆய்வு. ஒருவகையில் இதுவும், மீட்புவாதமே.

விபுலாநந்தர் மறைந்தபின், குடந்தை ப. சுந்தரேசன், இசை பற்றிய கட்டுரைகளைத் தமிழ்ப்பொழிலில் தொடர்ந்தார். ஆனால் அவரது கட்டுரைகள் அவ்வளவாகத் தனிச் சிறப்பு வாய்ந்தவையாக அமையவில்லை.

தஞ்சைப் பகுதியிலுள்ள கோயில் களின் கல்வெட்டுகளை ஆராய்ந்து அக்கோயில்கள் பற்றிய செய்திகள் பலவற்றைத் தொகுத்து வெளி யிட்டவர்கள் சதாசிவப் பண்டாரத்தாரும், சுந்தரேச வாண்டையாரும், ஜே.எம். சோமசுந்தரம் பிள்ளையின் கட்டுரைகள் குறைவேயாயினும் சோழர்காலக் கலைச் சிறப்புகளை நன்கு எடுத்துக் காட்டுகின்றன.

### பதிப்புப் பணிகள்

தமிழ்ப்பொழிலின் பதிப்புப் பணி இருவகை என்று முன்னரே சொல்லப் பெற்றது. ஒன்று, நூல்பதிப்பு; மற்றது கல்வெட்டுகள் பதிப்பு. நூல் பதிப்புகள் 1947 வரை மிகுதியாக உள்ளன. பின்னர் அருகிவிட்டன. பதின்மூன்றாம் ஆண்டுவரை, எல். உலகநாத பிள்ளை என்பவரது முயற்சியால் நெல்லை



தி.வை. சதாசிவப்பண்டாரத்தார்

பள்ளேசல், சித்திரந்தாதி என்னும் நூல்கள் பதிப்பிக்கப்பெற்றன. பதிபசுபாசம், பதிபசுபாசப்பனுவல் போன்ற சைவசித்தாந்த நூல்களையும் இவரே பதிப்பித்தார். இலக்கணத்துறையில், சுவாமிநாதம், இலக்கண தீபம் ஆகியவை பதிப்பிக்கப்பெற்றன. இவற்றுள், சுவாமிநாதத்தை, செ.வை. சண்முகம் அண்ணாமலைப் பல்கலைக்கழக வாயிலாகத் திருந்திய பதிப்பாகக் கொணர்ந்தார்.

பதிப்பிக்கப்பட்ட பிற நூல்கள், பட்டமதன வித்தார மாலை, சேலம் செழியதரையன் மஞ்சரி, ஆறைநாட்டுலா ஆகியவற்றின் சில பகுதிகள். சிராமலை அந்தாதி, திருமலை வெண்பா என்னும் நூல்களும் அறிமுகநோக்கிலேயே ஒரு சில பாடல்கள் மட்டும் வெளியிடப் பட்டன. வெள்ளைவாரணர், அரபத்த நாவலரின் 'பரத சாத்திரத்'தை உரையோடு வெளியிட்டார்.

கல்வெட்டுக்களைக் கண்டறிந்து வெளியிடுவதிலும் தமிழ்ப்பொழில் ஓரளவு துணைபுரிந்தது. 1947 வரை இருபத்துநான்கு புதிய கல்வெட்டுகள் கண்டறிந்து வெளியிடப்பட்டன.

கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின்-தமிழ்ப்பொழிலின்-முக்கியமான பணி, முதல் இராசேந்திரசோழனின் கரந்தைச் செப்பேடுகளைக் கண்டறிந்து வெளிப் படுத்தியதே ஆகும். சதாசிவப் பண்டாரத்தார் இதற்குக் குறிப்புரை அளித்தார். இச்செப்பேடுகள் தனிச் சிறப்புவாய்ந்தவை. ஆகவே மதுரைக் காமராசர் பல்கலைக்கழகத்தால் அண்மையில் வெளியிடப்பெற்றுள்ளன.

### அறிவூட்டற் பணி

தமிழ்ப்பொழில் வெளியிட்ட இலக்கண இலக்கியக் கட்டுரைகள் பெருமளவு ஆய்வு என்று சொல்லப்பட முடியாவிட்டாலும், அவை புதிதாக இலக்கிய இலக்கணம் பயில்வோர்க்குப் பயனுடையவையாக இருந்தன என்பது அவற்றின் சிறப்பு. தமிழ் நேயக் கட்டுரைகள், அல்லது தமிழுணர்வுக் கட்டுரைகள் என ஒரு தனி வகையே உண்டு. இவை பயில்வோர்க்குத் தமிழ் உணர்வினை ஊட்ட எழுதப்பட்டவை.

இலக்கியமே அன்றி, கல்வி, மருத்துவம், இயற்பியல், வேதியியல், உடல்நலவியல், உளவியல், சமூகவியல் என்னும் பலதுறைகள் சார்ந்த சில கட்டுரைகளை தமிழ்ப்பொழிலிற் காணலாம். இவையன்றிப் புலவர் வரலாறுகள், அறிவியலார் வரலாறுகள், பிறமொழி இலக்கியக் கதைகள் எனப் பலவும் உண்டு. இவை அரிய சொல்திறனும், கலைச் சொல்லாக் கங்களையும் தம்மகத்தே கொண்டவை.

தமிழ்ப்பொழிலின் கலைச்சொல் லாக்கப் பகுதிகளிலும், அறிவியற் கட்டு ரைகளிலும் ஆளப்பட்ட கலைச்சொற்கள் சிறப்பானவை. இவற்றில் ஆளப்பட்ட பல கலைச்சொற்கள், இன்று ஏற்கப்பட்டு, தமிழகத்தில் வழங்குகின்றன.

கலைச்சொல்லாக்கம் பற்றிய கட்டுரைகள், 1940இல் அமைக்கப்பட்ட சீனிவாச சாத்திரியார் குழுவின் செயல்பாட்டை எதிர்த்தும், பின்னர் 1947இல் சென்னை அரசு அமைத்த கலைச் சொல்லாக்கக் குழுவை எதிர்த்தும் பெரும்பாலும் எழுதப்பட்டவை.

சீனிவாச சாத்திரியார் குழுவினர் மிகுதியாக வடமொழியாக்கமே செய்திருந்தனர். சான்றுக்கு இவர்கள் வெளியிட்ட கலைச்சொற்களுக்குள் சில:

| | | |
|---|---|---|
| Insecticide | - | பூதிநாசினி; |
| Basic | - | க்ஷாரமான; |
| Similar | - | ஸஜாதீய; |
| Electralysis | - | வித்யுத் வியோகம்; |
| Triangle | - | திரிபுஜை |

இம்முறையில் அமைந்த கலைச் சொற்கள், தமிழ்ப்பற்றுடையவர்களுக்கு எரிச்சல் ஊட்டின. 1940-50 காலப் பகுதியில் தமிழ்ப்பொழில் மிகுதியாக கலைச்சொல்லாக்கக் கட்டுரைகளை வெளியிட்டது; சரியான கலைச் சொற்களை அமைக்கும் முறை, தவறாக அமைக்கப்பட்ட கலைச்சொற்களை மதிப்பிடல், கண்டித்தல் ஆகிய பணிகளில் தமிழ்ப்பொழில் ஈடுபட்டது. கணித ஆசிரியராக விளங்கிய சாமி.வேலாயுதம் பிள்ளை என்பார், அறிவியற் கலைச்சொற்களைத் தொடர்ந்து ஆக்கி வெளியிட்டு வந்தார்.

*சோறு இல்லாதவனுக்குச் சோறும், உடை இல்லாதவனுக்கு உடையும், வீடு இல்லாதவனுக்கு வீடும் கொடுக்கப்பட வேண்டியது எவ்வளவு அவசியமோ, எவ்வளவு நியாயமோ - அதுபோலக் கல்வி இல்லாதவனுக்குக் கல்வி கொடுக்க வேண்டும்.*

- தந்தை பெரியார்.

இப்படி அருமையான சொற்கள் ஆக்கப்படினும், 1947ஆம் ஆண்டு சென்னை அரசு அமைத்த குழு பழையபடியே அல்ல, இன்னும் மோசமான முறையில் சமஸ்கிருதச் சொற்களைத் தொகுத்துக் கலைச்சொற்கள் என வெளியிட்டது.

| | | |
|---|---|---|
| Hydrogen | - | அப்ஜனகம்; |
| Spinal chord | - | கசேரு லதை; |
| Indeterminate | - | அநிஷ்கர்ஷித; |
| Census | - | கலஸ்திரீ பாலபுருஷ விருத்த ஆய்வ்ய பரிமாணம்; |
| Protein | - | ஓஜஸ் திரவியம்; |
| Revolution | - | சத்ராக்ருதி; |
| Carpel | - | கர்ப்ப பத்ரம் |

இக்குழுவின் கலைச்சொல்லாக்கப் பாங்கினைக் காட்ட மேற்கண்ட உதாரணங்கள் போதுமானவை. இதனைத் தமிழ்ப்பொழில் வன்மையாகக் கண்டித்தது. தமிழ்ப்பொழிலின் முயற்சிகளின் விளைவாக, 1948இல் இரா.பி.சேதுப்பிள்ளை, இடீசுப்பிரமணிய பிள்ளை, சேலம் அமுத்தைய ஆகியோர் அடங்கிய கலைச் சொல்லாக்கக்குழு உருவாகியது. 1938-52 காலப்பகுதிதான் தமிழ்ப் பொழிலில் கலைச்சொல்லாக்க முறைகளும்,, கலைச்சொற்களும் ஆராயப்பட்ட காலம்.

### தமிழ்நேயப்பணி:

தமிழ்ப்பொழிலின் தமிழ்நேயப் பணிகள் பல திறத்தவை. முன்பே சுட்டிக் காட்டியவாறு, முதன் முதல் தமிழ்ப் பல்கலைக்கழகம் தோன்ற ஓர் எழுச்சி தமிழகத்தில் 1925இல் தோன்றியபோது, தமிழ்ப்பொழில் தனது தலையங்கங்கள், செய்திக் குறிப்புகள் வழி அதனை ஆதரித்தது.

அவ்விபக்கம் மறைந்து, அண்ணா மலைப் பல்கலைக் கழகம் தோன்றப் பெற்றது. அது அக்காலத்தில் தமிழ்ப் பல்கலைக் கழகமாகவே கருதப்பட்டது. அது, தமிழ்ச் சார்பான பல்கலைக் கழகம் என்பதை நிலைநிறுத்த, கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் சார்பாளர் ஒருவரும், மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் சார்பாளர் ஒருவரும் அதன் ஆட்சிக் குழுவில் இடம்பெற்றனர். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் வளர்ச்சிக்குக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் சார்பாளர்கள் பேருதவி புரிந்தனர். சான்றாகத் தமிழிசை, அண்ணாமலைப் பல்கலைக்கழக இசைக் கல்லூரியில் முதன்மை பெற்றது

இவர்களாலேயே இது பற்றிய குறிப்புகள் தமிழ்ப்பொழிலில் இடம் பெற்றுள்ளன. இப்பல்கலைக் கழக ஆட்சிக்குழு தனது நடைமுறைகளைத் தமிழ்வாயிலாகவே நடத்த வேண்டும் என்பதற்காகக் கரந்தைத் தமிழ்ச் சங்கம் போராடி வெற்றிபெற்றது. வித்துவான் என்னும் பட்டம், புலவர் பட்டமாக மாறியது.

தமிழக எல்லைச் சிக்கல், இந்தித் திணிப்பு ஆகியவற்றில் தமிழ் மக்கள் சார்பாக நின்று அவர்களது உணர்ச்சிகளை வெளிப்படுத்தியது. கலைச்சொல்லாக்கம், இந்தி ஆதிக்க எதிர்ப்பு, தமிழிசை இயக்கம் ஆகியவற்றைத் தடைசெய்ய முயன்றோரையும் எதிர்த்தோரையும் சாடியது. தமிழ்ப்பொழிலின் 'தமிழ்ச் செய்திகள்', தமிழ் தலைமைக்கு வர முயன்ற போராட்டங்களை நன்கு வெளிப்படுத்தும் கருவூலம். இவ்வாறே தமிழ்ச் சங்கத்தின் ஆண்டுவிழாக்களில் அறிஞர்கள் பேசிய உணர்வூட்டும் உரைகள், தமிழ்ப்பொழில் வாயிலாக வெளிப்பட்டன. இவை சிறந்த தமிழ்நேயக் கட்டுரைகளாகும். இவற்றில் வரலாற்றுச் செய்திகள், சமகாலச் செய்திகள், அக்காலத்தில் தமிழின் நிலை, பிற மொழியினருடன் ஒப்பீடு, தமிழின் தனித்தன்மை, தமிழர் பண்பாடு, ஆரியர் பண்பாடும் இந்தியும் எதிர்க்கப்பட வேண்டியவை என்பதற்கான காரணங்கள்- போன்ற பல செய்திகள் காணப்படுகின்றன.

தமிழ்ப்பொழில் வெளியிட்ட கவிதைகள் யாவுமே தமிழ்நேய வெளிப்பாடுகளே. குறிப்பாக, 'தமிழரசி குறவஞ்சி' என்னும் வரதநஞ்சைய பிள்ளையின் நூலும், 'கரந்தைக்கோவை' என்னும் ச.பாலசுந்தரத்தின் நூலும் மிகுதியாகத் தமிழ் நேயக் கருத்துகளைக் கொண்டுள்ளன.

'பொழிற்றொண்டர் கருத்துரைகள்' பகுதியும் மிக முக்கியமான தமிழ்நேயப் பகுதியாகும். 'இந்தியை ஏன் எதிர்க்க வேண்டும்?' 'தமிழில் எழுத்துச் சீர்திருத்தம் தேவையா?' 'தமிழ்க் கல்லூரிகளின் எதிர்காலம் என்ன?' 'சமயங்கள் இன்று தேவைதானா?' போன்ற பல கேள்விகள் பொழிற்றொண்டர் கருத்துரைகளில் ஆராயப் படுகின்றன.

தமிழ்நேயக் கட்டுரைகள் பல, தமிழ்ப்பொழில் வாயிலாக வெளியிடப் பட்டுள்ளன. 'திருவள்ளுவர் திருநாளை எந்த நாளன்று கொண்டாடுவது?' என்று ஆராய்வதிலிருந்து 'வாதாபி கொண்ட நாளை தமிழர்கள் தேசியத் திருநாளாகக் கொண்டாட வேண்டும்' என்பதுவரை, 'பல்கலைக்கழகங்களில் தமிழ் செம்மையாகக் கற்பிக்கப்பட என்ன செய்யவேண்டும்' எனபது வரை தமிழ் உணர்வூட்டுகின்ற கட்டுரைகள் பல.

தமிழ்நேயக் கட்டுரைகளும், பொழிற்றொண்டர் குறிப்புரைகளும் தமிழ் உணர்வூட்டுகின்ற பணியைச் சிறப்பாக ஆற்றியபோதும், பெரும்பாலும் அவை பழமைவாத மீட்புவாத நோக்கிலேயே அமைந்துள்ளன.

1950க்குப் பின்னர், ஒரு சமயச் சார்பற்ற இதழாகவே தமிழ்ப்பொழில் மாறிவிட்டது எனலாம்.

ஞானியாரடிகளின் பொன்விழாவைப் பாராட்டித் தமிழ்ப் பொழில் சார்ந்த அறிஞர்கள் பேசிய உரைகள் தமிழ்ப்பொழிலில் வெளியாகியுள்ளன. தமிழ்ப்பொழில் ஆசிரியராகப் பணிபுரிந்த வெள்ளை வாரணர், ஞானியாரடிகளின் மாணவர்.

இனி, கட்டுரையின் முடிவுப் பகுதிக்கு வரும்போது தமிழ்ப்பொழிலின் அனைத்து அம்சங்களையும் தொகுத்து நோக்க வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. இந்த அம்சங்களைக் கவனிக்கும்போது சில ஈரடித் தன்மைகள் புலானாகின்றன. செந்தமிழ், செந்தமிழ்ச் செல்வி போன்ற பெயர்களிலுள்ள **செம்மை** பற்றியும் தமிழ்ப்பொழிலின் **பசுமை** என்ற படிமம் பற்றியும் முன்னரே குறிப்பிடப்பட்டது. **செம்மை** என்பது ஒரு குறிப்பிட்ட விதித் தொகுதிகளின்படி இயங்கும் தன்மையைக் காட்டுவது. பசுமை, வளம், படைப்பாற்றல் சார்ந்தது. முரணான இப்படிமம், ஒரு காலத்திலே தமிழ்ப்பொழில், தமிழ்வளத்துக்குப் பாடுபட வேண்டிய இதழாக மலரவேண்டும் என்ற ஆசிரியர்களின் அபிலாஷையைக் காட்டுவதாகிறது.


த.வே.உமாமகேசுவரன்

ஏறத்தாழ தமிழ்நாட்டில் திராவிடக் கட்சிகள் ஆட்சிக்கு வந்தபோதே அறிஞர் அண்ணா அவர்களால் 'தமிழ்நாடு' என அதற்குப் பெயர் மாற்றம் நிகழ்ந்தபோதே வரலாற்று ரீதியாகத் தமிழ்ப் பொழிலின் பணி ஓரளவிற்கு வெற்றி கண்டது.

சங்க இலக்கியங்கள், தொல்காப்பியம் போன்ற இலக்கண நூல்கள், சிலப்பதிகாரம் போன்ற காப்பியங்கள், திருக்குறள் போன்ற அறநூல்கள்- இவற்றையெல்லாம் தமிழ்ப்பொழில் ஆராய்ந்துள்ளது. வடமொழியும் வடமொழி இலக்கியங்களுமே இந்திய மண்ணில் சிறந்தவையாகக் கருதப்பட்ட ஒரு காலத்தில், அதனை எதிர்கொள்ள, தமிழறிஞர்கள் தமது பண்டை இலக்கியங்களின் காலத்தை மிக முன்னதாகக் காட்டவேண்டிய அவசியமிருந்தது. அவற்றின் சிறப்புகளை மட்டுமே விதந்துரைக்க வேண்டிய கட்டாயம் இருந்தது.

தமிழ்ப்பொழில் தனது தொடக்க காலத்திலேனும் தமிழின உணர்வைத் தூண்டி ஒரு புத்தெழுச்சியை உண்டாக்கியது. தொடக்க காலத்தில் நீதிக்கட்சியின் வரையறையையே, தமிழர் என்பதற்குத் தமிழ்ப்பொழிலின் வரையறையாகக் கொள்ளலாம். தமிழ்ப்பொழில் வெளிப்படையாகச் சைவ இதழாகத் தன்னைக் காட்டிக் கொண்டது குறைவு, 'நடுநிலை' இதழாகவே காட்டிக் கொண்டது என்று முன்பு சொன்னோம். ஆனால் அதே சமயம் பெரியாரின் திராவிடக் கழகம் சார்பாகவும் அது இல்லை.

தமிழ் மீட்பு வாதம் என்ற அடிப் படையில் நோக்கும் போது,

தமிழ்ப்பொழில்-

தமிழிசை முயற்சி-

தமிழ்க் கலைச் சொல்லாக்கம் -

தமிழ்நாட்டு வரலாற்றுக்கு (அரசர் வரலாற்றுக்கு)

முக்கியத்துவம் அளித்தல் - தமிழ் இலக்கிய இலக்க...ங்களின்

தொன்மையைப் பரப்புதல்-

ஆகியவற்றிற்குப் பங்களித்துள்ளது. □

# கல்வி வளர்ச்சியில் பொற்காலம்

## முதலமைச்சர் கலைஞர் அவர்களின் முனைப்புமிகு திட்டங்கள்

★ **1996ல்** கல்வித்துறை, தலைமைச் செயலக அளவில் இரண்டாகப் பிரிக்கப்பட்டு, உயர் கல்விக்கெனத் தனித்துறை, **முதலமைச்சர் கலைஞர்** அவர்களால் உருவாக்கப் பட்டது. கடந்த 2 ஆண்டுகளில் சுயநிதி அடிப்படையில் 59 கலை-அறிவியற் கல்லூரிகள் தொடங்கப்பட்டன; அதேபோன்று 49 சுயநிதி பொறியியற் கல்லூரிகள் தொடங்கிட அனுமதிக்கப்பட்டு 10,000 மாணவர்கள் கூடுதலாகப் பொறியியற் கல்வி பெற வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. திருச்சியில், **கி.ஆ.பெ.விசுவநாதம் மருத்துவக்கல்லூரி** இவ்வாண்டு தொடங்கப்பட்டது. அடுத்த ஆண்டு தமிழகத்தில் மேலும், 4 மருத்துவக் கல்லூரிகள் புதிதாகத் தொடங்கப்படுமென **முதலமைச்சர் கலைஞர்** அறிவித்துள்ளார்.

★ **உயர்கல்விக் குழுவொன்று** அமைக்கப்பட்டு, இந்தியாவிற்கே வழிகாட்டும் வகையில், **'ஒற்றைச்சாளர** முறை'யில், வெளிப்படையான அறிவிப்புகளுடன் பொறியியற் கல்லூரிகளில் **இடைத்தரகர் எவருமின்றி** ஏறத்தாழ 17,000 மாணவர்கள் **விரும்பிய கல்லூரிகளில், விரும்பிய** பாடத்தைக் **கூடுதல்** செலவினமின்றிப் பெற்றிட வாய்ப்பளிக்கப் பட்டுள்ளது. இவ்வாண்டில், **விண்ணப்பித்த அனைத்து மாணவர்களுக்கும்** பொறியியற் படிப்பில் இடங்கிடைத்தது என்பது ஒரு வரலாற்றுச் சாதனையாகும்.

★ 10,12ஆம் வகுப்புகளில், முதல் 3 நிலைகளை மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் மதிப்பெண்கள் பெற்ற மாணவ, மாணவியர்களின் **உயர்கல்விச் செலவு முழுவதையும் அரசே ஏற்கும்** புதிய திட்டம்.

★ பட்டதாரி **இல்லாக் குடும்பங்களைச்** சேர்ந்த 10 முதல் **நிலை மதிப்பெண்கள் பெறும்** மாணவ, மாணவியர்க்கு - பொறியியல், மருத்துவம், வேளாண்மை, கால்நடை மருத்துவம், பல் மருத்துவம் ஆகிய தொழிற்கல்விகளில் பயிலும் அத்தகு மாணவ-மாணவியர்களின் கல்விச் செலவு **முழுவதையும் அரசே ஏற்கும்** என்ற ஏற்றமிகு திட்டம். **முதலமைச்சர் கலைஞரால்** அறிவிக்கப்பட்டு கடந்த இரண்டாண்டுகளில் 100 மாணவ-மாணவியர்கள் இப்புதிய திட்டத்தால் பயனடைந்துள்ளனர்.

★ அடுத்த ஆண்டு முதல், சட்டம், சித்த மருத்துவம் ஆகிய கல்வி களுக்கும், இத்திட்டம் விரிவுபடுத்தப் படுமென **முதலமைச்சர் கலைஞர்** அறிவித்துள்ளார்.

★ மேலும், இவ்வாண்டில் பொறியியற் கல்லூரிகளில், **கிராமப்புற மாணவர் களுக்கென, 15 சதவிகித ஒதுக்கீடு** செய்யப்பட்டது. அடுத்த ஆண்டு முதல், இத்திட்டத்தின்படி, மருத்துவக் கல்வி போன்ற பிற தொழிற்பட்டப் படிப்புகளிலும், **கிராமப்புற மாணவர் கட்கு 15 சதவிகிதம் ஒதுக்கீடு** செய்யப் படுமென **முதலமைச்சர் கலைஞர்** அறிவித்துள்ளார்.

★ **பெண் கல்வி:**

பெண்கள் கல்லூரிகள் இல்லாத பகுதிகளிலுள்ள அரசுக் கல்லூரி களில், பெண்கள் கல்லூரிகளில்



அதிக அளவில் படித்திடும் வகையில், 30% இடம் ஒதுக்கப்படுமென்று **முதலமைச்சர் கலைஞர்** அறிவித்துள்ளார். அதேபோன்று, ஈ.வெ.ரா. நாகம்மையார் நினைவு நிதியுதவியின் கீழ், ரூ.24,000 வருட வருமானத்திற்குக் கீழுள்ள ஏழைப் பெண்கள், எம்மதம், எப்பிரிவைச் சார்ந்தவர்களாக இருந்தாலும், ஏழைப் பெண்கள்பட்டப்படிப்பு மேற்கொள்ளும் வகையில், கல்விக் கட்டணத்தை அரசே ஏற்கும் திட்டமும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

★ **புதிய பல்கலைக்கழகங்கள் - அறக்கட்டளைகள்:**

நாட்டுக்கு உழைத்த பெருந்தலைவர்களின் பெயரால் ரூ.5.25 கோடி ஒதுக்கீட்டில் அறக்கட்டளைகள் எட்டுப் பல்கலைக்கழகங்களிலும் தொடங்கப்பட்டுள்ளன.

★ சேலத்தில் தந்தை பெரியார் பல்கலைக்கழகம் 17-9-97 மாண்புமிகு **முதலமைச்சர் கலைஞர்** அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது.

★ டாக்டர் அம்பேத்கர் பெயரால் இந்தியாவிலேயே முதல் சட்டப் பல்கலைக்கழகம் **முதலமைச்சர் கலைஞர்** அவர்களின் இடையறா முனைப்பின்பயனாக, 25-9-97 அன்று, சென்னை - வள்ளுவர் கோட்டடத்தில், மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் கே.ஆர். நாராயணன் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது.

**பள்ளிக்கல்வியில் பல்கிப் பெருகிடும் சாதனைகள்:**

★ கடந்த 1½ ஆண்டுகளில் 253 ஆரம்பப் பள்ளிகள் புதிதாகத் தொடங்கப்பட்டுள்ளன. 62 ஆரம்பப் பள்ளிகள் நடுநிலைப்பள்ளிகளாகவும், 170 நடுநிலைப்பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 160 உயர்நிலைப் பள்ளிகள் மேனிலைப் பள்ளிகளாகவும் உயர்த்தப்பட்டுள்ளன. உயர்நிலை, மேனிலைப் பள்ளிகளில் ரூ.13 கோடியில் வகுப்பறைகளும், ரூ.14 கோடியில் உயர், மேனிலைப் பள்ளிகளில், அறிவியற்கூடங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. ரூ.3.75 கோடி செலவில், 18,750 ஆரம்பரப் பள்ளிகளுக்கு மின் இணைப்புகள் தரப்பட்டுள்ளன. ரூ.4.75 கோடி செலவில் 1000 ஆரம்ப, நடுநிலைப் பள்ளிகளுக்குத் தளவாடங்கள் வழங்கப்பட்டுள்ளன.



★ விழுப்புரத்தில் ரூ.27.50 இலட்சத்தில் மாவட்ட அளவிலான விளையாட்ட ரங்கம் கட்டப்பட்டுள்ளது. நெல்லையில் - ஆக்கி, கூடைப்பந்து, விளையாட்டு அரங்கங்கள் கட்ட ரூ.11.60 இலட்சமும், வேலூரில் - சத்துவாச் சாரியில் பளு தூக்கும் பயிற்சி அரங்கம் கட்ட



ரூ.11.87 இலட்சமும், சென்னை நேரு ஸ்டேடியத்தில் டென்னிஸ், ஆக்கி அரங்கம் கட்ட ரூ.10 இலட்சமும், ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன.

★ இவ்வாண்டில் 200 அரசு பெண்கள் உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளுக்கு கழிப்பறை கட்ட, ஒரு கழிப்பறைக்கு ரூ.72,000 வீதம் ரூ.1.44 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

★ மாநிலத்தில் கல்வித் திறனை மேம்படுத்துவதற்காக மாநில அளவில் இடைநிலைக் கல்வி/மேல்நிலைக் கல்வி பொதுத்தேர்வுகளில் முதலாவதாக வரும் மூன்று மாணவர்களுக்கு மேற்படிப்பு செலவை அரசே ஏற்றுக்கொள்ளுமென கலைஞர் அவர்களால் அறிவிக்கப் பட்டது. மேலும் இத்திட்டம் 1996-97 முதல் அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவாக்கப்பட்டுள்ளது.

★ தமிழகம் முழுவதும், ஏறத்தாழ 25,000 ஆசிரியர்கள் வேலை வாய்ப்புப் பணிமூப்புப் பட்டியலின் அடிப்படையில், இடைத்தரகர் எவருமின்றி, பணிநியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

★ உலக வங்கி திட்டத்தின்கீழ் மாவட்ட ஆரம்பப் பள்ளித் திட்டம் இராமநாதபுரம், புதுக்கோட்டை மற்றும் பெரம்பலூர் ஆகிய மூன்று மாவட்டங்களில் செயற்படுத்தப் படுகிறது.

* * *



# பொங்கல் ஏக்கம்!


'போகி'யே! குளிர்மூட் டத்தைப்
பொசுக்கிடும் நெருப்பு நாளே!
ஆகாத பொருளை யெல்லாம்
அழிக்கின்றாய்! நன்றி! இன்னும்
போகாத 'சாதிப் பே'யைப்
பொய்'மத வெறித்த ன'த்தை
ஆகுதி ஆக்கும் அந்த
அரியநாள் வந்தி டாதா?

'பொங்க'லே! தமிழர் வீட்டில்
பூரிப்பை விளைக்கும் நாளே!
எங்கெங்கும் உன்பிறப்பால்
எழில், எழில்! இன்பம், இன்பம்!
இங்குள்ள ஏழை கூட
ஏப்பத்தை உன்னால் காண்பான்!
தங்கிடும் இம்ம கிழ்ச்சி
தழைக்காதா நிலைத்தே என்றும்?

'மாட்டுப்பொங் கல்' நன் னாளே!
வயிறெலாம் வாழ வைக்கக்
காட்டுரை வயலூர் ஆக்கும்
காளைக்கா நன்றி சொன்னாய்?
மேட்டுரோர் தாழ்வு ராரை
வேதனை மாடாய் எண்ணும்
தீட்டெலாம் தேய்த்தே மாயத்
தேதியைக் குறிப்பா யா, நீ?

'காணும்பொங் க'ற்பொன் னாளே!
கனிவுடன் கண்டே அன்பைப்
பேணுதல் வேண்டு மென்றே
பேசவா வந்தாய்? நெஞ்சில்
வீணுக்குப் பேதம் தன்னை
விதைப்போரைத் திருத்து வாயா?
காணும்எம் தமிழர் வாழ்வு
ககனத்தை மிஞ்சி டாதா?

— கவிஞர் கா. வேழவேந்தன்



# தனித்தமிழ்ச் சொல்லாக்கம்

—வீ. சந்திரன்
இயக்குநர், தமிழ்ப்பிரிவு,
சட்டத்துறை

**1968 ஆம்** ஆண்டில் தாய்த் தமிழ் ஆட்சிமொழியாக்கப்பட்ட பின், 'எங்கும் தமிழ் எதிலும் தமிழ்' என்ற கோட்பாட்டினை, நடைமுறைப்படுத்திடும் முகத்தான் - ஆட்சிமொழிச் சட்டத்தைச் செயற்படுத்தும் வகையில், "ஆட்சி மொழிக்குழு அதனடிப்படையில், அரசால் உருவாக்கப்பட்டது. தமிழ் ஆட்சிமொழியாகிவிட்டது என்று சட்டமியற்றப்பட்டு விட்டதாலேயே, அது முழுமைப்படுத்தப்பட்டதாக ஆகிவிடாது; ஏனெனில், ஆட்சிமொழி என்கிற போது, சட்டம், நிர்வாகம், நீதி ஆகியவை உரிய முறையில் தமிழாக்கம் செய்யப்பட்டு, முழுமையாகப் பயன்படுத்தப்பட வேண்டுமென்பதில் **கலைஞர்** அவர்கள் மிகுந்த முனைப்புக்காட்டி வருகிறார் என்பதற்கு எண்ணிலடங்காச் சான்றுகளை இயம்பிட இயலும்.

**நவீன முத்தமிழ்:**

இயல், இசை, நாடகம் என்ற மூன்று நமது முன்னோரின் கொடையாக முத்தமிழ் என வர்ணிக்கப்பட்டுள்ளது; ஆனால், 'சட்டத்தமிழ், நிர்வாகத்தமிழ், நீதித்தமிழ்' என்பதை நவீன முத்தமிழாகக் கொள்ளலாம். எனவே தான்**கலைஞர்** அவர்கள் இம்மூன்றையும் முறையாக, முதலாவதாகத் தமிழ்ப்படுத்தி நடைமுறைப்படுத்திடுவதற்கென ஆட்சிமொழிக் குழுவின் தலைவராகத் தானே பொறுப்பேற்றுக் கொண்டுள்ளார்.

நம் மொழியில் இல்லாத ஒரு சொல்லை, பிறமொழியிலிருந்து மொழிபெயர்த்துச் சொல்லாக்கி ஏற்பது அல்லது வேற்று மொழிகளில் இருந்து நேரடியாக, சொற்களைப் பெறுவது என்பது கலைச்சொல்லாக்கத்தில் ஒரு வகையாகும். வேற்று மொழியிலுள்ள அச்சொல்லை ஒலிபெயர்த்தோ அல்லது மொழி பெயர்த்தோ தேவைக்கேற்பப் புதுச்சொற்களை படைத்துக் கொள்வதீ என்பது மற்றொரு வகையாகும்; ஒரு மொழியின் சிறப்பியல்பை வெளிப்படுத்த இவற்றில், ஏதுவாக இருப்பது மொழி பெயர்ப்பாகும். தவிர்க்க இயலாதபோது நடைமுறைக்கேற்ப கலைச்சொற்களைப் புனைவது என்பது இன்றியமையாத ஒன்றாகும்.

பிற மொழிச் சொற்கள் அனைத்தையும் மொழிபெயர்த்திடல் வேண்டுமென்பது அவ்வளவாக வேண்டியதில்லை; அதே நேரத்தில், பிற மொழிச் சொற்களை அப்படி அப்படியே பெற்று, முழுமையாகக் கையாள்வதும் தமிழ்மொழி வளர்ச்சிக்கு உகந்ததாகாது.

**கலைச் சொற்களைத் தரப்படுத்துதல்:**

தற்போதைய சூழ்நிலையில், கலைச் சொற்கள் தரப்படுத்தப்படாது பலராலும் பலவகையிலும் கட்டுப்பாடு இன்றிப் பயன்படுத்தப்படுகின்றன. எனவே பேராசிரியர் அ.மு. பரமசிவானந்தம் அவர்கள் கூறுவது போல், அவற்றைத் தரப்படுத்தும்போது சில நெறிமுறைகளை வரையறுத்துக் கொள்ளவேண்டியது மிக்க அவசியமாகும்.

Public Functionary என்ற ஆங்கில வாசகத்திற்கு, (1) பொதுப்பதவியர், (2) பொதுப்பதவியலாளர், (3) பொதுப்பணிமாந்தர் - என்றெல்லாம் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டது. இதைக் கண்ணுற்ற **முதலமைச்சர் கலைஞர்** அவர்கள், **'பொது வாழ்வினர்'** என்ற ஓசை நயமிக்க பொருள் பொதிந்த சொற்றொடரைக் கையாளுமாறு கூறினார்கள். இதே போன்று Confidential என்ற சொல்லுக்கு; (1) இரகசியம் (2) மந்தணம் என்று, அரசுக் கோப்புகளிலும் குறிப்புகளிலும் பயன்படுத்தப்பட்டு வந்தது. ஆனால், 1989-90ல் **முதலமைச்சர் கலைஞர் Confidential** என்பதற்கு, **'மறை பொருள்'** என்ற வாசகத்தைப் பயன்படுத்தலாம் என்று பரிந்துரை செய்தார் (1989-90).

**மந்தணமா ? மந்தனமா ?**

ஒரு சொல், இலக்கியத்தில் கையாளப்பெறும்போது, ஒரு வகையான குறிப்பையும் ஆட்சித் தமிழ் வழக்கிலே வருகின்றபோது, வேறு ஒரு தொனிப் பொருளையும் கொண்டிலங்குவது சிறப்பாகும். தமிழக அரசு வெளியிட்டுள்ள ஆட்சிச் சொல்லகராதி - நான்காம் பதிப்பு-பக்கம் 63-இல் **Confidential** என்ற சொல்லுக்கு, **'மந்தணம்'** என்று பொருள் கூறுகிறது. சென்னைப் பல்கலைக் கழக ஆங்கில - தமிழ் அகராதி பக்கம் 219இல் **Confidential** என்பதற்கு

**'இரகசியம்'** என்று பொருள் தருகிறது. **Strictly Confidential** என்பதற்கு **'கடும் மந்தணம்'** அல்லது **'பரம இரகசியம்'** என்றும் கோப்பில் பயன்படுத்துகின்றனர். தமிழ் நீதி நூல்களில் இலக்கிய நயமும் சட்டம் போன்ற பொருட் செறிவும் கொண்டது திருக்குறள். இதில் பல நயங்களைக் காணலாம். திருக்குறளில் இரகசியத்தைக் கீழ்மக்களிடம் கூறலாகாது என **வள்ளுவர்** கூற முற்பட்டு,

*"அறைபறை யன்னர் கயவர்தாங் கேட்ட*
*மறைபிறர்க்கு உய்த்துரைக் கலான்"*

-என்றார்.

அதிலும் அலுவலியல் இரகசியக் காப்புச் சட்டத்தில் கண்டபடி, அரசு இரகசியத்தைப் பிறருக்குத் தெரிவித்தல் ஆகாது. ஆம் இரகசியத்தைப் பிறருக்குத் தெரிவித்தல் ஆகாது. ஆனால், சிலருக்குத் தெரிந்த செய்தியை வெளியில் போய் தம்பட்டம் போட்டுப் பகிரங்கப்படுத்தாவிட்டால் தூக்கம் வராது. அவர்கள் சொன்ன சேதியை, 'உய்த்து' என்ற சொல்லால் எடுத்துரைக்கிறார். இதில், 'மறை' என்று இரகசியம் பேசப்படுகிறது. இதே மறையைத்தான் வேதம் - மந்திரம் என்கிறோம். மந்திரம் என்றால் மந்தணமாகும். ஆக மந்தணம், என்றால் இரகசியம் என்பது தெளிவு. இதே 'மந்தணம்' என்பதை **திருமூலர்** கையாண்ட விதமே வேறு.

***"அடப்பண்ணி வைத்தார் அடிசிலை உண்டார்***
***மடக்கொடியாரொடு 'மந்தணம்' கொண்டார்***
***இடப்பக்கமே இறை நொந்ததே என்றார்***
***கிடக்கப்படுத்தார் கிடந்தொழிந்தாரே."***

இப்பாடலில், 'மந்தணம்' என்றால் இன்பம் துய்த்தல் என்று பொருள். ஆனால் அலுவலகத்தில் தட்டச்சில் 'மந்தணம்' என்பதற்குப் பதில் 'மந்தனம்' என்று தட்டச்சு செய்தார் தட்டச்சர். அப்படியென்றால் 'மந்தனம்' என்பது என்ன பொருள் ? 'மந்தனம்' - அழித்தல், ஆலோசனை, கடைதல், புகழ், யானைமுகபடாம். மந்தணம் - மந்திரம் - இரகசியம் என்று பொருள் இருப்பதைக் கழகத் தமிழ் அகராதியைக் காட்டி தட்டச்சர் செய்த பிழையைச் சுட்டிக் காட்டினார் அதிகாரி.

**தாய்மொழிக் கல்வி**

*"கல்வியறிவை எம்மொழி வாயிலாகவும் பெறலாம். கல்வியறிவிற்கு இம்மொழி, அம்மொழி என்னும் கட்டுப்பாடில்லை. ஜெர்மனி, பிரான்சு முதலிய நாட்டிலுள்ளோர் தத்தம் தாய்மொழி விடுத்து ஆங்கிலம் படித்தா கல்வி பெறுகின்றனர்? புதுவைக் கண்ணுள்ள தமிழ் மக்கள் ஆங்கிலம் கற்றா மேல் நாட்டுத் தத்துவங்களை உணர்கிறார்கள்? திருவள்ளுவர், இளங்கோ அடிகள், கம்பர், சேக்கிழார் முதலியோர் ஆங்கிலம் படித்தா உலகம் போற்றும் காவியங்களை எழுதினர்? ஆகவே ஒரு நாட்டு மொழியே கல்விக்குடையது என்று கொள்ள இயற்கையில் எந்நியதியுமில்லை என்பதை உணர்க, அவரவர் தத்தம் தாய்மொழியிலேயே கல்வி பெறலாம்".*

**- திரு.வி.க.**

16.10.1996 அன்று எழும்பூர் அருங்காட்சியகத்தில், நடைபெற்ற சென்னை மாவட்டத் தமிழ் ஆட்சிமொழி வளர்ச்சிக் கருத்தரங்கில், தமிழ் ஆட்சிமொழி - பண்பாட்டுத் துறை, மாண்புமிகு அமைச்சர் **முனைவர் தமிழ்க்குடிமகன்** அவர்கள், தற்போது **Confidential** என்பதற்கு **மாண்புமிகு முதலமைச்சர்** அவர்கள், **'கமுக்கம்'** என்ற சொல்லை, இனிப் பயன்படுத்துமாறு ஆணை பிறப்பித்ததாகத் தெரிவித்தார். Confidential என்பதற்கு கமுக்கம், Secrecy என்பதற்கு மந்தணம், Strictly Confidential என்பதற்கு கடும் மந்தணம் / கமுக்கம், Esoteric என்பதற்கு மறைபொருள் என இச்சொல்லாக்க வளர்ச்சியில், 'இரகசியம்' என்ற வேற்றுமொழிச் சொல், கைவிடப்பட்டு 'உரிய தமிழ் வார்த்தை பயன்படுகிறது' என்பது பெருமைப்படத் தக்கதன்றோ ?

ஒருமுறை, மதுவிலக்குச் சட்ட முன்வடிவு மொழி பெயர்ப்பில் Animal என்ற சொல்லுக்கு விலங்கு என்று பயன்படுத்தப்பட்டது, இதைக் கண்ட **கலைஞர்** அவர்கள் Animal என்ற சொல்லுக்குக் **'கால்நடை'** என்ற சொல்லை பயன்படுத்தலாமே எனப் பகன்றுள்ளார். **'கால்நடை'** பெருவழக்காகித் தற்பொழுது அது முழுமையாக ஏற்றுக் கொள்ளப்பட்டு விட்டது. Cattle என்பதற்கு **விலங்கு** என்று பயன்படுத்தப்படுகிறது. ஆக சட்ட மொழிபெயர்ப்புகளில் ஒரு சொல்லை வடிவமைப்பது என்பது அவ்வளவு எளிதான ஒன்றல்ல.

முன்பொருமுறை **முதலமைச்சர் கலைஞர்** அவர்கள் ஆட்சிச் சொல், சட்டச் சொல் பற்றிய அறிஞர் பெருமக்கள் குழுவில் தலைமை ஏற்று, தமிழாக்கம் பற்றிய சொல்லாய்வில் பங்கேற்றபோது, 'Divorce' என்ற சொல்லிற்கு, ஆட்சிச் சொல் அகராதி தயாரிக்கும் போது, 'விவாகரத்து' என்ற பிறமொழிச் சொல் கையாளப்பட்டிருந்தது கண்டு இதைவிட நல்ல தமிழ்ச் சொல்லைப் பயன்படுத்தலாமென்றார். அவையிலிருந்த, தமிழறிஞர் ஒருவர் **'Divorce'** என்பதற்கு **'விடுமுறி'** என்ற சொல்லைக் **கவிமணி** அவர்கள், தமது 'மருமக்கள்வழி மான்மியம்', என்ற நூலில் பயன்படுத்தி இருப்பதாகக் கூறினார். உடனே **கலைஞர்** அவர்கள் **விடுமுறி** சற்றுக் கடுமையாக உள்ளது; எனவே **'மணமுறிவு'** என்ற நல்லதொரு தமிழ்ச்சொல்லை உடனடியாக எடுத்தியம்பினார். அற்புதமான அவ்வருமைத் தமிழ்ச்சொல் கேட்டு அவையோர் உடனே வியந்து நின்றனர் என்ற செய்தியை முன்னாள் இணைச் செயலாளர் திரு. கோ. முத்துப்பிள்ளை அவர்கள் கூறியுள்ளார். இதேபோன்று, இன்னொரு நிகழ்வில் - அதாவது, உயர்மட்டக் குழு ஒன்று **கலைஞர்** தலைமையில்

நடைபெற்றபொழுது, 'Deep Research Knowledge' என்பதற்கு அங்கு பேசிய அலுவலர் உடனடியாகத் தமிழில் எடுத்து விளக்கத் தடுமாறிய போது, `Deep Research Knowledge' என்பதற்கு **'ஆழ்ந்த ஆராய்ச்சி அறிவு'** என்ற நல்ல தமிழாக்கத்தை அக்கணத்திலேயே எடுத்துக் கொடுத்த **கலைஞரின்** தமிழாற்றல் கண்டு வியந்ததாக ஒய்வு பெற்ற சார்புச் செயலாளர் திரு. எல்.வி. சுப்பிரமணியம் என்பார் நினைவுகூர்ந்தார்.

**முதலமைச்சர் கலைஞர்** அவர்கள் ஆட்சித் தமிழுக்காற்றிய தொண்டுகள் - பங்களிப்புகள் அளப்பரியன. சட்டத் தமிழ் வளர்ச்சியிலும் சொல்லாட்சியிலும், சொல்லாக்கத்திலும் கலைஞருக்கு மிக்க ஈடுபாடுண்டு. பல காலமாக Bill, Act, Law - என்ற ஆங்கிலச் சொற்களுக்குச் சரியான தமிழ் மொழிபெயர்ப்பு தேவையென்று தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார். "இதுவரை நீதிமன்றங்களில் தமிழில் - முழுமையான முறையில் தீர்ப்பு அளிக்கப்படவில்லை. இத்துறையில் தமிழ் மொழி நன்கு வளர வேண்டும். தமிழில் - சட்டத்துறையில், தமிழ்ச்சொற்கள் குறைவாகவே இருக்கின்றன. இன்னும் அதிகச் சொற்களைத் தனித்தனித் தமிழ்ச் சொற்களைச் சட்டத்துறையிலே ஆக்கவேண்டிய கடமை சட்ட வல்லுநர்களுக்கும், சட்டத்துறையிலே இருப்பவர்களுக்கும் உண்டு. 'நம்முடைய ஆட்சியை நாம் தமிழிலேயே நடத்த முடியுமா?' என்று இன்று எவரும் வினா எழுப்புவதில்லை. காரணம் நாம் செயல்வடிவிலேயே "தமிழால் முடியும்" என்பதை நடைமுறைப்படுத்திக் காட்டி வருகிறோம்.

இன்றைய அளவில் ஆட்சி முறைகளுக்கு - தமிழால் இயலும் என்ற நிலையில், அது தழைத்தோங்கி வளர்வதால் அதிலும் குறிப்பாக, Administrative Language எனும் ஆட்சிமொழியிலும், Legal Language எனும் சட்ட மொழியிலும், தமிழாக்கம் குறிப்பிடத்தக்க வெற்றியை ஈட்டியுள்ளது என்றே கருதலாம்.

மொழி பற்றிக் கூற வந்த பிரான்சிஸ் பேக்கன் கூறுகிறார்:

***"மனிதர்கள் நினைப்பதுண்டு நாம்***
***மொழியை ஆள்கிறோமென்று - ஆனால்***
***மொழிதான் அவர்களை ஆள்வதாக***
***அடிக்கடி நான் கண்டிருக்கிறேன்".***

*"மனிதக் கண்டுபிடிப்புகளில் முதன்மையானது மொழி, காரணம் அது ஒரு தொடர்பு சாதனம் என்பதை விட மனிதச் சிந்தனைக்கு ஒரு வடிகால் என்பதாலேயே"* என்கிறார் கிளான் வில்லியம்ஸ்.

''மொழியின் ஓர் அலகுதான் சொல். இச்சொல் அது எழுதப்பட்டவுடன், பேசப்பட்டவுடன் முழுவதுமாக ஒரு பொருளை உணர்த்துவதில்லை. குறிப்பிட்ட ஒரு சொல் ஏதேனும் ஒரு பொருளையோ ஒன்றுக்கு மேற்பட்ட பொருள்களையோ காட்டுவதற்கு ஓர் அறிகுறியாக, அடையாளமாகவே அமைகின்றது'' என்கிறார் பேராசிரியர் டாக்டர் ம. ரா. போ. குருசாமி.

சாமான்ய மக்கள் பேசும் - எழுதும், சொல்லைவிடச் சட்ட மொழியில் கையாளப்படும் ஒவ்வொரு சொல்லும் எழுத்தும் பொருள் பொதிந்த ஒன்றாகும். எனவே அச் சட்ட மொழி குழப்பமின்றி அமைவதைத்தான், சட்டத்தை வரைவோர் மிகுந்து விழைகிறார்கள். அக்குழப்பம் தவிர்க்கவே சாதாரண உரைநடையில் வரையப்படும் சட்டச் சொற்களை அளந்து பயன்படுத்துகின்றனர். எனவேதான், (Legal Language, which must aim above all things at removing every possible ambiguity - சட்டமொழியாக்கமானது, வேறெவற்றையும் விட, இயன்ற வரையில் வரம்பைக் கடந்து முயலப்பட வேண்டியதாகும் என்கிறார் ஏர்னல்டு கோவர்ஸ்.

தமிழ்நாடுஆட்சி மொழி (சட்ட) ஆணையத்தின் தலைவரும் முன்னாள் சட்டமன்றத் துறைச் செயலருமான மா.சண்முக சுப்பிரமணியம் அவர்கள் சட்டத் தமிழ் விற்பன்னராவார். அவர் கூறுகிறார், ''மொழி பெயர்ப்பு என்பது ஒரு கலை. அதை மொழிபெயர்ப்பு (Translation) என்று கூறுவதை விட மொழியாக்கம் (Transcreation) என்று குறிப்பதே பொருத்தமாகும், ஒரு மொழியின் சொல்லின் பொருளை மறுமொழியில் கூறுவது மொழிபெயர்ப்பு. ஒரு மொழியின் சொல் சுட்டும் கருத்தினை வேறு மொழியில் அமைப்பது மொழியாக்கம்.



**கலைவாணர் சொன்ன கதை**

அமெரிக்காவில் ஒரு தொண்ணூறு மாடிக்கட்டிடத்தில் உள்ள லிஃப்ட் கெட்டுப் போய்விட்டது. அக்கட்டிடத்தில் 80வது மாடியிலுள்ள தங்கள் அறைக்கு மூன்று பேர் நடந்தே போகவேண்டியதாகிவிட்டது. எனவே, எண்பதாவது மாடிக்கு ஏறிப் போகும்போது சிரமம் தெரியாமலிருக்க அவர்கள் ஒரு நிபந்தனை செய்து கொண்டார்கள்.

முதல் இருபத்தைந்தாவது மாடிவரை ஒருவர் நகைச்சுவைக் கதை சொல்ல வேண்டும். அடுத்த ஐம்பதாவது மாடிவரை ஒருவர் காதல் கதை கூறவேண்டும். அடுத்த எண்பதாவது மாடிவரை ஒருவர் சோகக் கதை கூறவேண்டும்.

முதல் இருபத்தைந்து மாடி ஏறும் வரை ஒருவர் நகைச்சுவைக் கதை சொன்னார். அடுத்த ஐம்பதாவது மாடி வரை ஒருவர் காதல் கதை கூறினார். சோகக் கதை கூறவேண்டிய மூன்றாமவர் மௌனமாயிருந்தார்.

ஏனைய இருவரும் சோகக் கதையைக் "கூறு" என்றார்கள். சொல்லுகிறேன் என்று பெருமூச்சுவிட்டார். இரண்டு படிகள் ஏறியும் அவர் சோகக் கதை கூறவில்லை. சொல்லப்பா உன் சோகக்கதையை என்று வற்புறுத்தினர்.

''உம்! சொல்லுகிறேன் என் சோகக்கதையை;" நம் அறைச் சாவியைக் கீழே வைத்துவிட்டு வந்துவிட்டேன் என்றார் அவர்.

**நபிகள் நாயகம் மொழிகள்**

பசித்தவனுக்கு உணவு கொடுங்கள்.

நோயாளியைப் பார்த்து நலம் விசாரியுங்கள்.

ஒருவன் அறியாமையால் சிறைப் பிடிக்கப்பட்டிருந்தால் அவனை விடுவியுங்கள்.

கொடுமைக்கு ஆளானவனுக்கு உதவுங்கள்.

துன்பக் காலத்தில் பொறுமையோடு இருந்து பிறர் செய்த தீமைகளை மன்னித்துவிடுகிற மனிதர்களே சிறந்த செயலுடையோராவார்.

ஆக, இந்த வரையறைகள் - இலக்கண வரம்புகளோடு Bill, Act, Law - என்ற சொற்களின் தமிழாக்கம் என்ன? என்பதை இனி ஒவ்வொன்றாகக் காண்போம்.

'Bill' பற்றிய மொழிபெயர்ப்பை சட்டக் கண்ணோட்டத்தில் காண்போம். இன்றும் சட்டச் சொற்களுக்கு ஆதாரமாக ஆங்கிலச் சட்டச் சொற்களின் வரையறையை வைத்தே சரியான பொருளை உறுதி செய்ய வேண்டியுள்ளது.

"Bill Means A measure submitted to either House of Legislature for the purpose of being passed into Law" - அதாவது சட்டமாகும் பொருட்டு சட்டமன்றத்தின் ஏதேனும் ஓர் அவையின் முன்வைப்பது என்பதாகும்; இது முன்பு 'மசோதா' என்று கூறப்பட்டது.

முந்தைய ஆட்சிக் காலத்திலும் முதலமைச்சர் பொறுப்பிலிருந்த **கலைஞர்** அவர்கள் ஆட்சிச் சொல், சட்டச்சொல் பற்றிய அறிஞர் பெருமக்கள் குழுவில் தலைமை ஏற்று, 'Bill' என்பதன் தமிழாக்கம் பற்றிய சொல்லாய்வில் புழக்கத்திலிருந்த 'மசோதா' என்பதற்கான நல்ல தமிழ்ச் சொல்லாக, 'சட்ட முன் வடிவு' என்ற சொல்லைப் புனைந்ததாக, தமிழ்நாடு ஆட்சி மொழி (சட்ட) ஆணையத்தின் பகுதி நேர உறுப்பினரும், ஆட்சி மொழி வல்லுநருமான திரு. கீ. இராமலிங்கனார் நினைவுகூர்கிறார்.

அடுத்து Law என்ற சொல் என்ன பொருள் படும்? Law is the system of authoritative materials for grounding or guiding judicial and administrative action recognised or established in a poltically Law organised society (Roscoepound). அரசியல் நெறியோடு அமையப்பெற்ற சமூக அமைப்பில், 'சட்டம்' என்பது நிர்வாக - நீதி நடவடிக்கைகளுக்கு அடித்தளமாகவும், வழிகாட்டியாகவும் விளங்குகிறது.

Bil1, Law என்பனவற்றிற்கு அடுப்படியாக உள்ளது Act என்பது. சட்டமன்றத்தில் சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட்டதும், **ஒரு நிலை தாண்டி சட்டமாகிறது.** முன்னதை Bill என்ற சட்டமுன்வடிவென்றும் பின்னதை Act என்பதைச் சட்டம் என்றும் கூறுவர். Act என்பது போன்று Enactment என்றும் Statute என்றும் ஆங்கிலத்தில் கூறுவார்கள். இதையடுத்து, 'Code' என்ற தொகுப்புச் சட்டமும் உண்டு. Act என்றால் சட்டம் Enactment என்றால் இயற்றுச் சட்டம் Statute என்றால் செய்சட்டம் Law என்றால் சட்ட நெறி, Ordinance என்றால் அவசரச் சட்டம் எனச் சட்டத் தமிழ்ச் சான்றோர் கூறுவர். Bill, Act, Law என்ற சொற்கள் மேற்போக்காகப் பார்த்தால் எளிமையாகத் தெரியும். ஆனால் தமிழ்ச் சொல் தேடும் போதுதான் அதில் சிக்கல் இருப்பது தெரிகிறது. எனவேதான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இவற்றிற்குத் தமிழ்ச் சொல் தேவை என வலியுறுத்தும் நுட்பம் புரிகின்றது.

"சட்டம் ஓர் இருட்டறை; அதில் வழக்கறிஞரின் வாதமே விளக்கு" - என்று விளக்கிய அறிஞர் அண்ணா அவர்களின் கூற்றைக் கூர்ந்து நோக்கும் பொழுது சட்ட வரைவுகளின் தன்மையும் அமைப்பும் எத்தகையன என்பது நமக்கு நன்கு புலப்படும்.

**கலைச் சொல்லாக்கத்தில் எழும்பிய பிரச்சினைகள்:**

1989-90ல் ஒருமுறை சட்டமன்றத்தில், பல்கலைக்கழக அளவில் 'Chancellor' என்ற சொல்லின் தமிழாக்கம் குறித்து சுவைமிகு விவாதம் ஒன்று நடந்தது. அதில் Chancellor - வேந்தராகவும், Pro-Chancellor - இணை வேந்தராகவும், Vice-Chancellor - துணை வேந்தராகவும், பயன்பாட்டில் உள்ளது; ஆனால், மேற்கு ஜெர்மனியில், 'Chancellor' என்றால், ஒரு மாநில முதல்வரின் பதவியைக் குறிக்கிறது. அதே 'Chancellor' என்ற சொல் ஆங்கிலேய நாட்டில், 'He is the Chairman of the House of Lords' - அதாவது Chancellor - Exchequer என அழைத்தால் அது அமைச்சர் எனப் பொருள்படுகிறது. அதுவே, British Embassy Official Secretary - Chancellor என்றாகிறது.

இவ்விவாதத்தை முடிவுக்குக் கொண்டுவருகிற வகையில், அவை முன்னவரான - கல்வியமைச்சர் **பேராசிரியர் க.அன்பழகன்** அவர்கள், **வேந்தன்** - என்ற சொல் பழங்காலத்தில், ஆட்சிக்குத் தலைமையேற்ற **மன்னவனைக்** குறிப்பதாக இருந்தது. தற்காலத்தில், அத்தகைய வேந்தர் (மன்னர்) எவருமிலர்; எனவே, 'ஆட்சிக்குத் தலைமை ஏற்பவர் என்ற பொருளில், அதாவது பல்கலைக்கழக ஆட்சிக்குத் தலைமை ஏற்பவரை' Chancellor வேந்தர் என்று அழைப்பதில் தவறில்லை; ஏனெனில், பல்கலைக்கழக விவகாரங்களில் குறை இருக்குமானால், அவற்றைக் களைந்திடும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ள ஒரு வாய்ப்பைப் பெற்றவர் என்பதனால், Chancellor வேந்தர் என்ற சொல்லைப் பயன்படுத்துவதில் தவறில்லை என்று எடுத்தியம்பியது குறிப்பிடத்தகுந்த ஒன்றாகும்.

**தமிழன்னைக்கு உயரிய சிம்மாசனம் அமைப்பதில்,**
**முதலமைச்சர் கலைஞரின் இடையறா முனைப்பு:**

ஆட்சிமொழியாக, நிர்வாக மொழியாக, சட்டமொழியாக அன்னைத்தமிழுக்கு உரிய இடத்தைப் பெற்றுத்தருவதில், ஆக்கமும் - ஊக்கமும் தருவதோடல்லாமல், புதிய சொல் புனைவதில் தன்னுடைய பங்களிப்பையும் **கலைஞர்** அவர்கள் கொடையாக்கித் தரத்தவறியதில்லை; அதோடு, **கலைஞர்** அவர்கள் எடுக்கின்ற முயற்சி எதுவாக இருப்பினும், அது எத்துறையைச் சார்ந்ததாக இருப்பினும், அவருடைய அறிவிப்புகள், திட்டங்கள் எத்தன்மை வாய்ந்ததாக இருப்பினும், அது எதிர்கால நோக்கில் அடித்தளமாய் அமைகின்ற எத்தனிப்புகளாகவே பரிணமிக்கின்றன என்பது பலநூறு சான்றுகளால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

அதே அடிப்படையில்தான், தன்னுடைய முழுமுதற் கடமையாக, **உயிரனைய இலட்சியமாகத் தாய்த்தமிழை** அரியாசனத்தில் அமர்த்துவதைக் கொண்டுள்ளார்; எனவே தான் அதற்கு அடித்தளம் அமைத்திடும் வகையில், 'தமிழ்வழிக் கல்வி' என்பதை உறுதியாக நிறைவேற்றி வருகிறார். புகுமுக வகுப்பு வரை இருந்த தமிழ்க்கல்வியை, பட்டப்படிப்பு வரை விரிவாக்கினார்; தமிழ்வழி க்கற்போர்க்கு ஊக்கத்தொகைகள், உதவித்தொகைகள் உரியவாறு அரசின் சார்பில், அளித்திட வழிவகை செய்துள்ளார். கலை-அறிவியற் பட்டப்படிப்பு என்ற அளவோடு நின்றுவிடாமல், மருத்துவம், பொறியியற் பட்டப்படிப்புகளிலும் அன்னைத் தமிழைப் பாடமொழியாக்கிட அயராது முயன்று வருகிறார்.

எனவே,

> ***அரசினரின் மொழியாக,***
> ***அரசியலார் மொழியாக***
> ***அரசியல்சார்***
> ***வரிசையுறு சட்டமன்றின்***
> ***மொழியாக, வையம்அறி***
> ***மொழியாகத்***
> ***திருமலிந்த தமிழ்மொழிதான்***
> ***ஆகும் வரை நம்புலவர்***
> ***சேர்ந்து தொண்டு***
> ***புரிக என வேண்டுகின்றோம் !***
> ***பொழிக என வேண்டுகின்றோம்***
> ***பொன்மழை தான் !***

என்ற **பாவேந்தரின்** இப்பாடல் வரிகள்; **புரட்சிக்கவிஞரின் இப்புனிதக் கனவுகள், முதலமைச்சர் கலைஞர் அவர்களின் அரிய வழிகாட்டுதல்கள் - அயராத முனைப்புகளின் பயனாக நனவாகிடும் நாட்கள் வெகுதொலைவில் இல்லை; 'எங்கும் தமிழ்; எதிலும் தமிழ்' என்ற இலட்சியம் ஈடேறிடும் என்பது திண்ணமே!**

---

# தைத் திருநாள் !

**- கவிஞர் இளந்தேவன்**



'உழவர்கள் மேலோர் உழைப்பவர்
மேலோர்!' என்றது தைத்திருநாள் !
'உலகவர் யார்க்கும் தமிழ்த்தாய்
சொந்தம்!' என்றது தைத்திருநாள் !
'அழகிய பெண்மையும் ஆண்மையும்
வெல்க!' என்றது தைத்திருநாள் !
'அங்கம் முழுவதும் இன்பம்
நிரம்புக!' என்றது தைத்திருநாள் !



# பரிதிமாற் கலைஞரின் தமிழ்த் தொண்டு

பேராசிரியர் முனைவர் சரளா இராசகோபாலன்

(தமிழ்நாடு அரசின் 1997க்கான 'புரட்சிக்கவிஞர் விருது' பெற்றவர்)

"இந்த நூற்றாண்டில் இருவர் பார்ப்பனர்
செந்தமிழ்ப் பற்றுடை யார்கள்;
முந்து பாவலன் பாரதி மற்றவன்
முத்தமிழ் வல்லவன் பரிதிமாற் கலைஞன்
நாடகத் தமிழ் இலக்கணம் மறைந்ததே
ஈடுசெய் வேனோ என்று துடித்தான்
இயன்ற மட்டும் சிற்சில கொடுத்தான்" (தேனருவி)

- என்று பாவேந்தர் பாரதிதாசனாரால் புகழப்பெற்றவர் பரிதிமாற் கலைஞர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் தமிழுக்குத் தொண்டாற்றியவர்களில் குறிப்பிடத்தக்கவர் **பரிதிமாற் கலைஞர்**. **சூரிய நாராயண சாஸ்திரியார்** என்ற இயற்பெயர் கொண்ட இவர் **பரிதிமாற் கலைஞர்** எனப் புனைபெயர் பூண்டார். இவர் தமிழ் பயில்வோரிடம் இருந்த அறியாமை இருளையோட்டிய பரிதி; தமிழ்ப்பகைவர் என்னும் அரக்கரை வென்ற திருமால், இயற்றமிழ் மாணவர்க்குத் தமிழறிவுறுத்திய கலைஞர்; அந்தணர் குலத்தில் பிறந்த அவர் தமிழுக்கு ஆற்றிய தொண்டு அளப்பரிது.

"பரிதிமாற் கலைஞர் தனிப்பட்ட முறையில் சாதித்தவை ஒருபுறம் இருக்க, நவீன காலத்துப் பிரச்சினைகளும் போக்குகளும் உடன்பாடாகவும், எதிர்மறையாகவும் அவர்நோக்கிலும், போக்கிலும் காணப்படுவதால், நவீன தமிழிலக்கிய வரலாற்றாராய்ச்சிக்கு அவர் வாழ்க்கைச் சரிதத்தையும் நூல்களையும் கற்றல் இன்றியமையாதது என்பது போதரும்" - என்று கலாநிதி க.கைலாசபதி குறித்துள்ளார்.

பரிதிமாற் கலைஞரின் தமிழ்அறிவு அவரது தந்தையால் விதைக்கப்பட்டது. சபாபதி முதலியாரால் வளர்ந்தது. மில்லரால் நீர்பாய்ச்சப் பெற்றது. இவர், தன் இருபதாம் அகவைக்குள் ஆழ்ந்த புலமை பெற்றார். இனிமை வாய்ந்த தமிழ்ச் செய்யுட்களை மிகவும் விரைவாய்ப் பாடும் ஆற்றல் பெற்றார். இவர் தன் **19ஆம்** வயதில் **'மாலா பஞ்சகம்'** என்ற நூலை **இயற்றினார்**. இவருடைய, இளமையில் தோன்றிய.தமிழார்வம் இறுதிவரை நிலைத்தது. கிறித்துவக் கல்லூரி முதல்வர் மில்லர் இவருக்குத் தத்துவப் பேராசிரியர் பதவி தர விரும்பிய போது, இவர் மறுத்து, தமிழ் உதவிப் பேராசிரியர் பதவியைப் பெற்றமை, இவருடைய தமிழ்க் காதலைக் காட்டுகிறது.

## அவரே முன்னோடி


இவருடைய மொழிக் கொள்கையைக் கலாநிதி க.கைலாசபதி, "அவர் தமிழ்மொழியைப் பற்றிக் கொண்டிருந்த கருத்துக்கள் அக்காலத்தவர் பலர் கொண்டிருந்த கருத்துகளினின்றும் வேறுபட்டன. மூன்று அம்சங்கள் இங்கு கவனிக்கத்தக்கவை. செந்தமிழைத் தனது பேச்சிலும் எழுத்திலும் பெருமளவு பயன்படுத்தியமை, தனித்தமிழ் என்ற கோட்பாட்டை நோக்கிச் சென்று கொண்டிருந்தமை, தாய்மொழி மூலம் கல்வி என்ற கொள்கையை வலியுறுத்தியமை" என்று குறித்துள்ளார்.

தனித்தமிழ் இயக்கம் தோன்று வதற்கு முன்பே, இவர் தன் பெயரான சூரிய நாராயண சாஸ்திரியார் என்பதைப் 'பரிதிமாற் கலைஞர்' என மாற்றிக்கொண்டார். பரிதிமாற் **கலைஞரின்** இப்பெயர் மாற்றமானது தமிழரிடையே ஒரு பரபரப்பை எழுப்பியது. **"தனித்தமிழ் இயக்கத்திற்கு அவரே முன்னோடியாவார்''** என்று ஞா.தேவநேயப் பாவணர் தன் 'தமிழர் வரலாற்றில்' (ப.333) குறித்துள்ளார்.

இவர், மாணவப் பருவத்திலிருந்தே சங்கத் தமிழ் பேசினார், எழுதினார். மறைமலையடிகள் தனித்தமிழ் இயக்கம் காண்பதற்கு முன்பே இந்நடையைக் கொண்டுள்ளார். பரிதிமாற் கலைஞரின் சங்கத்தமிழ் கண்டு வியப்புற்ற தாமோதரம் பிள்ளை அவர்கள், **'திராவிட சாஸ்திரி'** என்று இவரைப் பாராட்டி யுள்ளார்.

''சூரிய நாராயண சாஸ்திரியா ரிடத்தில் சிறந்து விளங்கிய இயல்புகள் பல உண்டு. அவைகளுள் சிறந்தது எங்கும் எப்பொழுதும் எக்காரணம் பற்றியும் **கொச்சைத் தமிழ் பேசாமை''** என்று **திரு.வி.க.** குறித் துள்ளார் (வாழ்க்கைக் குறிப்புக்கள் - ப.88).

பரிதிமாற் கலைஞரின் தமிழ்த் தொண்டு பன்முகம் கொண்டது; மிகக் குறுகிய வாழ்நாள் கொண்ட அவர் சிறந்த பேராசிரியர்; கவிஞர்; நூலாசிரியர்; பதிப்பாசிரியர்; கட்டுரை யாளர்; மொழிபெயர்ப்பாளர்; வாழ்க்கை நூலாசிரியர்; மொழி நூலறிஞர்; சொற்பொழிவாளர்; புதின ஆசிரியர்; நாடக ஆசிரியர்; பத்திரிகாசிரியர் என்று, பல நிலைகளில் தமிழ்த் தொண்டு புரிந்தார்.



### பேராசிரியர்

1893-இல் கிறித்துவக் கல்லூரியில், உதவித் தமிழாசிரியராகப் பணியேற்ற பரிதிமாற் கலைஞர், 1895இல் பேராசிரியராகப் பதவி உயர்வு பெற்றார். அவர் பணியாற்றிய அக்காலத்தில் அவரால் பேராசிரியர் பதவி சிறப்படைந்தது.

பேராசிரியரின் சொல்லாற்றல், வேறு வகுப்பு மாணவர்களையும் ஈர்த்தது. இவர் பொதுவாக வகுப்பில் கையாளும் நடையே பண்டைய உரையாசிரியர்களுடைய உரைநடைதான். இது இவருக்கு இயல்பாக அமைந்திருந்தது. உயரிய செந்தமிழ் நடையிலேயே இவருடைய வகுப்பு நடக்கும்; ஒரு மணி நேரமும் அந்நடை யிலேயே பேசும் திறமையைக் கண்டு வியவாத மாணவர்களோ, ஆசிரியர்களோ இல்லை.

பேராசிரியர் தன் மாணவர்கள் கல்வியில் வல்லவர்களாகவும் கல்வி வேட்கையும் ஒழுக்கமும் உடையவர்களாகவும் இருக்க வேண்டும் என்று விரும்பினார். ஒருமுறை இவர் நடத்திய பாடத்தை மாணவர் ஒருவர் கவனிக்காமல் இருந்தபோது, "நமது சொற்பொழிவைப் பொருட்படுத்த விரும்பாத நீ இவணிருந்து எழுவாய், நீ ஈண்டு இருத்தலால் உனக்கோ பிறர்க்கோ பயனிலை; இவணிருந்து உன்னாற் செய்ப்படு பொருளிலை; ஆதலால் வகுப்பினின்று வெளியேறுக" என்று கூறி அம்மாணவரை வகுப்பினின்று அப்புறப்படுத்தினார். இப்படி இலக்கணத்தைச் சமயத்திற்கேற்ற முறையில் பேசியமை சிறப்பாக அமைகிறது.



### நூலாசிரியர்

பரிதிமாற் கலைஞர் 12 நூல்களை எழுதியுள்ளார். ரூபாவதி - கலாவதி, மானவிஜயம், தனிப்பாசுரத் தொகை, பாவலர் விருந்து - முதல் நாள், நாடகவியல், மதிவாணன், தமிழ் மொழியின் வரலாறு, மணிய சிவனார் சரித்திரம் ஆகியவை ஆசிரியரால் வெளியிடப்பட்டவை. சூர்ப்பனகை, முத்திராராட்சசம், உமை திருமணம், இன்னுமா?, அவ்வைக்காட்சி ஆகியன இவருக்குப் பின்னால் வெளியிடப்பட்டவை.

### கவிஞர்

சித்திரகவி எழுதும் ஆற்றலைப் பெற்றிருந்த பரிதிமாற் கலைஞர் 'சித்திரகவி விளக்கம்' என்னும் நூலை எழுதினார். உதடு ஒட்டாமல் பாடும் நீரோட்டக் கவிதைகளையும் பாடினார். தான் பாடிய தனிப்பாடல்களைத் தொகுத்து 'பாவலர் விருந்து - முதல் நாள்' என்ற கவிதை நாடகம் எழுதினார். வேறொரு கவிதை நூலான 'மாலா பஞ்சகம்' இன்று எங்கும் கிடைக்கவில்லை. மேல் நாட்டுக் கவிதையான 'ஸானெட்' அமைப்பைப் பின்பற்றி எழுதி, 'தனிப்பாசுரம்' என்ற பெயரில் வெளியிட்டார்.

பரிதிமாற் கலைஞர் தொடக்க காலப் புதின ஆசிரியர்களில் ஒருவராகத் திகழ்ந்தார். இவர் மதிவாணன் என்ற புதினத்தையும் 'இன்னுமா' என்ற முற்றுப்பெறாத புதினத்தையும் எழுதினார். மதிவாணன் என்னும் புதுவது புனைந்ததோர் செந்தமிழ்க்கதை சி.வை.தாமோதரம்பிள்ளையவர்களின் வேண்டுகோளின்படி எழுதப்பட்டது. கடினமாகவும், சங்ககால நடை உடையதாகவும் இருந்த அது, அவருடைய வசன நடையின் திறனைக் காட்ட எழுதப்பட்டது.

நாடகத் தமிழுக்கு இவர் ஆற்றிய தொண்டு குறிக்கத்தக்கது. இவர் நாடகத்திற்குப் பின்வருநிலைகளில் தொண்டாற்றியுள்ளார்.

1. நாடகவியல் என்ற இலக்கண நூலை எழுதினார்.
2. ரூபாவதி, கலாவதி, மானவிஜயம் என்ற நாடக நூல்களை எழுதினார்.
3. நாடகங்களில் ஆசிரியரே தலைவியாக நடித்தார்.
4. பிறமொழி நாடகத்தை மொழிபெயர்த்தார்.

பரிதிமாற் கலைஞர் வாழ்ந்த காலகட்டத்தில் பலதுறைகளில் முன்னோடியாகத் திகழ்ந்து தமிழர்களுக்கு வழிகாட்டியுள்ளார். சங்க மரபையொட்டி இயற்கையைப் போற்றிப் பல பாடல்களை இயற்றினார். மேனாட்டுக் கவிதை முறையைப் பின்பற்றியும் பாடல்கள் புனைந்தார். தமிழுக்கு 'நாடகவியல்' என்னும் நாடக இலக்கண நூல் கொடுத்தார். ஆராய்ச்சி முறையை மேற்கொண்டு தமிழ்மொழி வரலாற்றை எழுதினார். இந்நூல் இவருடைய தமிழ்ப்பற்றை நிறுவுகிறது. தன் பெயரைத் தமிழ்ப்படுத்தி தனித்தமிழ் இயக்கத்திற்கு வழிகாட்டினார். தமிழில் முதன்முதலில் தீயிறுதி நாடகத்தை எழுதினார் (மானவிஜயம்) அறிவியல் ஆர்வம் கொண்டு அறிவியல் கட்டுரைகளை எழுதினார். 'தமிழ் உயர்தனிச் செம்மொழி' என்று முதலில் நிலைநாட்டியவர் இவரே.

# தமிழ்நாடு இளைஞர் நலக் கொள்கை - தமிழக அரசால் உருவாக்கப்படும்!

**தேசிய இளைஞர் விழாத் தொடக்க விழாவில் முதல்வர் கலைஞர் அறிவிப்பு**

ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கில் நடைபெற்ற தேசிய இளைஞர் விழாவின் தொடக்க விழாவுக்குத் தலைமை வகித்து முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை :

முதலில் இந்த விழாவை மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்துள்ள மத்திய அமைச்சர்கள் திரு.எஸ்.ஆர். பொம்மை, திரு.தனுஷ்கோடி ஆதித்தன் ஆகியோரை நான் பாராட்ட விரும்புகிறேன். நான் உங்கள் அனைவருக்கும் இனிய வரவேற்பைத் தெரிவித்துக் கொள்கிறேன்; என் இதயம் நிறைந்த வாழ்த்துக்கள். நீங்கள் அனைவரும் வாழ்வில் சிறந்து விளங்க வாழ்த்துகிறேன். புராதனமான புகழ்பெற்ற மாநிலமான தமிழ்நாட்டில் நீங்கள் கூடியிருப்ப தற்காக நான் மகிழ்ச்சியடைகிறேன். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இந்த மாநிலம் சர்வதேச சகோதரத்துவம் என்ற கொள்கையை உலகுக்கு வழங்கியது. இங்குதான் கணியன் பூங்குன் றனார் என்ற தமிழ்ப்புலவர்

*"யாதும் ஊரே யாவரும் கேளிர்"*

- என்று உலகத்திற்கு அறிவித்தார்.

இங்குதான் பெரும்புலவர் திருவள்ளுவர்,

*"யாதானும் நாடாமல் ஊராமால் என்னொருவன்*
*சாந்துணையுங் கல்லாத வாறு"*

- என்ற குறள் மூலம் கற்றறிவாளர்கள் ஒவ்வொரு நாட்டையும் தங்கள் சொந்த நாடாக்கிக் கொள்வர், ஒவ்வொரு நகரிலும் தங்களுக்கு ஒரு வீட்டைக் காண்பர் என்று உலகிற்கு அறிவித்தார்.

வரலாற்றிலும், புராணங்களிலும் கதாநாயகர்கள் அவர்கள் இளைஞர்களாக, இருந்தபோது செய்த சாதனைகளுக்காகவே நினைவுகூரப்படுகின்றனர்.

பாண்டியன் நெடுஞ்செழியன் இளைஞனாக இருந்த போதுதான் தலையாலங்கானத்தில் ஒரே நேரத்தில் ஏழு அரசர்களுடன் போரிட்டு வென்று 'தலையாலங்கானத்துச் செரு வென்ற பாண்டியன் நெடுஞ்செழியன்' என்ற பெயர் பெற்றான்.

குருச்சேத்திர யுத்தத்தில் இளைஞனான அபிமன்யு அர்ஜுனனை விட மிகுந்த வீரத்தை வெளிப்படுத்தினான்.




துரோணரின் சீடராக இருந்த போது தான் அர்ஜுனன் புகழ்பெற்ற போர் வீரனாக உருவானான்.

இராமாயணத்தில் இளைஞனாக இருந்த இந்திரஜித் மற்ற எந்தப் பாத்திரத்தையும் விட அதிக வீரச் செயல்களைப் புரிந்தான்.

## இளமைக் காலத்தில் பொது வாழ்வில் நுழைந்த தலைவர்கள்

உதாரணத்திற்கு எடுத்துக் கொள்ளுங்கள், நவீன காலத் தலைவர்களான டாக்டர் அம்பேத்கர், பண்டித நேரு, பெரியார், அண்ணா, காமராஜர் ஆகிய எல்லோரும் அவர்கள் இளைஞர்களாக இருந்த போது தான் பொது வாழ்வில் நுழைந்தனர்.

**உலகின் பல்வேறு பகுதியைச் சேர்ந்த பறவைகள் தமிழ் நாட்டில் உள்ள வேடந்தாங்கலில் கூடுவதைப் போல், இந்தியா முழுவதிலும் உள்ள பிரதிநிதிகள் இந்த விழாவின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக இங்கே கூடியுள்ளனர். நட்பு, சமாதானம் மற்றும் வளர்ச்சிதான் அந்த நோக்கங்கள்.**

இராமாயணத்திலிருந்து ஒரு கதையை நினைவூட்ட விரும்புகிறேன். இராமர், லெட்சுமணன், பரதன், சத்ருகனன் ஆகிய நால்வரும் சிறுவர்களாக ''துணிப்பந்தைப்'' பயன்படுத்தி வில்லையும், அம்பையும் வைத்து விளையாடிக் கொண்டிருந்தனர். அவ்வாறு அவர்கள் விளையாடிக் கொண்டிருந்த போது ஒரு துணிப்பந்து கூனியின் முதுகைத் தாக்கிவிட்டது. அதைப் பார்த்து சிறுவர்கள் சிரித்தனர். இந்த அவமான நிகழ்ச்சியின் காரணமாகக் கூனி இராமர் மீது வெறுப்பை வளர்க்கத் தொடங்கினாள்.

கூனியின் பழிவாங்கும் உணர்வையும் அதைத் தொடர்ந்து அந்த இதிகாசத்தில் நடந்த சம்பவங்களையும் நீங்கள் அனைவரும் அறிவீர்கள். இந்தச் சம்பவத்தை அடிப்படையாக வைத்து ஒரு பழமொழி உருவானது. அதுதான்

*"விளையாட்டு வினையானது !"*

ஆனால் விளையாட்டு எப்போதும் வினையாகி விடுவதில்லை. அது ஆரோக்கியத்தையும் வளர்ச்சியையும் அடிப்படையாகக் கொண்டது. அதனால்தான் கவிஞர் பாரதி

*"ஓடி விளையாடு பாப்பா - நீ*
*ஓய்ந்திருக்க லாகாது பாப்பா"*

- என்று குழந்தைகளை அழைத்தார்.

**உங்களில் ஒரு சிறிய, அழகிய இந்தியாவைக் காண்கிறேன்.**

இந்தியாவின் எல்லாப் பகுதிகளையும் சேர்ந்த இளைஞர்கள் இங்கே உள்ளனர். ஐக்கிய இந்தியா மீது நாம் கொண்டுள்ள உறுதியை மீண்டும் உறுதி செய்வதற்காக நீங்கள் வந்திருக்கிறீர்கள். சாதி, ஏற்றத் தாழ்வு, மொழி ஆகிய வேறுபாடுகளை நீங்கள் புதைத்து விட்டீர்கள், உங்களில் நான் ஒரு சிறிய அழகான இந்தியாவைக் காண்கிறேன்.

சுவாமி விவேகானந்தரின் பிறந்த நாளில் தேசிய இளைஞர் திருவிழா கொண்டாடப்படுவது மிகவும் பொருத்தமாகும். இந்தியாவை உயர்ந்த நிலைக்குக் கொண்டுசெல்வதில் இளைஞர்கள் மீது அவர் பெரும் நம்பிக்கை வைத்திருந்தார்.

நாகரீகம் இந்தியாவில் ஆழமாக வேரூன்றியுள்ளது. நம்முடைய தாய்நாடு மற்றவர்களுக்கு நாகரீகத்தையும் பண்பாட்டையும் கற்பித்து, புராதன காலத்தில் தமிழகத்தைச் சேர்ந்த கடற்பயணம் செய்வோர், கிழக்கிலும் மேற்கிலும் நீண்ட தொலைவுக்குப் பயணம் செய்தனர்.

தமிழ்மொழி சிறந்த மொழிகளில் ஒன்று. அது பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் தோன்றியது. அது எங்கள் அறிவுடைமை மேம்பாட்டிற்கு ஆதாரமாகத் திகழ்கிறது.

இந்தியா விஞ்ஞானத்திலும் கலைகளிலும் பல்வேறு துறைகளில் சிறந்து விளங்குகிறது. நாம் நம்முடைய பாரம்பரியம் பற்றிப் பெருமை கொள்ள முடியும்.

*"பாரத நாடு பழம் பெரும் நாடு*
*நீரதன் புதல்வர் இந் நினைவகற்றாதீர்"*

- இவை கவிஞரும் சுதந்திரப் போராட்ட வீரருமான பாரதியின் தங்கச் சொற்கள். இந்தச் சொற்கள் நம்முடைய கடமையை நமக்கு நினைவூட்ட வேண்டும். புகழ் பெற்றிருந்த கால நிலைக்கு இந்தியாவை மீண்டும் கொண்டு செல்வதுதான் அந்தப் பணி.

இங்கே கூடியிருக்கும் நீங்கள், நாங்கள் எல்லாம் சுதந்திரம் பெற்றதற்குப் பிற்பட்ட காலத்தைச் சேர்ந்தவர்கள். நீங்கள் சுதந்திரத்தின் பலன்களை அனுபவித்துக் கொண்டிருக்கிறீர்கள். நாம் சுயநலமின்மையாலும் தியாகத்தினாலும் சுதந்திரத்தைப் பெற்றோம். கடுமையாகப் போராடிப் பெறப்பட்ட, அந்தச் சுதந்திரத்தை நாம் காப்பாற்றுவதுடன் கடந்த காலத்தின் புகழ்பெற்ற நிலைமையை மீண்டும் உருவாக்க வேண்டும்.

அதற்கு ஓய்வில்லாத முயற்சிகள் தேவை. நாம் அமைதியாகவும் துணிவோடும் அதற்காகப் பணியாற்றுவோம். தேவையற்ற விஷயங்களில் நாம் நம்முடைய காலத்தையும் சக்தியையும் விரயமாக்காமல் இருப்போம்.

உலகின் பல்வேறு பகுதியைச் சேர்ந்த பறவைகள் தமிழ் நாட்டில் உள்ள வேடந்தாங்கலில் கூடுவதைப் போல், இந்தியா முழுவதிலும் உள்ள பிரதிநிதிகள் இந்த விழாவின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக இங்கே கூடியுள்ளனர். நட்பு, சமாதானம் மற்றும் வளர்ச்சிதான் அந்த நோக்கங்கள். மனித குலத்தைச் சேர்ந்த அனைவரையும் சமமாக நடத்தும் போதுதான் இந்த கொள்கைகளை நிறைவேற்ற இயலும்.

**இத்தகைய விழாக்கள் ஒன்றுபட்ட மனப் பான்மையை உருவாக்க வேண்டும்.**

அடிப்படை மனித மதிப்பீடுகளுக்கு முக்கியத் துவம் அளிக்கப்படாவிட்டாலும் நீடித்த நட்புறவைச் சாதிக்க முடியாது. இந்த வகையான ஒரு விழா இந்தியர்களிடையே ஒன்றுபட்ட மனப்பான்மையை உருவாக்க வேண்டும். வளர்ச்சியின் பலன்கள் சமுதாயத்தின் அனைத்துப் பிரிவினரையும் சென்றடைய வேண்டும்.

குறிப்பாக, நலிந்த பிரிவினரை அவை சென்றடைய வேண்டும். அத்தகைய நலிந்த பிரிவினருக்கு நீங்கள் அனைவரும் உதவி செய்ய வேண்டும் என்பதே என்னுடைய உண்மையான வேண்டுகோளாகும். சக்தியும் முயற்சிகளும் ஆக்கபூர்வ நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட வேண்டும். ஏழைகளின் நலனை மேம்படுத்த அரசாங்கங்கள் மேற்கொள்ளும் முயற்சி களுக்கு இது துணைபுரியும்.

இளமை அற்புதமான சக்தியையும் ஆற்றலையும் பெற்றுள்ளது. நாட்டை உருவாக்குவதில் பயனளிக்கும் நடவடிக் கைகளில் நீங்கள் ஈடுபட வேண்டும். திடநம்பிக்கையுடன் கூடிய துணிவு இருக்கும்போது முன்னேற்றப் பாதையில் உள்ள இடையூறுகள் நீர்க்குமிழிகள் போல் மறைந்துவிடும். தற்காலிகக் கவர்ச்சி உங்களுடைய முன்னேற்றத்திற்கான பயணத் திலிருந்து உங்களைத் திசை திருப்பிவிடக் கூடாது. தற்காலிக லாபங்கள் சமாதானத்திற்கும் வளர்ச்சிக்கும் அழைத்துச் செல்லாது.

### கிராமப்புற இளைஞர்களுக்காகப் பல்வேறு நலத்திட்டங்கள்

ஆற்றல் மிக்க உயிரோட்டமுள்ள நாடாக இந்தியாவை உருவாக்கும் இலட்சியத்தை நோக்கி இளைஞர்கள் உறுதி பூண்டு உழைக்க வேண்டும் என்பது என்னுடைய பெரும் விருப்பமாகும்.

இந்தியாவில் உள்ள மொத்த இளைஞர்களில் கிராமப்புற இளைஞர்கள் 78.4 சதவிகிதம் பேர் ஆவர். அதனால்தான் எங்கள் தமிழக அரசு கிராமப்புற இளைஞர்களின் நலனுக்காகப் பல்வேறு திட்டங்களை அமல்படுத்தி வருகிறது.

### இரண்டு ஆண்டுகளில் பணியமர்த்தப்பட்ட இளைஞர்கள்

கடந்த இரண்டு ஆண்டுகளில் இருபத்தை யாயிரத்துக்கு மேற்பட்ட இளம் ஆசிரியர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

சாலைகளைப் பராமரிப்பதற்காக 10 ஆயிரம் இளைஞர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

மக்கள் நலப் பணியாளர்களாகப் பதி மூன்றாயிரம் இளைஞர்கள் பணியமர்த்தப்பட் டுள்ளனர்.

அரசு மருத்துவமனைகளில் அறுநூறு இளம் டாக்டர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

தமிழ்நாடு மின்சாரவாரியத்தில், சுமார் ஆயிரம் இளைஞர்கள் தொழில் நுட்ப உதவியாளர்களாகப் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

பத்தாயிரத்துக்கு மேற்பட்ட இளைஞர்களும், இளம் பெண்களும் எங்கள் மாநிலத்தில் உள்ள தமிழ்நாடு போலீஸ் படையில் சமீபத்தில் இணைந்தனர்.

மேலும் பத்தாயிரம் இளைஞர்களும், இளம் பெண்களும் எங்கள் போலீஸ் படையில் சேர்க்கப்படவுள்ளனர்.

**“ திடநம்பிக்கையுடன் கூடிய துணிவு இருக்கும்போது முன்னேற்றப் பாதையில் உள்ள இடையூறுகள் நீர்க்குமிழிகள் போல் மறைந்துவிடும். தற்காலிகக் கவர்ச்சி உங்களுடைய முன்னேற்றத்திற்கான பயணத்திலிருந்து உங்களைத் திசை திருப்பிவிடக் கூடாது. ”**

### கிராமப்புற இளைஞர்களுக்கு 15 சதவிகித இடஒதுக்கீடு

பொறியியல், மருத்துவம், பல் மருத்துவம், விவசாயம், கால்நடை மருத்துவம், சட்டம் மற்றும் சித்த மருத்துவம் போன்ற தொழிற்கல்விப் படிப்புகளில் கிராமப்புற மாணவர்களுக்கு 15 சதவிகித இடஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

விடுதலைப் போராட்ட வீரர்கள் சுதந்திர தீபத்தை இளைய தலைமுறையினரின் கரங்களில் ஒப்படைத்துள்ளனர். இதை ஒரு மெழுகுத் திரியாகக் கருதக் கூடாது. இது கோடிக் கணக்கான மக்களுக்கு ஒளி கொடுக்கும் ஒரு தீபம். அந்தப் பணியைச் சாதிக்க, சுதந்திரப் பொன்விழா கொண்டாடும் இவ்வேளையில் நாம் உறுதி ஏற்போம்.

இந்த மகிழ்ச்சியான வேளையில் எங்கள் அரசு ‘‘தமிழ்நாடு இளைஞர் நலக் கொள்கை’’யை உருவாக்கி வருகிறது என்பதைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். இங்கே கூடியுள்ள அனைவரும் இந்த விழாக் காலத்தில் இங்கே மகிழ்ச்சியுடன் தங்கியிருக்க வாழ்த்துகிறேன்.

விவேகானந்தரின் பிறந்தநாள் என்பதால் அவருடைய புகழ்பெற்ற சொற்களான,

***“எழு, விழி, இலட்சியத்தை எட்டும்வரை நில்லாதே”***

- என்ற சொற்களைக் கூறி என் உரையை நிறைவு செய்ய விரும்புகிறேன். ★

# புத்தாண்டே வருக!

மா. சு. சம்பந்தன்

(தமிழ்நாடு அரசின் 1997க்கான 'திரு.வி.க. விருது' பெற்றவர்)



இப்பூவுலகம், பல கோடி ஆண்டுகளுக்கு முன்பு செஞ்ஞாயிற்றிடமிருந்து தெறித்துவிழுந்த ஒரு துண்டாகும். இது முதலில் அனற் பிழம்பாய் எரிந்தும் கொதித்தும் கனலை உமிழ்ந்தும் சுமார் ஒரு நூறு கோடி ஆண்டுகளாய்க் கிடந்தது. இதற்குப் பின்பு ஒரு கோடி ஆண்டு வரை தணிந்து தணிந்து இறுகத் தொடங்கியது. இறுகி இறுகி மலைகளும் கடல்களும் தோன்றின. இம்மலைகளிலும் கடல்களிலுந்தான் முதன்முதலில் உயிர்கள் உண்டாயின. அவ்வுயிர்கள் பிறகு ஓரறிவு முதல் ஆறறிவு வரை வளர்ந்தன. ஆறாவது அறிவாகிய பகுத்தறிவுடன் மனமும் சேர்ந்து மனிதன் தோன்றினான்.

மேற்சொன்ன முறையில் இவ்வுலகில் முதன்முதலில் சூடு குறைந்து இறுகிய பகுதி தென்னிந்தியாவை (நாவலம்) உள்ளடக்கியிருந்த லெமூரியாக் கண்டந்தான். ஏனெனில், அன்றைய தென்னிந்தியா (லெமூரியா) நில நடுக்கோட்டிற்கு (Equator) அருகில் இருந்தது. இன்றுள்ள ஆஸ்திரேலியாவும் ஆப்பிரிக்காவும் அன்று லெமூரியாக் கண்டத்துள் அடங்கியிருந்தன.

உயிர் வகைகள் படிப்படியாக வளர்ந்து, சிறந்து குரங்குக்கு அடுத்தபடியான லெமூர் (Lemur) என்னும் காட்டு மாந்தனிடமிருந்து மனிதன் தோன்றினான். அவன் பேசிய மொழியே உலகத்தின் மிகப் பழமையான தமிழ் மொழியாகும். இந்த லெமூரியாக் கண்டத்தின் பகுதியே **'உலக நாகரிகத்தின் தொட்டிலாக'**க் கருதப்படுகிறது.

(The Tamils themsleves or their historian, to be more exact, believed that in the remote past the Tamil homeland was situated in the Southern part of Nawalan, a large island that was one of the first land masses to rise near the equator, and that Lemuria, a lost continent considered to be the cradle of civilization, was part of the same region - See Alexander Kondrators "The Riddles of Three Oceans", published by Progress Publishers, Moscow in 1974. Page 122).

மனித நாகரிகமே மலைப்பகுதியிலிருந்துதான் துவங்கியுள்ளது. குகை வாழ்வே குடும்ப வாழ்வாக மலர்ந்தது. தமிழர் முதலில் மலையும் மலை சார்ந்த பகுதியான குறிஞ்சி நிலத்திலிருந்து பசியெடுத்தபோது காய்கனிகளை உண்டனர்; வேட்டையாடி விலங்குகளைக் கொன்று தின்று காலங்கழித்தனர். இப்போது இவர்கள் குறவர் எனப்பட்டனர். இக்குறிஞ்சி வாழ்க்கை கற்காலத்தைச் சேர்ந்ததாகும். பின்னர் அவர்கள் காடும் காடுசார்ந்த பகுதியான முல்லை நிலத்தில் தங்கி வாழ்ந்தனர். இங்கு அவர்கள் வேட்டைக்கு உதவியான விலங்குகளைப் பிடித்து வளர்த்து வந்ததால் ஆயர் எனப்பட்டனர். ஆடு மாடுகளைப் பெருத்த அளவில் உடையவன் கோன் (தலைவன்) ஆனான். பின்னர் இது அரசுக்கு அடிகோலியது. இவ்விடத்திலிருந்து கடலும் கடல் சார்ந்த பகுதியுமான நெய்தல் நிலத்திற்கு வந்தனர். விலங்கு வேட்டைக்குப் பதில், கடல் வேட்டையாடியதால், இங்கு மக்கள் பரதவர் எனப்பட்டனர். இதுவரை - தனித்தனியாகவும் நாடோடியர்களாகவும், வாழ்க்கை நடத்தி வந்த தமிழர்கள் இறுதியாக வயலும் - வயல்சார்ந்த பகுதியுமான மருதநிலத்திற்கு வந்த பிறகே- தமக்கென ஒரு குடும்பம் ஏற்படுத்திக் கொண்டு ஓரிடத்தே நிலைத்து நின்று உழுது பயிரிட்டு வாழமுற்பட்டனர்.

இதற்கு மருதநில வாழ்க்கை என்று பெயர். இம்மருத நிலத்திலே முதன்முதலாகக் குடியாட்சி ஏற்படத் துவங்கியது. மேற்சொன்ன குறிஞ்சி, முல்லை, நெய்தல், மருதம் என்னும் நால்வகை நிலத்திணைகளைத் தமிழரின் தொல்காப்பியமும்



சங்க இலக்கியங்களும் அழகாகவும் நுட்பமாகவும் எடுத்துரைக்கின்றன.

கரடு முரடாக இருந்த நிலத்தைச் சீர்திருத்திப் பயன்படுத்திப் பயிர் செய்வதற்கு ஏற்ற விளைநிலமாக மாற்றுவதற்கு மக்கள் பெரும்பாடுபட்டனர். அவர்கள் தொடக்கத்தில், மழையையே பெரிதும் நம்பிப் பயிர்த்தொழிலைச் செய்ய முற்பட்டனர்; ஏரிகளை அமைத்தனர்; வாய்க்கால்களை உண்டாக்கி வேளாண் மைக்கு ஏற்றவகையில் அமைத்துக்கொண்டனர்.

வானம் பார்த்த - மானாவாரிப் பயிர்களான தினை, வாகை, கொள்ளு போன்றவற்றைப் பயிரிட உழைப்புக் குறைவு; அதற்கேற்றபடி ஊதியமும் குறைவாகவே கண்டு முதலாயிற்று; கிணறும், குளமும் ஏரியும் அணைக்கட்டும் பயிர்த்தொழிலுக்குப் பலவழிகளில் பயன்படுபவையாக இருந்தன; இருக்கின்றன.

எக்காலத்தில் எதை விதைத்தால் சீக்கிரத்தில் பலன் கிட்டும் என்ற பட்டறிவு வேளாண் மக்களுக்கு நாளாவட்டத்தில் ஏற்பட்டது; அதன் விளைவாகவே குறுகிய காலப் பயிர்களை மக்கள் பயிர் செய்ய முற்பட்டனர். இதனால் வானம் பொய்த்தாலும், பாடுபட்டுப் பயிரிட்ட வைகளைப் பக்குவமாகக் காப்பாற்றி விளைச்சலைக் காணமுடிந்தது.

தமிழர்கள் ஓராண்டை 12 மாதங்களாகப் பிரித்தனர். அவற்றுள் சித்திரை வைகாசி மாதங்களை இளவேனிற் காலமாகவும், ஆனி, ஆடியை முதுவேனிற்காலமாகவும், ஆவணி புரட்டாசியைக் கார்க்காலமாகவும், ஐப்பசி, கார்த்திகையைக் குளிர்காலமாகவும் , மார்கழி, தையை முன்பனிக்காலமாகவும், மாசி, பங்குனியைப் பின் பனிக்காலமாகவும் 'ஆறு பெரும்பிரிவு'களைப் பொழுது களாகப் பிரித்துக் கொண்டனர்.

தமிழர்கள் காலத்தை - நொடி, நாழிகை, நாள், கிழமை, மாதம், ஆண்டு, ஊழி என்று வானியல் முறைப்படி வரையறை செய்துள்ளனர். 60 நாழிகையை ஒரு நாளாகவும், ஒரு நாளை - வைகறை, காலை, நண்பகல், ஏற்பாடு, மாலை, யாமம் என்று ஆறு சிறுபொழுதுகளாகவும் கொண்டுள்ளனர்.

ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி என்று ஏழு நாட்களை ஒருவாரமாக ஏற்றுள்ளனர். இவர்கள் தமது **ஆண்டின் தொடக்கத்தைத் தைத்திங்களில்** இருந்து ஆரம்பித்துள்ளனர்.

ஞாயிறு (சூரியன்) போற்றுதல் சிலப்பதிகார காலத்திற்கு முன்பே போற்றப்பட்டு வருகிறது. ஞாயிறே தனது வெப்பத்தின் மூலம் நீர்நிலைகளிலுள்ள நீரை ஆவியாக்குகிறது. பின்னர் அந்நீராவியே மேகமாகக் குளிர்ந்து மழையாகப் பொழிகிறது; அம்மழையே நீர்நிலைகளை நிரப்புகிறது. புல், பூண்டு மரஞ்செடிகளை வளர்க்கிறது. **'விசும்பின்துளி வீழினல்லால் பசும்புல் தலை காண்பதரிது'** என்கிறது திருக்குறள்.

யூத இனத்தினர் கி.மு.3761 ஆண்டிலிருந்து தமது ஆண்டைக் கணக்கிட்டு வருகின்றனர். எகிப்தியர் கி.மு.4236லிருந்தும் கிறிஸ்துவ ஆண்டு கி.பி.1997லிருந்தும் தொடங்குகிறது. இஸ்லாமியர் தமது ஹிஜ்ரா ஆண்டை கி.பி.622லிருந்து தொடர்ந்து கணக்கிட்டு வருகின்றனர். மலையாளிகள் கொல்லம் ஆண்டைத் தொடக்கமாக ஏற்றுள்ளனர். கன்னடத்தினரும், தெலுங்கர்களும் யுகாதியைத் தமது ஆண்டின் தொடக்கமாகக்

கொண்டுள்ளனர். தமிழ்ச்சான்றோர்கள் திருவள்ளுவர் ஆண்டை கி.மு.31 முதல் தொடக்கமாக நிர்ணயித்துள்ளார். திருவள்ளுவர் ஆண்டையே தமிழக அரசும் ஏற்றுப் பின்பற்றி நடைமுறைப்படுத்தி வருகிறது. திருவள்ளுவர் ஆண்டை ஏற்றுக்கொண்டுள்ள தமிழர் அனைவரும், சென்னை நகரையே மத்திய கணிப்பு இடமாகக் கொள்ள வேண்டும். மத்திய அரசும் இதனை ஏற்றுக்கொள்ளும்படி வற்புறுத்த வேண்டும். அப்போதுதான் மாத ஆரம்பத்தில் ஏற்படும் குறைகளும், குளறுபடியும் நீங்கும்.

தமிழர் திருநாளான தைத்திங்கள் முதல் நாள் அறுவடைத் திருநாளாகும். ஆண்டு முழுவதும் பயிரிட்டுப் பாடுபட்டு விளைச்சல் கண்டு மகிழ்ச்சி அடையும் நாளாகும். அறுவடை நாளில், பாடுபட்ட மக்கள், தாம் உழைத்த உழைப்பின் பின்விளைவைக் கண்டு மகிழ்வுறும் திருநாளாகும். உழைப்பின் பெருமையை உணர்த்தி உள்ளக் கணிப்பைப் பொங்குவிக்கும் - பகுத்தறிவுக்கு ஒத்த பெருமை பெருநாளாகும். புத்தம் புதிய அரிசியைப் புதுப்பானையில் இட்டுப் பொங்கி, இனிப்புக் கலந்து, பலவித காய்கறிகளைச் சுவையுடன் சமைத்துத் தொடு பதார்த்தங்களாகக் கொண்டு, புத்தாடை பூண்டு தமது இனிய மக்களுடன், இல்லாளுடன், உற்றார், உறவினருடன் மகிழ்ந்து உண்டு களிப்புக் கொள்ளும் பெருநாளாகும்.

தான் உழுது பயிரிட்டதற்கு உற்ற உதவியாக இருந்த மாடு, கன்றுகளைக் குளிப்பாட்டி, அணிகலன்களைப் பூட்டி, அழகுபடுத்தி அவைகளையும் உற்ற உதவியாளர்களாகக் கொண்டு, கொண்டாடும் திருநாளே - மாட்டுப் பொங்கல் விழாவாகும். தனக்கு உதவிபுரிந்த துணைவர்களுக்கு உற்ற உடைகளை அன்பளிப்புத் தந்து அவர்களையும் பெருமைப்படுத்தும் 'காணும்பொங்கலாகும்'. அறுவடைத் திருநாளான பொங்கலைத் தமிழக நாட்டுப் புறங்களில் கோலாகலமாகக் கொண்டாடுகின்றனர். தமிழக நகரங்களிலும் பொங்கல் திருநாளைக் கூட்டங்கூட்டி, சிறப்புரை ஆற்றி, பெருமைப்படுத்துகின்றனர் தமிழ் மக்கள்.

தை முதல் நாளை - பொங்கல் திருநாளை - ஆண்டுத் தொடக்கமாக விஞ்ஞானபூர்வமாகக் கண்டறிந்து தமிழ்ச் சான்றோர்களும், பல்வேறு கட்சியினரும் தமக்குரிய திருநாளாக மகிழ்ச்சியோடு பெருமையாக ஆண்டுதோறும் கொண்டாடி வருகின்றனர்.

# அறிவொளி இயக்கம்



**– கோ. சண்முகம்**

பட்டி தொட்டிப் பாமரரும்
படித்துப் பலவும் தெரிந்திடவே
பலருக்கும் அறிவுக்கண் திறப்பது
எங்கள் கொள்கையாம் அறிவொளியே.

சுற்றிவரும் சுடர்த்தீபம்
பற்றிடவேண்டும் பாரெங்கும்
அதனால் பெற்றிடவேண்டும் அறிவுத்தீபம்
அதுவே எங்கள் சுடர்த்தீபம்!

நாடு நல்ல நாடு
நல்லறிவு பெற்றதெங்கள் நாடு
கூடி வாருங்கள் கற்பதற்கே
கோடி நன்மை பெறுவதற்கே.

கருத்தாய் நாமும் கற்பதனால்
நாடும்வீடும் உயர்ந்திடுமே
அறிவொளி அனைவரும் பெற்றிடுவோம்
அன்பாய் நாமும் இருந்திடுவோம்.

கைம்மண் அளவு கற்பதனால்
நம்மொழி பெற்றிடும் முதிர்ச்சி
செவிக்கோ அது இன்ப அதிர்ச்சி
இதுவே நம்நாட்டின் வளர்ச்சி

அறிவொளி இயக்கம் -
இது அறிவுக்கு விருந்து
அறியாமைக்கோ மருந்து!

தைத்திருநாள் முத்தமிழ்ப் பெருவிழாவாக - இயல், இசை, நாடக விழாவாக - அறிஞர் அண்ணா, புலவர் கா.கோவிந்தனுடன் காஞ்சிப் பகுதியிலும், பிற இடங்களிலும் கொண்டாட வழிவகுத்துச் சென்றுள்ளார். தைத்திருநாளில், இன்னிசை நிகழ்ச்சிகளும், இலக்கியச் சிறப்பு நிகழ்ச்சிகளும், நாடெங்கும் கொண்டாடப்பட்டு வருகின்றன. தைத்திருநாளில் திருவள்ளுவர் விருது அளித்தும், பெரியார் விருது அளித்தும் தமிழக முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி பெருமை கூட்டிவருகிறார். ஆண்டுதோறும் தை மாதத் தொடக்கம் திருவள்ளுவராண்டு கொண்டாடப்பட்டுவரும் திருநாளாகும். கற்றவர்களும், கட்சிக்காரர்களும் அரசியலாரும், பொதுமக்களும் தனித்தும் இணைந்தும் தங்கள் தங்கள் சக்திக்கு ஏற்றவகையில் கொண்டாடப்பட்டு வரும் - தமிழ்த்தேசியப் பெருவிழாவாகும். இது தமிழகம் கடந்து, தமிழர் வாழும் இடங்களிலெல்லாம் சிறப்பாகக்கொண்டாடப்பட்டு வரும் உலக விழாவாகும். ★



# அவர்தான் பெரியார்

திரு. 'தவமணிராசன்'
(1997ஆம் ஆண்டின் 'பெரியார் விருது' பெற்றவர்.)

**1942**லேயே பகுத்தறிவுச் சிந்தனைகள் பரவிட மாணவர் அமைப்பு உருவாக வித்திட்டவர்களில் ஒருவர் என்ற பெருமைக் குரியவர்.

என் அப்பா முனிசிபல் கமிஷனராக இருந்தார். அவர் பெயருக்கு 'விடுதலை' பத்திரிகை தபாலில் வரும் அதைப் படிப்பேன். அதிலிருந்து ஆழ்ந்த ஈடுபாடு ஏற்பட்டது.

கும்பகோணம் அரசு கலைக் கல்லூரியில் நான் பி.ஏ. படித்தபோது எம்.ஆர்.ராதா ஒரு நாடகம் நடத்தினார். 'விமலா அல்லது விதவையின் கண்ணீர்' என்ற சுயமரியாதைக் கருத்து நாடகம். ராதாவைப் பாராட்ட, அண்ணாவை அழைத்து வந்து நிகழ்ச்சி நடத்தினேன். அப்போதுதான் திராவிடர் மாணவர் கழகம் சாா்பில் விழா நடத்தினேன்.

குடந்தையில் ஒரு பள்ளியில் பிராமணர் களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த தண்ணீர் பானையில் பிராமணர் அல்லாத மாணவர் தண்ணீர் மொண்டு குடித்ததால் அபராதம் விதிக்கப்பட்டது. இச் சம்பவத்தால் குடந்தை திராவிடர் மாணவர் கழகம் தோன்றியது. நான் அதன் தலைவன். திராவிடர் கழகம் என்பது பின்னால்தான் ஏற்பட்டது.

கல்லூரியில் படிக்கும்போது பெரியாரை அழைத்து ஒரு பொதுக்கூட்டம் நடத்தினோம். அதில் தமிழாசிரியர் ஜானகிராமன் என்பவர் வாழ்த்துக் கவிதை படித்தார். கல்லூரி நிர்வாகம் எங்கள் இரண்டு பேருக்கும் காரணம் கேட்டு நோட்டீஸ் கொடுத்தது.

அப்போதெல்லாம் செலக்ஷன் தேர்வு எழுதிவிட்டுப் பிறகுதான் பி.ஏ. தேர்வு எழுத முடியும். நான் செலக்ஷன் தேர்வில் வெற்றி பெற்றுவிட்டதால், இக்கல்லூரி என்னை மாணவன் என்ற முறையில் கட்டுப்படுத்தாது என்று நோட்டீசுக்குப் பதில் கொடுக்கச் செய்தேன். கல்லூரி முதல்வர் என்னைச் சமாதானம் செய்தார். 'பெரியாரை நம் கல்லூரிக்கு அழைக்க வேண்டும்' என்றேன். அவரோ, 'பெரியார் வரலாம், ஆனால் பேசக்கூடாது' என்று நிபந்தனை விதித்தார்.

நானும் பெரியாரை அழைத்து வந்தேன். தேநீர் விருந்து கொடுத்தோம். பெரியார் என்றால் அவர்தான் பெரியார். நன்றி சொல்லாமலேயே விடைபெற்றார்.

'அதான் நான் பேசக்கூடாதே!' என்றார்.

அண்ணாவை அழைத்துவந்து, கல்லூரியின் ஆங்கிலப் பேரவையில் பேசவைத்தேன்.

ஆங்கிலப் பேரவையின் தலைவராக இருந்த மாணவர் பிராமணர். அவர் அறிமுக உரையில் சொன்னார். அண்ணாதுரை தமிழகத்தில் நன்கு அறிமுகமானவர். பேச எடுத்த தலைப்பை மட்டும் நியாயமாகப் பேசுவார். (Annadurai is well known person in Tamilnadu. I hope he will speak judiciously on the subject) அரசியல் பேசாதே என்று இதற்கு அர்த்தம். அண்ணா பேசும்போது, "நான் நன்கு அறியப்பட்டவன் அல்ல; பல பகுதிகளில் தவறாக அறியப்பட்டவன். நியாயம் பேச நான் வழக்குரைஞன் அல்ல" என்று பதிலடி கொடுத்தார். (Annadurai is not well known; but ill-known in many quarters . I am not a lawyer to speak judiciously...) அதுமட்டுமல்ல; 'மாணவர் களை அனுப்பி வையுங்கள். நான் பயன்படுத்திக் கொள்கிறேன்' என்று பேச்சை முடித்தார்.

கல்லூரிப் படிப்பு முடித்த பின்னர் பெரியார் கொள்கைகளை வலியுறுத்திப் பிரச்சாரம் செய்தேன்.

தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தின் சேலம் மாநாட்டில் பெரியாரை நீதிக்கட்சியிலிருந்து நீக்கவேண்டும் என்ற திட்டம் இருந்தது. இதை அறிந்த பெரியார், 'அண்ணாவின் தீர்மானங்கள்' என்று 'குடியரசு' பத்திரிகையில் செய்தி வெளியிட்டார். அது உண்மையில் ஐயா (பெரியார்) எழுதிய தீர்மானங்கள்தான். அந்தத் தீர்மானங்களால் சேலம் மாநாட்டில் பெரியாரை நீக்கும் எண்ணம் ஈடேறவில்லை. அந்த மாநாட்டுக்கு நானும் போயிருந்தேன். குடந்தை கே.கே.நீலமேகம் என்னைப் பெரியாரிடம் அழைத்துப் போய், இவன் உங்களுடனே இருக்க ஆசைப்படுகிறான் என்றார். பெரியாரிடம் ஒரு நல்ல பழக்கம். யாரையும் "வா" என்றும் சொல்லமாட்டார். "போ" என்றும் சொல்ல மாட்டார். நாங்களாகத்தான் போனோம்; நாங்களாகத்தான் வந்தோம்.

பெரியாருடன் ஈரோட்டில் இருந்தபோது 'குடியரசு' பத்திரிகையில் வேலை செய்தேன். அவருடன் எல்லா இடங்களுக்கும் போவேன். பெரியாரிடம் பைசா எல்லாம் கிடைக்காது. சாப்பாடு மட்டும்தான் கிடைக்கும். அறிவுக்கு நிறையத் தீனி கிடைக்கும். கவிஞர் கருணானந்தம், கருணாநிதி (முதல்வர்) எல்லாரும் எனக்கு அங்குதான் நண்பர்களா னார்கள். கருணானந்தம், சர்வீஸ் கமிஷன் தேர்வு எழுதி வேலை கிடைத்துச் சென்றார். ஏ.எஸ்.ஏ.சாமி அழைப்பின் பேரில் திரைக்கதை எழுதக் கருணாநிதியும் சென்றார். நானும் சர்வீஸ் கமிஷன் எழுதினேன். வேலை கிடைத்தது.

சீர்காழியில் தாலுகா ஆபீஸ் கிளார்க்காக இருந்தேன். அங்கு நான் நடத்திய ஒரு பொதுக்கூட்டத்தால் என்னை வேலைநீக்கம் செய்து உத்தரவு வந்தது.

மீண்டும் ஈரோடு வந்தேன். சில ஆண்டுகள் பெரியாருடன் இருந்தேன். மணியம்மை திருமணத்துக்கு எதிராகக் கையெழுத்துப் போட்டவர்களில் நானும் ஒருவன். அதன் பிறகு கோவை நீலகிரி கூட்டுறவு வங்கியில் வேலைக்குச் சேர்ந்துவிட்டேன்.

அதற்காகப் பெரியார் என்னை விட்டுவிடவில்லை. புத்தர் மாநாடு நடத்தியபோது என்னை அழைத்து நிதி திரட்டும் பணியில் ஈடுபடுத்தினார்.

எங்களுக்கு எப்போதும் பெரியார் மேல் மரியாதை உண்டு. ஐயா இடத்தை யாரும் நிரப்ப முடியாது. ஐயா காலத்தில் இருந்த வளர்ச்சி இப்போது கட்சியில் இல்லைதான். பெரியார் இடத்தை நிரப்புவது சிரமம்.

பெரியார் ரொம்ப சிக்கனக்காரர். பைசா பெயராது.

இவரோட பெட்டி படுக்கைகள், புத்தக மூட்டை எல்லாவற்றையும் தூக்க போர்ட்டர் அதிகம் கேட்பான். இவர் அவனுடன் சண்டை போடுவார். கடைசியில் அவர் ஒரு பெட்டியை எடுத்துக்கொண்டு நடப்பார். மணியம்மை ஒரு பெட்டியை எடுத்துக் கொள்வார். வேறுவழியில்லாமல் நானும் மீதி இருப்பதை எடுத்துக்கொண்டு பின்னால் செல்வேன்...


ஒரு சமயம் சேலம் குகையிலிருந்து சென்னைக்கு ரயிலில் போனோம். குகையிலிருந்து சென்னைக்கு எத்தனை மைல் என்று கணக்குப் போட்டு, "ஒன்றரை அணா கூடுதலா கட்டணம் வாங்கியிருக்கான். என்னன்னு கேளு" என்று என்னை அனுப்பினார். சார்ட்டில் உள்ள கட்டணம்தான் என்று சொல்லிவிட்டார்கள். அவர் விடவில்லை. இதைக் குறித்துக் கொள். ஊருக்குப் போய் ரயில்வேக்குக் கடிதம் போடுவோம் என்றார்.

ஒன்றரை அணாவுக்கு இவ்வளவு கணக்குப் பார்த்த பெரியார்தான், மதுவிலக்குக்காகத் தனது தென்னந்தோப்புகளை வெட்டி அழித்தவர். கொள்கைக்காக எதையும் செய்வார்.

காமராஜர் மீது பெரியார் மதிப்பு வைத்திருந்தார். காமராஜர் இரட்டைவாக்குத் தொகுதியில் (திருவண்ணாமலை) போட்டியிட்டபோது பெரியார் மிகவும் தயங்கினார். காமராஜர் வெற்றி பெறுவாரா, மாட்டாரா என்று கவலை. காமராஜர் நேர்மையான அரசியல்வாதி. வெற்றிவாய்ப்புள்ள தொகுதியில் யாரையாகிலும் ராஜிநாமா செய்ய வைத்து, தான் நின்றிருக்கலாம். அப்படிச் செய்யாமல் அந்த நேரத்தில் காலியாக இருந்த திருவண்ணாமலை தொகுதியில் போட்டியிட்டார்.

காங்கிரஸார் அழைக்காமலேயே பெரியார் தன் சொந்தச் செலவில் திருவண்ணாமலை தொகுதி முழுவதிலும் காமராஜருக்காகப் பிரச்சாரம் செய்தார். காமராஜர் வெற்றி பெற்றார். பின்னர் காமராஜர் அழைத்த கூட்டத்தில் கலந்து கொண்டு "பச்சைத்தமிழன் காமராஜர் வாழ்க. காங்கிரஸ் ஒழிக" என்று பேசினார். நல்லவர் என்றால் எதையும் செய்வார்.

மீரான் சாகிப் தெரு வீட்டுச் சாவியை பெரியாரிடம் கொடுக்க வேண்டும் என்று சம்பத் என்னை அழைத்தார். அதற்காகப் போனேன். அங்கே மணியம்மை திருமணத்துக்கு எதிராகக் கையெழுத்து வாங்கிக் கொண்டிருந்தார்கள். அண்ணா என்னிடம் அரைமணி நேரம் வாதாடி கையெழுத்து வாங்கினார். கடைசியாக, நான் கையெழுத்துப் போட்டாலும், 'திராவிட நாடு' இதழில் என் பெயர் 5வது இடத்தில் வந்தது.



மீரான் சாகிப் இல்லத்துக்குப் பெரியார் வந்ததும், "ஐயா நான் கல்யாணத்துக்கு எதிராகக் கையெழுத்துப் போட்டுவிட்டேன், கிளம்பறேன்" என்றேன். "அயோக்கியப் பசங்க" என்று திட்டினார். "சரி, நீ பத்து நாள் இருந்துட்டுப் போ" என்றார். நானும் 10 நாள் தங்கிவிட்டுப் புறப்பட்டேன். ஒரு நாளும் நான் கையெழுத்துப் போட்டது பற்றி என்னிடம் அவர் கேட்டதில்லை.

சாதிக் கலவரங்களை ஒழிக்க கலப்புத் திருமணங்கள் அவசியம். பெயருக்குப் பின்னால் இருக்கும் சாதி என்ற வாலை வெட்டவேண்டும். பெயரை வைத்து சாதியின்


அடையாளத்தை யாரும் அறியமுடியாதபடி செய்ய வேண்டும். இந்த வகையில்தான் என் பெண்களுக்கு நூர்ஜகான், எலிசபெத், செல்வி என்று பெயர் வைத்தேன். மகனுக்குப் பிரபு என்று பெயரிட்டேன்.

என் திருமணத்தில் நான் என் மனைவிக்குத் தாலிகட்டினேன். என் மனைவி எனக்குத் தாலி கட்டினார். இருவரும் மோதிரம் மாற்றிக் கொண்டோம். என் திருமணத்தில் மேளம், ஊர்வலம் கிடையாது. அனைத்துக் கட்சித் தலைவர்களும் வந்திருந்து வாழ்த்தினர். என் திருமணமும் என் மகன், மகள்கள் திருமணமும் புரோகித மறுப்புத் திருமணமாகவே நடந்தன. எந்தவிதமான சடங்குகளும் கிடையாது.

மகன் பிரபுவின் திருமணத்தில் ஒரு ஹிந்து தலைமை வகிக்க, கிறிஸ்துவ நண்பரின் துணைவியார் நடத்தி வைத்தார். முஸ்லிம் பெண்மணி ஜீனத் வாழ்த்துரை வழங்கினார்!

●●●

# மின்வெட்டென்பது அறவே இல்லை!



★ மின்வெட்டே இல்லாமல் தமிழ்நாடு திகழ்ந்து வருகிறது. **முதலமைச்சர் கலைஞரின்** முயற்சியால் 5,355 மெ.வா.மின் உற்பத்தி செய்யும் திறன்கொண்ட, 7 தனியார் மின் திட்டங்களுக்கான மின் கொள்முதல் ஒப்பந்தங்கள் கையொப்பமிடப்பட்டுள்ளன.

★ விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் தொடர்ந்து வழங்கப்படுகிறது.

★ காற்றாலை மூலம் மின் உற்பத்தி மற்றும் சூரியசக்தி போன்ற மரபுசாரா எரிசக்தி மூலம் 311.160 மெ.வா.கூடுதல் மின் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

★ 5 சர்க்கரை ஆலைகளில் 76 மெகாவாட் மின்உற்பத்தித்திறன் கொண்ட இணைமின் உற்பத்தித் திறனமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. இது ஓர் அகில இந்தியச் சாதனையாகும்.

★ துணி, காகிதம், ரசாயனம், சர்க்கரை ஆலைகள் போன்ற தொழில் நிறுவனங்கள், தங்களுக்கு வாய்ப்புள்ள எரிபொருள்களைப் பயன்படுத்தித் தாங்களே மின்னாக்கிகள் மூலம் மின் உற்பத்தி செய்து கொள்ளும் அத்தகைய நிறுவனங்களுக்கு வரிவிலக்குகள் 5 ஆண்டுகள் வரை தரப்பட்டன. 23-9-96 முதல் மேற்குறிப்பிட்ட வகைகளோடு, காற்று, சூரிய சக்தி மூலம் மின் உற்பத்தி செய்து கொள்ளும் நிறுவனங்களுக்கும் சேர்த்து, நிரந்தரமாக வரிவிலக்குச் சலுகை **கலைஞர்** அரசால் வழங்கப்பட்டுள்ளது.

★ 71,046 தெருவிளக்குகளுக்கு மின் இணைப்பு கொடுக்கப்பட்டு கிராமப் பஞ்சாயத்துக்கள், பேரூராட்சிகள் மற்றும் நகராட்சிகள் ஒளியூட்டப்பட்டுள்ளன.

★ இந்தியத் துணைக் கண்டத்திலேயே, தமிழ்நாட்டில்தான் அதிகபட்சமாக, காற்று சக்தி மூலம் ஏற்கெனவே அடைந்துள்ள மின் உற்பத்தித் திறனுடன் 133 மெ.வா. மின் சக்தி உற்பத்தித் திறன் கூட்டப்பட்டுள்ளது.

★ இத்தகு புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் தொழில் நுட்பமே வரும் நூற்றாண்டின் செயல்முறைத் திட்டமாகும். தமிழகம் தற்பொழுது முதலே இதில் வழிகாட்டியாகத் திகழ்கிறது.

★ மின்சார வாரியத்தில், 1000 இளைஞர்கள் தொழில்நுட்ப உதவியாளர்களாகப் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

# அந்த மரம் ரத்தம் வடிக்கவில்லை

- கவிஞர் அப்துல் ரகுமான்


தருவதற்காகவே
கைகளை வளர்த்த மரத்தை
வெட்டி வீழ்த்தியவனே!
நீ செய்த படுகொலையை
நீயே அறிய மாட்டாய்.

நீ மரத்தை வெட்டவில்லை;
உனக்குப் பாலூட்டிய
தனத்தை அறுத்தெறிந்திருக்கிறாய்!

நிழலை, நறுமணத்தை,
சுவையை, அழகைக்
கொன்றிருக்கிறாய்!
மேகங்களைக் காற்றைக்
கொலை செய்திருக்கிறாய்.
உன் சந்ததிகளைப்
படுகொலை செய்திருக்கிறாய்;
நீ செய்தது கொலை அல்ல;
தற்கொலை!

அந்த மரம்
ரத்தம் வடிக்கவில்லை;
கண்ணீர் சொரியவில்லை;
முறையிடவும் இல்லை.

'பிதாவே!
இவன் என்ன செய்கிறோம்
என்று தெரியாமல் செய்தான்;
இவனை மன்னியும்' என்று
நான் பிரார்த்திக்க மாட்டேன்.
ஏனெனில், நீ
பிரார்த்தனையையே
கொன்று விட்டாய்!







# ஓர் இலக்கியப் பார்வை!

கவிக்கொண்டல் **மா. செங்குட்டுவன்**

"இன்று குழந்தைகள் நீங்கள். நாளை இந்த நாட்டினை ஆளப் பிறந்தீர்கள்" என்றார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்.

"இளைஞர்கள் இந்த நாட்டின் ஈட்டி முனைகள்" என்றார் பேரறிஞர் அண்ணா.

ஒரு நாட்டின் இன்றைய தலைமுறையினர் எப்படி உருவாகு கிறார்களோ, உருவாக்கப்படுகிறார்களோ, அதனையொட்டித் தான் ஒரு நாட்டின் எதிர்காலம் அமைய முடியும்.

நமது தமிழ்ச் சமுதாயத்தைப் பொறுத்தவரை பண்டைக் காலந் தொட்டு, இலக்கியங்கள் மக்கள் வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்தே யாத்தளிக்கப்பட்டு வருகின்றன.

"இன்றைய செய்தி நாளைய வரலாறு; இன்றைய இளைஞர்கள் நாளை நாடாளப் போகிறவர்கள்; இளைஞர்களுடைய நோக்கும் போக்கும் எப்படி அமைகின்றனவோ அப்படித் தான் எதிர்காலம் அமையும். எதிர்கால நல்வாழ்வுக்குப் பண்டை இலக்கியங் களோ, இன்றைய இலக்கியங்களோ, வழிகாட்ட இயலுமா என்பது ஒரு கேள்வி.

**இளைய தலைமுறையின் ஐயம்**

இந்தக் கேள்வி இன்றைய இளைய தலைமுறையினரிடையே பெரிதும் தலை தூக்கி நிற்கக் காண்கின்றோம். அவர்கள் இந்த ஐயப்பாட்டினைக் கொள்வதற்கு நியாயம் இருக்கத்தான் செய்கிறது.

கற்காலத்திலிருந்து மாந்தர் தம் வாழ்க்கை தொடங்கி அணுமின்விசை வரை, மனிதன் செய்கின்ற வேலைகள் எல்லாம் கணிப்பொறி செய்து விடுகின்ற இக்காலம் வெறும் இலக்கியத்தை, இலக்கிய ஏடுகளாகப் புரட்டிக் கொண்டு இருப்பதால் பயன் என்ன? என்ற வினா இன்றைய இளைஞர்களிடையே எழுவது இயல்புதான்.

ஆனால் இலக்கியம் என்பது காலத்தின் கண்ணாடி என்பதை மறந்து விடுவதற்கில்லை. இலக்கியங்கள் படைக்கப்பட்டதால்தான் பண்டைக் கால வாழ்க்கை முறையை, வரலாற்றை நாம் தெரிந்து கொள்ளும் வாய்ப்பைப் பெற்றிருக்கின்றோம்.

**காலத்தால் அழியாத இலக்கியம்**

இலக்கியம் கடந்த காலத்தைப் பற்றி மட்டுமன்றி, எதிர்காலம் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு வழிகாட்டி யாகவும் விளங்குகிறது. இலக்கியப் படைப்புகள் காலத்தை வென்று நிலைத்திருப்பதற்கு இதுவே காரணம். திருக்குறள் போன்ற வாழ்க்கை நெறி விளக்க இலக்கியங்கள் காலத்தால் அழியாதவை; எக்காலத்தும் ஏற்றிப் போற்றப்பட வேண்டியவை. இவற்றை யெல்லாம் ஒதுக்கி விட முடியுமா?

அறிவியலையும் பொறியியலையும் மட்டும் அறிந்து கொண்டால் போதுமென்ற மனப்பான்மை இன்றைய இளைய தலைமுறை யினரிடம் இருந்து வந்த போதிலும், நம்முடைய வாழ்க்கை எதிர்காலத்தில் செம்மையாக அமைய வேண்டுமானால், நமது பண்பாடு நிலைக்க, நம்முடைய மொழியைப் பேணிக் காக்க இலக்கியங் கள் இன்றியமையாதவையாகும். அறிவியல் வளர்ச்சியில் முன்னிலையில் இருக்கும் மேலை நாடுகளில் கூட இலக்கியங்களைக் கடலில் வீசி எறிந்து விடவில்லை. இருக்கும் இலக்கியங் களைப் பேணிக் காப்பதிலும், புதுப் புது இலக்கியங்கள் படைப்பதிலும் அவர்கள் தயக்கம் காட்டுவதில்லை.

**எதிர்காலம் ஒளிமயமாகும்!**


நமது நாட்டு இளைஞர்களே, இலக்கியங்கள் இக்காலத் தேவையை நிறைவேற்றக் கூடியவை அல்ல என்ற கண்ணோட்டத்தை விடுத்து, இக்கால தேவைக்கு ஏற்ற இலக்கியங்களைப் படிக்கவோ படைக்கவோ முற்படுவார் களேயானால், எதிர்காலம் ஒளிமயமாக அமையும் என்பதில் ஐயமில்லை.

சந்திர மண்டலத்துக்கு இன்று மனிதன் போய் வந்திருக்கிறான். "சந்திர மண்டலத்தை எட்ட முடியுமா?" என்று, சந்திர மண்டலத்தில் மனிதன் காலடி எடுத்து வைக்கும் வரை ஒவ்வொரு மனிதனும் கேட்டுக் கொண்டிருந்தான். ஆனால் அது நடந்து விட்ட பின்னர் வியப்பிலே ஆழ்ந்து மூக்கிலே விரலை வைக்கின்ற மனிதர்களைக் கண்டோம். இதனை அன்றே வடலூர் இராமலிங்க அடிகள் கற்பனையாகப் பாடவில்லையா?

"நாதர்முடி மேலிருக்கும் வெண்ணிலாவே
அங்கே
நானும் வரவேண்டுகின்றேன்
வெண்ணிலாவே!"

-என்று வடலூர் வள்ளலார் பாடினாரே! அவர் பாடியது கற்பனையன்று; நடக்கக் கூடிய காரியம் தான் என்பதை இன்று உலகம் மெய்பித்து விட்டது.

"காசியில் இருக்கும் புலவர்கள் பேசுவதைக் காஞ்சியில் இருப்பவர்கள் கேட்க ஒரு கருவி செய்வோம்" என்று அன்றைக்கே பாரதியார் சொல்ல வில்லையா?




அன்று பாரதியார், சொல்லியபடி இன்று வானொலியும், தொலைக் காட்சியும் வந்து விட வில்லையா?

அன்று கவிஞன் கற்பனையாகச் சொன்னது இன்று நடைமுறைக்கு வந்திருக்கிறது. இது கவிஞனின் கனவு அல்லவா? இலக்கியத்தினால் ஏற்பட்ட உந்து சக்தியல்லவா?

**அறிவியலும், பொறியியலும் முன்னோடி**

வானொலி வடிவெடுத்தது மேலை நாட்டிலே என்றாலும் கீழை நாட்டிலே உள்ள கவிஞனும் இப்படி ஒரு கற்பனை செய்திருக்கிறான் அல்லவா? இன்றைய இளைஞர்கள் ஆர்வம் காட்டாமல் இல்லை. அவர்களுடைய நோக்கம் புரிகிறது; தாக்கமும் புரிகிறது. வாழ்க்கையில் முன்னேறத் துடிக்கும் இன்றைய தலைமுறையினரே இலக்கியம் அதற்கு உதவவில்லையே என்று ஆதங்கப்படுவதும் நமக்குப் புரியாமல் இல்லை. ஆனாலும், அறிவியலுக்கும் பொறியியலுக்கும் இலக்கியந்தான் முன்னோடி என்பதை மறுப்பதற்கில்லை.

**'மானிடம் என்றொரு வாளும் - அதை**
**வசத்தில் அடைந்திட்ட உன்இரு**
**தோளும்**
**வானும் வசப்பட வைக்கும்'**

- என்றார் பாவேந்தர் பாரதிதாசன். வானொலியை வசப்படுத்தி, வையத்தையே அடக்கி, மனிதன் படைத்து வரும் அறிவியல் சாதனைகளையெல்லாம் ஒரே வரியில் அன்றே சொல்லிவிட்டார் பாரதிதாசன்.

இன்னும் சொல்லுகிறார் . . .

**'மானிடம் என்பது புல்லோ ? - அன்றி**
**மரக்கட்டைகளைக் குறிக்க வந்த**
**சொல்லோ ?**
**கானிடை வாழ்ந்ததும் உண்டு - பின்னர்**
**கடலை வசப்படச் செய்ததும் அதுதான் !'**

இவையெல்லாம் இலக்கியங்கள் மனிதனுக்கு வழங்கும் தன்னம்பிக்கை வரிகள் அல்லவா?

**வேகமும் விவேகமும் தேவை**

வேகமாகவும், விரைந்தும் முன்னேறிக் கொண்டிருக்கிறது இந்த உலகம். அந்த வேகத்துக்கு ஏற்றவாறு இன்றைய இளைய தலைமுறையினர் தங்களை ஆக்கிக் கொள்ள வேண்டும் என்கின்ற அறிவுரை ஒருபுறமிருந்தாலும், உருப்படியான முன்னேற்றத்திற்கு வழிகாட்டக் கூடியதாக இருக்க வேண்டும் அல்லவா? வேகமும் விரைவும் இருக்க வேண்டும். அத்துடன் விவேகமும், அறிவுத் தாகமும் இருந்தாக வேண்டும். பெறப்படுகின்ற அறிவு நாட்டுக்குப் பயன்படுவதாக அமைய வேண்டும்.

நடையிலே, உடையிலே, பழக்க வழக்கங்களிலே, பண்பாட்டிலே பிற நாட்டினரைப் பின்பற்றுவதில் நம் நாட்டு இளைய தலைமுறையினர் காட்டுகின்ற ஆர்வம், எங்கே நம் தமிழ்ப் பண்பாட்டை, நாகரீகத்தை, இலக்கிய உணர்வை மறக்கச் செய்துவிடுமோ என்கின்ற அச்சமும், ஐயப்பாடும் முதியோர்களிடையே இருக்கத்தான் செய்கின்றன.

படிப்பதில் கூட ஆழ்ந்து படிக்க இன்றைய தலைமுறையினர் விரும்புவதில்லை; மேலோட்டமாக நுனிப்புல் மேய்வது போலத்தான் படிக்கிறார்கள்.

தமிழ் இலக்கியங்களைப் படிக்கும் வழக்கம் இன்றைய இளைய தலைமுறையினரிடையே அவ்வளவாக இல்லை என்றே சொல்லாம். திரைப்படம் பார்ப்பதிலே, உள்ள ஆர்வம், தீந்தமிழ் இலக்கியம் சுவைப்பதிலே அவர்கள் காட்டுவதில்லை.

"கிரிக்கெட்" விளையாட்டைப் பார்ப்பதிலே, அதைப் பற்றிக் கேட்டறிவதிலே காட்டும் ஆர்வம், இலக்கியக் கூட்டங்களுக்குப் போவதிலே, இலக்கியச் சொற்பொழிவைக் கேட்பதிலே அவர்கள் காட்டுவதில்லை.

ஒவ்வோர் இனத்துக்கும் மொழி விழியைப் போன்றது. அதுவே வாழ வழியைக் காட்டுவது என்னும் உண்மை நெஞ்சத்திலே, பதிந்தாக வேண்டும். இலக்கியம் என்பது யாரோ சில புலவர்களுக்கே உரியது என்று கருதிவிடக் கூடாது.

நாட்டில் பெரும் புரட்சியை உருவாக்கிய இலக்கியங்கள் உண்டு மறுமலர்ச்சியை ஏற்படுத்திய இலக்கியங்கள் உண்டு. அடிமைத் தளையிலிருந்து நாட்டை விடுவிக்கப் படைக்கப்பட்ட இலக்கியங்கள் உண்டு. ஆண்டான்-அடிமை முறையை ஒழித்துக் கட்ட, எழுதப்பட்ட இலக்கியங்கள் உண்டு.

ஒரு நாடு எப்படி இருக்க வேண்டும்? நாடாள்வோரின் இலக்கணம் என்ன? ஆட்சி முறை எப்படி அமைய வேண்டும் என்பன வற்றையெல்லாம் எக்காலத்துக்கும் பொருந்தக் கூடிய வகையில் எடுத்துச் சொல்லும் மாபெரும் இலக்கியம் நமக்குச் சொந்தமாக இருக்கின்ற திருக்குறள் அல்லவா?

என்னதான் பிறநாட்டுப் பண்பாட்டுத் தாக்கல்களுக்கு நாம் ஆட்பட்டு விட்டாலும், நமது மொழியை பண்பாட்டை, இலக்கியச் செல்வங்களை இழந்துவிட முடியாது. இழந்துவிடக் கூடாது.

**'தமிழன் என்றோர் இனமுண்டு - தனியே அவற்கோர் குணமுண்டு'**

என்று நாமக்கல் கவிஞர் இராமலிங்கனார் பாடிய கவிதை வரிகள் இன்றைய இளைய தலைமுறையினர் காதில் எப்போதும் ஒலித்துக் கொண்டே இருக்கவேண்டும்.

"பழைய இலக்கியங்கள் எல்லாம் கதைக்குதவா" என்னும் எண்ணத்தைத் தவிர்க்க வேண்டும். நீதியை, நெறியை, ஒழுக்கத்தைக் கற்பிக்க இலக்கியங்களால்தான் முடியும்.

ஒரு நாட்டின் தன்மையை அளவிட, அந்த நாட்டு இலக்கியமே அளவுகோலாக அமைகிறது. எனவே, இன்றைய இளைய தலைமுறையினர்க்குக் கொஞ்சம் இலக்கிய நெஞ்சம் தேவை. இலக்கியப் பார்வை இலக்கிய நெஞ்சத்தோடு அமைய வேண்டும். அறிவியல் பார்வை உடனடியாகப் பயன்தரக் கூடியது தான். ஆனால் இலக்கியங்களும் அறிவியல் அடிப்படையில் அமைந்து விட்டால் இன்னும் நல்லது. அப்படிப்பட்ட இலக்கியங்களைப் படைக்க இன்றைய தலைமுறையினர் முன் வரவேண்டும். எதையும் எடுத்த எடுப்பிலே அப்பட்டமாகச் சொல்லுவது என்பது வேறு; அதையே இலக்கிய நயம்பட எடுத்துரைப்பது என்பது வேறு.

"யாதும் ஊரே; யாவரும் கேளிர்"


என்று அன்றைய சங்க இலக்கியப் புலவர் கணியன் பூங்குன்றனார் பாடினார். இந்த ஒரு வரி இன்று உலகம் முழுவதும் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

அரும் பெருங் கருத்தை உள்ளடக்கிய இந்தப் பா வரியை இந்திய நாட்டுத் தலைமையமைச்சராக விளங்கிய திருமதி. இந்திரா காந்தி அம்மையார் சோவியத்து நாட்டுக்குச் சென்றிருந்தபோது பெருமையாக எடுத்துரைத்தார். இது தமிழன் கண்ட இலக்கியமல்லவா?

இப்படிச் சங்க இலக்கியங்களிலே எத்துணை எத்துணை அறிவார்ந்த, செறிந்த கருத்துகள் பொதிந்த வரிகள் இருக்கின்றன! அவற்றையெல்லாம் இன்றைக்கு மேடையிலே எடுத்துரைப்பதோடு இளைஞர்கள் நின்று விடுகிறார்கள். இப்படிப்பட்ட வரிகள் இன்றைக்கு மட்டுமின்றி எந்தக் காலத்துக்கும் பயன்படக்கூடிய வைர வரிகள் நமது இலக்கியங்களில் இருக்கின்றன!

அன்றைக்குத் திருவள்ளுவர் படைத்த இலக்கியந்தானே இன்றைக்கும் நாட்டுக்கு வழி காட்டிக் கொண்டிருக்கிறது! அதைப் போல ஓர் இலக்கியத்தை, பிற்காலத்தில் வந்த தலைமுறையினரால் படைக்க முடிந்ததா என்றால் இல்லை. இன்னும் வருகிற தலைமுறையினரால் படைக்க முடியுமா என்றால் நிச்சயமாக முடியாது என்றுதான் சொல்ல வேண்டும்.

ஏன் நம்மால் முடியாது? என்கின்ற வினாவை அறைகூவலாக இன்றைய தலைமுறையினர் எடுத்துக் கொள்ள வேண்டும். திருவள்ளுவர் அப்படிப்பட்ட இலக்கியம் படைத்தாரா, இதோ பாருங்கள், நாங்கள் ஓர் இலக்கியத்தை, காலத்துக்கேற்ற புதுமை இலக்கியத்தைப் படைத்துக் காட்டுகிறோம் என்று சொல்லக் கூடிய துடிதுடிப்பு இன்றைய தலைமுறையினருக்கு ஏற்பட வேண்டும். அப்படி ஏற்பட்டால்தான் அறிவியல் உலகத்தில், நாம் எந்த அளவுக்கு முன்னேற வேண்டும் என்று நினைக்கிறோமோ, அந்த அளவுக்கு நம் மொழியில், நம்முடைய பண்பாட்டில், நம்முடைய நாகரிகத்தில் முன்னேற நம்மால் முடியும்.



நம்முடைய தமிழ் மொழியில் பரந்து கிடக்கின்ற இலக்கியங்களில் எத்தனையோ, செய்திகள், எத்தனையோ பழமொழிகள், எத்தனையோ சீரிய கருத்துக்கள் நிறைந்து கிடக்கின்றன. ஏனோ தெரியவில்லை. நம்முடைய இளைஞர்கள் ஆனாலும் சரி, பெரியவர்களானாலும் சரி, ஒரு மேடையிலோ அல்லது ஒரு கட்டுரையிலோ, மேற்கோள் காட்ட வேண்டுமானால், பிறமொழி இலக்கியங்களிலிருந்து குறிப்பாக ஆங்கிலத்திலிருந்து இரண்டு வரிகளைத் தான் சொல்கிறார்கள். மேலை நாட்டுப் பழமொழிகளை, மேலை நாட்டுக் கவிஞர்களின் கவிதை வரிகளை எடுத்தாள்பவற்றையே பெருமையாக நினைக்கிறார்கள்.

நம்மைப் பொறுத்த வரையில்




நம்முடைய இலக்கியங்களிலே எத்துனை வரிகள் உள்ளன?

நம்முடைய திருக்குறளிலேயிருந்து இரண்டு வரிகளை எடுத்துச் சொன்னால் என்ன? நமது சங்க இலக்கியங்களான புறநானூற்றில், அக நானூற்றில் கருத்துகள் இல்லையா? சித்தர்களுடைய மொழிகள் எல்லாம் எவ்வளவு சிந்தனையை உலுக்கக் கூடியவை! அவற்றையெல்லாம் நாம் எடுத்தாண்டால் ஏவ்வளவு பெருமையாக இருக்கும்! இதிலே நம்முடைய இளைஞர்கள் ஈடுபாடு காட்ட வேண்டும்.

அதாவது, நம்முடைய மொழியிலே உள்ளவற்றை எடுத்துக்காட்டுகளாகக் கூறுவது என்பது சாதாரணம். மேலை நாட்டுப் பழமொழிகளைக் கூறினால் தான் மற்றவர்களுக்கு அது புதுமையாக இருக்கும் என்று அவர்களெல்லாம் நினைக்கிறார்கள் போலும்!

அப்படியல்ல; நம்முடைய மொழியில் உள்ள இலக்கியச் செல்வங்களை மேலை நாட்டினர் மொழி பெயர்த்து அதைப் பயன் படுத்துகிற அளவுக்கு இருக்கும்போது; நம்மிடையே பலர் இன்னும் பாமரர்களாக, படிக்காதவர்களாக இருக்கின்ற காரணத்தால், அவர்களுக்கு அது எட்டும் வகையில் நம்முடைய மொழிச் செல்வத்தை நாட்டிலேயும், வீட்டிலேயும் பயன்படுத்தினால் என்ன? அது இன்றைய தலைமுறை யினர்க்கு மட்டுமல்லாது, அடுத்து வரும் தலைமுறையினர்க்கும் பயன்படும் என்பதாலே, இலக்கிய ஈடுபாடு இன்றைய தலைமுறையினர்க்கு இன்றியமையததாது என்பதை உணர வேண்டும். நம்நாட்டுக் குடிமக்கள் நல்ல பொது மக்களாக நல்ல குடி மக்களாக உருவாக வேண்டுமானால் அதற்கு இலக்கியம் நல்லமுறையில் பயன் படுத்தபட வேண்டும். ❑

## பல்லாண்டு வாழ்க!

பொங்குக பொங்கல் பொங்குக எங்கணும்
பொங்குக பொங்கல், இன்பமே எய்துக!

பொங்கற் புதுநாள் போந்தது போந்தது
எங்கணும் எவர்க்கும் இன்பமே எய்துக!

பொங்குக பொங்கல், பொங்குக பொங்கல்!
பொங்குக பொங்குக பொங்குக பாலும்!


ஒக்கலும் மக்களும் உவந்துடன் உண்க!
மக்கள் அனைவரும் மகிழ்ந்தே உண்க!

புத்துடை உடுமின் புத்தணி அணிமின்!
பத்தி கொண்டே பரமனைப் பணிமின்!

நந்தம் தமிழ்மொழி நலம்பெற் றோங்கிட
எந்தக் காலும் இன்புற வாழ்த்துக!

தண்கடல் பரப்பில் சாரும் மணலினும்
பண்புற வானில் பரவும் மீனினும்

வாழ்க அனைவரும் வாழ்கபல் லாண்டு!
வாழ்க பல்லாண்டு வளமெலாம் படைத்தே!



- பேராசிரியர் கா.நமச்சிவாயனார்

# உணவு உற்பத்தியில் உன்னதச் சாதனை

கடந்த ஆட்சியில், 1995-96ல் 67.96 இலட்சம் மெட்ரிக் டன் உணவுப் பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டன. ஆனால், மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் உயரிய வழிகாட்டுதலில், உரிய நேரத்தில் வழங்கப்பட்ட இடுபொருட்களினாலும், நவீனமயமாக்கும் உயர்தர தொழில் நுட்பங்களை நடைமுறைப்படுத்தி



யதாலும், 1996-97ல், 76.45 இலட்சம் மெட்ரிக் டன் உணவுப் பொருள் உற்பத்தி செய்து சாதனை படைக்கப் பட்டுள்ளது. மேலும் நடப்பு ஆண்டில் 1997-98ல், 95 இலட்சம் மெட்ரிக் டன் எனக் குறியீடு நிர்ணயம் செய்யப் பட்டுள்ளது; தொடர் மழையால், பல மாவட்டங்களில் உற்பத்திச்சேதாரம் ஏற்பட்டிருப்பினும் கூட, 5-1-98 வரை 84.66 இலட்சம் மெட்ரிக் டன் என்ற அளவில் உணவு உற்பத்தி எய்தப் பட்டுள்ளது. இன்னும், சம்பா, நவரை அறுவடை முடிவுற்றதும், 95 இலட்சம் மெட்ரிக் டன் என்ற குறியீடு விஞ்சப்பட்டு, வரலாற்றுச் சாதனை நிகழ்த்தப்படும் என்பது உறுதியே.

டிசம்பர் '96ல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 10,05,166 விவசாயிகளின் துயர்துடைக்கும் பொருட்டு, ரூ.47.987 கோடி விளைபொருள் இழப் பீட்டுத் தொகையாக வழங்கப்பட்டது.

நவம்பர் '97ல் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் பாதிக்கப்பட்ட விவசாயி களுக்கு இழப்பீட்டுத்தொகையாக தலா ரூ.1000 வீதம் வழங்கிட ரூ.15.81 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

மழைவளத்தைப் பெருக்கவும், சுற்றுப்புறச் சுகாதாரத்தைச் சீரமைக் கவும், "மக்கள் நலம் காக்கும் மழைவளத்துக்கு முதலமைச்சரின் மரம் வளர்ப்புத் திட்டம்" எனும் மகத்தான திட்டத்தின்கீழ் சாலையின் இரு மருங்கிலும் 75 ஊராட்சி ஒன்றியங்களில் ரூ.7.35 கோடி செலவில் 1875 கி.மீ. நீளத்திற்கு மரக்கன்றுகள் நடத் திட்டமிடப்பட்டு நவம்பர் '97 வரையில் ரூ.208.94 இலட்சம் செலவில் 882.06 கி.மீ.தூரத்திற்கு மரம் நடப்பட்டுள்ளது.

காவிரி டெல்டாப் பகுதிகளில், குறிப்பாக, தஞ்சை, நாகை மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் பாசன வாய்க்கால்களில் நீர்ப்போக்கிற்கு இடையூறாகஉள்ள காட்டாமணிச் செடியினை அகற்ற 2384 எக்டேர் பரப்பில் 2-4டி என்ற களைக்கொல்லி தெளித்து காய்ந்த இலைகளை அகற்றி எரிக்கப்பட்டது. இதற்கென ரூ.102.13 இலட்சம் செலவிடப்பட்டது.

12,000 எக்டேர் பரப்பளவில் களர், உவர் நிலச்சீர்திருத்தத்தினைத் தஞ்சை, திருவாரூர், காஞ்சிபுரம், திருவள்ளூர், வேலூர், திருவண்ணாமலை, சேலம், நாமக்கல் ஆகிய மாவட்டங்களில் வருடத்திற்கு ஒவ்வொரு மாவட்டத் திற்கும் தலா 500 எக்டேர் வீதம் 3 வருடத்தில் 1,500 எக்டேர் நிலச் சீர்திருத்தம் செய்ய ரூ.404.68 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் ரூ.122.62 இலட்சம் முதலாண்டில் செலவிட நிதி ஒப்பளிப்புச் செய்யப் பட்டுள்ளது.

முதல் நிலையாக மதுராந்தகம், சேலம், முசிறி, திருவாரூர் மற்றும் மேலூர் வேளாண் கோட்டங்களில் கோட்டத்திற்கு 30,000 உர அடையாள அட்டை வீதம் 1,50,000 அடையாள அட்டைகள் அச்சடித்து விநியோகிக்கப் படவுள்ளன. பின்பு படிப்படியாக பிற கோட்டங்களுக்கும், மாநிலம் தழுவிய வகையில், உரஅடையாள அட்டைகள் வழங்கப்படும்.

தர்மபுரி, இராமநாதபுரம், சிவகங்கை மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் உயர் வருவாய் ஈட்டும் பயிர்களைப் பயிரிட ரூ.2.3 கோடி செலவில் திட்டம்



தயாரித்துத்தர இஸ்ரேல் நாட்டின் 'தஹால்'ஆலோசனை நிறுவனத்திடம் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டு அதற்கான ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த தானிய மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் (அரிசி) 500 உழுவை இயந்திரங்கள் ரூ.1.50 இலட்சம் செலவில் விநியோகிக்கப்பட்டது. விசை உழுவை ஒவ்வொன்றிற்கும் அரசு மானியமாக ரூ.30,000 வழங்கப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித்திட்டம் ரூ.117 இலட்சத்திலும், மேற்கு தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டம் ரூ.55 இலட்சத்திலும், தேயிலை வாசனைப் பயிர் சாகுபடி ரூ.165 இலட்சத்திலும், மத்திய நிதிஉதவியில் முந்திரி, பழப்பயிர் மற்றும் வாசனைத்திரவியங்கள் சாகுபடிக்கென ரூ.108 இலட்சமும் செலவிடப்பட்டுள்ளது.

2½ இலட்சம் கரும்பு விவசாயிகள் பயனடையும் வகையில், குறைந்தபட்ச விலையாக 1 டன் கரும்பிற்கு ரூ.660 எனவும், சர்க்கரை ஆலைகளால் வழங்கப்படும் ரகமானியம், வாகன வாடகை மானியம் ரூ.35-யையும் கணக்கில் எடுத்துக்கொண்டால், கரும்பு விவசாயிகளுக்கு ஒரு டன்னுக்குக் குறைந்தபட்சம் ரூ.695-ம், அதிகபட்சம் ரூ.881-ம் ஆகச் சராசரியாக ரூ.765-ம் கிடைத்திட வழிவகுத்து முதலமைச்சர் கலைஞர் ஆணையிட்டுள்ளார்.

காய்கறிகள், காளான், மலர்களைப் பதனிட்டு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய வழிவகுத்திடும் வண்ணம், தேசிய ஊரக வளர்ச்சி வேளாண் வங்கியுடன் தமிழ்நாடு அரசும் இணைந்து 'உயர் தொழில்நுட்ப நிதி உதவி நிறுவனம்' புதிதாகத் தொடங்கப்பட்டுள்ளது.

* * * * * * * * * * * *

## பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் நலன் காக்கும் அரசு

★ சமூக நீதியின் காவல் அரணாகத் திகழும் முதலமைச்சர் கலைஞர் அவர்களின் அரிய முயற்சியால் ஆதிதிராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 69% ஒதுக்கீடு தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்படுகிறது.

★ பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலனுக்கென 1996-97ல் ரூ.64.32 கோடி ஒதுக்கப்பட்டது. இவ்வாண்டில் ரூ.80 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.


★ மூன்று நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், மூன்று உயர்நிலைப் பள்ளிகள் மேனிலைப் பள்ளிகளாகவும் நிலை உயர்த்தப்பட்டு, 107 புதிய விடுதிகள் துவங்கப்பட்டுள்ளன. விடுதிகளில் உணவுக் கட்டணம் ஒரு மாணவனுக்கு ரூ.135லிருந்து ரூ.180 ஆக உயர்த்தவும், கல்லூரி தொழிற்பயிற்சி விடுதிகளில் உணவுக்கட்டணம் ஒரு மாணவனுக்கு ரூ.300 ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளன. விடுதிகளில் மாணவர்கள் சேர்க்கைக்கு பெற்றோரின் ஆண்டு வருமான வரம்பை ரூ.15,000-ஐ, ரூ.50,000 ஆக உயர்த்தியும் முதலமைச்சர் கலைஞர் ஆணையிட்டுள்ளார்.

★ மாணவர்கள் நலனுக்கென பல்வேறு படிப்புதவித் தொகைகள், இலவசக் கல்வித் திட்டங்கள் போன்ற சலுகைகள் பெற நிர்ணயிக்கப்பட்டிருந்த பெற்றோரின் ஆண்டு வருமான வரம்பு ரூ.12,000-ஐ, ரூ.25,000 ஆக உயர்த்தப்பட்டது. கணினிப்பயிற்சியில் மாணவர்கள் எண்ணிக்கை 175லிருந்து 1000 ஆகவும், கனரக வாகனம் ஓட்டுநர் பயிற்சியில் மாணவர்கள் எண்ணிக்கை 250லிருந்து 2000 ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

★ மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினருக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குதலில் முதலமைச்சர் கலைஞர் அவர்களின் ஆணைப்படி, இத்திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.2 கோடியை ரூ.10 கோடியாக உயர்த்தியும், கிராமப்புறங்களில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் சொந்த வீடில்லா பிற்படுத்தப்பட்டோர் மற்றும் முன்னேறிய வகுப்பினருக்கும் இலவச மனைப்பட்டாக்கள் வழங்க ரூ.8 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

★ உல்மா ஒய்வூதியம் 3.9.96 முதல் மாதமொன்றுக்கு ரூ.400லிருந்து ரூ.500 ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுமரபினர் நலனுக்கென 1996-97ல் ரூ.64.32 கோடி செலவிடப்பட்டது. 1997-98ல், ரூ.80 கோடி பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் நலனுக்கெனச் செலவிடப்படுகிறது.

* * * * * * * * * * * *




★ தமிழகத்தில் சுமார் 22,699 சதுர கிலோ மீட்டர் பரப்பில் வனவளம் நிறைந்துள்ளது. இது மொத்த தமிழக நிலப்பரப்பில் 17.45 விழுக் காடாகும்.

★ வனவளம் பெருக்கிடும் வகையில் கடந்த ஆண்டில் வனப்பணித் திட்டங்கள் ரூ.6110.42 இலட்சத்தில், 51456 எக்டோரில் செயல் படுத்தப்பட்டுள்ளது.

★ **நீர்ப்பிடிப்புப்பகுதி மேம்படுத்துதல்**

தமிழகத்தில் 32 ஆறுகள், 11 பெரும் நீர்த் தேக்கங்கள், 2679 கால்வாய்கள், 38863 ஏரி குளங்கள் உள்ளன. இவைகளின் பெரும்பாலான நீர்ப்பிடிப்புப் பகுதிகள் வனங்களில் உள்ளன. நீர் வளத்தினை நிலப்பகுதிகளில் வளப்படுத்தவும், நில வளத்தினைச் சீராக ஒழுங்குபடுத்தவும், மலை மேம்பாட்டுத் திட்டம், மேற்குத் தொடர்ச்சி மலை திட்டத்தின் மூலமும், நிலவளப் பாதுகாப்பு மேட்டூர் ஸ்டான்லி மற்றும் வைகை நீர்பிடிப்புத் திட்டங்கள் மூலமும் 5,281 எக்டர் நிலப்பரப்பில் ரூ.716.57 இலட்சத்தில் இத்திட்டம் செயல்முறைப் படுத்தப்பட்டுள்ளது.

★ **உற்பத்தி வனவியல்**

உற்பத்தி வனவியல் மூலம் கிராம மக்களின் தேவையினை வனவளங்கள் மூலம் பூர்த்தி செய்தலும் முக்கிய நோக்கமாகும். இப்பணிகள் பல்வேறு திட்டங்கள் மூலம் 17,405 எக்டேர் பரப்பில் ரூ.1104.41 இலட்சத்தில் செயல் முறைப்படுத்தப்பட்டுள்ளது.

★ **சமுதாய தரிசு நில மேம்பாட்டுத் திட்டம்**

இத்திட்டங்கள் மூலம் தரிசு நிலங்களிலும் மரங்களின் அளவினை அதிகப்படுத்துவதற்கு தடிமரங்கள், மென்மரங்கள் மற்றும் இதர சிறுவனப் பொருட்கள் தேவைகளை பூர்த்தி செய்தலும் இதன் முக்கிய நோக்கமாகும். இத்திட்ட காலத்தில் 6,885 எக்டேரில் ரூ.2241.71 இலட்சத்தில் இப்பணி செயல்முறைப்படுத்தப் பட்டுள்ளது.

★ **வன ஒருங்கிணைப்பு மற்றும் வனப்பாதுகாப்பு**

வன ஒருங்கிணைப்புத் திட்டத்தின் மூலம் ஒதுக்குக்காடுகளை அளவை செய்து எல்லைக்கற்கள் ரூ.8.85 இலட்சத்தில் நடப்பட்டுள்ளன. வனப்பாதுகாப்புத் திட்டத்தின் மூலம் அட்டவணை மரங்கள் உள்ளிட்ட மதிப்புமிக்க வனப்பொருட்கள் சமுதாய எதிரிகளால் கள்ளத்தனமாக கடத்தப்படுவதைத் தடுக்கவும் எதிர்த்து போராடவும் அரசுத் துறையில் தகுந்த உள்ளமைப்பு மற்றும் நவீன சாதனங்களைக் கொண்டு வலுப்படுத்தவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்ட காலத்தில் ரூ.105.07 இலட்சங்களில் இப்பணி செயல்முறைப் படுத்தப்பட்டுள்ளது.

★ தமிழ்நாடு வேளாண்மை அபிவிருத்தித் திட்டம், உலக வங்கியின் நிதியுதவியுடன் செயல் முறைப்படுத்தப்பட்டு, இவ்வாண்டில் ரூபாய் ரூ.10.59 கோடியில் 21,545 எக்டேர் நிலப்பரப்பில் செயல்படுத்தப்பட்டுள்ளது.

★ **வன ஆராய்ச்சி**

முன்னர் உருவாக்கப்பட்ட வன நுட்பவியலில் தற்போதைய மாறிவரும் சூழ்நிலைக்கேற்ப நடைமுறைகாலத்திற்கேற்பவும்,,வருங்காலத் தேவைகளையும் நிறைவு செய்யும் வண்ணம் மேம்பாட்டுத் திட்டங்களையும் நல்முகப் படுத்துதலும் ஆராய்ச்சிப் பணிகளும் மேற் கொள்ளப்பட்டு வருகின்றது. இப்பணியானது ரூ.126.56 இலட்சத்தில் செயல்படுத்தப்பட்டுள்ளது.

★ **வன உயிரினப் பாதுகாப்புத் திட்டங்கள்**

தமிழ்நாடு வளமிக்க உயிரினப் பரவல்களைக் கொண்டிருக்கிறது. மாநிலத்தின் மொத்த பரப்பளவில் 2,833 சதுர கி.மீ. அல்லது 12.6 விழுக்காட்டில் 5 தேசிய பூங்காக்கள், 6 வன உயிரின சரணாலயங்கள் மற்றும் 9 பறவைகள் சரணாலயங்கள் உள்ளடக்கிய வன உயிரினப் பாதுகாப்புப் பகுதியாகும். இவைகளைப் பராமரிப்பதற்கும் பாதுகாப்பதற்கும் ரூ.289.17 இலட்சங்கள் செலவிடப்பட்டுள்ளது.

★ பழங்குடியினர் மேம்பாட்டு திட்டத்தின் மூலம் பழங்குடியினருக்கு வேலைவாய்ப்பு, கல்வி மற்றும் அடிப்படை உள்ளமைப்பு வசதிகள் வழங்கவும் பல பணிகள் செயல்படுத்தப்படுகின்றன. ரூ.125.73 இலட்சம் செலவில் 418 எக்டேர் பரப்பில் பழங்குடியினர் மேம்பாடு திட்டம் செயல்படுத்தப் பட்டுள்ளது. ❑

# பொன்விழா ஆண்டில் புகழ்மிகு சாதனைகள்

இந்திய சுதந்திரத் திருநாள் பொன்விழாவை 1997 ஆகஸ்டுத் திங்கள் முதல் 1998 ஆகஸ்டுத் திங்கள் முடிய ஓராண்டுக் காலத்திற்கு மாநிலம் முழுவதும் சிறப்பான முறையில் கொண்டாடிடும் வகையில் **மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள் தலைமையில், 32 உறுப்பினர்களடங்கிய உயர் மட்டக் குழுவும், 6 துணைக் குழுக்களும், ஒரு உயர்நிலை செயற்பாட்டுக் குழுவும் அமைக்கப்பட்டன. இதே போன்று மாவட்ட அளவில், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தலைமையில், அலுவல் மற்றும் அலுவல் பற்றற்ற உறுப்பினர்களைக் கொண்ட குழுக்களும் அமைக்கப்பட்டன.

தமிழகம் முழுவதும் உயர்மட்டக் குழுவின் அறிவுரை மற்றும் துணைக் குழுக்களின் பரிந்துரைகளின்படி பல்வேறு நிகழ்ச்சிகளும் - விழாக்களும் நடத்தப்பட்டன.

**மேதகு ஆளுநர் நீதிபதி செல்வி மீ. பாத்திமா பீவி** அவர்கள், 15.7.97 அன்று, சென்னை ஆளுநர் மாளிகையில் தேசபக்திப் பாடல்கள் கொண்ட ஒலி நாடாக்களை வெளியிட்டார்.

திருச்சிராப்பள்ளியிலிருந்து வேதாரண்யம் வரை சென்ற **'உப்புச் சத்தியாக்கிரகப் போராட்டத்தை நினைவு கூரும் யாத்திரை'**யை, 8.8.97 அன்று, **மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர்** தொடங்கி வைத்தார்.

*'சுதந்திரத் திருநாள்*
*பொன்விழா ஆண்டு'*
*இது என்பதனால்*
*இந்திய விடுதலைக்காக*
*அல்லல் பல ஏற்றோர்...*
*உயிர்த்தியாகம் புரிந்தோர்...*
*உற்றார் உறவினரை*
*மட்டுமன்றி*
*உடைமைகளைப்*
*பறிகொடுத்தோர்*
*போன்றோரைப்*
*பெருமிதத்தோடு*
*பெருமைப்படுத்தி*
*வருபவர்*
*முதலமைச்சர் கலைஞர்*



மாண்புமிகு கல்வியமைச்சர் **பேராசிரியர் க. அன்பழகன்** அவர்கள் தலைமையிலும், மாண்புமிகு செய்தி-விளம்பரத்துறை அமைச்சர் **திரு வ. முல்லைவேந்தன்** அவர்கள் முன்னிலையிலும் **'வெள்ளையனே வெளியேறு'** முழக்கம் எழுந்த நாள் நினைவுப் பேரணி நடத்தப்பட்டது. இதில் 5,000 மாணவ, மாணவிகள் பங்கு பெற்றனர். 9.8.97 அன்று, 'வெள்ளையனே வெளியேறு' போராட்டத்தில் பங்கேற்ற தியாகிகள் சிறப்பிக்கப்பட்டனர். தேசிய ஒருமைப்பாட்டு உறுதிமொழி மாண்புமிகு அமைச்சர்கள் முன்னிலையில் அனைவராலும் எடுத்துக் கொள்ளப்பட்டது.

11.8.97 அன்று, புதுடெல்லியில் பேரணியில் கலந்துகொள்வதற்காகச் சென்ற தியாகிகள், கதராடை மற்றும் ரூ.1,000 அடங்கிய பொற்கிழியும் **மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர்** அவர்களால் வழங்கப்பட்டுச் சிறப்பிக்கப்பட்டனர்; அன்று இரவு, சென்டிரல் ரயில் நிலையத்திலிருந்து மாண்புமிகு அமைச்சர்களால் வழியனுப்பி வைக்கப்பட்டனர்.

## சுதந்திரத்திருநாள் பொன்விழாத் தொடக்க விழா

14.8.97 அன்று, மாநிலம் முழுவதும் துப்புரவுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. பொன்விழாத் தொடக்க விழா நிகழ்ச்சிகள் **மேதகு ஆளுநர் நீதிபதி செல்வி மீபாத்திமா பீவி** அவர்களால் நேரு விளையாட்டரங்கில் தொடங்கி வைக்கப்பட்டது.



**மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர்** அவர்கள் தலைமையில் நடைபெற்ற விழாவில் மாண்புமிகு கல்வி அமைச்சர், **பேராசிரியர் க. அன்பழகன்** அவர்களும், மாண்புமிகு செய்தி-விளம்பரத்துறை அமைச்சர், **திரு.வ.முல்லைவேந்தன்** அவர்களும், வணக்கத்திற்குரிய சென்னை மாநகர மேயர் **திரு. மு.க. ஸ்டாலின்** அவர்களும், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத் துணைத் தலைவர் **திரு.ப. சிவந்தி ஆதித்தன்** அவர்களும் கலந்துகொண்டனர். நாதசுரம், தேசியப் பாடல்கள், கிராமியப் பாடல்கள் மற்றும் பிரபல திரைப்பட இசையமைப்பாளர்கள் வழங்கிய இன்னிசை நிகழ்ச்சியும் நடைபெற்றது. பல்லாயிரக்கணக்கான மக்கள் பெருந்திரளாகக் கலந்துகொண்டு நிகழ்ச்சிகளைக் கண்டுகளித்தனர்.

## சுதந்திரத் திருநாள் பொன்விழா

சுதந்திரத் திருநாள் 15.8.97 அன்று, காலை - சென்னை கோட்டை கொத்தளத்தில் மாண்புமிகு **முதலமைச்சர் கலைஞர்** அவர்கள் தேசியக் கொடியை ஏற்றி வைத்துச் சுதந்திரப் போராட்டத் தியாகிகளைச் சிறப்பித்தார். மாவட்டங்களில், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தேசியக் கொடியை ஏற்றிவைத்து ஆங்காங்குள்ள தியாகிகளை அரசின் சார்பில் சிறப்பித்தனர். மேலும் தொல்பொருள் ஆராய்ச்சித் துறையின் சார்பில் 'கண்காட்சி' - தலைமைச் செயலக வளாகத்தில் - செய்தி மற்றும் சுற்றுலாத்துறைச் செயலர் திரு. எஸ்.இராஜரெத்தினம், இ.ஆ.ப., அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது.

சுதந்திரத் திருநாள் அன்று மாலை மெரினா கடற்கரையில் **மேதகு ஆளுநர், நீதிபதி செல்வி மீ. பாத்திமா பீவி** அவர்கள் தலைமையிலும், **மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர்** அவர்கள் முன்னிலையிலும், 5,000 மாணவ, மாணவியர் பங்குகொண்ட கலை நிகழ்ச்சிகள், தென் மண்டல கலாச்சார மையத்தால் நடத்தப்பட்டன.

## தீண்டாமை ஒழிப்பு வாரம்

தமிழகம் முழுவதும் 15.8.97 முதல் 31.8.97 வரை **'தீண்டாமை ஒழிப்பு'** வாரங்களாக அனுசரிக்கப்பட்டன. இந்நாட்களில் ஆதிதிராவிடர் மக்கள் வாழும் பகுதிகளிலும், ஆலயங்களிலும் **சமபந்தி விருந்துகள்** நடத்தப்பட்டன.

இந்நாட்களில், சென்னையில் பல்வேறு அரங்குகளில், சென்னை மாநகராட்சியின் சார்பில், வணக்கத்திற்குரிய மாநகர மேயர் **திரு.மு.க.ஸ்டாலின்** அவர்கள் தலைமையில் அறிஞர் பெருமக்கள், தமிழ்ச்சான்றோர்கள் பங்கேற்ற கவியரங்குகள், கருத்தரங்குகள் நடைபெற்றன.

**மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர்** அவர்கள், 19.8.97 அன்று, ரிப்பன் மாளிகையில் மாநகராட்சியின் சார்பில் நடைபெற்ற சுதந்திரத் திருநாள் பொன்விழா நிகழ்ச்சியில், பொன்விழா நினைவுத்தூணுக்கு அடிக்கல் நாட்டிச் சிறப்புரையாற்றினார். மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் **திரு.கோ.சி.மணி** அவர்களும், வணக்கத்திற்குரிய மாநகர மேயர் **திரு.மு.க.ஸ்டாலின்** அவர்களும் விழாவில் பங்கேற்றனர்.

**'சுதந்திரப் போராட்டத்தில் தகவல் தொடர்பு சாதனங்களின் பங்கு'** என்ற தலைப்பில் கருத்தரங்கம், மாண்புமிகு செய்தி-விளம்பரத்துறை அமைச்சர் **திரு.வ. முல்லைவேந்தன்** அவர்கள் தலைமையில் சென்னைப் பல்கலைக் கழக செனட் மண்டபத்தில் 25.8.97 அன்று நடைபெற்றது. சுதந்திரப் போராட்டத்தில் **பங்கேற்ற மூத்த பத்திரிகையாளர்கள்** சிறப்பிக்கப்பட்டனர்.

29.8.97 & 30.8.97 அன்று, 'சுதந்திரத் திருநாள் பொன்விழா விளையாட்டுப் போட்டிகள்' மதுரையில், விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் நடத்தப்பட்டன.

## சுதந்திரத் திருநாள் பொன்விழா - மதுரையில் 'தீண்டாமை ஒழிப்பு மாநாடு'

31.8.97 அன்று, காலையில் - திருப்பரங்குன்றிலிருந்து மதுரை-புதூர் வரையில் **15 கி.மீ.** தூரத்திற்கு, நல்லிணக்கத்தை வலியுறுத்தி மாபெரும் **'மனிதச் சங்கிலி'** நடைபெற்றது. **மாண்புமிகு முதலமைச்சர்** 5 இடங்களில் மாணவ - மாணவியருடன் **'மனிதச்சங்கிலி'**யில் பங்கேற்றார். அன்று மதியம் - அருள்மிகு **மீனாட்சி** - சுந்தரேசுவரர் திருக்கோயில், மேலமாசி வீதியிலுள்ள கிறித்துவத் தேவாலயம், கோரிப்பாளையம் மசூதி ஆகிய 3 **இடங்களிலும் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர்** அவர்களும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், அனைத்துக் கட்சித் தலைவர்களும், சமயப்பெரியோர்களும் கலந்து கொண்ட **'சமபந்தி விருந்துகள்'** நடைபெற்றன. அன்று மாலை - சுதந்திரப் போராட்டத் தியாகி **கக்கன்** சிலையை **முதலமைச்சர் கலைஞர்** மதுரையில் திறந்து வைத்தார்.

அதன் பின்னர், **தீண்டாமை ஒழிப்பு மாநாடு** மதுரை தமுக்கம் மைதானத்தில் சிறப்பாக நடைபெற்றது. இதில் அனைத்துக் கட்சித் தலைவர்களும், சமயச் சான்றோர்களும் கலந்து கொண்டனர்.



சுதந்திரத் திருநாள் பொன்விழாவைபொட்டி, மதுரையில் நடந்த 'தீண்டாமை ஒழிப்பு மாநாட்டில்', "ஆதிதிராவிடர்களுக்கென்று ஒதுக்கப்பட்டுள்ள பணியிடங்களை நிரப்பப்படுவதை முறையாகக் **'கண்காணிக்கக் குழு'** ஒன்று அமைக்கப்படும் என்றும், கோட்ட அளவில், நல்லிணக்கக் குழுக்கள், தமிழகம் முழுவதும் அமைக்கப்படுமென்றும், அஞ்சுகம் அம்மையார் கலப்புத் திருமண உதவித்திட்டத்தில் வழங்கப்பட்டு வந்த ரூ.10,000 - நிதிஉதவியை, மணமகனோ அல்லது மணமகளோ ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்தவர்களாக இருந்தால் ரூ.20,000ஆக உயர்த்தி வழங்கப்படும்" என்றும் **முதலமைச்சர் கலைஞர்** அறிவித்தார்.

**அரவிந்தரின் 125வது பிறந்த தினம்** சென்னை கலைவாணர் அரங்கில் 19-12-97 அன்று கொண்டாடப்பட்டது. மாண்புமிகு செய்தி-விளம்பரத்துறை அமைச்சர் **திரு வ. முல்லைவேந்தன்** அவர்களும், பாண்டிச்சேரி மத்திய பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணை வேந்தர் திரு.வெங்கட சுப்பிரமணியம், பத்திரிகையாளர் திரு.மாலன் ஆகியோரும் பங்கேற்றனர்.

26.1.98 அன்று நடைபெற்ற குடியரசு நாள் அலங்கார அணி வகுப்பில் சுதந்திரப் பொன்விழா நிகழ்ச்சிகள் மற்றும் சுதந்திரப் போராட்ட வீரர்களின் வாழ்க்கையை விளக்கும் அலங்கார ஊர்திகள் பவனி வந்தன. இந்நிகழ்ச்சியில், **மாண்புமிகு முதலமைச்சர்** அவர்கள் 5 சுதந்திரப் போராட்ட த்தியாகிகளுக்குக் கதராடை அணிவித்துச் சிறப்பித்தார்கள். இதுபோன்று ஒவ்வொரு மாவட்டத்திலும் ஐந்து தியாகிகளுக்கு, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் சிறப்புச் செய்து கௌரவித்தனர்.

உப்புச்சத்தியாக்கிரகத் தியாகி வேதாரண்யம் வேதரத்தினம் பிள்ளையின் நினைவாக தபால் தலை ஒன்று வெளியிட வேண்டுமென்று **மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர்** அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க அவரது தபால் தலையை வெளியிட இந்திய அரசு ஒப்புதல் தெரிவித்துள்ளது.

## சுதந்திரத் திருநாள் பொன்விழாவினையொட்டி மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அறிவித்துள்ள முத்தான மூன்று திட்டங்கள்:

★ **சமத்துவபுரம்:**

ஆதிதிராவிடர் உட்பட அனைத்து சமூகத்தினரும் நல்லிணக்கத்தோடு ஒரே குடியிருப்பில் ஒற்றுமையாக வாழும் வகையில் 'சமத்துவபுரம்' என்ற பெயரில் 100 வீடுகளைக் கொண்ட 50 குடியிருப்புகள் தமிழகம் முழுவதும் உருவாக்கப்படும். இதில் 40 வீடுகள் ஆதிதிராவிடர்களுக்கும், 60 வீடுகள் பிற சமூகத்தினருக்கும் ஒதுக்கப்படும். தேர்ந்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்திற்கும் வீடு கட்டுவதற்காக 5 சென்ட் நிலம் இலவசமாக வழங்கப்படுவதுடன், ரூ.35,000 முழு மானியமாகவும், குறைந்த வட்டியில் கடனுதவியும் வழங்கப்படும். குடிநீர் வசதி, சாலை வசதி, மின் வசதி, மருத்துவமனை, பள்ளி, நியாயவிலைக் கடை, சமுதாய நலக் கூடம் (எல்லோருக்கும் பொதுவான கூடம்), எல்லா மதத்தினர்க்கும் பொதுவான இடுகாடு மற்றும் சுடுகாடு ஆகிய அடிப்படை வசதிகளும் செய்து தரப்படும்.

★ மூன்றாண்டு சிறப்புத் திட்டத்தின் கீழ் 1785 மலைப்பகுதியைச் சார்ந்த கிராமங்களுக்கும் - குக்கிராமங்களுக்கும் அடிப்படை வசதிகள் செய்து தரப்படும்.

★ நகராட்சிகளிலும், பேரூராட்சிகளிலும் மிகவும் பின்தங்கியுள்ள ஒரு குடிசைப் பகுதியைத் தேர்வு செய்து, அவற்றை அனைத்து அடிப்படை வசதிகளுடன் மேம்படுத்த, தேசிய குடிசைப் பகுதி வளர்ச்சித்திட்டத்தின் கீழ் ரூ.38.46 கோடி செலவிடப்படும்.

## தியாகிகளுக்கு உதவித்தொகை உயர்வு :

சுதந்திரத் திருநாள் பொன்விழா ஆண்டினையொட்டி, நாடு சுதந்திரமடைவதற்காக ஆங்கிலேய ஆதிக்கத்தை எதிர்த்து அறவழியில் போராடிச் சிறையேகி, இன்னல்களை இன்முகத்துடன் ஏற்றுக்கொண்ட தியாகிகளைப் போற்றிடும் வகையில், மத்திய அரசு ஓய்வூதியம் பெறும் சுதந்திரப் போராட்ட தியாகிகளுக்கு மாநில அரசின் பங்காக வழங்கப்பட்டு வந்த மாத ஓய்வூதியத்தை ரூ.250லிருந்து ரூ.500 ஆக உயர்த்தி வழங்கவும், மாநில அரசின் ஓய்வூதியம் பெற்றுவந்த சுதந்திரப் போராட்டத் தியாகிகளின் ஓய்வூதியத் தொகையான ரூ.1500-ஐ ரூ.3000 ஆகவும், மாநில அரசு தொடர் ஓய்வூதியம் பெறுவோர்களது ஓய்வூதியத் தொகையினை ரூ. 750லிருந்து ரூ.1500 ஆக இரண்டுமடங்காக உயர்த்தியும், மத்திய அரசுக்கு இணையாகத் தியாகிகளுக்கு ஓய்வூதியம் வழங்கவும் **முதலமைச்சர் கலைஞர்** ஆணையிட்டுள்ளார். இதே போன்று, மருது பாண்டிய சகோதரர்களின் வாரிசுதாரர்களுக்கு வழங்கப்பட்டு வந்த மாதாந்திர நிதிஉதவித்

தொகையான ரூ.150/-ஐ மாதம் ரூ.500 ஆக உயர்த்தியும், வீரபாண்டிய கட்டப்பொம்மன் வாரிசுதாரர்களுக்கு வழங்கப்பட்டு வந்த உதவித் தொகையான ரூ.300ஐ, மாதம் ரூ.500 ஆக உயர்த்தியும் வழங்கப்படுகிறது. **வீரன்** சுந்தரலிங்கம் வாரிசுகளுக்கு **ஒட்டப்பிடாரம் - கவர்னகிரியில்** ரூ.1 கோடி மதிப்பீட்டில் **'புதிய நகரியம்'** ஒன்று அமைக்கப்படுகிறது.

**தியாக சீலர்களுக்கு நினைவுச்சின்னங்கள் - சிலைகள்:**

நாட்டு நலனுக்கு நற்பணியாற்றிய தலைவர்களைப் போற்றிச் சிறப்பித்திடும் வகையில், **நேத்தாஜி சுபாஷ் சந்திரபோஸ்** திருவுருவச்சிலை, **முதலமைச்சர் கலைஞர்** அவர்களால் 15-12-97 அன்று திறந்து வைக்கப்பட்டது.

சென்னையில் போர் நினைவுச் சின்னத்தின் அருகில் **'பொன் விழா நினைவுச் சின்னம்' முதலமைச்சர் கலைஞர்** அவர்களால் 31-12-97 அன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. ரிப்பன் மாளிகையில் மாநகராட்சியின் சார்பில் பொன்விழா நினைவுத்தூண் ஒன்று அமைக்கப்படுகிறது.


**பெருந்தலைவர் காமராசர்** நினைவில்ல முகப்பில் பெருந்தலைவர் காமராசரின் மார்பளவுச்சிலையும், **பாரத ரத்னா எம்.ஜி.ஆர் சமாதியில் எம்.ஜி.ஆரின் மார்பளவுச் சிலையும்** அரசின் சார்பில் அமைக்கப்பட்டு **முதலமைச்சர் கலைஞர்** அவர்களால் திறந்துவைக்கப்பட்டுள்ளன.



**சென்னை, கிண்டியில் பக்தவச்சலம் நினைவில்லம், நாகர்கோவிலில் தோழர் ப. ஜீவானந்தம் நினைவில்லம், மதுரை - திருமங்கலத்தில் தியாகி விசுவநாததாஸ் நினைவில்லம், நெல்கட்டும்செவலில் பூலித்தேவன் நினைவில்லம்** ஆகியவை அரசால் அமைக்கப்படுகின்றன. திருவல்லிக்கேணியில் **பாரதியார் வாழ்ந்த இல்லம்** அரசால் புதுப்பிக்கப்பட்டுள்ளது; எட்டயபுரத்தில் **பாரதியார் பிறந்த இல்லம்** புதுப்பிக்கப்படுகிறது. சென்னையில், தியாகிகள் மணிமண்டபம் ரூ.30 இலட்சம் செலவில் உருவாக்கப்படுமென **முதலமைச்சர் கலைஞர்** அறிவித்துள்ளார்.



## செய்திப்படம் உருவாக்கிய தமிழர்



இந்தியாவில் முதன்முதலில் செய்திப்படம் உருவாக்கியவர் என்னும் பெருமையினைப் பெற்றிருப்பவர் ஒரு தமிழர். 'உலகம் சுற்றிய தமிழர்' என்னும் பட்டம் பெற்ற ஏ.கே.செட்டியார் தான். அவருடன் இணைந்து இப்பணியில் ஈடுபட்டவர் பி.வி.பதி. இவர்கள் இருவரும் சேர்ந்து உருவாக்கிய படத்திற்குப் பெயர் 'காந்தியின் வாழ்க்கையும் பண்பும்' என்பது தான். ஏ.கே.செட்டியார் 'குமரி மலர்' என்றோர் பத்திரிகையும் நடத்தி வந்தார். காந்தியார் படத்தை அவர் பிடித்த விதம், அதற்காகப் பட்ட பாடு பற்றி அவர் எழுதிய ஒரு கட்டுரை மிகவும் பிரசித்தம்!

ஆசிரியரும் வெளியிடுபவரும் : ரா. சிவகுமார், இ.ஆ.ப., இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத் துறை, தமிழ்நாடு அரசு.
சென்னை-தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், அண்ணாசாலை, சென்னை - 600 002. தொலைபேசி: 568926, 568927, 564906

# அச்சாக அப்பாவைப் போல்...



உங்கள் மகனாக அவன் பிறந்தபோது, உறவினர் "அச்சாக அப்பாவைப்போல்" என்றார்கள். உங்கள் மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை.

அவன் தவழ்ந்த போது, தளர் நடை பயின்றபோது, மழலை பேசியபோது நீங்களும் உங்கள் மனைவியும் உலகையே மறந்தீர்கள். உங்கள் உலகமாக அவனை நினைத்தீர்கள்.

உங்கள் மகனைப் பற்றிய கனவுகளால் மனதை நிறைத்துக் கொண்டீர்கள்.

ஆனாலும்.... உங்கள் வாழ்வின் உயிர்த்துடிப்பான உங்கள் மகனை மறந்து, சில நிமிடத் தடுமாற்றங்களால் தகாத உறவுகளைத் தேடிப்போவது நியாயம்தானா? எய்ட்ஸ் என்னும் கொடிய நோயை விலை கொடுத்து வாங்குவது தேவைதானா?

**எங்கோ சுகம் தேடுமுன்**
**ஒரு நொடி சிந்தியுங்கள்**

SASI 163.97

**ஆணுறை - குடும்ப நலம் காக்கும்.**
**எய்ட்ஸ் பயம் போக்கும்.**

**தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டு அமைப்பு**

417, பாந்தியன் சாலை, எழும்பூர், சென்னை - 600 008.
தொலைபேசி: 825 5467/825 5261/825 4917.
24 மணி நேர ஹாட்லைன்: 825 6882/825 6864

தமிழரசு

பதிவு எண். M. 8676
Licence No.TN/MS(C)/PP-23

